# தாரகை

2



ஸிட்னி ஷெல்டன்

தமிழில் ரா.கி. ரங்கராஜன்

# தாரகை

(இரண்டாம் பாகம்)

மூலம்

ஸிட்னி ஷெல்டன்

தமிழில்

ரா.கி. ரங்கராஜன்

**மின்னூலாக்கம் : செல்லா**

அல்லையன்ஸ்

10 கண்ணதாசன் சாலை
தியாகராய நகர்
சென்னை – 600 017

**Rs. 65.00**

**THARAGAI (Part - II)**
by
Sydney Sheldon

*Translated by*

**Ra.Ki. Rangarajan**

First Edition 2000

*Published by*

**ANURAGAM**
10 Kannadhasan Salai
T.Nagar Chennai - 600 017

*Typeset by*

**Saguram Graphics**
Chennai - 600 024

*Printed at*

**Sakthi Printers**
Chennai - 600 021

## ஆசிரியரின்
## பிற மொழிபெயர்ப்பு நூல்கள்

மேடம் - *மூலம்* ஜெஃப்ரே ஆர்ச்சர்

கண்ணுக்குத் தெரியாதவன் காதலிக்கிறான்
- *மூலம்* எச்.எஃப். ஸெயிண்ட்

ஒரு தாய், ஒரு மகள் - *மூலம்* டேனியல் ஸ்டீல்

# தாரகை

## (இரண்டாம் பாகம்)

## 44

செஸ் போட்டி தொடங்க வேண்டிய நேரம் வந்து விட்டது.

ட்ரேஸி உள்ளுக்குள் இன்னும் நடுங்கியபடியே இருந்தாள்.

ரஷ்ய சாம்பியனான போரிஸ் கூட்டத்தினரைப் பார்த்து அகம்பாவமாகச் சிரித்தார். ஒரு கப்பல் ஊழியரிடம், "இந்தாப்பா, எனக்கு உயர்தரமான பிராந்தி கொண்டு வந்து வை!" என்று அட்டகாசமாகக் கட்டளையிட்டார்.

"யாருக்கும் பட்சபாதம் இல்லாதபடி நான் ஓர் ஏற்பாடு செய்திருக்கிறேன்," என்று ஜெஃப் இரண்டு சாம்பியன் களிடமும் சொல்லியிருந்தான். "இங்கே மிஸ்டர் போரிஸ் வெள்ளைக் காய்களுடன் ஆடத் தொடங்கட்டும். அடுத்த அறையில் மிஸ்டர் பீட்டருடன் ட்ரேஸி வெள்ளைக் காய்களுடன் ஆட்டத்தைத் தொடங்குவாள்," என்று அவன் சொன்னதை இரண்டு சாம்பியன்களும் ஏற்றுக் கொண்டிருந் தார்கள்.

கூட்டத்தினர் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு பார்த்தனர்.

போரிஸ் கம்பீரமாக இருக்கையில் அமர்ந்து தன்னுடைய வெள்ளை ராணியின் எதிரிலிருந்த சிப்பாயை

இரண்டு கட்டங்களுக்கு முன் நகர்த்தினார். ஏளனமாக ட்ரேஸியைப் பார்த்தார். 'இந்தப் பெண்ணை வெறுமே தோற்கடித்தால் போதாது. அடிக்கிற அடியில் தலை தூக்க முடியாமல் பண்ண வேண்டும்!' என்று மனத்துக்குள் கறுவிக் கொண்டு ட்ரேஸியை ஏறிட்டு நோக்கினார்.

அவள், செஸ் போர்டை ஒரு முறை கூர்ந்து பார்த்தாள். எழுந்து கொண்டாள் - எந்தக் காயையும் நகர்த்தாமல், அடுத்த அறைக்கு நடந்தாள்.

அங்கே பீட்டர் அவளுக்காகக் காத்துக்கொண்டு உட்காந்திருந்தார்.

எதிரில் அமர்ந்தாள் ட்ரேஸி.

"என்னம்மா கண்ணு, போரிஸைத் தோற்கடித்து விட்டாயா?" என்று கேட்டுவிட்டுப் பெரிதாகச் சிரித்தார்.

"முயற்சி பண்ணிக் கொண்டிருக்கிறேன், மிஸ்டர் பீட்டர்," என்று அமைதியாகச் சொன்னாள் ட்ரேஸி.

பிறகு முன்னே குனிந்து தன் வெள்ளை ராணியின் எதிரிலிருந்த சிப்பாய் காயை இரண்டு கட்டங்கள் முன் நகர்த்தினாள் முன் அறையில் போரிஸ் எப்படி நகர்த்தி னாரோ அதே போல்.

பீட்டர் அவளை நிமிர்ந்து பார்த்துப் புன்னகை செய்தார்.

இன்னும் ஒரு மணி நேரத்தில் மசாஜ் செய்யுமிடத்திற்கு வருவதாக அவர் அப்பாயின்ட்மெண்ட் செய்து வைத்திருந் தார். இந்தப் பெண்ணைச் சட்டுப் புட்டென்று வீழ்த்திவிட்டு இன்னும் முன்னதாகக் கூடப் போய்விடலாம் என்று நினைத்துக் கொண்டார்.

முன்புறம் குனிந்தவர், தன் எதிரிலிருந்த சிப்பாயை இரண்டு கட்டங்கள் முன் நகர்த்தினார். இருவர் சிப்பாய் களும் எதிரும் புதிருமான கட்டங்களில் இருந்தன.

ட்ரேஸி ஒரு நிமிடம் செஸ் போர்டைக் கவனித்துப் பார்த்த பின் எழுந்து கொண்டாள்.

*போரிஸுடன் விளையாடும் முதல் அறைக்குத் திரும்பினாள்.*

*போரிஸின் எதிரில் அமர்ந்தவள் தன் கறுப்பு ராணியின் எதிரிலிருந்த சிப்பாயை இரண்டு கட்டங்கள் நகர்த்தினாள் அடுத்த அறையில் பீட்டர் எப்படி நகர்த்தினாரோ அதே போல.*

*கூட்டத்தோடு கூட்டமாக ஒரு மூலையில் ஜெஃப் உட்கார்ந்திருந்தான். அவளுக்கு மட்டுமே தெரிகிற மாதிரி 'கரெக்ட்' என்று அவன் மிக லேசாய்த் தலையை ஆட்டுவது தெரிந்தது.*

*போரிஸ் சிறிதும் தயங்காமல் தன் ராணியின் இடது பக்க பிஷப்பின் எதிரிலிருந்த சிப்பாயை இரண்டு கட்டங்கள் முன் நகர்த்தினார்.*

*அதை நன்கு பார்த்துக்கொண்ட பின் ட்ரேஸி எழுந்து கொண்டாள்.*

*பீட்டரின் அறைக்குச் சென்றவள், அதே போல் தன் பிஷப்பின் எதிரிலிருந்த சிப்பாயை இரண்டு கட்டங்கள் நகர்த்தினாள். பீட்டர் தன் ராஜாவின் சிப்பாயைத் தன் ராணியின் சிப்பாய்க்கு உறுதுணையாக நகர்த்தினார் - தனது பக்கத்தைப் பலப்படுத்த.*

*ட்ரேஸி எழுந்து போரிஸின் அறைக்குத் திரும்பினாள். பீட்டர் நகர்த்திய மாதிரியே தன் காயை முன் நகர்த்தினாள்.*

*போரிஸ் அவளை ஆச்சரியத்துடன் நோக்கினார். ஓ! இவளொன்றும் கற்றுக் குட்டியல்ல!*

*'சரி, இப்போது என்ன செய்கிறாள் பார்க்கலாம்,' என்று எண்ணியவாறு ராணி பக்கமுள்ள குதிரையைப் பிஷப்பின் மூன்றாவது கட்டத்துக்கு நகர்த்தினார்.*

*அதை ஆழ்ந்த கவனத்துடன் பார்த்துவிட்டு எழுந்து கொண்டாள் ட்ரேஸி. பீட்டரின் அறைக்குத் திரும்பியவள். போரிஸ் எப்படி நகர்த்தினாரோ அதே போல் தன் காயை நகர்த்தினாள்.*

பீட்டர், ராணியின் பிஷப்புக்கு எதிரிலிருந்த சிப்பாயை இரண்டு கட்டங்களுக்கு நகர்த்தினார்.

ட்ரேஸி எழுந்து போரிஸின் அறைக்குத் திரும்பி, பீட்டர் செய்தபடியே தன் காயை நகர்த்தினாள்.

இரண்டு சாம்பியன்களுக்குமே மிகுந்த ஆச்சரியம். தங்களை எதிர்த்து விளையாடுவது ஒரு சாதாரணப் பெண்ணல்ல, செஸ் விளையாட்டில் தேர்ச்சி பெற்ற ஒரு மகா கெட்டிக்காரி என்று உணரத் தொடங்கினார்கள். எவ்வளவு சாமர்த்தியமாக விளையாடினாலும் இந்தப்பெண் மடக்கு கிறாளே என்று இருவரும் ஆச்சரியப்பட்டார்கள். ஆனால் -

ட்ரேஸி செய்தது என்ன?

ஒவ்வொரு முறையும் போரிஸ் எப்படிக் காயை நகர்த்துகிறாரோ அதையே பீட்டரிடம் வந்து நகர்த்தினாள். அதேபோல் பீட்டர் எப்படி நகர்த்தினாரோ அதையே போரிஸிடம் சென்று நகர்த்தினாள்.

இரண்டு பேரும் வெவ்வேறு அறையில் இருந்ததால், உண்மையில் அசல் சாம்பியன்களான தாங்கள் இருவரும் தான் ஒருவரையொருவர் எதிர்த்து வியைாடிக் கொண்டிருக் கிறோம் என்பதை அறியவேயில்லை!

ஆட்டம் பாதிக் கட்டத்தைத் தாண்டியபோது, இரண்டு சாம்பியன்களுமே தங்கள் அலட்சியத்தை கைவிட்டார்கள். உஷாராகத் தொடங்கினார்கள். தங்கள் பெயரைக் காப்பாற்றிக் கொண்டாக வேண்டுமே என்ற கவலை அவர்களைப் பிடித்துக் கொண்டது. ஒவ்வொரு காயையும் நகர்த்துமுன் அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடந்தார்கள். குபுகுபுவென்று ஆத்திரத்துடன் சிகரெட் பிடித்தார்கள்.

அமைதியாக இருந்தவள் ட்ரேஸிதான்.

ஆட்டம் ஆரம்பித்து நாலு மணி நேரமாயிற்று- ட்ரேஸி உற்சாகமாக இருந்தாள். இரண்டு அறைகளிலும் நிரம்பி யிருந்த பார்வையாளர்களில் யாரும் இம்மிகூட நகரவில்லை.

*ஒவ்வொரு செஸ் கிராண்ட் மாஸ்டர்களும், மற்ற கிராண்ட் மாஸ்டர்கள் ஆடிய ஆட்டங்களை மறக்காமல் நினைவு வைத்திருப்பது வழக்கம். யார் எப்படி ஆடுவார்கள் என்பது அவர்களுக்கு அத்துபடி.*

*இந்த ஆட்டம் முன்னேற முன்னேற, இது போரிஸ் ஆடுகிற முறை என்று பீட்டருக்குத் தெரிந்தது. இது பீட்டர் ஆடுகிற முறை என்று போரிஸுக்குத் தெரிந்தது.*

*'சிறுக்கி கெடுத்தாளே! இவள் பீட்டரின் சிஷ்யை! அவன் இவளுக்குப் பயிற்சி தந்திருக்கிறான்!' என்று போரிஸ் நினைத்துக் கொண்டார்.*

*'சிறுக்கி கெடுத்தாளே! இவள் போரிஸின் சிஷ்யை! அவன் இவளுக்குப் பயிற்சி தந்திருக்கிறான்!' என்று பீட்டர் எண்ணிக் கொண்டார்.*

*என்ன பாடுபட்டு ஆடினாலும் ட்ரேஸியைத் தோற் கடிக்க முடியுமென்று தோன்றவில்லை.*

*ஆட்டம் ஆரம்பித்து ஆறுமணி நேரமாகிவிட்டது. விடிகாலை மணி நாலு.*

*இருவருக்கும் சம அளவாகப் படை பலம் குறைந்தி ருந்தது. வெற்றி பெறுவதற்கான வழி இரண்டு புறமும் இனி ஏதுமில்லை. நகர்த்திய காய்களையே நகர்த்தி நகர்த்தி நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் இன்னும் சிறிது நேரத்தில் கப்பல் துறைமுகத்தை அடையப் போகிறது. விளையாடிக் கொண்டே இருக்க அவகாச மில்லை.*

*போரிஸ் வெகு நேரத்துக்குச் செஸ் போர்டைக் கவனித்தார். பிறகு ஒரு பெருமூச்சு விட்டு, "ஆட்டத்தை இத்துடன் நிறுத்திக்கொள்ளலாம்," என்றார்.*

*அதாவது, தோல்வியை ஒப்புக் கொள்கிறார் என்று பொருள்!*

*கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது.*

*"சரி சார்," என்றாள் ட்ரேஸி.*

கூட்டம் ஆரவாரம் செய்தது.

ட்ரேஸி அடுத்த அறைக்குச் சென்றாள்.

இருக்கையில் உட்காரப் போன போது பீட்டர், "ஆட்டத்தை இத்துடன் முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்," என்றார்.

அதாவது, தோல்வியை ஒப்புக் கொள்கிறார் என்று பொருள்!

இங்கேயும், கூட்டத்தினரிடமிருந்து பெருத்த ஆரவாரம்!

நடந்ததை யாராலும் நம்ப முடியவில்லை.

எங்கிருந்தோ வந்த ஊர் பேர் தெரியாத பெண்! உலகப் புகழ் பெற்ற இரண்டு சாம்பியன்களுடன் விளையாடி, காய்களை நகர்த்த முடியாதபடி கட்டிப் போட்டுவிட்டாள்!

ட்ரேஸியின் பக்கத்தில் வந்து நின்றான் ஜெஃப். "வா, போகலாம். நாம் இரண்டு பேருமே விருந்து சாப்பிட வேண்டும்," என்றான்.

ட்ரேஸி அவனுடன் கிளம்பினாள்.

போரிஸ், பீட்டர் இரண்டு பேரும் எழுந்திருக்கவில்லை. தங்கள் தங்கள் பலகைகளை வெறித்துப் பார்த்தவாறு நாற்காலியில் விழுந்து கிடந்தார்கள்.

மேல் தளத்தில் இருந்த ரெஸ்டாரெண்ட்டில் ட்ரேஸியும் ஜெஃபும் உணவு அருந்திக் கொண்டிருந்தார்கள்.

"ட்ரேஸி, நீ ரொம்ப அழகாயிருக்கிறாய்!" என்று கூறிச் சிரித்தான் ஜெஃப். "போரிஸின் முகத்தைப் பார்த்தாயோ? எந்த நிமிடத்திலும் மாரடைப்பு வரப் போகிற மாதிரி இருந்தார் ஆசாமி!"

"எனக்குத்தான் மாரடைப்பு வரும்போல் இருந்தது!" என்றாள் ட்ரேஸி. "சரி, பந்தயப் பணம் எவ்வளவு கிடைத்தது நமக்கு?"

"இரண்டு லட்சம் டாலருக்கு மேலே! காலையில் ஸௌதாம்ப்டன் துறைமுகத்தில் கப்பல் நிற்கிறபோது கஜானா

அதிகாரியிடம் பணத்தை வாங்கிக் கொள்வோம். டைனிங் அறையில் காலைச் சிற்றுண்டியின் போது உன்னைச் சந்திக்கிறேன். என்ன?"

"ஓ!" என்றாள் ட்ரேஸி.

"அப்ப உன் அறையில் உன்னைக் கொண்டுபோய் விட்டு விட்டு வருகிறேன். வா."

"இல்லை. எனக்குத் தூக்கம் வரவில்லை. மனம் ஒரே பரபரப்பாக இருக்கிறது. நீங்கள் போங்கள்."

"ஆமாமாம், நீ இப்ப ஒரு செஸ் சாம்பியனாயிற்றே!" என்ற ஜெஃப் குனிந்து அவள் கன்னத்தில் மெல்ல முத்தமிட்டான். "குட் நைட் ட்ரேஸி!"

"குட் நைட் ஜெஃப்!"

அவன் போவதைப் பார்த்தபடி சிறிது நேரம் நின்றிருந்தாள் ட்ரேஸி.

தூக்கமா! எப்படித் தூக்கம் வரும்? வாழ்க்கையிலேயே பிரமாதமான இரவு இது! அந்த ரஷ்யனும் சரி, அந்த ருமேனியனும் சரி ரொம்ப அகம்பாவமாக இருந்தார்கள். அவர்களைத் தோற்கடித்தது எவ்வளவு பெரிய விஷயம்!

'என்னை நம்பு' என்றான் ஜெஃப், நம்பினாள் பலன் கிடைத்தது.

ஆனால் அவன் ஒரு மோசடிக் கலைஞன் என்பதை அவள் மறக்கவில்லை. மூளையுள்ளவன். கலகலப்பாகப் பேசி இனிமையாகப் பழகுகிறவன்.

ஆனால் அவனிடம் மனசைப் பறி கொடுக்கமுடியாது...

ஜெஃப் தன் அறையை நோக்கிச் செல்கையில் ஒரு கப்பல் அதிகாரி எதிர்ப்பட்டார்.

"செஸ் போட்டி ரொம்ப நன்றாய் நடந்தது, மிஸ்டர் ஜெஃப்!" என்றார் அவர். "இந்தப் போட்டி பற்றி வயர்லெஸ் செய்தி அனுப்பி விட்டோம். சௌதாம்ப்டன் துறை முகத்தில் உங்கள் இரண்டு பேரையும் பேட்டி காணப் பத்திரிகைக்

காரர்கள் காத்திருப்பார்கள். நீங்கள் ட்ரேஸியின் மானேஜரா?"

"இல்லையில்லை, சும்மா கப்பலில் ஏற்பட்ட பழக்கம் தான்," என்றான் ஜெஃப்.

அவன் மூளை கிடுகிடுவென்று யோசனை செய்தது.

தனக்கும் ட்ரேஸிக்கும் சினேகிதம் உண்டு என்று வெளியே தெரிய வந்தால் எல்லாமே வம்பு. 'செட் அப்' என்று தெரிந்து விசாரணைகூட நடத்துவார்கள்.

யாருக்கும் எந்தச் சந்தேகமும் ஏற்படுவதற்கு முன், கஜானா அதிகாரியிடமிருந்து பணத்தை வாங்கிக் கொண்டுவிட வேண்டும்.

ட்ரேஸிக்கு ஒரு சீட்டு எழுதினான்.

'பணத்தைப் பெற்றுக் கொண்டுவிட்டேன். சவாய் ஓட்டலில் காலைச் சிற்றுண்டியில் சந்திப்போம். நீ ஒரு பிரமாதமான பெண்.'

சீட்டை உறையில் போட்டு ஒட்டி, ஒரு வேலைக்காரப் பையனிடம் கொடுத்தான். "காலையில் முதல் வேலையாக இதை மிஸ் ட்ரேஸியிடம் கொடுத்துவிடு," என்றான்.

"சரி சார்." என்று பையன் நகர்ந்ததும் கஜானா அதிகாரியிடம் சென்றான் ஜெஃப் - பந்தயப் பணம் இரண்டு லட்சம் டாலரைப் பெற்றுக் கொள்வதற்காக.

## 45

மறுநாள் பார்ப்பதாக ட்ரேஸிக்கு ஒரு சீட்டெழுதி அனுப்பி விட்டு, கப்பலின் கஜானா அதிகாரியிடம் சென்றான் ஜெஃப்.

"தொந்தரவுக்கு மன்னிக்கணும் சார்," என்றான் மிகவும் பணிவான குரலில். "இன்னும் கொஞ்ச நேரத்தில் கப்பலிலிருந்து இறங்கிவிடப் போகிறோம் இல்லையா? உங்களுக்கு

ஏகப்பட்ட வேலை இருக்கும். அதனால் பணத்தை இப்பவே கொடுத்து விடுகிறீர்களா?"

"ஓ, அதில் ஒரு கஷ்டமும் இல்லை," என்றார் கஜானா அதிகாரி புன்சிரிப்புடன். "உங்கள் சினேகிதி - அந்தச் செஸ் சாம்பியன் உண்மையிலேயே பெரிய ஆள்தான்."

"ஆமாம் சார்."

"ஒன்று கேட்டால் தப்பாக நினைக்க மாட்டீர்களே? இவ்வளவு பிரமாதமாய்ச் செஸ் ஆட எங்கே கற்றாள் அந்தப் பெண்?"

பெரிய ரகசியம் சொல்கிறவன் போல் அவரிடம் குனிந்தான் ஜெஃப். "செஸ் மேதை பாபி ஃபிஷர் இல்லை, அவரிடம் பாடம் படித்தாள் என்று கேள்வி."

"அதானே பார்த்தேன்," என்ற கஜானா அதிகாரி, பெட்டகத்திலிருந்து இரண்டு பெரிய பைகளை எடுத்தார். "ரொம்பப் பெரிய ரொக்கமாக இருக்கிறதே? எடுத்துக் கொண்டு போகக் கஷ்டமாயிருக்கும். வேண்டுமானால் இந்த தொகைக்குச் செக் போடட்டுமா?"

"வேண்டாம், ஏன் சிரமம் உங்களுக்கு? வேறொரு உதவி செய்யுங்கள்."

"என்ன?"

"துறைமுகத்தில் நம்ம கப்பல் இறங்குவதற்கு முன் தபால்களை வாங்கிப் போவதற்காக ஒரு படகு வரு மில்லையா?"

"வரும் சார். காலை ஆறு மணிக்கெல்லாம் வரும் என்று எதிர் பார்க்கிறோம்."

"அந்தப் படகில் நான் புறப்பட்டுப் போவதற்குத் தயவு பண்ணி ஏற்பாடு செய்ய முடியுமா? என் அம்மா ரொம்ப உடம்பு சரியில்லாமல் இருக்கிறாள். அவளை நான் பார்க்கணும்." ஜெஃபின் குரல் தழுதழுத்தது. "அவளுக்கு ஏதாவது நேருமுன் பார்க்கணும்."

"அடப் பாவமே! அப்படியா? நிச்சயமாய் ஏற்பாடு பண்ணுகிறேன் மிஸ்டர் ஜெஃப். கஸ்டம்ஸ் அதிகாரியிடம் பேசி நீங்கள் கிளம்ப உதவி செய்கிறேன்."

**கா**லை மணி ஆறே கால்.

இரண்டு பணப் பைகளையும் சூட்கேஸில் பத்திரப் படுத்திக் கொண்டு ஏணி வழியே இறங்கினான் ஜெஃப். தபால் கொண்டு செல்லும் படகில் அமர்ந்து கொண்டான்.

கண்ணெதிரிலே பிரம்மாண்டமாக ஓங்கி உயர்ந்து நின்றது அவன் பயணம் வந்த எலிஸபெத் கப்பல். அதைக் கடைசி முறையாக ஒரு பார்வை பார்த்துக் கொண்டான்.

தபால் படகின் சிப்பந்தியிடம், "இந்தக் காலை வேளை ரொம்ப அற்புதமாக இருக்கிறது. இல்லை?" என்றான்.

"ஆமாம், ரொம்ப அற்புதம்!" என்று வேறொரு குரல் அவனுக்குப் பின்னாலிருந்து கேட்டது.

திடுக்கிட்டுத் திரும்பினான்.

ஒரு கயிற்றுக் குவியலின்மீது உல்லாசமாக உட்கார்ந்திருந்தாள் ட்ரேஸி! கடல் காற்றில் கூந்தல் சிலு சிலுத்து அவள் முகத்தின் மீது விளையாடிக் கொண்டிருந்தது.

"ட்ரேஸி! இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

"என்ன செய்து கொண்டிருப்பேனென்று நினைக்கிறீர்கள்?" ட்ரேஸி திருப்பிக் கேட்டாள்.

அவள் முகத்தில் தென்பட்ட கடுமை அவனுக்குப் புரிந்தது. "ட்ரேஸி, மொத்தப் பணத்தையும் தூக்கிக் கொண்டு நான் ஓடிவிடுவேன் என்று நினைத்து விட்டாய், அப்படித் தானே?"

"சே, சே! நான் ஏன் அப்படி நினைக்கப் போகிறேன்?" என்றாள் அவள் வெறுப்பு நிரம்பிய குரலில்.

"ட்ரேஸி, உனக்கு ஒரு சீட்டெழுதி அனுப்பினேனே-ஸவாய் ஓட்டலில் சந்திக்கிறேனென்று..."

"ஆமாமாம்," என்று ட்ரேஸி குறுக்கிட்டாள். "உங்களைப் பற்றி எனக்குத் தெரியாதா?"

ஜெஃப் அவளைக் கூர்ந்து நோக்கினான். என்ன செய்தாலும் இவள் எண்ணத்தை மாற்ற முடியாதென்று விளங்கியது.

**ஸ**வாய் ஓட்டல்.

தன் அறையில் தங்கியிருந்தாள் ட்ரேஸி.

ஜெஃப் பணத்தைக் கவனமாக எண்ணி அவளிடம் தந்தான். "உன் பங்கு ஒரு லட்சத்து ஓராயிரம் டாலர்."

"நன்றி," என்றாள் ட்ரேஸி. குரல் சில்லென்றிருந்தது.

ஜெஃப் சொன்னான்: "ட்ரேஸி, நீ என்னைத் தப்பாக நினைத்திருக்கிறாய். இன்றிரவு என்னுடன் சாப்பிட வருகிறாயா? எல்லாவற்றையும் உனக்கு விளக்கமாய்ச் சொல்கிறேன். ஒரு சந்தர்ப்பம் கொடு."

ரேஸி சிறிது தயங்கினாள். பிறகு, "சரி," என்றாள்.

ஆனால் அன்றிரவு ட்ரேஸியை அழைத்துப் போக ஜெஃப், ஓட்டலுக்கு வந்தபோது அவள் இருக்கவில்லை.

ஓட்டல் மானேஜரிடம் கேட்டான்.

"மிஸ் ட்ரேஸியா சார்? காலையிலேயே காலி செய்து கொண்டு போய்விட்டார். எங்கே போகிறார் என்று விலாசம் எதுவும் கொடுக்கவில்லை சார்," என்றார் அவர்.

**ஜெ**ஃபிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டதும் ஸவாய் ஓட்டலைக் காலி செய்துவிட்டு, லண்டனில் வேறொரு ஓட்டலுக்குப் போய்விட்டாள் ட்ரேஸி. அது அளவில் சிறியதாயிருந்தாலும் வசதிகள் நிறைந்திருந்தது. கிட்டத்தட்டச் சொந்த வீட்டில் இருப்பது போல் இனிமையான சூழ்நிலையுடன் அமைந்திருந்தது.

லண்டனுக்கு அவள் வந்த இரண்டாம் தினத்தன்று அவளுக்கு ஒரு கடிதம் வந்தது. ஓட்டல் வேலையாள் ஒருவன் அதை அவளிடம் கொண்டு வந்து தந்தான்.

அழகான கையெழுத்தில் அது எழுதப்பட்டிருந்தது.

*'நாம் சந்தித்துப் பேசினால் நல்லது என்று உங்களுக்கும் எனக்கும் தெரிந்த ஒரு பொது நண்பர் கூறினார். இன்று மாலை நான்கு மணிக்கு ரிட்ஸ் ஓட்டலில் என்னுடன் தேனீர் அருந்தத் தாங்கள் வர முடியுமா? என்னை நீங்கள் அடையாளம் தெரிந்துகொள்வதற்காக, நான் கோட்டில் ஒரு சிவப்பு ரோஜா செருகிக் கொண்டிருப்பேன்.*

*கந்த்தர்.'*

என்று எழுதியிருந்தது.

கந்த்தரா? யார் அவர்? அந்தப் பெயரைக் கேள்விப் பட்டதில்லையே என்று ட்ரேஸி யோசித்தாள். இந்த அழைப்பைப் பொருட்படுத்த வேண்டாம் என்றுதான் முதலில் தோன்றியது. ஆனால் என்னதான் விஷயம், பார்த்துவிடுவோமே என்று குறு குறுப்பு ஏற்படவே -

பிற்பகல் நாலேகால் மணிக்கு அவள் ரிட்ஸ் ஓட்டலை அடைந்தாள்.

கந்த்தர் என்பவரை உடனேயே கண்டு பிடித்துவிட்டாள்.

அவருக்கு அறுபது வயதுக்கு மேலிருக்கும். ஒல்லியான உருவம். முகத்தில் அறிவுக் களை தென்பட்டது. உயர்தரமான ஆடை அணிந்திருந்தார். கோட்டின் காலர் மடிப்பில் சிவப்பு ரோஜா பிரகாசித்தது.

ட்ரேஸி அவரை நோக்கி நடந்ததும், அவர் முன்வந்து சற்றே குனிந்து வணக்கம் தெரிவித்தார். "என் அழைப்பை ஏற்று இங்கே வந்ததற்கு நன்றி," என்றார்.

இந்த மனிதருக்கு நம்மிடம் என்ன காரியம் ஆக வேண்டியிருக்கும்? என்ன யோசித்தும் ட்ரேஸிக்குத் தெரியவில்லை.

"டீ அருந்தியபடி நாம் பேசுவோமே?" என்றார் கந்த்தர்.

தேனீருடன் கூட வகைவகையான சிற்றுண்டிகளும்

*சாப்பிட்டபடியே ட்ரேஸி, "நம் இருவருக்கும் தெரிந்த பொதுவான நண்பர் என்று எழுதியிருந்தீர்களே, யார் அவர்?" என்று கேட்டாள்.*

*"மார்கன். நான் அவ்வப்போது பிஸினஸ் விஷயமாக அவருடன் பேசுவது வழக்கம்."*

*மார்கன்! 'நகைகள் களவாடி வரும்படி சொல்லிவிட்டு, பிறகு என்னை ஏமாற்றிப் பறிக்க முயன்றாரே அந்தப் பேர் வழியா!' என்று எரிச்சலுடன் நினைத்துக் கொண்டாள் ட்ரேஸி.*

*"மார்கன் உங்களைப் பிரமாதமாய்ப் புகழ்கிறார்," என்றார் கந்த்தர்.*

*அவரைக் கூர்ந்து ஆராய்ந்தாள் ட்ரேஸி.*

*மார்கனைப் பற்றிப் பிறகு அவர் எதுவும் பேசவில்லை. தன் பிறப்பு வளர்ப்பைக் குறித்துச் சொல்லத் தொடங்கினார்:*

*"நான் பிறந்தது ஜெர்மனியில் மியூனிக் நகரில். என் தந்தை சொந்தமாகப் பாங்க் நடத்தியவர். பெரும் பணக்காரர். என் வீட்டில் எங்கு பார்த்தாலும் ஓவியங்களும் புராதனக் கலைப் பொருள்களும் நிறைந்திருக்கும். என் அம்மா யூதர் இனத்தைச் சேர்ந்தவர். ஜெர்மனியில் ஹிட்லர் ஆட்சிக்கு வந்தபோது என் அப்பாவும் அம்மாவும் சகலத்தையும் பறி கொடுத்தார்கள். குண்டுவீச்சின்போது உயிரையும் இழந்தார்கள். சில நண்பர்கள் என்னை ரகசியமாக ஸ்விட்ஜர் லாந்துக்கு அனுப்பி வைத்தார்கள். உலகப் போர் முடிந்தது. ஆனால் நான் ஜெர்மனிக்குத் திரும்பவில்லை. லண்டனுக்கு வந்தேன். புராதனக் கலைப் பொருள்கள் விற்கும் கடை யொன்றை ஆரம்பித்து நடத்தி வருகிறேன். நீங்கள் கட்டாயம் ஒருநாள் அங்கே வர வேண்டும்."*

*'ஓ! இதுதானா விஷயம்! இவர் கடையில் நான் ஏதாவது வாங்க வேண்டும். அதற்காகத்தான் இந்தச் சந்திப்பா!' என்று எண்ணினாள் ட்ரேஸி.*

*அவள் ஊகம் தப்பு என்று பிற்பாடு தெரிந்தது.*

பில்லுக்குப் பணம் கொடுத்தபடியே கந்த்தர் சாவகாசமாகச் சொன்னார்: "எனக்குக் கிராமப் புறத்தில் சின்னதாக ஒரு வீடு இருக்கிறது. இந்த வாரக் கடைசியில் சில சினேகிதர்கள் அங்கே வரப் போகிறார்கள். நீங்களும் வந்து கலந்து கொண்டால் சந்தோஷமாயிருக்கும்."

ட்ரேஸி சிறிது தயங்கினாள் இந்த மனிதர் நமக்கு முன்பின் தெரியாதவர். இவருக்கு நம்மிடம் என்ன காரியம் ஆக வேண்டும் என்பதும் தெரியவில்லை. இருந்தாலும் -

போய்த்தான் பார்ப்போமே? அதிலென்ன நஷ்டம்?

அந்த வார இறுதியில் அங்கே ட்ரேஸி சென்றபோது புதிய அனுபவங்கள் காத்திருந்தன.

கந்த்தர் சொன்னதுபோல அவருடைய வீடு சின்னதாக இருக்கவில்லை. முப்பது ஏக்கர் பரப்புள்ள மனையில் பிரம்மாண்டமான பங்களா கட்டியிருந்தார். மனைவி இறந்து விட்டாள். வேலைக்காரர்களுடன் தனியே இருந்தார்.

"வா, சுற்றிப் பார்க்கலாம்," என்று அவளை அழைத்துச் சென்றார் அவர்.

ஒரு டஜன் பந்தயக் குதிரைகள் வளர்த்து வந்தார் ஒரு புறம். இன்னொரு புறம் கோழிப் பண்ணை. மற்றொரு புறம் பன்றிப் பண்ணை.

கடைசியில் பல வகைப் புறாக்கள் வைக்கப்பட்டுள்ள பண்ணைக்கு அழைத்துச் சென்றார் ட்ரேஸியை.

"இதெல்லாம் சாதாரணப் புறாக்களில்லை, ட்ரேஸி. தூதுப் புறாக்கள், அதாவது எத்தனை மைல் தூரத்துக்கு அப்பால் பறக்க விட்டாலும், வழி தெரிந்துகொண்டு இங்கே வந்து விடும்." ஒரு புறாவைக் கையிலெடுத்தார். "இவளைப் பார்த்தாயா? மார்சா என்று பெயர். பொல்லாத பெண் எல்லாரையும் விரட்டிக் கொண்டும் மிரட்டிக் கொண்டும் இருப்பாள். ஆனால் அசாத்திய மூளை." மென்மையாக அதை வருடிக் கொடுத்துவிட்டுக் கீழே விட்டார்.

வண்ண வண்ணமான அந்தப் புறாக்களைப் பார்க்க ட்ரேஸிக்கு ஆனந்தமாக இருந்தது. ஆனால் வெள்ளை நிறத்தில் ஒரு புறாகூட இல்லையே? ஏன்? ஆச்சரியமாயிருந்தது அவளுக்கு.

"ஏன் வெள்ளைப் புறா இல்லை?" என்றாள்.

"தூதுப் புறாக்களில் வெள்ளைப் புறா இருக்கவே இருக்காது ட்ரேஸி. ஏன் தெரியுமா? சராசரியாய் மணிக்கு நாற்பது மைல் வேகத்தில் இந்தப் புறாக்கள் பறக்கும். வெள்ளைச் சிறகுகள் ரொம்பச் சுலபமாய் உதிர்ந்து விடும். அந்த வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாது."

வைட்டமின் சத்துக் கலந்த தானியங்களைப் புறாக்களுக்கு இறைத்தபடி சொன்னார் கந்த்தர்: "இந்தப் புறாக்கள் ரொம்ப ஆச்சரியமான ரகம், ட்ரேஸி. ஐந்நூறு மைல் தூரம் வழி தெரிந்துகொண்டு வந்து சேர்ந்து விடும்!"

"அட, அப்படியா!" என்று ஆச்சரியப்பட்டாள் ட்ரேஸி.

ஒரு பெரிய கொள்ளை நடத்த அவர் திட்டமிட்டிருக்கிறார் என்று அவளுக்கு அப்போது தெரியவில்லை.

## 46

கந்த்தரின் மாளிகையில் அன்றைய விருந்துக்குப் பல பெரிய புள்ளிகள் வந்திருப்பதைக் கவனித்தாள் ட்ரேஸி.

ஒரு மந்திரி. ஒரு ராணுவ ஜெனரல், ஒரு பிரபு, ஒரு இந்திய மகா ராணி - இப்படிப் பலர்.

மறுநாள் சாயந்தரம் ட்ரேஸி லண்டனுக்குப் புறப்படத் தயாரானாள். கந்த்தரின் அறையில் அவளும் அவரும் தேனீர் அருந்திக் கொண்டிருந்தார்கள்.

அழகான கோப்பையில் டீயை ஊற்றிய வண்ணம் ட்ரேஸி சொன்னாள்: "என்னை எதற்காக இங்கே வர

வழைத்தீர்கள் என்று தெரியவில்லை. ஆனால் அற்புதமாய்ப் பொழுது கழிந்தது."

"நீ வந்ததில் எனக்குச் சந்தோஷம் ட்ரேஸி," என்றார் கந்த்தர். "ஆமாம். உன் எதிர்காலத் திட்டம் என்ன?"

சற்றுத் தயங்கியபின் ட்ரேஸி, "அதைப் பற்றி ஒன்றும் நிச்சயம் பண்ணவில்லை," என்றாள்.

"நாம் இருவரும் இணைந்து வேலை செய்யலாம்."

"எங்கே? உங்களுடைய கலைப் பொருட்கள் விற்பனை செய்யும் கடையிலா?"

கந்த்தர் சிரித்தார். "இல்லேம்மா. உன் திறமைகளை வீணடிப்பது ரொம்ப அநியாயம் என்று எனக்குத் தோன்றுகிறது. மார்கனுக்காக நீ செய்த வேலை எனக்குத் தெரியும். பிரமாதமான புத்திசாலித்தனத்துடன் அதைச் செய்தாய்..."

"கந்த்தர், அதெல்லாம் முடிந்து போன கதை."

"சரி, இனிமேல் நடக்கப் போகிற கதை என்ன?" என்றார் அவர். "அடுத்தாற்போல் எந்தத் திட்டமும் இல்லை என்கிறாய். உன் எதிர்காலத்தைப் பற்றி நீ யோசிக்க வேண்டாமா? நீ இப்போது கையில் எவ்வளவு பணம் வைத்திருந்தாலும் சரி, கொஞ்ச நாளில் கரைந்து விடுவது நிச்சயம். அதற்குப் பிறகு? அதனால் தான் நானும் நீயும் கூட்டாளிகளாக ஆகலாம் என்கிறேன். நீதான் பார்த்தாயே? நான் பழகுவதெல்லாம் பெரிய பெரிய இடங்களில். சந்திப்பதெல்லாம் பெரிய பெரிய புள்ளிகள். போவதெல்லாம் பெரிய பெரிய பார்ட்டிகளுக்கு. பெரும் பணக்காரர்கள் எங்கே வருகிறார்கள், எங்கே போகிறார்கள் என்பது எனக்கு அத்துப்படி-"

"இதையெல்லாம் ஏன் என்னிடம் சொல்கிறீர்கள்?"

"புரியவில்லையா? கோடி கோடியாய்க் கொட்டிக் கிடக்கும் வட்டாரங்களில் நான் உன்னை அறிமுகம் செய்து [illegible] நீ திரும்பும் திசையெல்லாம் வைரமும்

வைடூரியமுமாக இருக்கும். விலை மதிப்பிட முடியாத ஆபரணங்களையும் ஓவியங்களையும் பற்றி உனக்கு நான் தகவல்கள் தருவேன். எப்படி நீ தந்திரமாக அவைகளை எடுத்து வரலாம் என்று சொல்லித் தருவேன். அவைகளை நான் ரகசியமாக விற்பனை செய்ய முடியும். கிடைப்பதை நீயும் நானும் சமமாகப் பங்கு போட்டுக் கொள்ளலாம். என்ன சொல்கிறாய்?"

"இஷ்டமில்லை என்று சொல்கிறேன்."

சிந்தனையுடன் அவளைக் கூர்ந்து பார்த்தார் அவர். "சரி, உன் மனசை மாற்றிக் கொண்டால் எனக்குப் போன் செய்."

"என் மனதை மாற்றிக் கொள்ள மாட்டேன்."

அன்று மாலை அவள் லண்டனில் தன் ஜாகைக்குத் திரும்பினாள்.

**ல**ண்டன் ட்ரேஸிக்கு ரொம்பப் பிடித்துவிட்டது. நிறைய ஊர் சுற்றினாள். புகழ் பெற்ற ஓட்டல்களில் சாப்பிட்டாள். பிரபலமான கடைகளில் விரும்பியதை வாங்கினாள். காரும் டிரைவரும் அமர்த்திக் கொண்டு உல்லாசப் பயணங்கள் சென்றாள்.

பணம் தண்ணீராய்ச் செலவழிந்து கொண்டிருந்தது. 'உன் கையில் உள்ள பணம் எப்படியும் கொஞ்ச நாளில் கரைந்துவிடும்' என்று கந்த்தர் எச்சரித்தது நினைவுக்கு வந்தது.

உண்மை. அதிக நாளைக்கு இந்தப் பணம் இருக்காது. எதிர்காலத்துக்கு ஏதாவது திட்டமிட்டாக வேண்டும்...

அடுத்தடுத்துப் பல சனி - ஞாயிறுகளில் கந்த்தரை அவள் சந்தித்தாள். விடுமுறைகளின் போது அவருடன் பொழுதைக் கழிப்பது ட்ரேஸிக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது.

ஒரு ஞாயிற்றுக் கிழமை இரவு.

விருந்துக்குப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் வந்திருந்தார். ட்ரேஸியிடம் அவர், "அமெரிக்காவில் டெக்ஸாஸ் மாநிலத்தில் பணக்காரச் சீமாட்டிகள் ஏராளமாய்

இருக்கிறார்களாமே? நான் பார்த்ததில்லை. அவர்கள் எப்படி இருப்பார்கள்?" என்று கேட்டார்.

ட்ரேஸி நடித்துக் காட்டினாள். டெக்ஸாஸைச் சேர்ந்த பணக்காரக் கிழவி எப்படி நடந்துகொள்வாள் என்று அவள் கோணங்கித்தனம் செய்து காட்டியபோது கூடியிருந்த அத்தனை பேரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

பிற்பாடு எல்லாரும் போன பிறகு கந்த்தர் கேட்டார்: "ஏன் ட்ரேஸி, இப்போது நடித்துக் காட்டினாயே, டெக்ஸாஸ் பணக்காரி மாதிரி? அதுபோல நடித்து நீ ஒரு பெரிய தொகை சம்பாதிக்க முடியும். என்ன சொல்கிறாய்?"

"நான் நடிகை அல்ல, கந்த்தர்."

"உன் திறமை உனக்கே தெரியவில்லை, ட்ரேஸி. நான் சொல்வதைக் கேள். லண்டனில் ஒரு பெரிய நகைக் கடை இருக்கிறது. பார்க்கர் அண்ட் பார்க்கர் என்று பெயர். ஏமாந்தவர்கள் தலையில் மிளகாய் அரைப்பதில் மகா கெட்டிக்காரர்கள். அவர்களை மண்டையிலடிக்க எனக்கு ஒரு ஐடியா தோன்றுகிறது," என்று கூறி ஒரு யோசனை சொன்னார்.

"ஊகூம். வேண்டாம்," என்றாள் ட்ரேஸி. ஆனால் அந்தத் திட்டத்தை எண்ணிப் பார்க்க எண்ணிப் பார்க்க அவள் மனத்தினுள் ஒரு குறுகுறுப்பு உதித்தது. லாங் ஐலண்ட் தீவில் போலீஸ்காரர்களையும், செஸ் ஆட்டத்தின்போது போரிஸையும், பீட்டரையும் பிற்பாடு ஜெஃப்பையும் ஏமாற்றிய சுகமான அனுபவங்கள் அவளுக்கு ஞாபகம் வந்து ஒரு விதமான குஷியை ஏற்படுத்தின. வார்த்தைகளால் விவரிக்க முடியாத குஷி.

ஆனால் அதெல்லாம் பழம் கதை. முடிந்து போன விஷயம்.

"ஊகூம், வேணடாம்," என்று மறுபடியும் சொன்னாள். ஆனால் இந்த முறை அவள் குரலில் அத்தனை தீவிரம் இருக்கவில்லை.

அது அக்டோபர் மாதம். இருந்தும் லண்டன் கத கதப்பாகவும் சுறுசுறுப்பாகவும் இருந்தது.

சொகுசு டாக்ஸியொன்று அந்த நகைக் கடையின் வாசலில் வந்து நின்றது. கடையின் பெயர் பார்க்கர் அண்ட் பார்க்கர்.

வெள்ளை உடுப்பு அணிந்த டாக்ஸி டிரைவர் காரிலிருந்து இறங்கி வந்து, ராஜமரியாதையுடன் பின் கதவைத் திறந்து விட்டான்.

பளபளப்பான, ஆடம்பரமான உடைகள் அணிந்து, மிகையாக மேக்கப் போட்டுக் கொண்டிருந்த ஒரு பெண்மணி குதித்துக் கொண்டு இறங்கினாள் காரிலிருந்து.

"கடை எந்தப் பக்கம் தம்பி?" என்று டிரைவரைக் கேட்டாள் உரத்த குரலில். அமெரிக்க டெக்ஸாஸ்காரி போல் ஒலித்தது உச்சரிப்பு.

கடையின் வாசற்புறத்தைக் காட்டினான் டாக்ஸி டிரைவர்.

"அதோ அந்தப் பக்கம், மேடம்."

"நல்லதுடா கண்ணா. இங்கேயே இரு. சீக்கிரம் வந்து விடுவேன்."

"இங்கே காரை நிறுத்தக் கூடாது, மேடம். இந்த இடத்திலேயே காரை சுற்றிச் சுற்றி ஓட்டிக் கொண்டி ருக்கணும்."

அவள் அவன் முதுகில் தட்டிக் கொடுத்து, "அப்படியே செய் தம்பி. மீட்டரைப் பற்றிக் கவலைப்படாதே," என்றாள்.

'தம்பி!' அந்த டிரைவருக்கு ரொம்ப அவமானமாக இருந்தது. 'ஏதோ தலையெழுத்து, டாக்ஸி ஓட்டும்படி ஆகிவிட்டது. இந்த மாதிரி பணக்காரப் பீடைகள் 'தம்பி' என்று கூப்பிட வேண்டுமா? விதிடா சாமி! அமெரிக்கர் களிடம் அதுவும் டெக்ஸாஸ் காட்டுமிராண்டிகளிடம் வண்டி வண்டியாய் பணம் இருக்கிறது! அதற்காகத்தான்

இதையெல்லாம் பொறுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது!' என்று எண்ணிக் கொண்டான் அந்த டாக்ஸி டிரைவர்.

காரிலிருந்து இறங்கிய பெண்மணி டெக்ஸாஸைப் பார்த்ததுகூடக் கிடையாது என்று அவனுக்குத் தெரியாது!

அவள் கடையின் முன் நின்று, ஷோ கேஸ் கண்ணாடியில் தன்னை ஒருமுறை பார்த்துக் கொண்டாள். புன்னகை மலர்ந்தது அவள் முகத்தில். கதவை நோக்கி அவள் நடந்ததும், சீருடை அணிந்த கடைச் சிப்பந்தி கதவைத் திறந்து, "வணக்கம் மேடம்," என்று வரவேற்றான்.

"ஏண்டா தம்பி, இந்தக் கடையில் இமிடேஷன் நகைகளைத் தவிர வேறு ஏதாவது விற்கிறாங்களோ?" என்றாள் அவள்.

கடைச் சிப்பந்தி விழி விழியென்று விழித்தான். ட்ரேஸி ஒய்யாரமாக உள்ளே சென்றாள். அவள் பூசியிருந்த சென்ட்டின் மணம் ஹால் முழுதும் கமகமத்தது.

ஆர்தர் என்ற சேல்ஸ்மேன் அவளை மரியாதையுடன் அணுகி, "என்ன மேடம் வேணும்?" என்று கேட்டான்.

"அதுதான்ப்பா பார்க்கிறேன்," என்றாள் அவள். "எனக்கு இன்றைக்குப் பிறந்த நாள். என் வீட்டுக்காரர் இருக்கிறாரே, பி.ஜே., இங்கே போய் எனக்கு இஷ்டப்பட்ட பரிசை வாங்கிக் கொள்ளும்படி சொல்லி விட்டார். அதுதான் வந்தேன். உங்ககிட்டே என்னப்பா இருக்கிறது?"

"குறிப்பாய் ஏதாவது பார்க்கணுமா மேடம்?"

"அப்பப்பா! இந்த இங்கிலிஷ்காரர்களுக்கு எதிலும் அவசரம் தான்! என்ன, நான் சொல்வது சரிதானே?" அவள் உரக்கச் சிரித்து அவன் தோளில் பலமாகத் தட்டினாள். அவனுக்கு என்னவோ போலாகி விட்டது. சுதாரித்துக் கொண்டான்.

"எமரால்டிலே ஏதாவது இருந்தால் காட்டேன். எனக்கு எமரால்டு வாங்கிக் கொடுக்கிறதிலே தனி மோகம் என் வீட்டுக்காரர் பி.ஜே.க்கு."

"இப்படி வாருங்கள் மேடம்."

ஆர்தர் அவளைப் பக்கத்து அறைக்கு அழைத்துச் சென்றான். வகை வகையான பச்சைக் கற்கள் அங்கே அழகாய் வரிசையாய் வைக்கப்பட்டிருந்தன.

ஆனால் அவள் அவைகளை இளக்காரமாக ஒரு பார்வை பார்த்து விட்டு, "இதெல்லாம் சில்லறை சமாசாரம். பெரிசாய் ஒண்ணுமில்லையா?" என்றாள்.

ஆர்தர் விறைப்பாக, "இதெல்லாம் முப்பதாயிரம் டாலர் ரகம் மேடம்" என்றான்.

"சலூனில் நான் டிப்ஸ் கொடுக்கிற காசு!" என்று அவள் மறுபடி சிரித்தாள். "இதையெல்லாம் கூழாங்கல்லாக நினைப்பார் என் வீட்டுக்காரர் பி.ஜே. இதை நான் வாங்கிக் கொண்டு போனால் அவருக்குக் கெட்ட கோபம் வரும்!"

அந்தப் பி.ஜே.யைப் பற்றி ஆர்தருக்கு எரிச்சலயாயிருந்தது. தொந்தியும் தொப்பையுமாய்க் குண்டாக இருப்பார் அவர் என்று கற்பனை செய்துகொண்டான். இந்த அம்மாளைப் போலவே அந்த ஆளும் சுத்த டம்பம் பிடித்த ஆளாகத்தான் இருப்பான்! ஹூம்! ஏன்தான் இந்த மாதிரி தகுதியில்லாத ஆட்கள் கையில் ஆண்டவன் பணத்தைக் கொட்டுகிறானோ!

"மேடமுக்கு என்ன மாதிரி விலையில் நகை வேண்டும்?" என்றான்.

"லானாவில் ஆரம்பிக்கலாமா?"

அவன் விழித்தான். "லானாவா?"

"லானாவென்றால் தெரியாது? உங்களுக்கெல்லாம் இங்கிலீஷ் நன்றாய்த் தெரியுமாக்கும் என்று நினைத்தேன் பார்! லானா என்றால் ஒரு லகரம்! லட்சம் டாலர்!"

ஆர்தர் மிடறு விழுங்கினான். "அப்படியானால் எங்கள் பெரிய மானேஜரோடு மேடம் பேசினால் நன்றாயிருக்கும்."

மானேஜரின் பெயர் கிரிகரி.

அவரை அழைத்து வந்து "சார்— இவங்க..." என்று அவள் பக்கம் திரும்பினான்.

"என் பெயர் மேரி பெனக்கி. பி.ஜே. பெனக்கியின் மனைவி பி.ஜே. யைப் பற்றிக் கேள்விப்பட்டதில்லை?" என்றாள் ட்ரேஸி.

"ஓ! தாராளமாய்!" என்று போலியாய்ப் புன்னகை செய்தார் கிரிகரி.

"இவங்களுக்கு லட்சம் டாலர் ரகத்தில் ஏதாவது வாங்கணுமாம்." என்றான் ஆர்தர்.

கிரிகரியின் முகத்தில் கோடி சூரியப் பிரகாசம்! இன்றைக்குக் கொள்ளை வியாபாரம்தான்!

இந்தப் பெண் தன்னை வெகு சீக்கிரம் முட்டாளடித்து மோசடி பண்ணப் போகிறாள் என்று அவன் ஊகிக்கவே யில்லை.

## 47

பார்க்கர் அண்ட் பார்க்கர் நகைக் கடையின் பெரிய மானேஜர் கிரிகரி, அந்த அமெரிக்கப் பெண்ணின் அலட்டல் களில் பிரமித்துப் போனார்.

"எமரால்டுதானே? இங்கே பிரமாதமான எமரால்டு கற்கள் இருக்கின்றன. பாருங்கள், மேடம்," என்று காட்டினார்.

உதவியாளர் குறுக்கிட்டு, "இவர்களுக்கு ஒரு லட்சம் டாலர் விலையிலே உள்ளது தான் வேண்டுமாம்," என்றார்.

கிரிகரியின் முகமலர்ச்சி இன்னும் பெரியதாக ஆயிற்று. இன்றைக்குப் பொழுது பிரமாதமாகத்தான் விடிந்திருக்கிறது என்று எண்ணிக் கொண்டார்.

அவள் சொன்னாள்.

"விஷயம் என்னன்னா, எனக்கு இன்றைக்குப் பிறந்த நாள். என் வீட்டுக்காரர் பி.ஜே. இருக்கிறாரே, எனக்குப் பிடித்ததை வாங்கிக் கொள்ளும்படி சொல்லியிருக்கிறார்."

"ரொம்பச் சந்தோஷம். இப்படி என்னுடன் வருகிறீர்களா? ப்ளீஸ்."

"எல்லாமே ரகசியம் தான் உங்களுக்கு! சரியான திருட்டுப் பசங்க!" என்று சொல்லி ஹாஹ்ஹாவென்று சிரித்தாள் அவள்.

பெரிய மானேஜரும் உதவியாளரும் ஒருவரையொருவர் வேதனையுடன் பார்த்துக் கொண்டார்கள். இந்த அமெரிக்கர்களுக்கு என்ன வாய் நீளம்! ஹூம்!

பெரிய மானேஜர் ஒரு பூட்டியிருந்த அறையை நோக்கி அவளை அழைத்துச் சென்றார். சாவி போட்டுத் திறந்தார்.

"இப்படி வாங்க, மேடம். உங்களைப் போலப் பெரிய கஸ்டமர்களுக்காக விலையுயர்ந்த கற்களை இங்கே வைத்திருக்கிறோம்."

அறையின் நடுவே ஒரு ஷோ கேஸ் இருந்தது. அதில் வைரங்களும் வைடூரியங்களும் பச்சைகளும் நீலங்களும் அணிவகுத்துக் கண்ணைப் பறித்தன.

"ஆ! இது பரவாயில்லை. என் வீட்டுக்காரர் பி.ஜே.க்கு இதுதான் பிடிக்கும்," என்றாள் அவள்.

"இதிலே ஏதாவது மேடத்துக்குப் பிடித்திருக்கிறதா?"

"பார்க்கிறேன்," என்றவள் எமரால்டு நகைகளைப் பார்வையிட்டாள். "அதோ அதை எடுங்கள்."

பெரிய மானேஜர் கிரிகரி தன் பையிலிருந்து இன்னொரு சாவியை எடுத்து ஷோகேஸைத் திறந்து, அவள் குறிப்பிட்ட பெட்டியை வெளியெடுத்து, அந்தக் கற்களை மேஜை மீது வைத்தார். மொத்தம் பத்துப் பச்சைக் கற்கள் அந்த வெல்வெட் பெட்டியில் ஜொலித்தன. இருப்பதிலேயே பெரிய பச்சைக் கல்லை அவள் எடுத்தாள்.

"இது என் வீட்டுக்காரரர் பி.ஜே.க்குப் பிடிக்கும் என்று தோன்றுகிறது," என்றாள்.

"மேடத்தின் டேஸ்ட் ரொம்பப் பிரமாதம்," என்று கிரிகரி ஐஸ் வைத்தார். "இது பத்துக் காரெட் பச்சைக் கல். கொலம்பியா நாட்டிலிருந்து வந்தது. தோஷமில்லாதது..."

"பச்சைக் கல்லில் தோஷமில்லாததே கிடையாது," என்று இடை வெட்டினாள் அவள்.

கிரிகரி ஒரு வினாடி அசந்து போனார். பிறகு "மேடம் சொல்வது ரொம்பக் கரெக்ட். நான் என்ன சொல்ல வந்தேனென்றால்..." என்று சமாளித்துக் கொண்டார்.

பச்சைக் கல்லைக் கையில் வைத்துப் பார்த்தாள் அவள். அதே பச்சை ஒளி அவள் கண்களிலும் பளபளப்பது கிரிகரிக்குத் தெரிந்தது.

அவள் அதன் எல்லாப் பட்டைகளையும் திருப்பித் திருப்பிப் பார்த்தாள்.

"வேணுமானால் வேறு பல ரகங்கள் காட்டுகிறேன்..." என்றார் கிரிகரி.

"வேண்டாம் பையா! இதை நான் எடுத்துக் கொள்கிறேன்."

மூன்று நிமிடத்தில் வியாபாரம் முடிந்துவிட்டது. கிரிகரிக்கு ஒரே ஆனந்தம்.

"அருமை உங்கள் செலக்ஷன்!" என்று பாராட்டினார். பின்னர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு மெதுவாய், "டாலர் கணக்கில் ஒரு லட்சம் டாலராகிறது. மேடம் பணத்தை எப்படி..."

"கிரிகரி, அதைப் பற்றிக் கவலைப்படாதீர் நீர். இங்கே லண்டனிலேயே ஒரு பாங்க்கில் எனக்கு டாலர் அக்கவுண்ட் இருக்கிறது. நானே செக் தருகிறேன். பிற்பாடு என் வீட்டுக் காரரிடம் பணத்தை வாங்கிக் கொள்வேன்."

"ரொம்ப நல்லது. பச்சைக் கல்லைச் சுத்தம் செய்து உங்கள் ஓட்டலுக்குக் கொடுத்தனுப்புகிறேன் மேடம்."

அந்தப் பச்சைக் கல்லைச் சுத்தம் செய்ய வேண்டிய தேவை ஏதும் இல்லை. ஆனால் பாங்க்கில் இவள் செக் பாஸாகிறதா என்று தெரிந்து கொண்ட பிறகுதான் அதைக் கொடுக்க வேண்டும் என்பது கிரிகரியின் எண்ணம். மோசடிக்காரர்களிடம் பல நகைக் கடைக்காரர்கள் ஏமாந்து போயிருப்பது அவருக்குத் தெரியும். 'ஒரு பவுன் கூட எவனும் என்னை ஏமாற்றியது கிடையாது' என்று அடிக்கடி அவர் பெருமையடித்துக் கொள்வது வழக்கம்.

"மேடம் எந்த ஓட்டலில் தங்கியிருக்கிறீர்கள்?" என்றார்.

அவள் ரொம்பப் பெரிய ஓட்டலின் பெயரையும் தன் அறை எண்ணையும் குறிப்பிட்டுவிட்டு, "மகாமட்டமான ஓட்டல். எனக்கு அது சுத்தமாய்ப் பிடிக்கவில்லை. எங்கே பார்த்தாலும் அரேபியர்கள். ஆனால் என் வீட்டுக்காரர் பி.ஜே.க்கு அதுதான் பிடித்திருக்கிறது. அவர் பிஸினஸ் பூரா அரேபியர்களுடன் தான். பெட்ரோல் பிஸினஸ். பி.ஜே. அந்த விஷயத்தில் ரொம்பக் கெட்டிக்காரர்..."

"ஆமாமாம். இல்லாதிருப்பாரா?" என்று தலையாட்டினார் கிரிகரி.

அவள் செக் புத்தகத்திலிருந்து ஒரு தாளைக் கிழித்து, தொகையை எழுதித் தந்தாள். அதைப் பார்த்ததும் 'பார்க்லே பாங்க்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டார் கிரிகரி. நல்லதாய்ப் போச்சு. அந்தப் பாங்க்கில் ஒரு சினேகிதர் இருக்கிறார். இந்த அம்மாளின் பாங்க் கையிருப்பைப் பற்றிச் சுலபமாய் விசாரிக்கலாம். செக்கை வாங்கிக் கொண்டு, "நாளைக் காலை ஓட்டலில் சேர்ப்பிக்கிறேன்," என்றார்.

"பி.ஜே. இதைப் பார்த்து அப்படியே மகிழ்ந்து போவார்," என்று பரந்த சிரிப்புடன் அவள் சொன்னாள்.

வாசல் வரை சென்று அவளை வழியனுப்பினார்.

"ட்ரிகரி..."

அவருக்குத் தூக்கி வாரிப் போட்டது தன் பெயரை அவள் தப்பாக சொல்வதைக் கேட்டு, திருத்தலாமா என்று

நினைத்தவர், பரவாயில்லை. இவளை இனிமேல் நாம் பார்க்கப் போகிறதுமில்லை, பேசப் போவதுமில்லை. எந்தப் பெயரில் வேண்டுமானாலும் கூப்பிட்டுத் தொலைக்கட்டும்.

"சொல்லுங்க மேடம்."

"ஒரு நாள் சாயந்தரம் எங்களுடன் டீ சாப்பிட நீர் வரணும். பி.ஜே.யை உங்களுக்கு உடனே பிடித்துப் போகும்."

"வருகிறேன் மேடம்."

அவள் நடைபாதையில் போய் நின்றவுடன் ஒரு சொகுசு டாக்ஸி அவளருகே வந்தது. சீருடை அணிந்த டிரைவர் இறங்கி வந்து அவளுக்காகக் கதவைத் திறந்து விட்டான்.

கிரிகரிக்குக் கட்டை விரலை உயர்த்திக் காட்டிவிட்டு அவள் விடை பெற்றாள்.

அவர் தன் அறைக்குத் திரும்பியவுடனே பாங்க்குக்குப் போன் செய்தார். தன் நண்பனைக் கூப்பிட்டார். "மேரி பெனெக்கே என்று ஒரு அம்மாள் ஒரு லட்சம் டாலருக்குச் செக் கொடுத்திருக்கிறாள். அவளுக்கு அவ்வளவு பாங்க் பாலன்ஸ் இருக்கிறதா என்று பார்த்துச் சொல்லேன்."

"கொஞ்சம் பொறுங்கள்," என்றார் அந்த நண்பர்.

கிரிகரி பொறுமையாகக் காத்திருந்தார்.

பாங்க் நண்பர் போனுக்குத் திரும்பி வந்து, "பிரசினையே இல்லை, கிரிகரி. அந்தத் தொகைக்கு மேலேயே அக்கவுண்ட்டில் பணம் இருக்கிறது."

அப்பாடா என்றிருந்தது கிரிகரிக்கு. "ரொம்பத் தாங்க்ஸ்."

மறுநாள் காலை செக் பாஸாகி விட்டது. நகைக் கடையின் வில்லையணிந்த சேவகனொருவன், அந்த அம்மாள் குறிப்பிட்ட ஓட்டலுக்குச் சென்று பச்சைக் கல்லைச் சேர்ப்பித்தான்.

அன்று மாலை.

கடை மூடுகிற நேரம்.

கிரிகரியின் செக்ரட்டரி அவரிடம், "மேரி பெனெக்கே என்று ஓர் அம்மாள் வந்திருக்கிறார். உங்களைப் பார்க்கணு மாம்," என்றார்.

அவருக்குப் பகீரென்றது. பச்சைக் கல்லைத் திருப்பிக் கொடுக்கத் தான் வந்திருக்கிறாள். திருப்பி வாங்கிக் கொள்ள மாட்டேன் என்று சொல்ல முடியாது. சே! பொம்பளைகளே இப்படித்தான்! அதுவும் அமெரிக்கப் பெண்கள் ரொம்ப மோசம்.

பலவந்தமாக ஒரு புன்சிரிப்பை முகத்தில் வரவழைத்துக் கொண்டு ரிசப்ஷனுக்குச் சென்றார். "வணக்கம் மேடம். உங்கள் கணவருக்கு அந்தப் பச்சைக் கல் பிடிக்கவில்லை. அப்படித் தானே?" என்றார்.

அவள் கடகடவென்று சிரித்தாள். "உம்ம ஊஹூம் அடியோடு தப்பு! பி.ஜே. அதைப் பார்த்து அப்படியே கிறங்கிப் போய்விட்டாராக்கும்!"

கிரிகரியின் உள்ளம் ஜிவ்வென்று பறந்தது. "ஓ அப்படியா?"

"இன்னும் சொல்லப் போனால் அதே மாதிரி இன்னொரு பச்சைக் கல் வாங்கி, என் காதுக்கு ஒரு ஜோடி கம்மல் செய்யணுமாம்."

கிரிகரியின் முகம் தொங்கியது. "வந்து... அதிலே ஒரு சிக்கல் இருக்கிறது மேடம்..."

"என்ன சிக்கல்?"

"உங்களுக்குக் கொடுத்த பச்சைக் கல் ரொம்ப உசத்தி. அதே மாதிரி இன்னொரு கல் கிடைக்காது. வேறே கல் வேண்டுமானால்..."

"வேறே கல்லெல்லாம் வேண்டாம். நேற்று வாங்கின பச்சைக் கல்போலவே, அதே மாதிரிதான் இன்னொன்று வேண்டும்."

"நான் உண்மையாகவே சொல்கிறேன், மேடம். அது மாதிரி பத்துக் காரெட் கொலம்பியா பச்சைக் கல் கிடைப்பது ரொம்பக் கஷ்டம்..."

"அதெல்லாம் சும்மா. நீங்கள் முயற்சி பண்ணினால் கிடைக்கும்," என்றாள் அவள் விடாமல்.

"அதே போல வடிவத்தில், அதே போல நிறத்தில், அதே அளவு சைஸில் கிடைக்கவே கிடைக்காது. அசாத்தியம்."

"எங்கள் ஊரில் 'அசாத்தியம்' என்றால், 'கொஞ்சம் தாமதமாகும்' என்றுதான் அர்த்தம். இதோ பாரய்யா. சனிக்கிழமை எனக்கு பிறந்த நாள். அன்றைக்கு ஒரு ஜோடி பச்சைக் கல்லில் செய்த கம்மல் கொடுக்கணும் என்று பி.ஜே. ரொம்பத் தீவிரமாய் இருக்கிறார். நினைத்தது நடந்தாகணும் அவருக்கு."

"அது சரி மேடம். ஆனால் எப்படி என்றுதான்..."

"என் வீட்டுக்காரரின் பிடிவாதம் எனக்குத்தான் தெரியும். அந்தப் பச்சைக் கல்லுக்கு எவ்வளவு கொடுத்தேன்? ஒரு லட்சம் டாலரா? அதே போல் இன்னொன்று கிடைத்தால் இரண்டு லட்சம், ஏன், மூணு லட்சம் கூடக் கொடுக்கத் தயாராயிருப்பேன்!"

கிரிகரி மனசுக்குள் கணக்குப் போட்டுக் கொண்டார். விசாரித்தால் அதே மாதிரியான பச்சைக் கல் எங்காவது கிடைக்காமல் போய் விடாது. விலைக்கு மேலேயே இரண்டு லட்சம் டாலர் தருகிறேன் என்கிறார்கள். செமை துட்டு. அந்தப் பணத்தை நம்ம பையில் போட்டுக் கொள்ளலாம்.

"சரி மேடம்; நான் நாலு பேரிடம் விசாரிக்கிறேன்," என்றார். "இங்கே லண்டன் நகைக் கடைக்காரர்கள் யாரிடமும் அது மாதிரி பச்சைக் கல் கிடையாது. எனக்கு நிச்சயமாய்த் தெரியும். ஆனால் சில சமயம் ஏலத்துக்கு வருவதுண்டு. நான் விளம்பரம் பண்ணி, கிடைக்குமா என்று பார்க்கிறேன்."

"இந்த வாரக் கடைசி வரை உமக்கு அவகாசம் இருக்கிறது ஐயா!" என்றாள் அவள். "உமக்கு இன்னொரு ரகசியமும் சொல்கிறேன். அதே போல இன்னொரு பச்சைக் கல் கிடைத்தால் என் வீட்டுக்காரர் மூன்றரை லட்சம் டாலர் கூடக் கொடுத்தாலும் கொடுப்பார்."

*சொல்லிவிட்டு, உயர்தரமான அங்கி இருபுறமும் சாமரம் வீச அவள் வெளியேறினாள்.*

*அறைக்குத் திரும்பிய கிரிகரிக்குச் சிறகடித்துப் பறந்தது கற்பனை.*

## 48

*நகைக் கடை பெரிய மானேஜரான கிரிகரி மகிழ்ச்சியில் மிதந்து கொண்டிருந்தார்.*

*சரியான பணக்கார மடையன் சிக்கியிருக்கிறான்! தன் பெண்டாட்டிக்காக ஒரு லட்சம் டாலர் மதிப்புள்ள கல்லுக்கு மூன்றரை லட்சம் தரத் தயாராயிருக்கிறான்! அதாவது இரண்டரை லட்சம் டாலர் லாபம்! இந்த வியாபாரத்தைப் பற்றி முதலாளிக்குத் தெரிவிக்க வேண்டிய அவசியம் கூடக் கிடையாது. ஒரு லட்சத்துக்கு விற்றதாகக் கணக்குக் காட்டி மிச்சத்தை நாமே எடுத்துக் கொள்ளலாம்.*

*ஆனால் இந்த அம்மாளுக்கு விற்ற பச்சைக் கல்லுக்கு ஜோடியாக இன்னொன்று எங்கே கிடைக்கும்?*

*நகைக் கடைகளுக்குப் போன் செய்தார். லண்டன் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தார். ஏலக் கடைகளில் ஏறி இறங்கினார்.*

*பல வகையான பச்சைக் கற்கள் கிடைத்தன. ஆனால் எதுவும் அவர் விற்ற கல்லுக்கு ஜோடியாக இல்லை. ஒன்று, அளவில் சின்னதாயிருந்தது. அல்லது தரத்தில் குறைந்ததாக இருந்தது.*

*புதனன்று மிஸஸ் ஜே.பி. போன் செய்தாள். "என் வீட்டுக்காரர் துளைக்கிறார். என்ன ஆச்சு?"*

*"இன்னும் கிடைக்கவில்லை மேடம். ஆனால் கவலைப் படாதீர்கள். நிச்சயமாய்க் கிடைக்கும்," என்று கிரிகரி உறுதி கூறினார்.*

வெள்ளிக்கிழமை அவள் மறுபடி போன் செய்தாள். "நாளைக்கு என் பிறந்தநாள்," என்று ஞாபகப் படுத்தினாள்.

"தெரியும் மேடம். இன்னும் கொஞ்சம் டயம் கொடுத்தால் -"

"சரி, விடும்! நாளைக் காலைக்குள் கிடைக்காவிட்டால், நான் உங்களிடம் வாங்கிய பச்சைக் கல்லைத் திருப்பி உங்களிடமே தந்து விடுகிறேன்... பி.ஜேக்கு என் மேலே உயிர். பச்சைக் கல் கம்மலுக்குப் பதில் ஒரு எஸ்டேட் பங்களா வாங்கித் தருகிறேன் என்கிறார்."

கிரிகரிக்கு வியர்த்துக் கொட்டியது. "மேடம், எஸ்டேட் கிஸ்டேட்டெல்லாம் உங்களுக்கு ஒத்து வராது. இரண்டு நாள் வசித்தால் வாழ்க்கையே வெறுத்து விடும். பல எஸ்டேட் பங்களாக்கள் சுத்த மோசமான நிலையில் இருக்கிறது. குளிர்காலத்தில் சகிக்காது."

அவள் குறுக்கிட்டு, "உமக்கு மட்டும் ஒரு ரகசியம் சொல்கிறேன். எனக்கும்கூடக் கம்மல் தான் விருப்பம். என் ஆசையைத் தெரிந்து கொண்டிருக்கிறார் பி.ஜே. நாலு லட்சம் டாலர் கூடத் தருவார் என்று தோன்றுகிறது..."

நாலு லட்சம்! ஐயோ! அவ்வளவு பெரிய தொகை கை நழுவிப் போய்விடும் போலிருக்கிறதே!

"கொஞ்சம் அவகாசம் கொடுங்கள். எப்படியாவது வாங்கித் தருகிறேன்," என்று மன்றாடினார்.

"என்னவோ பாரும்," என்று கூறி போனை வைத்து விட்டாள் அவள்.

கிரிகரி தன் விதியை நொந்து கொண்டு உட்கார்ந்திருந்த போது, மறுபடி டெலிபோன் அடித்தது. "யார்?" என்று எரிந்து விழுந்தார்.

அவர் செகரட்டரி பேசினான்:

"சார், யாரோ கான்டெஸா என்று ஒரு அம்மாள் உங்களைக் கூப்பிடுகிறார். நீங்கள் எமரால்டுக்காக விளம்பரம் பண்ணியிருந்தீர்களே, அது சம்பந்தமாய்ப் பேசணுமாம்."

"சரி, கொடு," என்றார் கிரிகரி உற்சாகமில்லாமல். இன்று காலையிலிருந்து பத்துப் பேர் போன் செய்துவிட்டார்கள். ஆனால் ஒன்று கூடச் சரியாய் இல்லை. இதுவும் அப்படித் தான்.

நேரம்தான் வீண்!

டெலிபோனை எடுத்து, "என்ன?" என்று முரட்டுத் தனமாகக் கேட்டார்.

மென்மையான பெண் குரலொன்று பேசியது. உச்சரிப்பு இத்தாலியர்களைப் போல இருந்தது. "வணக்கம் சார். உங்களுக்கு ஒரு பச்சைக் கல் தேவையென்று விளம்பரம் பார்த்தேன்."

"நான் எதிர்பார்க்கிறபடி இருந்தால்," என்றார் கிரிகரி. அவர் குரல் பொறுமை இழந்திருந்தது.

"என்னிடம் ஒரு பச்சைக் கல் இருக்கிறது, சார். ரொம்ப வருஷங்களாக எங்கள் குடும்பத்தில் இருந்து வரும் கல். அதை விற்க வேண்டிய கட்டாயத்தில்... நான்... என் குடும்பம் இருக்கிறது..."

இந்தக் கதையைப் பல பேரிடம் கேட்டாயிற்று என்று நினைத்துக் கொண்டார் கிரிகரி. இதெல்லாம் சரிப்படாது. ஏலக் கடைகளில் தான் மறுபடி கேட்க வேண்டும்...

"சார், உங்களுக்குத் தேவை பத்துக் காரெட் பச்சைக் கல். இல்லையா?" என்றாள் அந்தப் பெண். "என்னிடம் இருப்பது பத்துக் காரெட் கல்தான். கொலம்பியா கல்."

கிரிகரி நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார். "என்ன, என்ன? மறுபடி சொல்லுங்கள்." என்றார்.

"பத்துக் காரெட் பச்சைக் கல் என்னிடம் ஒன்று இருக்கிறது. கொலம்பியா," என்றாள் மீண்டும் அவள். "உங்களுக்கு அது தேவைப்படுமா சார்?"

"பார்த்தால்தான் தெரியும்," என்றார் கிரிகரி எச்சரிக்கை யாக, "இங்கே எடுத்து வந்தீர்களானால் பார்த்துவிட்டுச் சொல்கிறேன்."

“ஸாரி ஸார் இன்றைக்கு முடியாது. இத்தாலிய தூதரகத்தில் ஒரு பார்ட்டி இருக்கிறது. அதற்கு ஏற்பாடுகள் செய்வதில் பிஸியாக இருக்கிறேன். அடுத்த வாரத்தில் ஒரு நாள்-”

ஐயோ அடுத்த வாரமா! தாங்காது! கிரிகரி தன் நெஞ்சுக் குள் பதறினார். “நான் வேண்டுமானால் அங்கே வந்து பார்க்கிறேனே!” தன் படபடப்பைக் குரலில் காட்டிக் கொள்ளாமல் இருக்கச் சிரமப்பட்டார். “இப்ப வேண்டு மானால் வரட்டுமா?”

“இப்பவா? நான் கொஞ்சம் ஷாப்பிங் போகலாம் என்றிருக்கிறேன்.”

“மேடம், நீங்கள் எங்கே தங்கியிருக்கிறீர்கள்?”

“ஸவாய் ஓட்டலில்.”

“பதினைந்து நிமிடத்தில் அங்கே வருகிறேன். பதினைந்துகூட வேண்டாம். பத்து நிமிஷத்தில்.”

“சரி. உங்கள் பெயர்?”

“கிரிகரி.”

“நல்லது. என் அறை எண் இருபத்தாறு.”

டாக்ஸி முடிவில்லாமல் போய்க் கொண்டேயிருக்கிற மாதிரி இருந்தது.

கிரிகரி தவித்தார். ஒரு நிமிடம் சொர்க்கத்தில் மிதக்கிற மாதிரி இருந்தது. மறு நிமிடம் நரகத்தில் விழுந்துவிட்ட மாதிரி இருந்தது. மறுபடி சொர்க்கம்... மறுபடி நரகம்...

இந்தக் கல் மட்டும் நாம் எதிர்பார்க்கிற மாதிரி... அந்த இன்னொரு கல்லுக்குச் சரியான ஜோடியாக. இருந்து விட்டால்... சொப்பனத்திலும் நினைக்காத பணக்காரனான் ஆகிவிடலாம். ஒரே அடியில் மூன்று லட்சம் டாலர் லாபம். பிரெஞ்சுக் கடற்கரைப் பகுதியில் ஒரு வீடு வாங்கலாம்... உல்லாசப் படகுகூட வைத்துக் கொள்ளலாம்... இளம் பெண்கள் நம்மை மொய்த்துக் கொள்வார்கள்...

கிரிகரிக்குப் பொதுவாகக் கடவுள் நம்பிக்கை கிடையாது. எனினும், டாக்ஸியிலிருந்து இறங்கி, ஸவாய் ஓட்டலின் வெராந்தாவில் நடக்கையில் அவர் உள்ளம் இடைவிடாமல் பிரார்த்தனை செய்தது. தெய்வமே.. அந்த டெக்ஸாஸ்காரியும் அவள் கணவனும் கேட்கிற அதே மாதிரியான பச்சைக் கல்லாக இருக்க வேண்டும்... தெய்வமே...

இத்தாலிக்காரியின் அறையை அடைந்தவர், கதவருகில் ஒரு நிமிஷம் நின்று தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டார். மூச்சை நிதானமாக வெளியிட்டார். அமைதி ஏற்படுத்திக் கொண்ட பிறகு கதவைத் தட்டினார்.

பதிலில்லை.

ஐயோ கடவுளே! வெளியே போய்விட்டாள். போலிருக்கிறதே! எனக்காகக் காத்திருக்காமல் ஷாப்பிங்கிற்குப் போய் விட்டாளோ...

கதவு திறந்தது. ஐம்பது வயது மதிக்கத்தக்க ஓர் ஒல்லியான பெண்மணி எதிரே நின்றிருந்தாள். முகத்தில் சுருக்கம். கண்களின் கீழ் கருவளையம். கூந்தலின் நடுநடுவே நரை.

"என்ன வேணும்?" அவள் குரல் மிருதுவானதாக இத்தாலிய உச்சரிப்புடன் இருந்தது.

"நான்... கி... கி... கிரிகரி... கொஞ்சம் முந்தி நீங்கள் டெலிபோனில் கூப்பிட்டீர்களே?" படபடப்பில் அவர் பேச்சுத் திக்கியது.

"ஓ! ஆமாம், ஆமாம். என் பெயர் கான்ட்டெஸா. உள்ளே வாருங்கள் சார்."

"தாங்க்ஸ்."

கிரிகரி அறைக்குள் சென்றார். முழங்கால்கள் நடுங்குகிற மாதிரி இருந்தன. ஒன்றோடொன்று சேர்த்து இறுக்கிக் கொண்டார். "எங்கே அந்தப் பச்சைக் கல்?" என்கிற கேள்வி தொண்டை வரையில் வந்து விட்டது. ஆனால் தன் ஆவலை அதிகம் காட்டிக் கொள்ளக் கூடாதென்று அடக்கிக்

கொண்டார். அப்போது தான் அந்தப் பச்சைக் கல்லின் விலையைக் குறைத்துக் கேட்க முடியும்...

"உட்காருங்கள் சார், ப்ளீஸ்," என்றாள் அவள்.

நாற்காலியில் உட்கார்ந்தார்.

"வந்து... எனக்கு இங்கிலீஷ் நன்றாகப் பேச வராது. மன்னிக்கணும்..." என்றாள் அவள்.

"சே, சே! நீங்கள் அருமையாய் இங்கிலீஷ் பேசுகிறீர்கள். ரொம்ப அருமை."

"காப்பி வரவழைக்கட்டுமா சார்? அல்லது டீ?"

"வேண்டாம் மேடம்." அவர் வயிற்றுக்குள் பட்டாம் பூச்சி படபடக்கிற மாதிரி இருந்தது. பச்சைக் கல்லைப் பற்றி உடனே பேச்செடுக்கலாமா வேண்டாமா? ஆனால் ஒரு வினாடி கூடப் பொறுக்க முடியாதவராக, "அந்தப் பச்சைக் கல்-" என்றார்.

"ஆமாம், அது எனக்கு என் பாட்டி கொடுத்தது. என் பெண்ணுக்கு இருபத்தைந்து வயதானதும் அவளுக்குக் கொடுக்கவேண்டுமென்று நினைத்திருந்தேன். ஆனால் என் கணவர் எங்கள் சொந்த ஊரில் ஒரு பிஸினஸ் ஆரம்பிக்கப் போகிறார். அதற்கு-"

அவள் பேசிக்கொண்டே போனாள். கிரிகரியின் மனம் வேறெங்கோ பறந்து கொண்டிருந்தது. இந்த அம்மாளின் வாழ்க்கைச் சரித்திரத்தைக் கேட்கவா இங்கே வந்திருக்கிறோம்? பச்சைக் கல்லை உடனே பார்க்க வேண்டும் என்று மனம் தவித்தது. என்ன ஸஸ்பென்ஸ்! அவரால் தாள முடியவில்லை.

அந்த அம்மாள் புன்சிரிப்புடன் சொன்னாள்: "என் கணவரின் பிஸினஸுக்காக அந்தப் பச்சைக் கல்லை விற்க வேண்டியிருக்கிறது. அது சரியோ தப்போ..."

"தப்பா! அதிலென்ன தப்பு?" என்று கிரிகரி அவசரமாகக் குறுக்கிட்டார். "கணவன் ஒரு நெருக்கடியில் இருக்கும்போது

மனைவி கைகொடுக்க வேண்டாமா? அது கடமையாச்சே! அந்தப் பச்சைக் கல் எங்கே இருக்கிறது?"

"இதோ," என்றவள் பையில் கையை விட்டு ஒரு பொட்டலத்தை எடுத்தாள். ஐவ்வுக் காகிதத்தைப் பிரித்து, அதில் சுற்றி வைத்திருந்த பச்சைக் கல்லைக் கிரிகரியிடம் நீட்டினாள்.

பார்த்த மாத்திரத்திலேயே கிரிகரிக்கு ஜில்லென்று உற்சாகம் பிய்த்துக் கொண்டு பறந்தது.

என்ன அருமையான கல்! பத்துக் காரெட்! கொலம்பியா ரகம்!

மிஸஸ் பெனெக்கேக்கு விற்ற கல்லுக்குச் சரியான ஜோடி! அதே நிறம், அதே வடிவம், அதே எடை!

அவர் கைகள் நடுங்கின. பலத்த முயற்சியுடன் தன்னை அமைதிப்படுத்திக் கொண்டார். அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்தார். அதன் பட்டைகளைக் கவனித்து மகிழ்ந்தார்.

"ஒரு சினேகிதருக்கு உதவி செய்வதற்காக இந்தப் பச்சைக் கல்லை வாங்குகிறேன் மேடம். இதை விடத் தரமான கற்கள் எங்கள் கடையில் இருக்கிறது. ஆனால் அவருடைய மனைவி வைத்திருக்கும் கல்லுக்கு ஜோடியாக ஒன்று வேண்டுமாம். இதற்கு அனேகமாய் அறுபதாயிரம் டாலர் கொடுத்தாலும் கொடுப்பார்."

அந்தப் பெண்மணி பெருமூச்செறிந்தாள்: "அறுபதாயிரம் டாலர் தானா! இவ்வளவு குறைவான விலைக்கு இதை நான் விற்றால் என் பாட்டி ஆவி துடி துடித்துப் போகும்."

இந்தப் பச்சைக் கல்லுக்கு இன்னும் அதிகமாகவே தரலாம் தான். கிரிகரிக்கு அது தெரியும். என்றாலும் வாயை விட்டுவிடாமல் எச்சரிக்கையாகப் பேசத் தீர்மானித்து, புன்னகையுடன், "எனக்கு என்ன தோன்றுகின்றதென்றால்... எதற்கும் என் நண்பரிடம் இதற்கு ஒரு லட்சம் டாலர் தரலாமென்று சொல்லிப் பார்க்கிறேன்..."

"ஒரு லட்சம் என்றால் நல்ல தொகைதான்."

கிரிகரியின் இருதயம் ஆனந்தத்தில் வெடித்துவிடும் போல ஆகிவிட்டது. "நல்ல வேளை, செக் புத்தகத்தை எடுத்து வந்திருக்கிறேன். இப்போதே செக் எழுதி-"

"இருங்கள், இருங்கள். என் பிரசினை இன்னும் தீர்ந்துவிடவில்லை."

"உங்கள் பிரசினையா?"

"ஆமாம் சார். முதலிலேயே சொன்னேனே, என் கணவர் ஒரு பிஸினஸ் ஆரம்பிக்கிறார் என்று? அதற்கு அவருக்கு மூன்றரை லட்சம் டாலர் தேவைப்படுகிறது. என் கையில் ஒரு லட்சம் டாலர் இருக்கிறது. இன்னும் இரண்டரை லட்சம் டாலர் தேவை..."

கிரிகரி தலையை அசைத்தார். "உலகத்தில் எந்த எமரால்டுக்கும் அத்தனை விலை கிடையாது, அம்மணி. ஒரு லட்சம் டாலரே பெரிய தொகையாக்கும்."

"உண்மைதான், உண்மை தான்," என்றாள் அவள். "ஆனால் அது என் கணவருக்குப் போதாதே?" ஒரு பெரு மூச்சுடன் எழுந்துகொண்டாள். "சரி, இதை என் பெண்ணுக்கே கொடுத்துக் கொள்கிறேன்." கிரிகரியை நோக்கிக் கைகுலுக்குவதற்காகக் கரம் நீட்டினாள்.

கிரிகரிக்கு உள்ளுக்குள் கலக்கம் ஏற்பட்டது. "ஒரு நிமிஷம் பொறுங்கள்," என்றார்.

பேராசை ஒரு பக்கமும் பகுத்தறிவு ஒரு பக்கமுமாக அவருக்குள் யுத்தம் நடத்தின.

இந்தப் பச்சைக் கல்லை எக்காரணம் கொண்டும் கை நழுவ விடக் கூடாதென்று உறுதி கொண்டார். "உட்காருங்கள் மேடம். என் சினேகிதரிடம் சொல்லி ஒன்றரை லட்சம் டாலருக்கு-"

"இரண்டரை லட்சம் டாலர்."

"இரண்டு லட்சம்?"

"இரண்டரை லட்சம்தான்," என்றாள் அவள் உறுதியாக.

## 49

தான் பச்சைக் கல்லுக்கு இரண்டரை லட்சம் வேண்டும் என்று அந்த இத்தாலிக்காரி பிடிவாதமாக இருக்கவே, கிரிகரி யோசித்தார். ஒன்றரை லட்சம் டாலர் தான் லாபம். பரவாயில்லை. நினைத்த அளவுக்குப் பெரிய பங்களா கட்டிக் கொள்ள முடியாது. சின்னதாகக் கட்டிக் கொண்டு, சின்னதாகவே உல்லாசப் படகு வாங்கிக் கொள்ளலாம். எப்படியும் லாபம் லாபம் தானே? முதலாளிகள் இத்தனை நாளாக நம்மிடம் காட்டிய கஞ்சத்தனத்துக்குப் பதிலடி கொடுத்து அவர்கள் முகத்தில் கரி பூச ஒன்றரை லட்சம் டாலர் போதும்.

"சரி மேடம். நீங்கள் சொல்கிற விலைக்கே ஒப்புக் கொள்கிறேன்," என்றார்.

"எனக்கும் திருப்தி," என்றாள் அவள்.

'மூஞ்சியிலே மலர்ச்சியைப் பார்! சிறுக்கி!' என்று மனசுக்குள் திட்டிக் கொண்டார் கிரிகரி. தொலையட்டும். ஏதோ நல்லபடி முடிந்து விட்டது. இந்தப் பெண் பிள்ளையால் நம்முடைய வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டாகிவிட்டது.

பச்சைக் கல்லை மறுபடியும் ஒரு முறை நோக்கிவிட்டுப் பையில் போட்டுக் கொண்டார். "செக் தருகிறேன்," என்றார்.

"ரொம்பச் சந்தோஷம்."

செக் எழுதித் தந்தார். மனத்துக்குள் கணக்குப் போட்டார்.

அந்த டெக்ஸாஸ்காரி இந்தப் பச்சைக் கல்லுக்குக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிற நாலு லட்சம் டாலரை வாங்கிக் கொண்டு, இந்த தொகையைக் கழித்துக் கொள்ளலாம். பாங்க்கில் இருக்கும் நண்பன் உதவுவான். கடைக்கு எதுவும் தெரியவே தேவையில்லை. ஒன்றரை லட்சம் டாலர் லாபம்...

இப்போதே பிரெஞ்சுக் கடற்கரையில் உல்லாசமாகப் படுத்திருப்பது போல் சுகமான கற்பனைகளில் மிதந்தார் கிரிகரி.

டாக்ஸியில் கடைக்குத் திரும்பினார் - பறந்தார் என்றே சொல்ல வேண்டும்.

அந்த டெக்ஸாஸ்காரியின் முகம் அவர் மனக் கண் முன் எழுந்தது. இந்தப் பச்சைக் கல் விஷயத்தைச் சொன்னதும் ஆனந்தத்தில் குதிக்கப் போகிறாள்! அவளிடமிருக்கும் கல்லுக்கு ஜோடியாக ஒரு கல் கிடைத்து விட்டதே! அது மட்டுமா? ஜோடிக் கல் கிடைக்காவிட்டால் கிராமப்புறத்தில் ஒரு வீடு வாங்கித் தருவதாக அல்லவா சொல்லியிருந்தான் அவள் கணவன்? கிராமப்புறத்தில் ஒரு பழைய வீட்டில் குடியிருப்பதென்றால் எவ்வளவு கஷ்டம்! எவ்வளவு தொல்லை! அதிலிருந்தெல்லாம் அவளைக் காப்பாற்றி விட்டோம்!

சந்தோஷத்தில் மிதந்தபடி கடைக்குள் நுழைந்தார். ஒரு குமாஸ்தா அவரை எதிர்கொண்டு "சார், ஒரு வாடிக்கை யாளர்..." என்று சொல்ல ஆரம்பித்தார்.

"அப்புறம் பார்க்கிறேன்," என்று அவனை ஒதுக்கிட்டு நடந்தார் கிரிகரி. வாடிக்கையாளராம் வாடிக்கையாளர்! இனி மேல் எந்த வாடிக்கையாளரையும் பார்த்துப் பல்லை இளிப்ப தென்பது கிடையாது! மற்றவர்கள் தான் நம்மிடம் வந்து பல்லை இளிக்க வேண்டும்!

தன் அறைக்குள் நுழைந்து. கதவைச் சாத்திக் கொண்டார். கண்ணெதிரே மேஜைமீது அந்தப் பச்சைக் கல்லை வைத்துக் கொண்டு, போனை எடுத்து டயல் பண்ணினார்.

"டார்ஷெஸ்ட்டர் ஓட்டல்," என்று பதில் வந்தது.

"ஆலிவர் ஸ்யூட்டுக்குப் போடுங்கள்."

"அங்கே யார் சார் வேண்டும்?"

"மிஸஸ் பி.ஜே. பெனக்கே."

"ஒரு நிமிஷம் ப்ளீஸ்."

கிரிகரி உல்லாசமாக, மெதுவாகச் சீட்டியடித்தபடி காத்திருந்தார்.

ஆபரேட்டர், "ஸாரி ஸார், அவங்க அந்த ரூமில் இல்லை," என்றார்.

"வேறு எந்த ரூமுக்குப் போயிருக்கிறார்களோ அங்கே தான் போடுங்களேன்."

"மிஸஸ் பெனெக்கே ரூமைக் காலி செய்துவிட்டுப் போய்விட்டார்கள், சார்."

"இருக்காது! சரியாய்ப் பாருங்கள்!"

"கொஞ்சம் இருங்கள் சார். ரிசப்ஷனுக்குத் தருகிறேன். அங்கே விசாரித்துக் கொள்ளுங்கள்."

அடுத்த கணம் -

"ரிஸப்ஷன்... என்ன வேண்டும்?" என்ற பணிவான குரல் ஒலித்தது.

"மிஸஸ் பி.ஜே. பெனெக்கே எந்த அறையில் இருக்கிறார்?"

"மிஸஸ் பெனெக்கே இன்று காலையில் ஓட்டலைக் காலி செய்து விட்டுப் போய் விட்டார் சார்."

கிரிகரி குழம்பினார். என்ன அப்படி அவசரம்? ஏதோ தலை போகிற காரியமாக இருக்குமோ?

"எங்கே போகிறேன் என்று சொல்லியிருப்பார்களே? அந்த அட்ரஸைக் கொடுத்தீங்கன்னா..."

"ஸாரி சார். எந்த அட்ரசும் கொடுக்கவில்லை."

"இல்லையில்லை. கொடுத்திருப்பாங்க. சரியாப் பாருங்க."

"நிச்சயமாய் இல்லை சார். வாசல் வரை போய் அவர்களை வழியனுப்பியதே நான்தான்."

அடிவயிற்றில் கட்டாரியால் குத்தின மாதிரி இருந்தது கிரிகரிக்கு.

போனை மெதுவே வைத்து விட்டு, ஏதும் புரியாதவராக உட்கார்ந்திருந்தார். அந்த டெக்ஸாஸ்காரி எங்கிருக்கிறாள் என்று எப்படியாவது உடனே கண்டுபிடித்தாக வேண்டும்! கண்டு பிடித்து, அவள் கேட்ட பச்சைக் கல்லை விலை கொடுத்து வாங்கி வைத்திருப்பதாகத் தெரிவிக்க வேண்டும்...

அதற்கு முன்னால் இன்னொரு அவசர வேலை -

இந்த இத்தாலிக்காரிக்குக் கொடுத்த இரண்டரை லட்சம் டாலர் செக்கைத் திரும்பப் பெற்றாக வேண்டும்.

அவசர அவசரமாய் ஸவாய் ஓட்டலுக்குப் போன் போட்டார். "இருபத்தாறாம் எண் அறைக்குப் போடுங்கள்."

"அங்கே யார் சார் வேண்டும்?"

"மேடம் கான்ட்டெஸா."

"ஒரு நிமிஷம் சார்."

டெலிபோன் ஆபரேட்டர் பார்த்துச் சொல்வதற்குள் அவருக்கு வயிற்றைக் கலக்கியது. நிச்சயமாய் பயங்கரச் செய்தி கிடைக்கப் போகிறது என்று அவருடைய உள்ளுணர்வு சொல்லிற்று.

பயந்தபடியே நடந்தது!

"ஸாரி சார்! மேடம் கான்ட்டெஸா ரூமைக் காலி செய்துவிட்டுப் போய்விட்டார்கள்!"

கிரிகரியின் கைகள் நடுங்கின. பாங்க்கிற்கு டயல் செய்ய முயன்றார். அதுவே பெரும் பிரயத்தனமாயிருந்தது. "காஷியரை உடனே கூப்பிடுங்கள்! ஒரு செக்குக்குப் பணம் தரக் கூடாது! அதை நிறுத்த வேண்டும்!" என்று பதைத்தார்.

ஊஹூம். காலம் கடந்து விட்டது.

செக்கை மாற்றி பணம் வாங்கிக்கொண்டு போய் விட்டாள் அந்த அம்மாள் என்று பாங்க்கில் தெரிவித்தார்கள்!

பயங்கர உண்மை புரிந்தது கிரிகரிக்கு.

முதலில் ஒரு லட்சம் டாலருக்குப் பச்சைக் கல் வாங்கிப் போன டெக்ஸாஸ்காரியும், இப்போது அதே கல்லை

இரண்டரை லட்சம் டாலருக்கு இவரிடம் விற்ற இத்தாலிக் காரியும் ஒரே பெண்தான்! வெவ்வேறு வேஷம்! வெவ்வேறு குரல்!

தான் ஒரு லட்சம் டாலருக்கு விற்ற அதே கல்லை, இரண்டரை லட்சம் டாலர் கொடுத்துத் திரும்ப வாங்கி யிருப்பது கிரிகரிக்குப் புரிந்தது!

பொத்தென்று நாற்காலியில் விழுந்தார்.

ட்ரேஸிக்கு ஒரு புதிய வாழ்க்கை ஆரம்பமாயிற்று. லண்டனில் அழகான சிறிய வீடு ஒன்று வாங்கிக் கொண்டாள். உற்சாகமான, பிரகாசமான வீடு. முன் புறத்திலும் பின் புறத்திலும் சிறிய தோட்டங்கள் இருந்தன. வசந்த காலத்தில் செடிகள் அற்புதமாய்ப் பூத்துச் சொரிந்தன.

வீட்டை அலங்கரிப்பதில் வியாபாரி கந்த்தர் மிகவும் உதவி செய்தார். இருவரும் சேர்ந்து வீட்டைச் செம்மைப் படுத்தினார்கள். லண்டனில் மிக அழகான வீடுகளில் ஒன்று என்று விரைவிலேயே அது பெயர் பெற்று விட்டது.

பெரும் புள்ளிகளுக்கு ட்ரேஸியை அறிமுகப்படுத்தி வைத்தார் கந்த்தர். அவள் ஒரு பணக்கார இளம் விதவை என்றும், அவள் கணவர் இறக்குமதி ஏற்றுமதி வியாபாரத்தில் கோடி கோடியாகச் சம்பாதித்தார் என்றும் எல்லாரிடமும் சொன்னார்.

அழகானவள்; புத்திக் கூர்மையுள்ளவள்; கவர்ச்சி யானவள். பார்த்த மாத்திரத்திலேயே ட்ரேஸியை யாருக்கும் பிடித்து விட்டது. தங்கள் விருந்துகளுக்கும் விழாக்களுக்கும் வரும்படி ட்ரேஸிக்கு அழைப்பிதழ்கள் குவிந்தன.

நடுநடுவே பிரான்ஸுக்கும் ஸ்விட்சர்லாந்துக்கும் பெல்ஜியத்துக்கும் இத்தாலிக்கும் சென்று வந்தாள் ட்ரேஸி. கந்த்தருடன் தான். ஒவ்வொரு பயணத்திலும் இருவருக்கும் நல்ல லாபம் கிடைத்தது.

ஐரோப்பாவின் ராஜ வம்சங்களையும் பிரபுக் குடும்பங் களையும் பற்றிய புத்தகங்களைப் படிக்கும்படி கந்த்தர்

சொல்லியிருந்தார். அவைகளை ட்ரேஸி கரைத்துக் குடித்தாள்.

அது மட்டுமல்ல. விதவிதமான வேடங்கள் போடவும் வகை வகையான மேக்கப் செய்து கொள்ளவும், வித்தியாச வித்தியாசமான உச்சரிப்புக்களில் பேசவும் திறமை பெற்று விட்டாள். அரை டஜன் போலிப் பாஸ்போர்ட்கள் அவளிடம் இருந்தன. இன்று ஒரு நாட்டில் பிரிட்டிஷ் சீமாட்டியாக இருப்பாள். நாளை இன்னொரு நாட்டில் பிரெஞ்சு விமானப் பணிப் பெண் என்று சொல்லிக் கொள்வாள். மூன்றாவது நாள் வேறொரு நாட்டில், தானொரு தென்னமெரிக்காவைச் சேர்ந்த கோடீசுவரக் குடும்பத்துப் பெண் என்பாள்.

ஒரே வருடத்தில் -

இனி என்றென்றைக்கும் கஷ்டமே இல்லாமல் வாழலாம் என்னுமளவுக்குப் பணம் சேர்த்து விட்டாள்.

ஓர் அறக் கட்டளை ஏற்படுத்தினாள். சிறையிலிருந்து விடுதலையாகி வரும் பெண் கைதிகளுக்கு மறுவாழ்வு தரும் நிறுவனங்களுக்குத் தன் பெயர் தெரியாமல் பணம் அனுப்ப ஏற்பாடு செய்தாள். அம்மாவின் விசுவாச ஊழியனாகத் திகழ்ந்த கிழவர் ஆட்டோவுக்கு வசதியாக ஓய்வூதியம் அனுப்பினாள்.

இந்தத் தொழிலிலிருந்து விலகும் எண்ணத்தை அவள் விட்டு விட்டாள்.

வெற்றிகரமான மனிதர்களை, புத்திசாலிகளான நபர்களை முட்டாள்களாக்குவது சந்தோஷமான சவாலாக இருந்தது அவளுக்கு. துணிச்சலுடன் இறங்கி ஜெயத்துடன் வெளிப்படும் ஒவ்வொரு முறையும் அவள் உள்ளத்தில் ஒரு கிளுகிளுப்பு உதித்தது. அது ஒருபோதை போல் அவளை ஊக்கியது. இன்னும் புதிய, இன்னும் பெரிய சவால்களை ஏற்க வேண்டுமென்ற தாபத்தை ஏற்படுத்தியது.

ஒரே ஒரு கொள்கை, கண்டிப்புடன் கடைப்பிடித்தாள். அப்பாவிகளை ஏமாற்றுவதில்லை. அவர்களுக்குத் துன்பம் தருவதில்லை.

பேராசைக்காரர்களையும், ஒழுக்கமில்லாதவர்களையும் மட்டுமே அவள் ஏமாற்றினாள்.

'நான் செய்த காரியத்தால் எவனும் தற்கொலை செய்துகொண்டு செத்துப் போகப் போவதில்லை,' என்று அடிக்கடி தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

ஐரோப்பாவெங்கும் நடைபெற்று வந்த துணிச்சலான மோசடிகளைப் பற்றிப் பத்திரிகைகளில் கதை கதையாகச் செய்திகள் வெளிவந்தன. ஆனால் ட்ரேஸி வெவ்வேறு மாறு வேடங்கள் பூண்டதால் போலீசார் அவளைச் சந்தேகிக்க வில்லை. மாறாக, பல கொள்ளைக்காரிகள் அடங்கிய ஒரு கும்பல்தான் இந்தச் சாமர்த்தியமான திருட்டுக்களை நடத்து கிறது என்று நினைத்தார்கள்.

சர்வதேசப் போலீஸ் ஸ்தாபனம் கூர்ந்து கவனிக்கத் தொடங்கியது.

அங்கே அமெரிக்காவில், நியூயார்க் நகரில் -

இன்ஷ்யூரன்ஸ் சங்கத்தின் தலைவர், தங்கள் கீழே வேலை பார்க்கும் துப்பறியும் நிபுணனான கூப்பரைக் கூப்பிட்டார்.

"நம் ஸ்தாபனத்தில் ஒரு பிரசினை," என்றார் தலைவர். "நம்மிடம் இன்ஷ்யூரன்ஸ் செய்து கொண்டிருக்கும் ஏராளமான ஐரோப்பியர்கள் மோசடிக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பெண்கள் கும்பல்தான் இந்தத் திருட்டு மோசடி வேலைகளைச் செய்கிறது என்கிறார்கள் காச்சு மூச்சென்று கத்துகிறார்கள், அந்தக் கும்பலைப் பிடித்தாக வேண்டும். சர்வதேசப் போலீஸார் நமக்கு உதவி செய்வதாக வாக்களித்திருக்கிறார்கள். இதை நீதான் கவனிக்க வேண்டும், கூப்பர். நாளைக் காலையில் பாரிசுக்குப் புறப்படு."

அவர் அப்படிச் சொல்லிக் கொண்டிருந்த அதே சமயம், கந்த்தரும் ட்ரேஸியும் ஐரோப்பாவில் ஒரு பெரிய மோசடி வேலை நடத்தத் திட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள்.

# 50

அன்று கந்த்தருடன் ஒரு பிரபலமான ஒட்டலில் இரவு உணவு அருந்திக் கெண்டிருந்தாள் ட்ரேஸி.

"மாக்ஸ்மிலியன் என்பவரைப் பற்றி நீ கேள்விப் பட்டிருக்கிறாயா ட்ரேஸி?" என்று கேட்டார் கந்த்தர்.

எங்கேயோ கேட்ட பெயராக இருக்கிறதே என்று யோசித்தாள் அவள். ஞாபகம் வந்தது. இரண்டாம் எலிஸ பெத் கப்பலில் இந்த மாக்ஸ்மிலியன் என்ற கோடீசுவரர் வரப் போவதாக ஜெஃப் சொன்னது நினைவு வந்தது. அவர் வராத தால், செஸ் போட்டி நடத்திப் பணம் சம்பாதிக்க ஜெஃப் வழி சொல்லித் தந்ததும் ஞாபகம் வந்தது.

"பெரிய பணக்காரர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்," என்றாள்.

"ரொம்பக் கொடூரமான ஆசாமி கூட. தனக்குப் போட்டியாக நடந்து கொண்டிருக்கும் கம்பெனிகளில் பங்கு வாங்குவார். அவைகளை முறித்துப் போடுவார். அதில் அவர் ஸ்பெஷலிஸ்ட்."

ரொமானோ தன் அம்மாவின் கம்பெனியைக் கைவசப்படுத்திக் கொண்டு தன் ஆட்களை நுழைத்து, அந்தக் கம்பெனி நொடித்துப் போகும் படி செய்து, அம்மாவின் வீடு, கையிருப்பு, கார் எல்லாவற்றையும் பறித்துக் கொண்ட கதை ட்ரேஸிக்கு ஞாபகம் வந்தது. அவள் முகம் கருமையாக மாறியது.

கந்த்தர் அவளைத் திகைப்புடன் பார்த்தார். "ட்ரேஸி, என்ன ஆச்சு உனக்கு? ஏன் என்னமோ போல் ஆகிவிட்டாய்?"

"ஓ, ஒன்றுமில்லை," என்றாள் ட்ரேஸி. "மாக்ஸ் மிலியனைப் பற்றி என்னவோ சொல்ல வந்தீர்களே, அதைச் சொல்லுங்கள்."

"அவருடைய மூன்றாவது மனைவியும் அவரை விவாகரத்துச் செய்துவிட்டாள். இப்ப மனிதர் ஒண்டியாகத் தான் இருக்கிறார். அவரை நீ தெரிந்து வைத்துக் கொண்டால் உபயோகமாக இருக்கும் என்று தோன்றுகிறது. ஓரியண்ட் எக்ஸ்பிரஸ் ரயிலில் லண்டனிலிருந்து இஸ்டான்புல் போவதற்கு அவர் டிக்கெட் வாங்கியிருக்கிறார்."

ட்ரேஸி புன்னகை செய்தாள். "நான் ஓரியண்ட் எக்ஸ்பிரஸில் போனதேயில்லை. போகணுமென்று ஆசையாக இருக்கிறது."

கந்த்தரும் திரும்பிப் புன்சிரிப்புக் காட்டினார். "உலகத்தி லேயே ரொம்பப் பெரிய வைரக் கற்கள் வைத்திருக்கிறவர் இந்த மாக்ஸ்மிலியன். அவற்றின் மதிப்பு குறைந்தபட்சம் இரண்டு கோடி டாலர் இருக்கும் என்கிறார்கள்."

ட்ரேஸிக்கு ஆவலுண்டாயிற்று. "உங்களுக்காக அதில் கொஞ்சம் கிளப்பி வருகிறேன் என்று வைத்துக் கொள்ளுங் கள். அவைகளை என்ன செய்வீர்கள்? பிரபலமான கற்கலா யிற்றே? விற்பது கஷ்டமாக இருக்காதோ?"

"நான் ஏன் பகிரங்கமாக விற்கிறேன்? வைரம் சேகரிக்கும் பணக்காரர்களுக்கு ரகசியமாக விற்று விடுவேன். முதலில் நீ அவைகளை எடுத்து வா. மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்," என்றார் கந்த்தர்.

"பார்க்கிறேன்."

"மாக்ஸ்மிலியனை நெருங்குவதே ரொம்பக் கஷ்டம். யாரையும் அண்டவிட மாட்டார். அவரை மடக்க முடியா விட்டால் பரவாயில்லை. அதே ஓரியண்ட் எக்ஸ்பிரஸில் வேறு இரண்டு பெரிய புள்ளிகளும் பயணம் செய்கிறார்கள். வெனிஸ் நகரத்தில் திரைப்பட விழா நடக்கிறதில்லையா? அதற்காகப் போகிறார்கள். கொழுத்த புள்ளிகள். ஸில்வியா என்று கேள்விப்பட்டிருக்கிறாயா?"

"இத்தாலிய சினிமா நட்சத்திரம்தானே? தெரியும்."

"அவள் ஆல்பர்ட்டோ என்ற தயாரிப்பாளரைக் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறாள். ஆல்பர்ட்டோ பிரம்மாண்டமான புராணப் படங்களை எடுக்கிறவன். ஆனால் மகா கஞ்சன். டைரக்டர்களையும் நடிகர்களையும் ரொம்பக் கருமித்தனமாக ஒப்பந்தம் செய்து கொள்வான். பிற்பாடு படத்திலிருந்து வரும் லாபத்தில் நிறையப் பங்கு தருவதாக ஆசை காட்டுவான். ஆனால் அத்தனை லாபத்தை யும் தானே சுருட்டிக் கொள்வான். மனைவி ஸில்வினாவுக்கு மட்டும் மகா விலையுயர்ந்த நகைகள் வாங்கித் தருவான். மனைவிக்குத் துரோகம் செய்து எவளுடனாவது கூத்தடித்து விட்டு, அதை ஈடு செய்வதற்காக மேலும் மேலும் நகைகள் வாங்கித் தருவான். ஸில்வினா சொந்தமாய் ஒரு நகைக் கடையே நடத்தலாம். அவ்வளவு நகைகள் வைத்திருக்கிறாள். ஓரியண்ட் எக்ஸ்பிரஸ் ரயிலில் இவர்கள் உனக்குச் சுவாரஸ்ய மான துணையாக இருப்பார்கள். என்ன சொல்கிறாய்?"

"எப்போது புறப்படுவோம் என்றிருக்கிறது." என்றாள் ட்ரேஸி.

லண்டனிலிருந்து இஸ்டான்புல்லுக்கு ஓரியண்ட் எக்ஸ்பிரஸ் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காலை 11.45க்கு லண்டனிலிருந்து புறப்படுவது வழக்கம். சாப்பாட்டுக் கூடம், சயனக் கூடம், மதுக் கூடம் - என்று பலவகையான ஆடம்பர வசதிகள் கொண்டது. குறிப்பிட்ட சில ஐரோப்பிய நகரங் களில் மட்டுமே அந்த ரயில் நிற்கும்.

சென்ற நூற்றாண்டில் இது போன்ற ஓர் ஆடம்பர ரயில் இருந்தது. அதைப் போலவே இந்த ரயிலை அமைத்துப் புதுப்பித்திருந்தார்கள்.

பளபளப்பான ஒரு பழங்காலத்து யூனிபாரம் அணிந்த கூலியாள் பெரிய சூட்கேஸ்களையும் சிறிய கைப் பெட்டியை யும் எடுத்துக்கொண்டு முன்னே நடக்க, ட்ரேஸி பின் தொடர்ந்து தன் கம்பார்ட்மெண்ட்டை அடைந்தாள்.

சிறியதாக இருந்தது அந்தப் பெட்டி. மெத்தை வைத்த ஆசனங்களும், படுப்பதற்கான மேல் பெர்த்தும், அதற்கு ஏறுவதற்கான சிறிய ஏணியும் இருந்தன. எல்லாமே பச்சை நிறம்.

அறை நடுவே குட்டி மேஜை மீது, ஒரு வெள்ளி பக்கெட்டில் ஷாம்பேய்ன் புட்டியொன்று வைக்கப் பட்டிருந்தது. அத்துடனிருந்த சீட்டில், 'ரயில் மானேஜர் ஆலிவரின் வாழ்த்துக்கள்' என்று எழுதப்பட்டிருந்தது.

ட்ரேஸியின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

'ஒரு முக்கிய விழாவைக் கொண்டாடும்போது இந்த ஷாம்பேய்னை உபயோகிப்பேன் மாக்ஸ்மிலியனை ஏமாற்றிய பிறகு!' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

'முன்பு இந்த மாக்ஸ்மிலியனை ஏமாற்றும் எண்ணத்து டன் ஜெஃப் வந்தான். அதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காமல் திரும்பி விட்டான். அதே மாக்ஸ்மிலியனை நாம் மடக்கப் போகிறோம்! ஜெஃப் செய்யாத வேலையை நாம் செய்யப் போகிறோம்... என்று நினைக்கும்போதே ட்ரேஸிக்கு ஒரு கிளுகிளுப்பு உண்டாயிற்று.

பொதுவாக அவளுக்கு ரயிலில் பிரயாணம் செய்வது பிடிக்காது. விமானத்தில செல்வதையே விரும்புவாள். ஆனால் இந்த ஓரியண்ட் எக்ஸ்பிரஸ் பயணம் அவளுள் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

பெட்டியைத் திறந்து, தனக்குத் தேவைப்படும் உடைகளை வெளியே எடுத்து வைத்துக் கொண்டாள்.

குறித்த நேரத்தில் ரயில் புறப்பட்டது. லண்டன் நகரத்தின் வெளிப்புறப் பகுதிகள் உருண்டோடிச் செல்வதைப் பார்த்தபடி தன் சீட்டில் சாய்ந்து உட்காந்து கொண்டாள் ட்ரேஸி.

துறைமுகத்தை அடைந்தது ரயில். அங்கிருந்து ஒரு சிறிய கப்பலின் மூலம் இங்கிலிஷ் கால்வாயைக் கடந்து, பிரான்ஸ்

நாட்டின் பொலோன் நகரை அடைந்து, அங்கு காத்திருந்த இன்னொரு ஓரியண்ட் எக்ஸ்பிரஸ் ரயிலை அடைந்தார்கள்.

இந்த இரண்டாவது ரயிலிலும் ட்ரேஸியின் கம்பார்ட்மெண்ட் சிறியதாகவே இருந்தது. பெட்டி படுக்கைகளை ஒழுங்குபடுத்திக் கொண்ட பின் ஒரு ரயில்வே ஊழியரை அணுகினாள்.

"கோடீசுவரர் மாக்ஸ்மிலியன் இந்த ரயிலில் வருகிறாரென்று கேள்விப்பட்டேன். அவரை நான் பார்த்தது இல்லை. கொஞ்சம் அவரை எனக்குக் காட்டுகிறீர்களா?" என்றாள்.

உதட்டைப் பிதுக்கினார் அந்த ஊழியர். "மன்னிக்கணும் மேடம். அவர் கம்பார்ட்மெண்ட் ரிசர்வ் செய்து பணமும் கட்டிவிட்டார். ஆனால் வரவேயில்லை. திடீர் திடீரென்று தன் திட்டங்களை மாற்றிக் கொள்கிறவராம் அந்த ஆள்! சுத்தக் கிறுக்குப் பிடித்தவர்!"

ட்ரேஸிக்கு ஏமாற்றமாக இருந்தது.

'பரவாயில்லை. சினிமா நட்சத்திரம் ஸில்வினாவும் அவளுடைய கணவனும் இருக்கிறார்கள்' என்று சமாதானம் செய்து கொண்டாள்.

அன்று பகல் பூரா அவள் தன் அறையை விட்டு வெளியே வரவில்லை. இரவு எட்டு மணிக்கு ட்ரெஸ் செய்து கொண்டாள். பயணிகள் இன்னின்ன சந்தர்ப்பத்துக்கு இன்னின்ன மாதிரி உடை அணிய வேண்டும் என்று ஓரியண்ட் எக்ஸ்பிரஸ் நிர்வாகம் அறிவித்திருந்தது. அதன்படி உடை அணிந்து கொண்டாள்.

வெளியே செல்லுமுன் தன்னை நீண்ட நேரம் கண்ணாடியில் பார்த்துக்கொண்டாள்.

அவளுடைய பச்சைக் கண்களில் ஒரு கள்ளங்கபடமற்ற தன்மை தென்பட்டது. முகத்தில் ஓர் அப்பாவித்தனம் தெரிந்தது.

'கண்ணாடி பொய் சொல்கிறது' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள். 'இந்தப் பெண் இறந்துபோய் வெகு

நாளாகிறது. இப்போது இவள் மாறிவிட்டாள். வேறு வேஷம் போட்டாகிவிட்டது. ஆனால் பரபரப்பான, உற்சாகமான வேஷம்.'

ஓரியண்ட் எக்ஸ்பிரசில் மூன்று டைனிங் கார்கள் இருந்தன. ட்ரேஸி முதல் பெட்டிக்குள் நுழைந்தாள். அங்கே யாருமில்லை. விசாரிக்க வந்த சிப்பந்தியிடம், "நான் சில நண்பர்களைத் தேடுகிறேன்" என்று கூறி விட்டு அடுத்த பெட்டிக்குச் சென்றாள். அங்கே சில பேர்தான் இருந்தனர். அங்கேயும் யாரையோ தேடுவதாகத் தெரிவித்துவிட்டு மூன்றாவது டைனிங் காருக்குள் சென்றாள்.

அங்கே நல்ல கூட்டமாக இருந்தது. ஆனால் மூலையில் இருந்த ஒரு மேஜையில் -

அவள் தேடிச் சென்ற நபர்கள் இருந்தார்கள்.

அங்கே இருவர் உணவு அருந்திக் கொண்டிருந்தார்கள் - நடிகை ஸில்வினாவும், அவள் கணவனும்.

ஒரு நாற்காலி காலியாக இருந்தது.

நேரே அங்கே சென்ற ட்ரேஸி, "நான் இங்கே உட்காரலாமா? வேறு எங்கேயும் இடமில்லை," என்றாள்.

அவன் சட்டென எழுந்து கொண்டு, "தாராளமாய், மேடம். ரொம்ப சந்தோஷம். என் பெயர் ஆல்பர்ட்டோ. இவள் என் மனைவி ஸில்வினா." என்றான்.

"என் பெயர் ட்ரேஸி விட்னி," என்றாள் ட்ரேஸி. இம்முறை அவள் தன் சொந்தப் பெயரிலேயே பயணம் செய்தாள்.

"நீங்கள் அமெரிக்கரா? நான் எக்ஸலெண்ட்டாய் இங்கிலீஷ் பேசுவேன்," என்றான் ஆல்பர்ட்டோ. ஆனால் அவன் பேசிய இங்கிலீஷ் தப்பும் தவறுமாய் இருந்தது.

குள்ளமாய், குண்டாய், வழுக்கைத் தலையுடன் இருந்தான் ஆல்பர்ட்டோ. ஸில்வினாவோ சிற்பம் உயிர் பெற்றது போல் அற்புத அழகுடன் திகழ்ந்தாள் மிகத் திறமையுள்ள நடிகை. ஆஸ்கார் விருதும் மேலும் பல

விருதுகளும் பெற்றவள். திரையுலகில் மிகவும் கிராக்கியுள்ள நடிகை. அப்படிப்பட்டவள் ஏன் இந்த ஆளை மணந்து கொண்டாள் என்பது எல்லோருக்குமே ஆச்சரியம்.

ட்ரேஸி அவளை ஓரக் கண்களால் எடை போட்டாள். அவள் உடுத்தியிருந்த உடை மட்டும் ஐயாயிரம் டாலர் இருக்கும். அணிந்திருந்த நகைகள் பத்து லட்சம் டாலர் இருக்கும்.

'மொத்தத்தில் அவளை ஒரு நகைக்கடையாகவே வைக்கலாம்' என்று கந்த்தர் சொன்னது உண்மைதான்.

ட்ரேஸி உட்கார்ந்ததும், "ஒரியண்ட் எக்ஸ்பிரஸில் இப்பத் தான் முதல் தடவையாய்ப் பிரயாணம் செய்கிறீர்கள்? இல்லையா மேடம்?" என்று ஆல்பர்ட்டோ வினவினான்.

"ஆமாம். இதுதான் முதல் தடவை."

"இந்த ரயிலைப் பற்றிப் பல சுவாரஸ்யமான கதைகள் உண்டு. உதாரணமாய், ஆயுதத் தொழிற்சாலை சக்கரவர்த்தி சர் பேஸில் தெரியுமில்லையா? அவர் எப்பவும் இந்த ரயிலில் ஏழாவது கம்பார்ட்மெண்ட்டில் பிரயாணம் செய்வார். ஒரு நாள் -"

ட்ரேஸி சுவாரஸ்யமாய்க் கேட்கிற மாதிரி நடித்தாள். ஸில்வினாவின் நகைகள் மீதே அவள் கண்கள் பதிந்திருந்தன.

## 51

ஓரியண்ட் எக்ஸ்பிரஸ் ரயிலைப் பற்றிய கதைகளை ஆல்பர்ட்டோ சொல்லிக் கொண்டிருந்தான். ஆனால் ட்ரேஸியின் கவனமெல்லாம் அவருடைய மனைவியும் சினிமா நட்சத்திரமுமான ஸில்வினா அணிந்திருக்கும் நகைகளின் மீதே பதிந்திருந்தது.

"ஒரு நாள் ராத்திரி என்ன ஆச்சு தெரியுமா?" என்றான் ஆல்பர்ட்டோ. "இந்த ஆயுத வியாபாரி சர் பேசில்

இருக்கிறாரே, எப்போதும் பேஸில் தன் ஏழாம் நம்பர் பெட்டியில் தூங்கிக் கொண்டிருந்தார். திடீரென்று ஒரு பெரிய கூச்சல். கதவை யாரோ தடதடவென்று தட்டுகிறார்கள். கதவைத் திறந்தால் ஒரு சீமாட்டி ஸ்பெயின்காரி, இளம் வயது. ரொம்ப அழகு அவன் மேலே விழுந்து கட்டிக் கொள்கிறாள். விஷயம் என்னடாவென்றால்...."

ரொட்டிக்கு வெண்ணெய் தடவி ஒரு கடி கடித்து விட்டுத் தொடர்ந்தான் ஆல்பர்ட்டோ. "அவளை, அவள் அப்பா கட்டாயப் படுத்தி ஒரு பிரபுவுக்குக் கல்யாணம் பண்ணி வைத்து விட்டாராம். அந்தப் பிரபு அவளைக் கொலை பண்ணப் பார்க்கிறானாம். அந்த ஆள் ஒரு பைத்தியம் என்று அழுகிறாள். சர்பேசில் அவளையும் அவள் கணவனையும் கூட்டி வைத்துப் பேசி, சமாதானப்படுத்தி அவர்கள் பெட்டிக்கு அனுப்பி வைத்தார். அன்றைக்கு ஆரம்பித்தது காதல் சர் பேஸிலுக்கும் அந்த ஸ்பெயின் சீமாட்டிக்கும்! நாற்பது வருட காலம் நீடித்தது!"

"அட, அப்படியா?" என்றாள் ட்ரேஸி, கண்களை அகல விழித்துக் கொண்டு.

"அதுவும் எப்படிப்பட்ட காதல் என்கிறீர்கள்! ஒவ்வொரு வருஷமும் இதே ஓரியண்ட் எக்ஸ்பிரஸில் அவர்கள் சந்திப்பார்கள். சர் பேசில் ஏழாம் நம்பர் பெட்டியில் தங்குவார். அவள் எட்டாம் நம்பர் பெட்டியில் தங்குவாள். சீமாட்டியின் கணவன் இறந்த பிறகு இரண்டு பேரும் கல்யாணம் செய்து கொண்டார்கள். திருமணப் பரிசாக மான்ட்டிகார்லோவில் ஒரு சூதாட்டக் கிளப்பையே அவளுக்கு வாங்கித் தந்தார் சர் பேசில்."

"என்ன ஆச்சரியமான கதை, மிஸ்டர் ஆல்பர்ட்டோ!" என்றாள் ட்ரேஸி.

ஸில்வினா எதுவுமே பேசவில்லை. மௌனமாகக் கல்லைப் போல் உட்கார்ந்திருந்தாள்.

"அடடா! மன்னிக்கணும் மேடம். நான் பாட்டுக்குப் பேசிக் கொண்டேயிருக்கிறேன். நீங்கள் சாப்பிடுங்கள்," என்றான் ஆல்பர்ட்டோ.

சாப்பாடு படு அமர்க்களமாக இருந்தது. ஏகப்பட்ட ஐட்டங்கள். ஆல்பர்ட்டோ தன் தட்டில் இருப்பதைச் சாப்பிட்டுவிட்டு, ஸில்வினா வைக்கும் மிச்சங்களையும் சாப்பிட்டான். சாப்பிட்டவாறே சளசளவென்று பேசிக் கொண்டிருந்தான்.

"நீங்கள் நடிகை என்று தோன்றுகிறது. அப்படித் தானே?"

ட்ரேஸி சிரித்தாள். "இல்லை இல்லை. நான் ஒரு டூரிஸ்ட், அவ்வளவு தான்."

அவன் அவளை விழுங்குகிற மாதிரி பார்த்து, "சினிமா நட்சத்திரம் மாதிரி நீங்கள் ரொம்ப அழகாக இருக்கிறீர்கள்," என்றான்.

ஸில்வினா கடுகடுப்புடன் குறுக்கிட்டாள். "நடிகை யில்லை என்று அவர்தான் சொன்னாரே?"

ஆல்பர்ட்டோ அவளை லட்சியம் செய்யவில்லை. "நான் ஒரு சினிமா தயாரிப்பாளர். என் படங்களைப் பார்த்திருப்பீர்களே," என்றவன் பல படங்களின் பெயர்களை ஒப்பித்தான்.

"நான் சினிமா அதிகம் பார்ப்பதில்லை," என்றாள் ட்ரேஸி, மன்னிப்புக் கோரும் குரலில். மேஜையின் கீழாக அவனுடைய குண்டுக் கால் தன் காலை அமுத்துவது தெரிந்தது.

"நான் உங்களுக்காகச் சில படங்களைப் போட்டுக் காட்டுகிறேன்," என்றான் ஆல்பர்ட்டோ.

அவன் மனைவியின் முகம் கோபத்தால் சிவந்தது.

ஆல்பர்ட்டோ அதைப் பொருட்படுத்தாமல், "நீங்கள் ரோமுக்கு வருவீர்களா மேடம்?" என்றான்.

இப்போது அவன் கால் ட்ரேஸியின் காலை மேலும் கீழுமாக வருடத் தொடங்கியது.

ட்ரேஸி தெரியாத மாதிரி இருந்தாள்.

"ரோமுக்குத்தானே? வருவேன். வெனிஸைப் பார்த்த பிறகு ரோமுக்குப் போகலாமென்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்." என்றாள் ட்ரேஸி.

"பிரமாதம்! அருமை!" என்றான் ஆல்பர்ட்டோ. "நாம் மூன்று பேரும் இன்று இரவு சாப்பிடும் போது அதைப் பற்றிப் பேசலாம். என்ன?" என்று தன் மனைவியை ஓரக் கண்ணால் ஒரு பார்வை பார்த்துவிட்டுத் தொடர்ந்தான். "ரோமில் எங்களுக்கு ஒரு பெரிய பங்களா இருக்கிறது. என் பண்ணை எவ்வளவு பெரியது தெரியுமா? பத்து ஏக்கர் பரப்பில் -"

கைகளை வீசிக் காட்டியவன், ஒரு சூப் கிண்ணத்தை இடறி விட்டான் . அதிலிருந்த சூப் ஸில்வினாவின் உடை மீது கொட்டியது. கை தவறி அப்படிச் செய்தானா, அல்லது வேண்டுமென்றே செய்ததா என்று ட்ரேஸிக்குத் தெரிய வில்லை.

ஸில்வினா சடேரென்று எழுந்து நின்று தன் உடையைப் பார்த்தாள். சூப் கோரமாகச் சிந்திப் பரவிக் கொண்டிருந்தது.

"சீ! பாழாகிவிட்டது மொத்த ட்ரெஸ்ஸும்! கொஞ்சம் கூட அறிவு இல்லை!" என்று கண்டபடி கத்திவிட்டு வேகமாக வெளியே போனாள். சாப்பிட்டுக் கொண்டிருந்த அத்தனை பேரின் கண்களும் அவளையே மொய்த்தன.

மனைவியை இப்படி அவமானப்படுத்திய ஆல்பர்ட்டோவைப் பளாரென்று கன்னத்தில் அறையலாம் போல் இருந்தது ட்ரேஸிக்கு. இவனுக்குப்போய் எவ்வளவு அழகான மனைவி! போட்டிருந்த அத்தனை வைரக் கற்களும் சேர்த்தால் கூட அவள் அழகுக்கு ஈடாகாது!

"பாவம், ரொம்ப நல்ல டிரெஸ்!" என்று ட்ரேஸி முணு முணுத்தாள்.

ஆல்பர்ட்டோ பெரு மூச்சு விட்டான். "உண்மை தான். ஆனால் அதேபோல் வேறு டிரெஸ் வாங்கித் தந்து விடுவேன். அவள் கிடக்கிறாள், விடுங்கள். என் மீது அவளுக்கு ரொம்பப் பொறாமை; அழகான பெண்கள் என் பின்னால் சுற்று கிறார்கள் என்று."

"ஆமாமாம்," என்ற ட்ரேஸி, தன் கேலியை ஒரு புன் சிரிப்பால் மறைத்துக் கொண்டாள்.

அவன் மேலும் மேலும் பீற்றிக் கொண்டான் "என்னமோ தெரியவில்லை. பெண்களுக்கு என்னிடம் ஒரு தனி மயக்கம்!"

அவனுடைய தற்பெருமையைக் கேட்கக் கேட்க ட்ரேஸிக்குச் சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்தது. அடக்கிக் கொண்டு, "இருக்கும், இருக்கும்," என்றாள்.

அவன் மேஜையின் முன்னே குனிந்து அவள் கையைத் தொட்டான். "எனக்கு உன்னைப் பிடித்திருக்கிறது. ரொம்பப் பிடித்திருக்கிறது. அதிருக்கட்டும், நீ என்ன வேலை பார்க்கிறாய்?"

"நான் ஒரு கம்பெனியில் செக்ரட்டரியாக இருக்கிறேன். இந்தப் பிரயாணத்துக்காக நான் சேமித்து வைத்திருந்த பணம் மொத்தத்தையும் செலவழித்து விட்டேன். ஐரோப்பாவில் ஒரு நல்ல வேலை கிடைத்தால் தேவலை."

அவன் கண்கள் அவள் உடலை விழுங்கின. "வேலையே வேண்டாம். உன்னை நான் பார்த்துக் கொள்கிறேன். என்னிடம் பிரியமாக நடந்து கொள்கிறவர்களை நானும் பிரியமாக நடத்துவேன்."

ட்ரேஸி "அப்படியா? ரொம்ப சந்தோஷம்," என்றாள் முகத்தில் நாணம் வரவழைத்துக் கொண்டு.

அவன் தன் குரலைத் தாழ்த்திக் கொண்டு, "ராத்திரி உன் பெட்டிக்கு வருகிறேனே? இதைப் பற்றிப் பேசுவோம்," என்றான்.

"வேண்டாம், அது பிரசினையாகி விடும்."

"பிரசினையா? என்ன பிரசினை?"

"நீங்கள் ரொம்பப் பிரபலமானவர். இந்த ரயிலில் வரும் எல்லாருக்குமே நீங்கள் யாரென்று தெரியும்."

"இருக்கட்டுமே?"

"அப்படியிருக்க, நீங்கள் என் பெட்டிக்கு வருவதைப் பார்த்தால் நாலு பேர் தப்பாக நினைப்பார்கள். உங்கள் பெட்டி என் பெட்டிக்குப் பக்கத்தில் இருந்தாலாவது பரவாயில்லை. உங்களுடைய பெட்டி எண் என்ன?"

"எழுபது," என்று சொல்லி விட்டு, அவளுடைய பதிலுக்காக ஆவலுடன் அவள் முகத்தைப் பார்த்தான் ஆல்பர்ட்டோ.

ட்ரேஸி ஒரு பெருமூச்சு விட்டாள். "ஹூம்! என் பெட்டி இன்னொரு கோடி. நாம் வெனிஸில் சந்தித்தாலென்ன?"

அவன் முகம் மகிழ்ச்சியால் பளபளத்தது. "ஓ! தாராள மாய். என் மனைவி வெளியிலேயே வரமாட்டாள். வெய்யில் அவளுக்கு ஆகாது. ரூமிலேயே அடைந்து கிடப்பாள். நீ இதற்கு முன் வெனிஸ் நகரத்துக்குப் போயிருக்கிறாயோ?"

"இல்லை."

"நல்லது. அங்கே டார்ஸெல்லோ என்று ஒரு சின்னத் தீவு இருக்கிறது. அழகான தீவு. அங்கே அருமையான ஓட்டல் இருக்கிறது." அவன் கண்ணைச் சிமிட்டினான். "நாம் யார் தொந்தரவும் இல்லாமல் தனியாக இருக்கலாம். என்ன?"

அவன் பேச்சைப் புரிந்த கொண்டவள் போல மென்மையாய்ப் புன்கை செய்தாள் ட்ரேஸி "நினைக்கவே ஆனந்தமாக இருக்கிறது," என்றவள் அதற்குமேல் சொல்ல முடியாதவள் மாதிரி கண்களைத் தாழ்த்திக் கொண்டாள்.

அவன் அவள் கைகளை அழுத்திப் பிடித்தபடி, "அசல் ஆனந்தம் என்பது என்னவென்று உனக்கு இனி மேல்தான் தெரியப் போகிறது." என்று கிசுகிசுத்தான்.

இரவைக் கிழித்துக் கொண்டு ஓரியண்ட் எக்ஸ்பிரஸ் பறந்தது. பாரிஸையும் இன்னும் பல நகரங்களையும் நாடுகளையும் அது கடந்து கொண்டிருந்தது. பிரயாணிகள் தங்கள் பாஸ்போர்ட்களை ரயில்வே அதிகாரிகளிடம் ஒப்படைத்திருந்தார்கள். ஆகவே ஒரு நாட்டைக் கடந்து இன்னொரு நாட்டுக்குள் புகும்போது சுங்க அதிகாரிகளின் தொந்தரவில்லாமல் பயணிகள் தூங்க முடிந்தது.

விடிகாலை மூன்றரை மணிக்கு ட்ரேஸி தன் பெட்டியை விட்டு வெளிக் கிளம்பினாள். ரயில் இன்னும் கொஞ்ச நேரத்தில் ஸ்விட்ஸர்லாந்து நாட்டுக்குள் நுழைந்தது, லூஸான் நகரைப் சரியாய் 5.21க்கு அடையும். பிறகு இத்தாலிக்குள் நுழைந்து, காலை 9.15க்கு மிலான் நகரை அடையும்.

ட்ரேஸி இந்த நேரங்களைக் கணக்குப் போட்டுக் கொண்டு தான் 3.30க்கு வெளிக் கிளம்பினாள்.

பைஜாமாவும் சட்டையும் அணிந்து கையில் ஒரு சிறிய பையுடன், ரயிலின் வெராந்தாவில் அவள் நடந்தாள். அவளுடைய ஒவ்வொரு புலனும் துடிப்புடன் விழித்திருந்தது. அவளுடைய நாடி பரபரப்புடன் படபடத்துக் கொண்டிருந்தது.

பிரயாணிகளின் பெட்டிக்குள் டாய்லெட் அறை கிடையாது. ஆனால் மறு கோடியில் சில பெட்டிகளுக்கு ஒன்று இருந்தது. எனவே, யாரேனும் எதிர்ப்பட்டுக் கேள்வி கேட்டால் டாய்லெட்டுக்குப் போவதாகச் சொல்வதென்று ட்ரேஸி நினைத்திருந்தாள். ஆனால் யாரும் எதிர்ப் படவில்லை.

விடிகாலை நேரமாதலால் அதிகாரிகளும் போர்ட்டர் களும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

எந்தச் சிரமமும் இல்லாமல் எழுபதாம் எண் பெட்டியை அடைந்தாள். சத்தமில்லாமல் கதவுப் பிடியைத் திருகிப் பார்த்தாள். பூட்டியிருந்தது.

கைப் பையிலிருந்து இரண்டொரு சிறிய கருவிகளும், ஒரு சின்ன சீசாவும், சிரிஞ்சும் எடுத்தாள்.

வேலையில் இறங்கினாள்.

பத்து நிமிடத்துக்கெல்லாம் தன் பெட்டிக்குத் திரும்பினாள்.

முப்பது நிமிடத்துக்கெல்லாம் தூக்கத்தில் ஆழ்ந்தாள். அவள் முகத்தில் ஒரு புன்னகை மலர்ந்திருந்தது.

## 52

ஓரியண்ட் எக்ஸ்பிரஸ் பறந்து கொண்டிருந்தது.

காலை மணி ஏழு.

இன்னும் இரண்டு மணி நேரத்தில் மிலான் நகரை ரயில் அடையும்.

திடீரெனப் பெரும் கூச்சல்கள் எல்லார் காதையும் கிழித்தன.

எழுபதாம் எண் பெட்டியிலிருந்து வெளிப்பட்டன அந்தக் கூச்சல்கள்.

தூங்கிக் கொண்டிருந்த அவ்வளவு பயணிகளும் விழித்துக் கொண்டு தங்கள் தங்கள் பெட்டிகளிலிருந்து எட்டிப் பார்த்தார்கள். என்னதான் நேர்ந்தது எழுபதாம் எண் பெட்டியில்?

ரயில் கண்டக்டர் ஓடிவந்து அந்தப் பெட்டிக்குள் நுழைந்து விசாரித்தார்.

ஜன்னி பிடித்த மாதிரி ஸில்வினா கத்திக் கொண்டிருந்தாள். "ஐயோ! ஐயோ! என்ன அநியாயம்! என்ன அநியாயம்! என் நகைகள் அத்தனையும் திருட்டுப் போய்விட்டதே! ரயிலா இது! திருட்டுக் கூட்டம்!"

"ப்ளீஸ் மேடம், கொஞ்சம் அமைதியாக இருங்கள்," என்று கண்டக்டர் சமாதானப் படுத்த முயன்றார்.

"அமைதியாய் இருப்பதா!" அவள் கூச்சல் இன்னும் உச்சத்தில் ஒலித்தது. "அமைதியாய் இரு என்றா சொல்கிறே? அறிவிருக்கா உனக்கு? என் நகைகள் திருட்டுப் போய்விட்டது என்கிறேன்! ஒரு டாலரா, இரண்டு டாலரா? பத்து லட்சம் டாலர் மதிப்புள்ள நகைகள் கொள்ளை போயிருக்கிறது! அமைதியாய் இரு என்கிறாயே!"

ஸில்வினாவின் கணவன் ஆல்பர்ட்டோவும் கூச்ச லிட்டான். "எப்படி நடந்திருக்கிறது திருட்டு? கதவு பூட்டி யிருக்கிறது. துளி சத்தம் கேட்டாலும் எனக்கு முழிப்பு வந்து விடும். எவனேனும் நுழைந்திருந்தால் உடனே எழுந்தி ருப்பேனே!"

கண்டக்டர் பெருமூச்சு விட்டார். திருட்டு எப்படி நடந்திருக்குமென்று அவரால் ஊகிக்க முடிந்தது. ஏனென்றால் இதற்கு முன்பும் இது போல நடந்திருக்கிறது.

திருடன் இரவு வெராந்தா வழியே எழுந்து வந்திருக்கி றான். சாவித் துவாரத்தின் வழியாக, சிரிஞ்சு மூலமாய் மயக்க மருந்தைப் பெட்டிக்குள் செலுத்தியிருக்கிறான். கைதேர்ந்த திருடர்களுக்குப் பெட்டியின் பூட்டைத் திறப்பது சுலபமான விஷயம். திறந்து உள்ளே போயிருக்கிறான். அறையில் இருப்பவர்கள் மயங்கிக் கிடக்க, திருடன் உள்ளே புகுந்து கதவைச் சாத்திக்கொண்டு, தனக்கு வேண்டியதையெல்லாம் சுருட்டிக் கொண்டு கதவைப் பழையபடி பூட்டி விட்டுத் திரும்பியிருக்கிறான். இவ்வாறு கண்டக்டர் ஊகித்தார்

ஆனால் முன்பு நடந்த திருட்டுக்களுக்கும் இந்தத் தடவை நடந்திருப்பதற்கும் ஒரு வித்தியாசம் இருந்தது. முன்பு, ரயில் ஏதாவது ஒரு ஸ்டேஷனை அடைந்து நின்ற பிறகு தான் திருட்டுப் போயிருப்பதை அறிந்து கூச்சலிடுவார்கள் அதற்குள் திருடன் நழுவியிருப்பான்.

ஆனால் இந்த முறை ரயில் எந்த ஸ்டேஷனையும் இன்னும் அடையவில்லை. அதாவது, திருட்டுப் போன நகை

கள் இந்த வண்டிக்குள்ளேயேதான் இருக்கின்றன என்று அர்த்தம்.

ஸில்வினாவிடமும் ஆல்பர்ட்டோவிடமும் கண்டக்டர் நிதானத்துடன் சொன்னார். "கவலைப்படாதீர்கள், உங்கள் நகைகள் கிடைத்து விடும். திருடன் இந்த ரயிலில் தான் இருக்கிறான்."

சொல்லி விட்டு, மிலான் நகரப் போலீசுக்குப் போன் மூலம் தகவல் தெரிவித்தார்.

ஓரியண்ட் எக்ஸ்பிரஸ் மிலான் ஸ்டேஷனை அடைந்தது.

யூனிபாரம் அணிந்த போலீஸ்காரர்கள் ஸ்டேஷனில் அணிவகுத்து நின்றார்கள். அவர்களைத் தவிர பல துப்பறியும் நிபுணர்களும் மப்டியில் நின்றிருந்தார்கள்.

எந்தப் பிரயாணியும் எந்த லக்கேஜும் வெளியே போகக் கூடாது என்று கண்டிப்பான கட்டளை பிறப்பிக்கப் பட்டிருந்தது.

லூகி என்ற போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆல்பர்ட் டோவின் பெட்டிக்குச் சென்றார்.

ஸில்வினாவின் கூச்சல் இப்போது இன்னும் அதிகப் பட்டிருந்தது. "என் நகைகள் மொத்தத்தையும் அதோ அந்த நகைப்பெட்டியில் தான் வைத்திருந்தேன். ஐயோ! எந்த நகையையும் இன்ஷ்யூர் செய்யாமல் போய் விட்டேனே! என்ன செய்வேன் இப்ப?"

இன்ஸ்பெக்டர் அந்த நகைப்பெட்டியை மேலும் கீழுமாக ஆராய்ந்தார். "மேடம் நேற்றிரவு உங்கள் நகைகளை இந்தப் பெட்டியில் தான் வைத்திருந்தீர்களா? நன்றாய் நினைவிருக்கிறதா...?"

"நன்றாய் நினைவிருக்கிறது. கொஞ்சம்கூடச் சந்தேக மில்லை. ஒவ்வொரு ராத்திரியும் அதில்தான் வைக்கிறேன்!" என்றாள் ஸில்வினா.

லட்சக்கணக்கான ரசிகர்களைக் கிறங்கச் செய்யும் அவளுடைய ஒளி வீசும் கண்களில் கண்ணீர் வழிந்தது. அதைப் பார்த்த இன்ஸ்பெக்டருக்குக் கோபம் கோபமாய் வந்தது திருடன் மீது. அவன் மட்டும் கையில் கிடைத்தால் கசக்கிப் பிழிந்து உலர்த்தத் தயாராக இருந்தார்.

பெட்டியின் கதவை அணுகினார். குனிந்து சாவித் துவாரத்தில் மூக்கை வைத்து வாசனை பிடித்தார். மயக்க மருந்தின் மணம் லேசாக வந்தது.

திருட்டு நடந்திருப்பது உண்மைதான். கொள்ளைக் காரனைப் பிடிக்காமல் விடுவதில்லை என்று உறுதி பூண்டார் இன்ஸ்பெக்டர்.

"கவலையே வேண்டாம், மேடம். நகைகள் இந்த ரயிலை விட்டு வெளியே போக வழியே கிடையாது. திருடனைக் கண்டிப்பாய்ப் பிடித்து விடுவோம். நகைகள் கண்டிப்பாய் உங்களுக்குக் கிடைத்துவிடும்."

இன்ஸ்பெக்டர் அவ்வளவு உறுதியாகச் சொன்னதற்குக் காரணம் இருந்தது. ரயில் வண்டியின் எல்லாப் புறங்களிலும் போலீசார் காவல் காத்தனர். எந்தப் புழு பூச்சியும் வெளி யேறிச் செல்ல முடியாது.

பிரயாணிகள் ஒவ்வொருவராய் ஸ்டேஷன் வெயிட்டிங் ரூமுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கேயும் பலத்த காவல் போடப்பட்டிருந்தது. அங்கே பிரயாணிகளின் உடம்பைத் துப்புரவாகச் சோதனை போட்டார்கள் ரகசியப் போலீசார்.

பயணிகளில் பெரும்பாலோர் பிரபலமான புள்ளிகள். தங்களை இப்படிச் சோதனை போட்டு அவமானப் படுத்துவதைப் பலமாக ஆட்சேபித்தார்கள்.

ஒவ்வொருவரிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார் இன்ஸ்பெக்டர் லூகி. "ஸாரி சார். பத்து லட்சம் டாலர் மதிப்புள்ள நகைகள் என்றால் சாதாரண விஷயமில்லை பாருங்கள்," என்றார்.

பயணிகள் வெயிட்டிங் ரூமுக்கு அழைத்துச் செல்லப் பட்டதும் அவர்கள் தங்கியிருந்த பெட்டிகளைப் புரட்டி யெடுத்தார்கள் போலீசார். அங்குல இடம் விடாமல் சோதனை போட்டார்கள்.

திருட்டை எப்படியும் கண்டு பிடித்துவிட வேண்டும் என்று நினைத்தார் இன்ஸ்பெக்டர் லூகி. அவர் வெகு நாளாய் எதிர்பார்த்துக் காத்திருக்கும் பிரமோஷன் இப்போது நிச்சயமாய்க் கிடைத்துவிடும். அது மட்டுமா? பத்து லட்சம் டாலர் மதிப்புள்ள நகைகள் திரும்பக் கிடைத்தால் ஸில்வினா எப்படி மகிழ்ந்து போவாள்! நன்றிக் கடனாக அவரை ஹாலிவுட்டுக்கு வரும்படி அழைப்பு விடுப்பாள். அங்கே...

இன்ஸ்பெக்டரின் கற்பனை, சிறகடித்துப் பறந்து. அடுக்கடுக்காய் உத்தரவுகள் பிறப்பித்துக் கொண்டிருந்தார்.

ட்ரேஸியின் பெட்டிக் கதவு தட்டப்பட்டது.

ஒரு துப்பறியும் போலீஸ்காரர் உள்ளே நுழைந்தார்.

"மன்னிக்கணும், மேடம். இந்த ரயிலில் ஒரு திருட்டு நடந்திருக்கிறது. ஆகவே எல்லாப் பிரயாணிகளையும் சோதனை போட வேண்டியிருக்கிறது. தயவு பண்ணி என்னுடன் வருகிறீர்களா?"

"திருட்டா!" ட்ரேஸியின் குரலில் அதிர்ச்சி. "இந்த ரயிலிலா!"

"ஆமாம், மேடம்."

ட்ரேஸி வெளியே சென்றதும் போலீஸார் உள்ளே சென்று அவளுடைய சூட்கேஸ்களைத் திறந்து கவனமாகப் பரிசோதனை செய்தார்கள்.

ரயில் பூரா நான்கு மணிநேரம் சோதனைகள் நடந்தன. சில கஞ்சா பாக்கெட்டுகள், ஒரு கத்தி, லைசன்ஸ் இல்லாத ஒரு துப்பாக்கி - இவை தான் கிடைத்தன.

காணாமற்போன நகையைப் பற்றி துரும்புகூட தடயம் கிடைக்கவில்லை.

இன்ஸ்பெக்டர் லூகிக்கு எதுவும் புரியவில்லை. "ரயிலை நன்றாகச் சோதனை போட்டுவிட்டீர்களா?" என்று தன் உதவியாளரைக் கேட்டார்.

"இம்மி இடம் பாக்கியில்லாமல் சோதனை போட்டு விட்டோம் சார். இஞ்சின், டைனிங் ரூம்கள், டாய்லெட்டு கள், பிரயாணிகளின் பெட்டிகள் எல்லாவற்றையும் பார்த்தா யிற்று. பிரயாணிகளையும் ரயில்வேச் சிப்பந்திகளையும் சோதனை போட்டுவிட்டோம். நிச்சயமாய்ச் சொல்கிறேன் சார் திருட்டுப்போன பொருள் இந்த ரயிலில் கிடையாது. அந்த அம்மாள் ஏதோ கற்பனை பண்ணிச் சொல்கிறாரோ என்னவோ?"

ஸில்வினா கற்பனை செய்யவில்லை என்பது இன்ஸ் பெக்டருக்கு நன்றாய்த் தெரியும். ஏனெனில், வெயிட்டர்களை அவர் விசாரித்திருந்தார். முந்தின இரவு டின்னர் சாப்பிட ஸில்வினா வந்தபோது பளபளவென்று ஏராளமான நகை களைப் போட்டுக் கொண்டிருந்தாள் என்று சொன்னார்கள்.

ஒரே ஓர் ஊகம் தான் அவரால் செய்ய முடிந்தது. திருடனுக்கு ஒரு தோழன் ஏதோ ஒரு குறிப்பிட்ட இடத்தில் காத்திருக்கிறான். திருடன் அந்த நகைப் பெட்டியை அவனிடம் தூக்கி எறிந்திருக்கிறான். ஆனால் அப்படி நடந்திருக்க முடியுமா? அவ்வளவு அட்சரமாக நேரத்தையும் இடத்தையும் கணக்குப் போட முடியுமா?

ஸ்டேஷனை விட்டு ஓரியன்ட் எக்ஸ்பிரஸ் புறப்பட்டது.

டைனிங் காரில் இதுவே பேச்சு.

"இப்படி ஒரு பயங்கரமான பரபரப்பு ஏற்பட்டு என் வாழ்வில் பார்த்ததேயில்லை," என்றாள் பெண்கள் பள்ளிக் கூடத்தில் ஆசிரியையாக வேலை பார்க்கும் ஓர் அம்மாள். சிறிய வைர லாக்கெட் போட்ட தன் கழுத்துச் சங்கிலியை அவள் கைகள் தடவின. "திருடன் இதைத் தூக்கிக் கொண்டு போகாமல் இருந்தானே, என் நல்ல காலம் தான்!"

*அவள் பக்கத்தில் அமர்ந்து உணவு அருந்திக் கொண்டிருந்த ட்ரேஸி, "ஆமாமாம். உங்கள் நல்லகாலம் தான்," என்று ஆமோதித்தாள்.*

*ஆல்பர்ட்டோ அந்த டைனிங்காருக்குள் வந்தான். ட்ரேஸி சாப்பிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டான். "ரயிலில் திருட்டு நடந்தது பற்றி உனக்குத் தெரிந்திருக்கும். ஆனால் திருட்டுப் போனது என் மனைவியின் நகைகள்! அது தெரியுமோ உனக்கு?" என்றான்.*

*"ஐயோ, என்ன பயங்கரம்!" என்றாள் ட்ரேஸி.*

*"இப்ப இன்னொரு பிரசினை என்ன தெரியுமா? ஸில்வினாவுக்குத் திரும்பவும் அத்தனை நகைகளும் வாங்கித் தர வேண்டும். இல்லாவிட்டால் என்னை விட மாட்டாள். அதில் என் ஆஸ்தி மொத்தமும் தீர்ந்துவிடும்!"*

*"போலீஸ்காரர்களால் கண்டுபிடிக்கவே முடியவில்லையா?"*

*"இல்லை. ஆனால் இந்தத் திருட்டு எப்படி நடந்திருக்குமென்று எனக்குத் தெரியுமாக்கும்!" என்றான் ஆல்பர்ட்டோ.*

*"அட! எப்படி?" என்றாள் ட்ரேஸி.*

## 53

*ஓரியண்ட் எக்ஸ்பிரஸ் ஓடிக்கொண்டிருந்தது.*

*திருட்டு எப்படி நடந்திருக்கும் என்று ஆல்பர்ட்டோ தன் ஊகத்தை விவரித்தான்.*

*சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுக் குரலைத் தாழ்த்திக் கொண்டான் அவன். "வழியில் ஏதோ ஒரு ஸ்டேஷனில் மூவர்களுடைய கூட்டாளி நின்றிருக்கிறான். அவனிடம் நகைகளைப் போட்டிருக்கிறார்கள். ராத்திரி வேளை தானே? யாரும் கவனிக்கவில்லை! அவ்வளவுதான்!"*

ட்ரேஸி அவனைப் பார்த்து வியக்கிற மாதிரி புருவங்களை உயர்த்தினாள். "அட! எவ்வளவு புத்திசாலித்தனமாய் ஊகித்துவிட்டீர்கள்!"

"என்னை என்னவென்று நினைத்தாய்?" என்றவன் கண்களைச் சிமிட்டினான். "வெனிஸில் நாம் சந்திப்பதாக ஏற்பாடு! மறந்து விட மாட்டாயே?"

"சே, சே! எப்படி மறப்பேன்!" என்று புன்னகை செய்தாள் ட்ரேஸி.

அவன் அவள் கைகளைப் பிடித்து அழுத்தினான். "அந்தத் சந்திப்புக்காக நான் காத்துக் கொண்டிருப்பேனாக்கும்! சரி, இப்பப் போய் ஸில்வினாவுக்கு ஆறுதல் சொல்லியாக வேண்டும். வெறி பிடித்த மாதிரி கத்திக் கொண்டு கிடக்கிறாள்!"

ஓரியண்ட் எக்ஸ்பிரஸ் வெனிஸ் நகரத்தை அடைந்து, ஸான்ட்டா லூஸியா என்ற ஸ்டேஷனில் நின்றது. முதல் பிரயாணியாக ட்ரேஸி இறங்கினாள்.

இறங்கியதும் டாக்ஸி அமர்த்திக்கொண்டு விமான நிலையத்துக்குச் சென்றாள். லண்டன் செல்லும் விமானத்தில் ஏறிக் கொண்டாள்.

அவளுடன் அவளுடைய சூட்கேஸ் பத்திரமாக இருந்தது.

சூட்கேஸில் ஸில்வினாவின் நகைககள் பத்திரமாக இருந்தன.

தன் சாமர்த்தியத்தைச் சொல்லும்போது கந்த்தர் எவ்வளவு சந்தோஷப்படுவார் என்று நினைத்துக் கொண்டாள்.

புன்னகை தவழ்ந்தது அவள் முகத்தில்.

'இன்ட்டர் போல்' என்று அழைக்கப்படும் சர்வதேசப் போலீஸ் நிறுவனம் பாரிஸ் நகரத்துக்கு ஆறு மைல் மேற்கே, சிறு குன்றுகளுக்கிடையே அமைந்திருந்தது. உயரமான

பச்சை நிற வேலியுடன் வெள்ளைச் சுவர்களும் கட்டிடத்தை மறைத்திருந்தன.

தெருப் பக்கமுள்ள கேட் இருபத்து நாலு மணி நேரமும் பூட்டப்பட்டே இருப்பது வழக்கம். யார் வந்தாலும் டெலிவிஷன் மூலம் நன்கு பரிசோதிக்கப்பட்ட பிறகே அனுமதிக்கப் படுவார்கள். அது ஏழடுக்குக் கட்டிடம். ஒவ்வொரு அடுக்குக்கும் செல்லும் மாடிப் படிகள் ராத்திரி வேளைகளில் பூட்டப் பட்டுவிடும். ஒவ்வொரு மாடிப்படி வாயிலிலும் அலாரம் கருவி, டெலிவிஷன் கருவிகள் உள்ளன.

இவ்வளவு கெடுபிடிகளுக்குக் காரணம் இருந்தது.

இன்ட்டர்போல் மிக முக்கியமான போலீஸ் ஸ்தாபன மாகும். பல நாடுகளைச் சேர்ந்த இருபத்தைந்து லட்சம் 'புகழ்' பெற்ற கிரிமினல்களைப் பற்றிய விவரங்களும் அங்கே வைக்கப்பட்டிருந்தன. எழுபத்தெட்டு நாடுகளைச் சேர்ந்த நூற்றிருபத்தாறு போலீஸ் அமைப்புக்களுக்கு இன்ட்டர் போல் தேவைப்படும் தகவல்களை அவ்வப்போது அளித்து வருகிறது. மோசடிக்காரரர்கள், கள்ள நாணயம் தயாரிப்ப வர்கள், போதை மருந்து கடத்தல்காரரர்கள், கொள்ளைக் காரர்கள், கொலைகாரர்கள் இப்படி எவரைப் பற்றிய தகவலும் இங்கே கிடைக்கும். கடைசி வினாடி வரை கிடைத் துள்ள செய்திகளை, 'சர்க்குலேஷன்' என்ற பிரசுரம் அவ்வப் போது வெளியிடும் ரேடியோ, புகைப்படம், சேட்லைட்டு இப்படிச் சகலவித உட்கரணங்களும் அதற்கு உண்டு.

பாரிஸிலுள்ள தலைமையகத்தை தேர்ச்சி பெற்ற போலீஸ் அதிகாரிகளும் துப்பறியும் நிபுணர்களும் நிர்வகித்து வந்தனர்.

அது ஒரு மே மாதக் காலை.

இன்ஸ்பெக்டர் ஆண்ட்ரியின் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்த அறை எளிமையாக, ஆனால் வசதியாக இருந்தது. ஜன்னல் வழியே பார்த்தால் ஈபல் கோபுரமும் மாதா கோவிலின் கம்பீரமான மாடங்களும் தெரிந்தன.

இன்ஸ்பெக்டர் ஆண்ட்ரிக்கு நாற்பத்தைந்து வயதிருக்கும். வசீகரமான, யாரும் மதிக்கக் கூடிய ஆகிருதி. அறிவுச் களையுள்ள முகம் கருமையான முடி, மூக்குக் கண்ணாடியின் பின்னே பழுப்புக் கண்கள் பிரகாசித்தன.

அவரெதிரில் பல நாட்டுத் துப்பறியும் நிபுணர்கள் அமர்ந்திருந்தனர்.

இன்ஸ்பெக்டர் ஆண்ட்ரி பேசத் தொடங்கினார்.

'நண்பர்களே, ஐரோப்பா எங்கும் திடீர் திடீரென்று கொள்ளைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. உடனே இந்த விஷயத்தைக் கவனிக்க வேண்டுமென்று உங்கள் நாடுகளிலிருந்து எனக்கு அவசரக் கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அரை டஜன் நாடுகளில் ரொம்ப சாமர்த்தியமான மோசடிகளும் திருட்டுக்களும் நடந்துள்ளன. அவை அனைத்திலும் சில ஒற்றுமைகள் தென்படுகின்றன. இவை எல்லாவற்றிலம் ஒரு பெண் சம்பந்தப்பட்டிருக்கிறாள். இவை எதிலும் வன்முறை இல்லை. இந்த மோசடிகளில் மாட்டிக் கொண்டு ஏமாந்தவர்கள் அப்படியொன்றும் யோக்கியர்கள் அல்ல. சர்வதேசக் கொள்ளைக்காரிகளின் கும்பலொன்று தான் இதைச் செய்கிறது என்று முடிவு செய்திருக்கிறோம். ஏமாந்தவர்களும் சாட்சிகளும் சொன்ன அடையாளங்களை வைத்து இந்தப் பெண்களின் படங்களைத் தயாரித்திருக்கிறோம். நீங்களே பாருங்கள், ஒரு பெண்ணைப் போல இன்னொரு பெண் இல்லை. செம்பட்டை முடி, சிலருக்குக் கறுப்பு முடி. ஒவ்வொருவர் முடி ஒவ்வொரு நிறத்தில் இருக்கிறது. சிலர் இங்கிலிஷ்காரிகள்; சிலர் பிரான்ஸ்; சிலர் ஸ்பெயின்; சிலர் இத்தாலி; சிலர் அமெரிக்காவில் டெக்ஸாஸ் பகுதியிலிருந்து வந்தவர்கள்..."

இன்ஸ்பெக்டர் ஆண்ட்ரி ஒரு ஸ்விட்சைத் தட்டினார். சுவரிலிருந்து திரையில் பல பெண்களின் படங்கள் அடுத்தடுத்துக் காட்சி தந்தன. இளம் பெண்கள், கிழவிகள், நடுத்தர வயதுக்காரிகள், பலவிதமான உடைகள், பலவிதமான முகங்கள்...

"இந்தக் கொள்ளைக்காரர்களின் தலைவன் யாரென்பதோ இவர்களுடைய தலைமை அலுவலகம் எங்கிருக்கிறது என்றோ நமக்குத் தெரியவில்லை. தங்களுக்குப் பின் எந்தத் தடயமும் இவர்கள் விட்டுச் செல்வதில்லை. சிகரெட் புகை மாதிரி மறைந்து விடுகிறார்கள். ஆனால் இவர்களில் ஒருவரை யாவது விரைவில் பிடிக்கத்தான் போகிறோம். ஒருவரைப் பிடித்தால் மொத்தக் கூட்டமும் பிடிபட்டு விடும். நீங்கள்தான் இதற்கு உதவி செய்ய வேண்டும். இப்போதைக்கு ஒரு முட்டுச் சந்தில் போய் நிற்பது போன்று தான் நமது நிலைமை..."

இன்ஸ்பெக்டர் ஆண்ட்ரியின் எதிரிலிருந்தவர்களில் கூப்பரும் ஒருவன் - அமெரிக்க இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் துப்பறியும் நிபுணன்.

ஆண்ட்ரியின் பேச்சைக் கேட்ட வண்ணமே அவன் தன் கைப்பெட்டியைத் திறந்து, அதிலிருந்து ஒரு காகிதத் துண்டை வெறித்துப் பார்த்தப்படி இருந்தான்.

அது ஒரு செய்தித் தாளிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட துண்டு. எத்தனையோ வருஷங்களாகத் தன்னிடம் பத்திரமாக வைத்துக் கொண்டிருக்கிறான். அதில் -

'கொலை வழக்கில் சிறுவனின் சாட்சியம்' என்ற தலைப்புடன் ஒரு செய்தி -

*ஜிம்மர் என்பவன் ஒரு பெண்ணைக் கற்பழித்துக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளான். அந்த வழக்கில், பெண்ணின் மகனான கூப்பர் என்ற பன்னிரண்டு வயதுச் சிறுவன் இன்று கோர்ட்டில் சாட்சியமளித்தான். தான் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்கு வந்தபோது பக்கத்து வீட்டுக்காரனான ஜிம்மர் முகத்திலும் கையிலும் ரத்தக் கறையுடன் தன் வீட்டுக்குள்ளிருந்து வெளியேறியதைக் கண்டதாகக் கூப்பர் சொன்னான். வீட்டுக்குள் ஓடிப் போய்ப் பார்த்தபோது குளியல் தொட்டியில் தன் தாய் ரத்த வெள்ளத்தில் கிடப்பதைப் பார்த்ததாயும், அவள் உடம்பில் பயங்கரமான கத்திக்குத்துக் காயங்கள் காணப்பட்டதாயும் கூப்பர் கூறினான்.*

*தனக்கும் அந்தப் பெண்ணுக்கும் கள்ளத் தொடர்பு உண்டென்று ஜிம்மர் ஒப்புக் கொண்டான். ஆனால் தான் அவளைக் கொலை செய்யவில்லை என்று கூறினான்.*

*சிறுவன் கூப்பர் அவனுடைய அத்தையிடம் ஒப் படைக்கப்பட்டான்....*

இந்தச் செய்தியைப் படிக்கும் ஒவ்வொரு முறையும் கூப்பரின் உணர்ச்சிகள் கொந்தளிப்பது வழக்கம். இன்றும் அப்படித்தான்.

நடுங்கும் கைகளால் அந்தத் துண்டுச் செய்தியை மடித்துப் பெட்டிக்குள் பத்திரமாக வைத்தான்.

"மிஸ்டர் கூப்பர், நீங்கள் தான் முக்கியமாய்க் கவனிக்க வேண்டும்," என்று இன்ஸ்பெக்டர் ஆண்ட்ரி சொல்வது காதில் விழுந்தது.

கூப்பர் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"நீங்கள் எந்தப் போலீஸ் படையையும் சேர்ந்தவரல்ல. ஆனால் உங்களுக்கு எல்லாவித உதவிகளும் செய்து ஒத்துழைப்புத் தரும்படி பல நாட்டுப் போலீசார் எங்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் உங்களை இங்கே கூப்பிட்டிருக்கிறோம்," என்றார் ஆண்ட்ரி.

கூப்பர் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

இன்ஸ்பெக்டர் ஆண்ட்ரி தொடர்ந்து கூறினார். நீங்கள் பல இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளின் பிரதிநிதியாக இருக்கிறீர்கள். அவர்களுக்காக நீங்கள் விசாரணைகள் மேற் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா?"

"ஆமாம். எங்கள் கம்பெனிகளில் இன்ஷ்யூரன்ஸ் செய்து கொண்ட பல வாடிக்கையாளர்கள் ஏமாற்றப் பட்டிருக் கிறார்கள். அந்த மோசடிகளைப் பற்றி எந்தத் தடயமும் கிடைக்கவில்லை," என்றான் கூப்பர்.

இன்ஸ்பெக்டர் பெருமூச்சு விட்டார். "உண்மைதான் ரொம்பக் கெட்டிக்காரிகளான ஒரு பெண்கள் கூட்டம் இந்த மோசடிகளைச் செய்கிறது என்பதைத் தவிர -"

"அந்தக் கூட்டத்தைச் சேர்ந்த எவனும் அவர்களை இதுவரை காட்டிக் கொடுக்கவில்லை?"

"இல்லை."

"அது ஒரு விந்தையான விஷயமென்று உங்களுக்குச் சந்தேகம் ஏற்படவில்லையா இன்ஸ்பெக்டர்?"

"விந்தையான விஷயமா? என்ன சொல்கிறீர்கள்?"

"இதுகூட இவர்களுக்குத் தெரியவில்லையே என்று கூப்பக்குக் கோபம் ஏற்பட்டது. சற்றுப் பொறுமையிழந்தவனாகச் சொன்னான்:

"யோசித்துப் பாருங்கள், இன்ஸ்பெக்டர். பலபேர் கும்பலாகச் சேர்ந்து ஒரு கொள்ளையை நடத்தினால், அவர்களில் எவனாவது ஒருவன் மற்றவர்களை மாட்ட வைத்து விடுவது வழக்கம். ரகசியத்தைக் காப்பாற்றத் தெரியாமல் எவனிடமாவது சொல்லி வைப்பான். அல்லது திடீரென்று எக்கச்சக்கமாய்ப் பணம் செலவழித்து, பார்க்கிறவர்களுக்குச் சந்தேகம் ஏற்படுத்தி விடுவான். பலபேர் கும்பலாகச் சேர்ந்துக் கொள்ளையடித்தால். ரகசியம் வெளிவராமல் காப்பாற்றுவது ரொம்பக் கஷ்டம், இன்ஸ்பெக்டர்! இந்தக் கும்பலைப் பற்றிய ஃபைல்களைக் கொஞ்சம் காட்டுகிறீர்களா?"

'அதெல்லாம் முடியாது' என்று முதலில் சொல்ல நினைத்தார் ஆண்ட்ரி. கூப்பரின் மூஞ்சியும் முகரக்கட்டையும் அவருக்கு ஆரம்பத்திலிருந்தே பிடிக்கவில்லை. கர்வம் பிடித்தவன் என்று வேறு அவன் மீது அவருக்கு ஒரு வெறுப்பு. 'நமக்குச் சுத்தத் தலைவலியாகத்தான் இருக்கப் போகிறான் இந்த ஆள்' என்று எண்ணிக் கொண்டார்.

இருந்தாலும் கூப்பருக்குத் தேவையான உதவிகளைச் செய்து தரும்படி மேலிடத்துக் கட்டளை.

"ஃபைல்களை நகல் எடுத்துத் தரச் சொல்கிறேன்," என்று கூறி இன்ட்டர்காம் மூலம் அதற்கான உத்தரவு பிறப்பித்தார். பிறகு, பேச்சைத் தொடர வேண்டும் என்பதற்காக, "இதற்கு நடுவே ஒரு சுவாரஸ்யமான கேஸ் என் விசாரணைக்கு

வந்திருக்கிறது. ஓரியண்ட் எக்ஸ்பிரஸ் ரயிலில் சில விலையுயர்ந்த நகைகளைக் கொள்ளையடித்திருக்கிறார்கள்," என்றார்.

"நானும் பேப்பரில் படித்தேன். சரியான கெட்டிக்காரன் அந்தத் திருடன். இத்தாலியப் போலீசை நன்றாய் முட்டாளடித்திருக்கிறான்."

"எப்படி அந்தத் திருட்டு நடந்தது என்பது யாருக்கும் விளங்கவில்லை," என்றார் இன்ஸ்பெக்டர்.

"உங்களுக்குமா விளங்கவில்லை?" என்று ஏளனமாகச் சொன்னான் கூப்பர். "கொஞ்சம் பகுத்தறிவை உபயோகித்தால் ரொம்பச் சுலபமாய்க் கண்டுபிடித்திருக்கலாமே!"

இன்ஸ்பெக்டர் ஆண்ட்ரிக்குக் கோபம் வந்தது.

## 54

ஓரியண்ட் எக்ஸ்பிரஸில் எப்படித் திருட்டு நடந்தது என்பதைக் கண்டுபிடிப்பது மிகச் சுலபம் என்று துப்பறியும் நிபுணனான கூப்பர் கூறியதும், சர்வதேசப் போலீஸ் ஸ்தாபனத்தின் தலைவரான இன்ஸ்பெக்டர் ஆண்ட்ரிக்குக் கோபம் வந்தது. இவன் நம்மை முட்டாளாக்கப் பார்க்கிறான் என்று எண்ணினார். "புரியவில்லையே?" என்றார்.

"கொஞ்சம் அறிவைப் பயன்படுத்தினால் புரியும்," என்றான் கூப்பர் முரட்டுத்தனமாக.

இன்ஸ்பெக்டர் ஆண்ட்ரி தன் மூக்குக் கண்ணாடியை உயர்த்திக்கொண்டு அவனை ஆச்சரியமாய்ப் பார்த்தார். பிறகு அமைதியாக, 'இந்தக் கேஸில் அறிவைப் பயன்படுத்த வேண்டிய விஷயம் எதுவும் இல்லை. அந்த ரயிலின் ஒவ்வோர் அங்குலத்திலும் தேடி விட்டோம். பிரயாணிகள், ஊழியர்கள், லக்கேஜ் எல்லாம் சோதனை போட்டாயிற்று!"

"இல்லை," என்றான் கூப்பர் பிடிவாதமாக.

"என்ன இல்லை?"

"எல்லா லக்கேஜ்களையும் சோதனை போடவில்லை என்கிறேன்."

"போட்டார்கள் என்கிறேன் நான்! போலீஸ் ரிப்போர்ட் இருக்கிறது. பார்க்கிறீர்களா?"

"யாருடைய நகைகள் திருட்டுப் போயிற்று? ஸில்வினா என்று ஏதோ பெயர் சொன்னீர்களே..."

"ஆமாம். ஸில்வினா."

"முதல் நாள் ராத்திரி தன் நகைகளைக் கழற்றி ஒரு பெட்டியில் வைத்திருந்தாள். அப்படித் தானே?"

"ஆமாம்."

"அதில் நகைகள் இல்லை?"

"ஆமாம்."

"ஸில்வினாவின் சூட்கேஸ்களைப் பார்த்தீர்களா?"

"நகைகளைப் பறிகொடுத்தவளே அவள்தானே? அவளுடைய சூட்கேஸ்களை எதற்காகச் சோதனை போடவேண்டும்?" என்றார் இன்ஸ்பெக்டர் ஆண்ட்ரி.

கூப்பர் சிரித்தான். "அங்கேதான் நீங்கள் தப்புப் பண்ணி விட்டீர்கள். நகைகளைத் திருடியவன் ஸில்வினாவினுடைய சூட்கேஸின் அடியிலேயே அந்த நகைகளை ஒளித்து வைத்திருக்கிறான். அந்த சூட்கேஸை நீங்கள் சோதனையிட மாட்டீர்கள் என்று அவனுக்குத் தெரியும். அந்த சூட்கேஸைப் போலவே இன்னொன்று அவன் வைத்திருக்க வேண்டும். வெனிஸ் ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் எல்லா லக்கேஜ் களையும் குவியலாக வைத்திருந்தபோது, தன் சூட்கேஸை வைத்துவிட்டு அவள் சூட்கேஸை நகைகளை ஒளித்து வைத்திருந்த சூட்கேஸை - எடுத்துக்கொண்டு போயே போய் விட்டான்! ரொம்ப ஸிம்பிள்!" என்று சொல்லி முடித்து விட்டு அமைதியாக எழுந்து கொண்டான் கூப்பர்

அவன் புறப்பட்டுச் சென்று அரை மணி நேரம்வரை இன்ஸ்பெக்டர் ஆண்ட்ரியால் தன் திகைப்பிலிருந்து மீள

முடியவில்லை. பிறகு வெனிஸ் நகரத்தில் இருந்த ஆல்பர்ட் டோவுக்கு ஸில்வினாவின் கணவனுக்குபோன் செய்தார்.

"மிஸ்டர் ஆல்பர்ட்டோ, ஒரு விஷயம் தெரிந்து கொள்வதற்காகப் போன் செய்கிறேன். உங்கள் மனைவியின் லக்கேஜ் விஷயமாக ஏதாவது பிரசினை ஏற்பட்டதா?"

"ஆமாம் ஆமாம்," என்று எரிந்து விழுந்தார் ஆல் பர்ட்டோ. "வெனிஸ் ஸ்டேஷனில் எவனோ ஒரு முட்டாள் போர்ட்டர் வந்து அவளுடைய சூட்கேஸுக்குப் பதில் வேறு யாருடைய சூட்கேஸையோ மாற்றித் வைத்துவிட்டான். ஒட்டலுக்கு வந்ததும் சூட்கேஸைத் திறக்கிறாள் என்ன இருந்ததென்று நினைக்கிறீர்கள்? கத்தை கத்தையாகப் பழைய பத்திரிகைகள்! ஓரியண்ட் எக்ஸ்பிரஸ் நிர்வாகிகளிடம் புகார் கொடுத்திருக்கிறேன். உங்களுக்கு ஏதாவது தகவல் வந்ததா? என் மனைவியின் சூட்கேஸ் கிடைத்திருக்கிறதா?" என்றார் ஆல்பர்ட்டோ ரொம்ப நம்பிக்கையான குரலில்.

"இதுவரை கிடைக்கவில்லை சார்," என்றார் இன்ஸ் பெக்டர். இனிமேலும் கிடைக்கப் போவதில்லை என்று தனக்குள் சொல்லிக் கொண்டார்.

டெலிபோனைத் திரும்ப வைத்துவிட்டு நாற்காலியில் சாய்ந்த போது கூப்பரைப் பற்றியே அவர் எண்ணங்கள் ஓடின.

'என்ன பிரமாதமான மூளை அந்த ஆளுக்கு!' என்று நினைத்துக் கொண்டார்.

**தோ**ட்டங்களும் பூங்காக்களும் நிரம்பிய அற்புதமான பகுதியில் இருந்தது ட்ரேஸியின் வீடு. லண்டனில் செல்வந்தர் கள் வசிக்கும் பகுதி அது. மொட மொடவென்று யூனிபாரம் அணிந்த ஆயாக்கள், வகை வகையான உயர் ரகக் கை வண்டி களில் பணக்காரக் குழந்தைகளை வைத்துத் தள்ளிக்கொண்டு செல்வார்கள். சில குழந்தைகள் பூங்காக்களில் விளையாடிக் கொண்டிருக்கும்.

சிறைச்சாலையில் தான் வளர்த்த சிறுமி ஆமியை ஏக்கத்துடன் நினைத்துக் கொள்வாள் ட்ரேஸி.

அதை மறப்பதற்காகக் கடை வீதிகளில் உலவுவாள். கடைகளுக்குள் நுழைந்து விரும்பிய பொருள்களை வாங்குவாள். கடைகளுக்கு வெளியே மலர்க் கொத்துக்களில் சின்னச் சின்னப் பூக்கள் சிரிப்பதைப் பார்த்தபடி வெகுநேரம் நின்றிருப்பாள்.

கந்த்தர் தான் அவளுக்கு வழிகாட்டி. எந்தெந்த ஸ்தாபனங்களுக்கு நன்கொடை தர வேண்டும் என்பதிலிருந்து யார் யாருடன் பழக வேண்டும் என்பது வரை அவர்தான் ஆலோசனை கூறுவார். கோடீசுவரர்களான பிரபுக்களும், பெருங்காய டப்பாக்களாகிவிட்ட பல பெரும் புள்ளிகளும் ட்ரேஸியுடன் பழகவும் விருந்துண்ணவும் போட்டியிட்டு வந்தார்கள். இளமையும் அழகும் செல்வமும் இணைந்திருக்கும் ட்ரேஸியை மணக்கக் கூடப் பலர் முன்வந்தார்கள்.

அவர்களிடம் அவள் ஏமாளி போல, குழந்தை மாதிரி நடிப்பதைக் கண்டு கந்த்தர் சிரித்தார். "உன்னைச் சுலபமாக மடக்கிப் போட்டு விடலாம் என்று எல்லாரும் நினைக்கிறார்கள். நிஜமாகவே நீ பிரமாதமாய் முன்னேறி விட்டாய், ட்ரேஸி. உனக்கென்று ஒரு வாழ்க்கை அமைந்தாகி விட்டது. தேவைப்படுகிற எல்லாம் கிடைத்துவிட்டது உனக்கு!"

உண்மைதான்.

ஐரோப்பாவின் பல நகரங்களில், பல பாங்குகளில், அவளுடைய கணக்கில் பணம் நிரம்பி வழிந்தது. லண்டனிலும் இன்னும் இரண்டோர் இடங்களிலும் சொந்த வீடுகள் இருந்தன.

தேவையான எல்லாம் கிடைத்துவிட்டது இவ்வளவு சுகங்களிலும் பங்கு கொள்ள ஒரு துணை தான் இல்லை.

கணவனும் குழந்தையுமாகக் குடும்பம் நடத்தியிருக்க வேண்டியவள் அந்த வாழ்க்கை கை நழுவிப் போனதை நினைத்துக் கொண்டாள்.

இனி என்றைக்காவது அப்படியொரு வாழ்க்கை கிடைக்குமா?

தான் உண்மையில் எப்படிப்பட்டவள் என்பதை எந்த ஆணிடம் அவளால் சொல்ல முடியும்? கடந்த காலத்தை மறைத்து, பொய் சொல்லி எத்தனை நாள் வாழ்க்கை நடத்த முடியும்? ஏகப்பட்ட வேஷங்கள் போட்டாகி விட்டது. அசல் ட்ரேஸி யார் என்பது அவளுக்கே மறந்து விடும் போலிருக்கிறது. முன்னொரு காலத்தில் வாழ்ந்த அந்த வாழ்க்கைக்குத் திரும்பவே முடியாதா?

'சரி, சரி, ஒன்றும் கெட்டு விடவில்லை,' என்று தன்னைத் தானே அதட்டிக் கொண்டாள் ட்ரேஸி. உலகத்திலே ஒண்டியாய், தனியாய் நாம் மட்டும்தானா இருக்கிறோம்? எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். கந்த்தர் சொல்வது உண்மை. வாழ்க்கையில் அடையவேண்டியது பூரா நாம் அடைந்தாகி விட்டது...

அன்று மாலை அவள் தன் நண்பர்களுக்கு ஒரு பார்ட்டி கொடுத்தாள். வெனிஸிலிருந்து திரும்பிய பிறகு அவள் தரும் முதல் பார்ட்டி அது.

"உனக்குத் தெரியுமோ, ட்ரேஸி? உன்னோட பார்ட்டி என்றால் லண்டனில் அதற்குத் தனி மவுசு," என்றார் கந்த்தர்.

"ஒரு முக்கியமான புள்ளியை நான் இன்று கூப்பிட்டிருக்கிறேன்." என்றாள் ட்ரேஸி.

"யாரது?"

"பொறுத்திருந்து பாருங்களேன்."

ட்ரேஸி அழைத்திருந்தது ஹோவார்த் என்ற செல்வச் சீமாட்டியை.

அவளை வரவேற்பதற்காக முன்னறைக்குச் சென்றாள் ட்ரேஸி. ஆனால் சீமாட்டியுடன் கூட வந்தவனைப் பார்த்ததும் அவள் முகம் தொங்கிப் போயிற்று.

ஜெஃப்! மோசடி வேலைகளில் அவளுடன் போட்டியிட்டு நிற்கும் அதே ஜெஃப்!

"ட்ரேஸி, உனக்கு இவரைத் தெரிந்திருக்காது. ஜெஃப் ஸ்டீவன்ஸ். என் நண்பர். ஜெஃப், இவர்தான் மிஸஸ் ட்ரேஸி விட்னி," என்று சீமாட்டி அவர்களைப் பரஸ்பரம் அறிமுகம் செய்து வைத்தாள்.

ட்ரேஸி அமர்த்தலாக "வணக்கம் மிஸ்டர் ஜெஃப்," என்றாள்.

அவன் அவள் கையைக் குலுக்கியவாறு, "ட்ரேஸி விட்னி? ஓ! ஆமாம், ஆமாம்! உங்கள் கணவரின் நண்பன் நான். இந்தியாவில் நாங்கள் சேர்ந்து இருந்தோம்," என்றான் வேண்டுமென்றே.

"அட, அப்படியா!" வியந்தாள் சீமாட்டி.

ட்ரேஸி தன் கோபத்தை அடக்கிக் கொண்டு, "வேடிக்கை தான். என் கணவர் உங்களைப் பற்றி ஒரு நாள் கூடப் பேசியது இல்லையே?" என்றாள்.

"பேசியதில்லையா? ஆச்சரியம் தான். உங்கள் கணவர் ரொம்பச் சுவாரஸ்யமான ஆள். கடைசியில் அப்படிச் செத்ததுதான் பரிதாபம்."

"ஏன்? என்ன ஆச்சு?" என்றாள் சீமாட்டி.

ஜெஃப் தன்னை வேண்டுமென்றே மாட்ட வைக்கிறான் என்பது ட்ரேஸிக்குப் புரிந்தது. அவனை ஒரு முறைப்பு முறைத்துவிட்டு "பெரிசாய் ஒன்றுமில்லை," என்றாள்.

"பெரிசாய் ஒன்றுமில்லையா? என்ன அப்படிச் சொல்லி விட்டாய்? இந்தியாவில் அவனைத் தூக்குப் போட்டதாக எனக்கு ஞாபகம்."

தானும் அவனை மடக்குவது என்று ட்ரேஸி தீர் மானித்துக் கொண்டாள்.

"இந்தியாவில் இல்லை. பாகிஸ்தானில்," என்றவள், "இப்ப ஞாபகம் வருகிறது. உங்களைப் பற்றி என் கணவர் பேசியிருக்கிறார். உங்கள் மனைவி எப்படி இருக்கிறாள்?" என்று கேட்டாள்.

சீமாட்டி ஜெஃப்பைப் பார்த்து முறைத்தாள். "உங்களுக் குக் கல்யாணமாகிவிட்டதா? நீங்கள் சொல்லவே யில்லையே?"

ஜெஃப் நெளிந்தான். "ஸெஸிலியை நான் அப்போதே விவாகரத்து செய்து விட்டேன்."

"நான் ஸெஸிலியைச் சொல்லவில்லை. ரோஸியைச் சொன்னேன்." என்றாள் ட்ரேஸி விடாமல்.

"ஓ! அந்த மனைவியா!"

சீமாட்டிக்கு ஒரே திகைப்பு. குழப்பம், "நீங்கள் இரண்டு தடவை கல்யாணம் செய்து கொண்டவரா? எனக்குத் தெரியாதே?"

ட்ரேஸி தொடர்ந்து "உங்களுடைய இரண்டு குழந்தை களும் இப்போது யாரிடம் இருக்கிறது?" என்று விசாரித்தாள்.

"இரண்டு குழந்தைகளா?" சீமாட்டி மேலும் திகைத்தாள்.

"இரண்டும் அவர்களோட அம்மாவிடம் இருக்கிறது," என்று சமாளித்தான் ஜெஃப். "நல்லது மிஸஸ் விட்னி, இன்னும் பல பேர் உங்களுடன் பேசக் காத்திருக்கிறார்கள். நான் உங்களைப் பிடித்து வைத்துக் கொள்வது நியாயமல்ல," என்று கூறிவிட்டு நகர்ந்தான்.

மறுநாளும் ஜெஃப் அவளிடம் மாட்டிக் கொண்டான்.

ஒரு பெரிய ஷாப்பின் லிஃப்டில் அவள் போய்க் கொண்டிருந்தாள். லிஃப்ட் நிறையக் கூட்டம். அதில் ஜெஃபும் இருப்பதைக் கண்டாள்.

இரண்டாவது மாடியில் வெளியேறும் சமயம், "அப்புறம் அந்தக் கற்பழிப்பு வழக்கில் நீங்கள் எப்படி விடுதலையானீர்கள்?" என்று கேட்டு விட்டுப் போய் விட்டாள்.

லிஃப்டில் இருந்த மொத்தப் பேரும் அவனை முறைக்க, ஜெஃப் எதுவும் சொல்ல முடியாமல் திணறிப் போனான்.

அவன் இடிந்து போய் நின்ற காட்சியை நினைக்க நினைக்க ட்ரேஸிக்குச் சிரிப்பாய் வந்தது.

கொஞ்ச நாளில் தான் அவனிடம் சிக்கப் போகிறோம் என்று அவள் அப்போது எதிர்பார்க்கவில்லை.

55

இரவு முழுதும் ட்ரேஸிக்குத் தூக்கம் வரவில்லை. அவள் எண்ணங்கள் ஜெஃப்பைச் சுற்றியே ஓடின. லிஃப்டில் நாலு பேர் அவனை முறைக்கும்படி தான் செய்ததை எண்ணிக் கொண்டாள். சிரிப்பு வந்தது. அயோக்கியன் தான். ஆனால் இனிமையான அயோக்கியன். ஆளை மயக்கக் கூடிய வசீகரமான அயோக்கியன்.

அன்று விருந்துக்கு ஹோவார்த் என்ற பணக்காரச் சீமாட்டியை அவன் அழைத்து வந்தது ஞாபகம் வந்தது. அவனுக்கு அவளிடம் என்ன உறவு இருக்கும்? வேறென்ன? ஏதோ மோசடியாகத்தான் இருக்கும். என்னைப் போலத்தான் ஜெஃப்பும். நானும் அவனும் ஒரே ரகம். நான் என்றைக்கும் மனம் மாறி அமைதியான வாழ்வுக்குத் திரும்ப மாட்டேன். அவனும் அப்படித்தான்.

சட்! ஏன் ஜெஃபைப் பற்றியே நினைக்கிறோம்?

கைமேல் அடுத்த வேலை இருக்கிறது. பிரான்ஸின் தெற்குப் பகுதியில் அந்த வேலை நடக்கவிருந்தது.

அது ஒரு பெரிய சவால்!

**பா**ரிஸ் நகரத்தில் ஓர் ஓட்டல். நேரம்: விடிகாலை நாலு மணி.

இன்ஸ்பெக்டர் ஆண்ட்ரி கொடுத்திருந்த போலீஸ் அறிக்கைகளைப் படித்துக் கொண்டிருந்தான் துப்பறியும் நிபுணன் கூப்பர்.

பறிகொடுத்த ஏமாளிகள் அனைவரும் சந்தேகத்திற்குரிய பேர்வழிகள். நாணயமான ஆசாமிகள் அல்ல. அவர்களைக் கொள்ளையடிப்பதில் தவறில்லை என்று திருடன் நினைக்கிறான் போலிருக்கிறது. பணக்காரனைக் கொள்ளையடித்து ஏழைக்குக் கொடுக்கும் ராபின் ஹூட் என்று நினைப்பு!

அனேகமாய் எல்லாப் போலீஸ் ரிப்போர்ட்களையும் படித்து முடித்து விட்டான் கூப்பர். இன்னும் மூன்று தாள் பாக்கி இருந்தன.

ஒன்றை எடுத்தான். 'ப்ரஸ்ஸல்ஸ்' என்று தலைப் பிட்டிருந்தது.

பிரஸ்ஸல்ஸ் நகரில் நடந்த திருட்டைப் பற்றியது.

இருபது லட்சம் டாலர் பெறுமானமுள்ள நகைகள் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன. வான் ரூஸன் என்ற பங்கு மார்க்கெட் பெரும் புள்ளியின் வீட்டிலிருந்து இரும்புப் பெட்டகத்தைத் திறந்து திருடியிருக்கிறார்கள். அந்த ஆள் தப்புத் தண்டா வழிகளில், சட்ட விரோதமான முறைகளில் பணம் சேர்த்துச் செல்வந்தனாக ஆனவன்.

கூப்பர் கூர்ந்து படித்தான்.

அவனும் வீட்டிலுள்ள மற்றவர்களும் வெளியூர் போயிருந்தார்கள். பங்களாவில் யாரும் இருக்கவில்லை.

தொடர்ந்து படித்தவன் திடீரென்று ஒரு பொறி புலனில் தட்டவே, மீண்டும் முதல் வரியிலிருந்து படிக்கத் தொடங்கினான்.

மற்ற கொள்ளைகளிலிருந்து இது வித்தியாசமாகத் தோன்றியது.

போலீஸ் ஸ்டேஷனில் அலாரம் அடித்திருக்கிறது. உடனே போலீசார் விரைந்து வந்திருக்கிறார்கள். கதவைத் திறந்தவள் ஓர் இளம் பெண். முகம் பூரா க்ரீம் பூசிக் கொண்டு கவர்ச்சியான மெல்லிய இரவு டிரெஸ்ஸில் இருந்தாள். வீட்டுக்காரரின் விருந்தாளி என்று சொல்லிக் கொண்டாள். அலாரம் தவறுதலாக அடித்துவிட்டதாகத் தெரிவித்தாள்.

போலீசார் அவள் சொன்னதை நம்பித் திரும்பிப் போய்விட்டார்கள்.

அதன் பிறகு நகைகளும் திருட்டுப் போய்விட்டது. அந்தப் பெண்ணும் மாயமாய் மறைந்திருக்கிறாள்.

கூப்பர் யோசனையில் ஆழ்ந்தான். லாஜிக்... எல்லா வற்றையும் தர்க்க சாத்திரப்படி சிந்தனை செய்ய வேண்டும்... லாஜிக்...

சர்வதேசப் போலீஸ் ஸ்தாபனத்தின் இன்ஸ்பெக்டர் ஆண்ட்ரிக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. இந்த ஆள் கூப்பர் என்ன சொல்கிறான்? பொறுமை இழந்தவராக, "ஒரே ஒரு பெண்தான் இவ்வளவும் செய்திருக்க வேண்டும் என்றா சொல்கிறீர்கள்? ஒரு நாளும் சாத்தியமில்லை!" என்றார்.

"என் ஊகம் சரியா தப்பா என்று கண்டுபிடிக்க ஒரு வழி இருக்கிறது 'இன்ஸ்பெக்டர்," என்றான் கூப்பர்.

"என்ன வழி?"

"கடைசியாக நடந்த கொள்ளைகள், அவை நடந்த தேதிகள், இடங்கள் முதலிய விவரங்களைக் கம்ப்யூட்டரில் கொடுங்கள்."

"ரொம்பச் சுலபம்! அப்புறம்?"

"இந்தத் திருட்டுக்கள் நடந்த அதே ஊரில், அதே நாளில் அமெரிக்க டூரிஸ்ட்டுகள் யார் யார் வந்திருக்கிறார்கள், அவர்களின் பெயர், வயது முதலிய சகல விவரத்தையும் அந்தந்த ஊரில் இமிக்ரேஷன் இலாகா மூலம் திரட்டி, அதையும் கம்ப்யூட்டருக்குக் கொடுங்கள். அந்தத் திருடி பல சமயங்களில் பொய்ப் பெயர் தான் கொடுத்திருப்பாள். சில சமயங்களில் அசல் பெயரையும் கொடுத்திருக்கக் கூடும்."

கூப்பர் சொல்வதெல்லாம் தப்பாய்த்தான் இருக்கும் என்று மனசுக்குள் எண்ணிக் கொண்டாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், "சரி, நீங்கள் சொன்னபடி ஏற்பாடு செய்கிறேன்," என்றார்.

கூப்பர் கேட்ட விவரம் தயாராயிற்று.

முதலில் ஸ்டாக்ஹோம் நகரில் நடந்த கொள்ளையும், அந்த ஊருக்கு வந்திருந்த அமெரிக்கப் பெண்களின் பெயர்களும் இருந்தன. அடுத்து மிலான் நகர் - அமெரிக்கப் பெண்கள்.

முதலில் ஐம்பத்தைந்து பெண்கள் இருந்தார்கள்.

ஒற்றுமைகளைக் கம்ப்யூட்டர் மூலம் கண்டுபிடித்த போது பதினைந்து பெண்களாகக் குறைந்தார்கள்.

அந்தப் பதினைந்து பெண்களின் பெயர்களைக் கூப்பரிடம் குறித்துத் தந்தார் இன்ஸ்பெக்டர். "அடுத்து பெர்லின் நகரில் நடந்த கொள்ளையைப் பற்றிய விவரங் களைச் சேகரித்துக் கொண்டிருக்கிறேன்," என்றார்.

"தேவையில்லை," என்றான் கூப்பர்.

பெண்களின் பெயர்ப் பட்டியலை வெறித்து நோக்கின அவன் கண்கள்.

முதல் பெயராக இருந்தது: ட்ரேஸி விட்னி,'

சர்வதேசப் போலீஸ் ஸ்தாபனம் சுறுசுறுப்படைந்தது.

'ட்ரேஸி விட்னி' என்ற பெண் யாரேனும் வருகிறாளா என்று கண்காணிக்கும்படி ஒவ்வொரு நாட்டுக்கும் ரகசியச் செய்தி அனுப்பப்பட்டது. எல்லாப் போலீஸ் நிலையங் களுக்கும் சிறைச் சாலைகளுக்கும் செய்தி பறந்தது.

மறுநாளே -

அமெரிக்காவில், தெற்கு லூஸியானா பெண்கள் சிறைச் சாலையிலிருந்து ட்ரேஸி விட்னியின் புகைப்படம் வந்து சேர்ந்தது.

கூப்பர் தன் மேலதிகாரியான ரெய்னால்ட்ஸுக்குப் போன் போட்டான்.

வெகு நேரம் மணி அடித்த பிறகு ரெயினால்ட்ஸ் தூக்கக் கலக்கத்துடன் "ஹலோ," என்றார்.

"எனக்கு அவசரமாய் ஒரு தகவல் வேண்டும்."

*பேசுவது கூப்பர் என்று குரலிலிருந்து கண்டு கொண்டார் அவர். "யார், கூப்பரா? என்னப்பா அநியாயம்? இங்கே இப்போது மணி என்ன தெரியுமா? விடிகாலை நாலு மணி!" என்றார் கோபமாக.*

*கூப்பர் அவருடைய கோபத்தைப் பொருட்படுத்த வில்லை. "இதோ பாருங்கள், ரொமானோ வீட்டுப் பெயிண்ட்டிங் திருட்டில் சிக்கி ஜெயிலுக்குப் போனாளே, அநத் ட்ரேஸியைப் பற்றி எனக்குச் சகல விவரங்களும் தேவை. பத்திரிகைச் செய்திகள், டேப்கள், வீடியோக்கள் எல்லாம் வேண்டும்..."*

*"என்ன விஷயம்? எதற்கு -"*

*அதற்குள் கூப்பர் டெலிபோனை வைத்துவிட்டான். அவனுடைய மேலதிகாரி பல்லைக் கடித்துக் கொண்டார். 'ஒருநாள் இல்லாவிட்டால் ஒரு நாள் இந்தக் கூப்பரின் மென்னியை முறித்துக் கொல்லப்போகிறேன்...'*

**மு***தலில் கூப்பருக்கு ட்ரேஸியைப் பற்றிச் சாதாரண மான அக்கறைதான் இருந்தது. ஆனால் நாளாக நாளாக அவளை மடக்க வேண்டும் என்ற வெறி ஏற்பட்டுவிட்டது.*

*தான் தங்கியிருந்த ஓட்டல் அறையில், சுவரெங்கும் ட்ரேஸியின் பல வகையான புகைப்படங்களை ஒட்டி வைத்திருந்தான். ட்ரேஸிக்குச் சிறைத் தண்டனை வழங்கப் பட்ட போதும் சிறையிலிருந்து விடுதலையான போதும் எடுத்திருந்த டெலிவிஷன் படங்களுக்கு வீடியோ கேசட் கிடைத்திருந்தது. அவற்றைத் திரும்பத் திரும்பப் போட்டுப் பார்த்தான்.*

*மணிக்கணக்காக அந்தப் படங்களைப் பார்க்கப் பார்க்க, ட்ரேஸியின் மீது சிறு பொறியாக இருந்த சந்தேகம் மலையாக வளர்ந்தது. சர்வ நிச்சயமாக உறுதியாயிற்று.*

*'ஒரு பெண்களின் கும்பல் என்று போலீஸில் நினைக்கிறார்கள். அந்தக் கும்பல் மொத்தமும் நீதான் ட்ரேஸி, நீதான்,' என்று சொல்லிக் கொண்டான்.*

பாரிஸ் நகரத்தில் மாட்டினி பிரபுவின் மாளிகையில் ஒவ்வொரு ஜூன் மாதமும் முதல் சனிக்கிழமையன்று ஒரு நடன விருந்து நடைபெறும். பாரிஸில் உள்ள குழந்தைகள் ஆஸ்பத்திரியின் நிதிக்காக அதை அவர் நடத்துவார். நன்கொடையாக டிக்கெட்டுகள் விற்கப்படும். ஒவ்வொரு டிக்கெட்டும் ஆயிரம் டாலர். அந்த நடன விருந்தில் கலந்து கொள்வதற்காக உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் பெரும் புள்ளிகள் வருவார்கள்.

மாட்டினி பிரபுவின் மாளிகை பாரிஸில் பார்க்க வேண்டிய இடங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது. வெகு அழகான தோட்டம் முன்புறத்தை அலங்கரித்தது. பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தது அந்த மாளிகை. உள்ளே ஆடம்பர மான நடன மண்டபம். மிக அழகாக உடையுடுத்திய விருந்தாளிகளுக்கு வில்லை தரித்த பணியாட்கள், ஷாம் பேய்னைக் கோப்பை கோப்பையாக ஊற்றிக் கொடுப்பார்கள். மேஜைகளில் வித விதமான உணவு வகைகள் வெள்ளித் தட்டு களில் நிரம்பியிருக்கும். விருந்தினர்கள் வேண்டியதை வேண்டிய மட்டும் எடுத்து உண்ணலாம்.

அன்று ட்ரேஸி அந்த விருந்துக்கு வந்திருந்தாள். சரிகை போட்ட வெள்ளைக் கவுனில் தேவதை போல் விளங்கினாள் அவள். தலையை உயர்த்தி முடிந்து, வைரக் கிளிப் செருகி யிருந்தாள்.

மாட்டினி பிரபுவுக்கு அறுபது வயதுக்கு மேலிருக்கும். தார்ம் இழந்தவர். பார்ப்பதற்கு நோஞ்சானாக இருப்பார்.

கந்த்தர் இவரைப் பற்றி ட்ரேஸிக்குச் சொல்லியிருந்தார்.

"குழந்தைகள் ஆஸ்பத்திரி நிதி என்பதெல்லாம் சும்மா கதை. வசூலாகிற தொகையில் பத்துப் பர்செண்ட்தான் குழந்தைகளுக்குப் போகும். தொண்ணூறு பர்செண்ட் இந்த ஆளின் பைக்குப் போய் விடும்."

தன்னை ஒரு சீமாட்டி என்று சொல்லிக் கொண்டு அந்த விருந்தில் நுழைந்திருந்தாள் ட்ரேஸி.

*"நீங்கள் ரொம்ப நன்றாக நடனமாடுகிறீர்கள் சீமாட்டி," என்றார் மாட்டினி பிரபு.*

*ட்ரேஸி புன்னகை செய்தாள். "தங்களுடன் ஆடுவதால் அப்படி!" என்றாள்.*

*"உங்களை நான் இதுவரையில் சந்தித்தது கிடையாதே? எப்படி?" என்று மாட்டினி பிரபு கேட்டதற்கு -*

*"நான் தென்னமெரிக்காவில் வசித்து வருகிறேன்," என்று விளக்கினாள் ட்ரேஸி. "அதுவும் பெரும்பாலும் காடுகளில் தான் வாசம்."*

*"அடப் பாவமே! ஏன் அப்படி?"*

*"பிரேஸிலில் என் கணவருக்குச் சொந்தமான சில சுரங்கங்கள் இருக்கின்றன."*

*"ஓ! உங்கள் கணவர் இன்று இங்கே வந்திருக்கிறாரா?"*

*"இல்லை. பிஸினஸ் பிரசினை: பிரேஸிலை விட்டு வர முடியவில்லை."*

*"அவர் அதிர்ஷ்டமில்லாதவர். நான் அதிர்ஷ்டம் செய்தவன்." அவர் கரங்கள் ட்ரேஸியின் இடையை இறுக்கின. "நாம் இரண்டு பேரும் சினேகிதர்களாக இருக்கலாம். இல்லையா?"*

*"ஓ! நிச்சயமாய்," என்று மெல்லச் சொன்னாள் ட்ரேஸி.*

*மாட்டினி பிரபுவின் தோளுக்கு மேலாகப் பார்த்தபோது*

*ஜெஃப்பைக் கண்டாள். அழகான பணக்காரியாகத் தோன்றிய இளம் பெண்ணொருத்தியுடன் அவன் நடனம் ஆடிக் கொண்டிருந்தான். அந்தப் பெண் அவனைக் கொஞ்ச மும் பிரிய விருப்பமில்லாதவள் போல் அவன் உடம்போடு உடம்பாய் ஒட்டி இழைந்து ஆடிக் கொண்டிருந்தாள்.*

*அவள் அவனைப் பார்த்த அதே சமயம் அவனும் அவளை கண்டுகொண்டு புன்னகை செய்தான்.*

*'சிரிப்பைப் பார் சிரிப்பை, அயோக்கிய ராஸ்கல்!' ட்ரேஸிக்கு கோபம் பொங்கியது.*

ஜெஃப்பைப் பார்த்ததும் ட்ரேஸிக்கு ஆத்திரம் வந்தது.

சென்ற இரண்டு வாரங்களில் இரண்டு கொள்ளைகளைத் திட்டமிட்டிருந்தாள் ட்ரேஸி. இரண்டையும் ஜெஃப் கெடுத்து விட்டான்.

ஒருமுறை, ஒரு மாளிகையின் உள்ளே வெற்றிகரமாக நுழைந்து பெட்டகத்தையும் திறந்து விட்டாள். ஆனால் அது காலியாக இருந்தது. அவளுக்கு முன்பே ஜெஃப் வந்து காரியத்தை முடித்துக் கொண்டு, போய் விட்டான் என்பது புரிந்தது.

இரண்டாவது இடத்திலும் அதே கதைதான்.

ஒரு குறிப்பிட்ட இல்லத்தைக் குறி வைத்திருந்தாள். அதற்குச் செல்லும் மைதானத்தில் நடந்து கொண்டிருந்த போது விர்ரென்று ஒரு கார் அவளைத் தாண்டிச் சென்றது. அதை ஓட்டிச் சென்றவன் ஜெஃப்! இந்தத் தடவையும் அவளை முந்திக்கொண்டு விட்டான்!

இப்போது மாட்டினி பிரபுவின் மாளிகைக்கும் அவன் வந்திருக்கிறான்! இந்தப் பங்களாவில் அவள் கொள்ளை நடத்தத் திட்டமிட்டிருக்கும்போது!

அந்த இளம் பெண்ணுடன் நடனமாடிய படியே அவளை நெருங்கி வந்தான் ஜெஃப். "வணக்கம் பிரபு அவர்களே," என்றான் மாட்டினி பிரபுவிடம்.

மாட்டினி பிரபு புன்னகை செய்து, "வணக்கம் மிஸ்டர் ஜெஃப்! விருந்துக்கு நீங்கள் வந்ததில் எனக்கு ரொம்ப சந்தோஷம்," என்றார்.

"வராமல் இருப்பேனா!" என்றான் ஜெஃப், தன் கைக்குள் அடங்கியிருக்கும் கவர்ச்சிக் கன்னியை ஆசையுடன் அணைத்தவாறு. "இவள் மிஸ் சாலஸ்," என்று பிரபுவுக்கு அவளை அறிமுகம் செய்து வைத்தான்.

அவளுக்கு வணக்கம் தெரிவித்த மாட்டினி பிரபு, "இவள் லரோஸா சீமாட்டி," என்று ட்ரேஸியை அவனுக்கு அறிமுகம் செய்தார்.

ஜெஃப்பின் புருவங்கள் கேள்விக் குறியாக எழுந்தன. "என்ன சொன்னீர்கள்? சரியாய்க் காதில் விழவில்லை."

"லரோஸா சீமாட்டி என்றார்," என்று ட்ரேஸி அமைதியாகப் பதிலளித்தாள்.

"லரோஸா சீமாட்டி... லரோஸா.... ட்ரேஸியை ஆழமாகப் பார்த்தான் அவன். "கேள்விப்பட்ட பெயராக இருக்கிறதே... ஓ! ஆமாம். உங்கள் கணவரை எனக்குத் தெரியும். அவர் வந்திருக்கிறாரா?"

ட்ரேஸி பல்லைக் கடித்துக் கொண்டு, "அவர் பிரேஸிலில் இருக்கிறார்," என்றாள்.

ஜெஃப் புன்சிரிப்புடன், "அப்படியா?" என்றான். "நாங்கள் இருவரும் சேர்ந்து வேட்டைக்குப் போவது வழக்கம். அதாவது அவருக்கு அந்த விபத்து நேருவதற்கு முன்பு."

மாட்டினி பிரபு, "விபத்தா? என்ன விபத்து?" என்றார்.

பாவம், என்றான் ஜெஃப், போலியான வருத்தத்துடன். "துப்பாக்கியைச் சுத்தம் செய்து கொண்டிருந்தபோது வெடித்து விட்டது. முக்கியமான உறுப்பில் காயம்," என்றவன் ட்ரேஸியின் பக்கம் திரும்பி, "குணமாகி நார்மல் நிலைக்கு வருவார் என்று ஏதாவது நம்பிக்கை இருக்கிறதா?" என்றான்.

"நிச்சயமாய்! நீங்கள் எவ்வளவு நார்மலோ அவ்வளவு நார்மலாக அவர் வெகு சீக்கிரம் குணமடைந்து விடுவார்." ட்ரேஸி பதட்டமில்லாமல் பதிலளித்தாள்.

"கேட்கவே சந்தோஷமாயிருக்கிறது. அவரிடம் போனில் பேசினால் நான் ரொம்ப விசாரித்தேன் என்று சொல்லுங்கள்."

இசை நின்றது. மாட்டினி பிரபு ட்ரேஸியின் கையை இன்னொரு முறை பலமாய் அழுத்தினார். "நான் போய் விருந்தாளிகளை வரவேற்க வேண்டும்... கடமை... நீங்கள் என்னுடன் சேர்ந்து சாப்பிட வேண்டும். மறந்து விடாதீர்கள்."

அவர் அகன்றதும் ஜெஃப் தன்னுடன் வந்திருந்த பெண்ணிடம், "எனக்கு ஒரே தலைவலி, கண்ணே. மாத்திரை ஏதாவது கிடைக்கிறதா பாரேன்," என்று கொஞ்சலாகச் சொன்னான்.

"அடடா!" அவள் செல்லமாக அவன் நெற்றியைத் தடவி விட்டாள். "நான் மாத்திரை வாங்கி வருகிறேன்."

அவள் ஆடி அசைந்து செல்வதைப் பார்த்தாள் ட்ரேஸி. ஜெஃப்பிடம் திரும்பி, "வியாதிக்காரி மாதிரி இருக்கிறாளே! அவளுடன் பழக உனக்குப் பயமாயில்லையா?"

"எத்தனை அழகான பெண்! இல்லை?" என்றான் அவன். "அதிருக்கட்டும். தாங்கள் எப்படி இருக்கிறீர்கள் சீமாட்டி?"

சுற்றியுள்ளவர்கள் தன் முகத்தில் பொங்கும் கோபத்தைக் கண்டு கொண்டுவிடக் கூடாதென்று வலுக்கட்டாயமாகச் சிரித்தாள் ட்ரேஸி. தாழ்ந்த குரலில், "நான் எப்படி இருந்தால் உனக்கென்ன? என்னைப் பற்றி நீ கவலைப்படத் தேவை யில்லை," என்றாள்.

"சே, சே! அப்படிச் சொல்லலாமா? உண்மையிலேயே உன்னைப் பற்றி எனக்குக் கவலை ஏற்படுகிறது. நட்பு முறையில் உனக்கு ஓர் எச்சரிக்கை சொல்ல விரும்புகிறேன். இந்த மாளிகையில் கொள்ளை கிள்ளை நடத்த நினைக்காதே!"

"ஏன்? நீ முதலில் செய்யலாம் என்று திட்டமா?"

ஜெஃப் அவள் கையைப் பற்றி அந்த நடன மண்டபத்தின் இன்னொரு கோடிக்கு அழைத்துச் சென்றான். அங்கே ஒருவன் பியானோவைக் கொலை செய்து கொண்டிருந்தான். அதன் இரைச்சலில் தங்கள் பேச்சு வேறு யாருக்கும் கேட்காது என்று நிச்சயப்படுத்திக் கொண்டான் ஜெஃப்.

"ட்ரேஸி, நீ சொன்னது உண்மைதான். இந்த மாளிகையில் சின்னதாய் ஒரு வேலை செய்ய நான் திட்ட மிட்டிருந்தது வாஸ்தவம். ஆனால் அதைக் கை விட்டு விட்டேன். காரணம் ரொம்ப ஆபத்தான, அபாயமான இடம் இது!"

"அப்படியா?" என்றாள் ட்ரேஸி. ஜெஃப்பின் பேச்சில் அவளுக்குச் சுவாரஸ்யம் ஏற்பட்டிருந்தது. பொய் பேசிப் பித்தலாட்டமாக நடிக்காமல், தன்னை உண்மையாக அறிந்தவனுடன் உண்மையாகப் பேசுவது குறித்து அவளுக்கு ஆறதலாக இருந்தது.

"நான் சொல்வதைக் கவனமாகக் கேள் ட்ரேஸி," என்றான் அவன் சீரியஸான குரலில். "இங்கே எந்த வேலையிலும் இறங்கவே இறங்காதே. தோட்டத்தில் நுழைந்தாலே நீ உயிரோடு திரும்ப முடியாது. இரவு வேளைகளில் ஒரு பயங்கரமான நாயை அவிழ்த்து விடுகிறார்கள். அது ஆளைக் கடித்தே கொன்றுவிடும்."

ட்ரேஸி கவனமாகக் கேட்கலானாள். இந்தப் பங்களாவில் கொள்ளை நடத்த ஜெஃப் திட்டமிட்டிருக் கிறான் என்று அவளுக்குப் புரிந்தது.

"இன்னும் கேள். ஒவ்வொரு ஜன்னலிலும் ஒவ்வொரு கதவிலும் மின்சார ஒயர் இணைத்திருக்கிறார்கள். அதில் அலாரம் இருக்கிறது. தொட்டதும் போலீஸ் ஸ்டேஷனில் மணி அடிக்கும். எப்படியோ கதவைத் தாண்டி உள்ளே நுழைந்து விட்டாய் என்று வைத்துக் கொள். மாளிகைக்குள் எங்கு பார்த்தாலும் குறுக்கும் நெடுக்குமாக ஒளிக் கதிர்கள் பாய்ந்து கொண்டிருக்கின்றன. கண்ணுக்குத் தெரியாத இன்ஃப்ராரெட் ஒளிக்கதிர்கள்."

"இதெல்லாம் எனக்குத் தெரியும்," என்றாள் ட்ரேஸி சற்று ஜம்பமாக.

"உனக்கு இன்னொன்று தெரியுமா? நீ நுழையும்போது அந்த ஒளிக்கதிர்கள் ஒன்றும் செய்யாது. ஆனால் வெளியே

வரும்போது அடிக்கும். அந்தக் கதிர்களை நிறுத்தாமல் நீ உள்ளே நுழைய வழியே கிடையாது."

அந்த விஷயம் அவளுக்குத் தெரியாது. இவனுக்கு மட்டும் எப்படித் தெரிந்தது என்று ஆச்சரியப்பட்டாள்.

"இதையெல்லாம் எதற்கு என்னிடம் சொல்கிறாய்?"

அவன் மெல்லச் சிரித்தான். அந்தச் சிரிப்பில் அவன் மேலும் அழகாக இருப்பதாக ட்ரேஸிக்குத் தோன்றியது.

"என் அருமைச் சீமாட்டியே, நீ சிறைக்குப் போய்விடக் கூடாது என்பதால் சொல்கிறேன். நீ வெளியே இருக்க வேண்டும். நீயும் நானும் ரொம்ப நெருங்கிய சினேகிதர்களாக இருக்கலாம் பார்!"

"அது நடவாத காரியம்," என்றாள் ட்ரேஸி. ஜெஃப்பின் 'காதலி' வந்து கொண்டிருப்பது தெரிந்தது. "அதோ உன் சீக்குக் காதலி வருகிறாள். போய்க் கூத்தடி!"

ட்ரேஸி நகர்ந்தாள். அந்தப் பெண் மாத்திரையை ஜெஃப்பிடம் கொடுத்து, "கூடவே கொஞ்சம் ஷாம்பேய்னும் கொண்டு வந்திருக்கிறேன், கண்ணா! இப்போ எப்படி இருக்கிறது தலைவலி?" என்று கொஞ்சுவது காதில் விழுந்தது.

விருந்து மிகப் பிரமாதமாக இருந்தது. காப்பியும் பிராந்தியும் கடைசியாகப் பரிமாறப்பட்டன. ஆண்களுக் கெனச் சுருட்டும் பெண்களுக்கு விலையுயர்ந்த ஸென்ட் புட்டிகளும் வழங்கினார்கள்.

விருந்து முடிந்ததும் மாட்டினி பிரபு ட்ரேஸியிடம் வந்தார். "என்னுடைய ஓவியக் கூடத்தைப் பார்க்க விரும்புவ தாகச் சொன்னீர்களே? இப்போது வர முடியுமா?" என்றார்.

"சந்தோஷமாய்," என்றாள் அவள்.

ஓவியங்கள் நிறைந்த மண்டபத்துக்கு அவளை அழைத்துச் சென்றார் மாட்னி பிரபு.

அப்படியொரு காட்சிக் கூடத்தை அவள் பார்த்ததே யில்லை. உலகப் புகழ் பெற்ற ஓவியர்களின் அற்புதப் படைப்புக்கள் வரிசை வரிசையாக வைக்கப்பட்டிருந்தன.

எவராலும் மதிப்புக் கூற முடியாது! அத்தனையும் அவ்வளவு விலை உயர்ந்தவை!

ஆச்சரியத்தால் கண்கள் விரிய ஓவியங்களின் அழகை ரசித்துப் பார்த்தாள் ட்ரேஸி.

"இவைகளை ரொம்ப ரொம்ப ஜாக்கிரதையாகப் பாதுகாக்க வேண்டியிருக்குமே? எப்படி உங்களால் முடிகிறது?" என்றாள்.

மாட்டினி பிரபுவின் உதட்டில் புன்சிரிப்புத் தவழ்ந்தது. "இந்தப் பொக்கிஷங்களைக் களவாட மூன்று முறை முயற்சி நடந்திருக்கிறது. ஒருவனை நாய் கடித்துக் கொன்று விட்டது. இன்னொருவனுக்குக் கை கால் முடக்கு ஏற்பட்டு விட்டது. மூன்றாவது ஆள் ஆயுள் தண்டனை பெற்றுச் சிறையில் அடைபட்டிருக்கிறான். காற்றுக் கூட நுழைய முடியாத கோட்டை இது, சீமாட்டி!"

"அப்பாடா! இப்பத்தான் மனசுக்கு நிம்மதியாக இருக்கிறது," என்றாள் ட்ரேஸி.

## 57

தன்னுடைய விலை மதிக்க முடியாத ஓவியங்களை யாரும் திருடிச் செல்ல முடியாது என்று மாடினி பிரபு ட்ரேஸியிடம் சொல்லிக் கொண்டிருந்த சமயம் -

வெளியே வெள்ளமாய்ப் பாய்ந்தது வெளிச்சம்.

"வாண வேடிக்கைகள் நடக்கிறது. பிரமாதமாயிருக்கும், வாருங்கள் பார்க்கலாம்," என்று ட்ரேஸியின் மிருதுவான கைகளை மெல்லப் பற்றி ஓவியக் கூடத்துக்கு வெளியே அழைத்துச் சென்றார் மாட்டினி பிரபு. "நாளைக் காலை நான் ட்யூவில் என்ற ஊருக்குப் போகிறேன். அழகான கடற்கரை நகரம் அது. அங்கே கடற்கரையை ஒட்டினாற்போல் எனக்கு ஒரு பங்களா இருக்கிறது. சனி ஞாயிறில் அங்கே வரும்படி

என் நண்பர்கள் சிலரை அழைத்திருக்கிறேன். நீங்களும் வாருங்கள். ரொம்ப சந்தோஷமாய்ப் பொழுது கழியும்."

"எனக்கும் ரொம்ப சந்தோஷமாய்த்தான் இருக்கும்," என்றாள் ட்ரேஸி வருத்தம் தொனிக்கும் குரலில். "ஆனால் என் கணவருக்கு நான் இல்லாமல் அங்கே இருப்புக் கொள்ள வில்லையாம். உடனே ஊருக்குத் திரும்பி வரும்படி சொல்கிறார்."

வாண வேடிக்கைகள் ஏறத்தாழ ஒரு மணி நேரத்திற்கு நடந்தன. எல்லாரும் அதில் கவனமாக இருந்தார்கள். எனவே அந்த நேரத்தை ட்ரேஸி பயன்படுத்திக் கொண்டு, மாளி கையை நோட்ட மிட்டாள்.

ஜெஃப் சொன்னது உண்மை தான்.

இங்கே கொள்ளையடிப்பது ரொம்ப கஷ்டமான காரியம்.

ட்ரேஸி அதை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டாள்.

விலையுயர்ந்த ஓவியங்கள் மட்டுமல்ல, இருபது லட்சம் டாலருக்கு மேல் மதிப்புள்ள நகைகள் மாட்டினி பிரபுவின் படுக்கையறையில் இருப்பதை அவள் அறிவாள்.

'மாட்டினி பிரபுவின் மாளிகை ஒரு தங்கச்சுரங்கம்' என்று கந்த்தர் அவளிடம் சொல்லியிருந்தார். "ஆனால் ஏகப்பட்ட கட்டுக் காவல் உண்டு. யாரும் கண்டுபிடிக்க முடியாதபடி ப்ளான் போட்டுக் கொள். இல்லாவிட்டால் இறங்காதே."

'நான் ப்ளான் போட்டாயிற்று' என்று தனக்குள் சொல்லிக் கெண்டாள் ட்ரேஸி. 'ஆனால் யாரும் கண்டு பிடிக்க முடியாத பிளானா என்பது நாளைக்குத்தான் தெரியும்.'

அடுத்த நாள் இரவு.

வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. காற்றுச் சில்லென்று வீசியது.

மாட்டினி பிரபு வெளியூர் போய் விட்டார். அவருடைய மாளிகைச் சுவர்கள் ஓங்கி உயர்ந்து கருமையாகக் காட்சி தந்தன.

இருட்டில் நின்றிருந்தாள் ட்ரேஸி.

கறுப்பு ஓவர்கோட்டும், கையுறைகளும் அணிந்து, தோளில் ஒரு பை மாட்டிக் கொண்டிருந்தாள்.

அந்தச் சுவர்களைக் காணுகையில் தான் வாசம் செய்த சிறைச்சாலையின் மதில்கள் அவளுக்கு நினைவு வந்தன. அவளையும் அறியாமல் அவள் உடல் ஒருமுறை நடுங்கியது.

ஒரு வேன் வாடகைக்கு எடுத்து, தானே ஓட்டி வந்திருந் தாள். அதை மாளிகையின் பின்புறச் சுவரை ஒட்டினாற்போல் நிறுத்தினாள்.

சுவரின் மறுபக்கத்திலிருந்து தாழ்வான, ஆனால் கொடூரமான உறுமல் கேட்டது. டாபர்மேன் நாயின் உறுமல். கொஞ்சம் கொஞ்சமாக அந்த உறுமல் வலுத்துக் குரைப்பாக மாறியது. மேலே பாய்வதற்குத் தயாராக அது எம்பி எம்பிக் குதிப்பதை ட்ரேஸியால் ஊகிக்க முடிந்தது. அதனுடைய பெருத்த உருவமும், பயங்கரமான மரண பற்களும் அவள் மனக்கண் முன் தோன்றின.

வேனுக்குள் ஓர் உருவம் உட்கார்ந்திருந்தது. அதனிடம் ட்ரேஸி மெல்லிய குரலில், 'ஆகட்டும்,' என்று கட்டளை யிட்டாள்.

ஒல்லியான நடுத்தர வயது ஆள் ஒருவன் வெளிப் பட்டான். அவனும் கறுப்பு உடை அணிந்திருந்தான். அவன் முதுகில் ஒரு கோணிப்பை இருந்தது.

அவன் ஒரு டாபர்மேன் நாயை அழைத்து வந்திருந்தான். பெண் நாய். அது சரியான வேட்கையில் இருக்கிறது என்பது அதன் குரைப்பில் தெரிந்தது.

அந்தப் பெண் நாயின் குரைப்பைக் கேட்டதுமே மதில் சுவருக்கு மறுபக்கத்தில் இருந்த ஆண் நாய் குரைத்தது. வரவர ஆசை நிறைந்த ஊளையாக மாறிற்று.

உடன் வந்த ஆளின் துணையுடன் தன் நாயை வேனின் கூரை மீது தூக்கி விட்டாள் ட்ரேஸி. மதிலின் உயரத்துக்குச் சரியாக இருந்தது வேனின் கூரை.

கிசுகிசுத்தக் குரலில் ட்ரேஸி 'ஒன், டூ, த்ரீ!' என்றாள்.

'த்ரீ' என்றதும் அந்தப் பெண் நாயை ஒரு வீசு வீசிச் சுவருக்கு அந்தண்டை எறிந்தார்கள். மறுபுறம் உள்ள எஸ்டேட் தோட்டத்தில் போய் அது விழுந்தது. லொள் லொள் என்று இரண்டு குரைப்பு - பிறகு இரண்டு நாய்களும் ஒன்றையொன்று மோப்பம் பிடிக்கும் முனகல் சத்தம் இரண்டு நாய்களும் ஓடுகிற ஓசை.

அவ்வளவுதான் எல்லாச் சத்தங்களும் ஓய்ந்துவிட்டன. நிசப்தம்.

ட்ரேஸி தன் கூட்டாளியை நோக்கித் திரும்பி "போகலாம்," என்றாள்.

அவன் தலையாட்டினான். அவன் பெயர் ஜீன். பக்கத்து ஊரில் அவனைச் சினேகம் பிடித்திருந்தாள் ட்ரேஸி. வாழ்க்கையில் பெரும் பகுதியைச் சிறையில் கழித்தவன் அவன். புத்திசாலி என்று சொல்ல முடியாது. ஆனால் எப்படிப்பட்ட பூட்டானாலும் சரி, எப்படிப்பட்ட அலாரமானாலும் சரி சமாளிப்பதில் மேதை.

இன்றைய வேலைக்கு அவன் தான் ஏற்றவன் என்று ட்ரேஸி அழைத்து வந்திருந்தாள்.

வேனின் கூரையிலிருந்து மதில் சுவருக்குத் தாவினாள் ட்ரேஸி. பிறகு ஒரு நூலேணியைப் பிரித்து, அதன் ஒரு முனையைச் சுவரில் பொருத்தினாள்.

அதன் வழியே இருவரும் மறு பக்கத்தில் புல்வெளியில் இறங்கினார்கள்.

'நேற்று பார்த்த மாளிகையா இது?' என்று ட்ரேஸி ஆச்சரியப்பட்டாள். முந்தின தினம் எவ்வளவு விளக்குகள்! எத்தனை பிரகாசம்! கலகலவென்று சிரித்துக் கொண்டு

எத்தனை விருந்தாளிகள்! இப்போது எதுவும் இல்லை. ஒரே அந்தகாரம். நிசப்தம்.

பயந்து பயந்து பார்த்தவண்ணம் ட்ரேஸியைப் பின் தொடாந்து நடந்தான் ஜீன். எங்கே அந்த நாய்கள் திடீரென்று மேலே விழுந்து பிடுங்கி விடுமோ என்று அவனுக்குப் பயம்.

மாளிகைக் கட்டிடத்தைத் தழுவிக் கொண்டு ஏராளமான கொடிகள் படர்ந்திருந்தன. நூற்றுக்கணக்கான வருடங்களாக வளர்ந்து உரமேறித் தடித்திருந்த கொடிகள். கட்டிடத்தின் உச்சி வரை வளர்ந்திருந்தன. நேற்று மாலை, சும்மா இழுக்கிற மாதிரி இழுத்துப் பார்த்து வலுவானவை என்று தெரிந்து வைத்திருந்தாள் ட்ரேஸி.

ஒரு கொடியில் ஏறித் தொங்கிப் பார்த்தாள். அவள் கனத்தைத் தாங்குவதாகவே இருந்தது. பிடித்துக் கொண்டு ஏறினாள். அதே சமயம் கீழே தோட்டத்தையும் பார்த்துக் கொண்டாள் நாய்கள் வருகிறதா என்று. இரண்டும் வெகு நேரம் கொஞ்சிக் குலாவ வேண்டும் என்று கடவுளை வேண்டிக் கொண்டாள்.

உச்சியை அடைந்தவள், ஜீனை வரும்படி சைகை காட்டினாள். அவனும் மெல்ல ஏறி வந்தான்.

ஊசி முனைபோல் வெளிச்சம் தரும் டார்ச் லைட்டை அடித்துப் பார்த்தாள். மொட்டை மாடித்தளத்தில் ஒரு கண்ணாடிப் பலகை பதிக்கப்பட்டிருந்தது. கீழ்ப்புறத்தில் பலமாகத் தாழ்ப்பாள் போட்டு இணைக்கப்பட்டிருந்தது அது.

ஜீன், முதுகிலிருந்த கோணிப்பைக்குள் கைவிட்டு, கண்ணாடி அறுக்கும் அரம் ஒன்றை எடுத்தான். ஒரே நிமிடம் - கண்ணாடி அகற்றப்பட்டு விட்டது.

ட்ரேஸி குனிந்து பார்த்தாள். ஏராளமான அலாரம் ஒயர்கள், சிலந்தி வலை மாதிரி பின்னப்பட்டு இறங்கும் வழியை மறித்திருந்தன.

"உன்னால் சமாளிக்க முடியுமா ஜீன்?" என்று கிசு கிசுத்தாள்.

"கவலையே இல்லை," என்ற ஜீன் மறுபடியும் கோணிப் பைக்குள் கையை விட்டு ஒரடி நீளமுள்ள கம்பியொன்றை வெளியெடுத்தான். அதன் இரு முனைகளிலும் இரண்டு கொக்கி இருந்தது. தடவித் தடவி அலாரம் ஒயரின் ஆரம்பம் எங்கே இருக்கிறதென்று கண்டு பிடித்தான். ஒரு முனையை அதனுள் இணைத்து விட்டு, கட்டிங் ப்ளையரினால் ஒயரைத் துண்டித்தான்.

மூச்சைப் பிடித்துக் கொண்டு பார்த்தவாறிருந்தாள் ட்ரேஸி - எந்த நிமிடமும் அலாரம் ஓசை எழுப்பப் போகிறது என்று.

எந்த ஓசையும் வரவில்லை.

ஜீன் அவளை நிமிர்ந்து பார்த்து இளித்து, "வேலை முடிஞ்சிட்டுது," என்றான்.

'இல்லை' என்று நினைத்துக் கொண்டாள் ட்ரேஸி. வேலை முடியவில்லை. இனிமேல்தான் ஆரம்பமாகப் போகிறது.

கண்ணாடியைப் பெயர்த்தெடுத்த துவாரத்தின் வழியே இன்னொரு நூலேணியை இறக்கினாள். அதன் வழியே பத்திரமாக இருவரும் இறங்கினார்கள்.

இப்போது அவர்கள் இருந்த இடம் : ஹாலின் பரண்.

அடுத்துச் செய்ய வேண்டியதை நினைக்கையில் ட்ரேஸி யின் உள்ளம் படபடத்தது.

சிவப்பு லென்ஸ் போட்ட இரண்டு மூக்குக் கண்ணாடி களை எடுத்தாள். ஒன்றைத் தான் அணிந்து கொண்டு, மற்றதை ஜீனிடம் தந்து, "மாட்டிக் கொள்," என்றாள்.

மாட்டிக் கொண்டு பார்த்த போது

வெற்றுக் கண்ணுக்குத் தென்படாத இன்ஃப்ராரெட் ஒளிக் கதிர்கள் வீடெங்கும் குறுக்கும் நெடுக்குமாகச் செல்வது தெரிந்தது.

*நீளமாக, ஆழமாக மூச்சு விட்டுத் தன்னை நிதானப் படுத்திக் கொண்டாள் ட்ரேஸி.*

*வலுக் கட்டாயமாக ஒரு தெளிவிற்குக் கொண்டு வந்தாள் மனசை.*

*ஜெஃப் சொன்னது ஞாபகம் வந்தது.*

*இந்த ஒளிக் கதிர்கள் நுழையும் போது எதுவும் நேராது. ஆனால் ஒளிக் கதிருக்கு வெளிப்புறம் வரும்போது, சீதோஷ்ண மாறுதல் ஒளிக் கதிர்களைப் பாதிக்கும். உடனே அலாரம் ஓசையெழுப்பும். திருடன் இரும்புப் பெட்டகத்தைத் திறக்குமுன்பு அலாரம் அடித்துவிடும். போலீஸ் வந்துவிடும். அவனால் எதுவும் செய்ய முடியாது.*

*பெட்டகத்தைத் திறந்து முடிக்கும் வரை அலாரம் அடிக்கக் கூடாது. அதற்கு என்ன செய்யலாம்?*

*நேற்று ராத்திரி பூரா யோசித்து, இன்று காலை ஆறரை மணிக்குத்தான் ஒரு வழி தோன்றியது ட்ரேஸிக்கு.*

*கொள்ளையடிப்பது முடியக் கூடிய காரியம் தான் என்று புலப்பட்ட பிறகு, ட்ரேஸிக்கு உற்சாகம் ஏற்பட்டது. இம்மாதிரி சந்தர்ப்பத்தில் வழக்கமாக உண்டாகும் பரபரப்பு இப்போதும் அவள் உள்ளத்தில் ஊற்றெடுத்தது.*

*சிவப்பு மூக்குக் கண்ணாடியை மாட்டிக் கொண்டு பார்த்தபோது, அந்த இடம் மொத்தமும் ஏதோ ஒரு பிசாசு உலகம் போலச் செக்கச் செவேலென்று தெரிந்தது.*

*பரணின் கதவுக்கு எதிரே சிவப்பு ஒளிக் கதிரொன்று பாய்வதைப் பார்த்தாள். வெற்றுக் கண் மூலம் பார்த்தால் அது தெரிந்திருக்காது.*

*"அந்த ஒளிக் கதிருக்குக் குறுக்கே போகாதே! அடியாலே போ! ஜாக்கிரதை!" என்றாள் ஜீனிடம்.*

*குனிந்து தவழ்ந்து இருவரும் ஒளிக் கதிரைக் கடந்தார்கள்.*

*டார்ச் விளக்கின் நூலிழை வெளிச்சத்தில் ட்ரேஸி முன்னே நடக்க, ஜீன் பின் தொடர்ந்தான்.*

மாட்டினி பிரபுவின் படுக்கையறைக்குச் செல்லும் வழியில் -

இன்னோர் ஒளிக் கதிர் தென்பட்டது. இம்முறை அது தாழ்வாக இருந்தது. அதிலும் குறுக்கிடாமல் ஜாக்கிரதையாக எம்பிக் குதித்து அதைத் தாண்டினார்கள்.

படுக்கை அறை.

சுவர்களின் மீது டார்ச்சை அடித்துப் பார்த்தாள். மிக அற்புதமான, ஒப்பற்ற ஓவியங்கள் நான்கு புறமும் சுவர்களை அலங்கரித்தன.

'லியனார்டோ டாவின்ஸியின் ஓவியம் எடுத்து வா' என்று கந்த்தர் சொல்லியிருந்தார். 'அப்புறம் இருக்கவே இருக்கிறது ஆபரணங்கள்.'

அந்த ஓவியத்தைச் சுவரிலிருந்து கழற்றித் தரையில் வைத்து, சட்டங்களை அகற்றினாள். ஓவியத்தை மட்டும் ஜாக்கிரதையாகச் சுருட்டி, தோள் பைக்குள் வைத்துக் கொண்டாள்.

அடுத்து, இரும்புப் பெட்டகம்.

## 58

இரும்புப் பெட்டகத்தின் முன்பு ஒளிக்கதிர்கள் ஓடுவதைக் கண்டார்கள் ட்ரேஸியும் அவள் அழைத்து வந்திருந்த ஜீனும். பிரத்தியேக மூக்குக் கண்ணாடியில் அவை நன்கு தெரிந்தன.

திகைத்தபடி பார்த்தான் ஜீன். "எப்படிம்மா அங்கே போக முடியும்? இதுவரை செய்த மாதிரி இந்தக் கதிர்களைத் தாண்டிக் குதித்துப் போக முடியாது. தவழ்ந்து குனிந்தும் போக முடியாதே!"

"இதோ பார், நான் சொல்லித் தருகிறபடி நீ செய்ய வேண்டும்," என்றாள் ட்ரேஸி. சொல்லிவிட்டு அவனுக்குப்

பின்புறம் சென்றாள். அவன் இடுப்பைச் சுற்றிக் கைகளை இறுக்கி அணைத்துக் கட்டிக் கொண்டாள். "இப்ப எனக்கு இணையாக நட. முதலில் இடது காலை எடுத்து வை."

இரண்டு பேருமாகச் சேர்ந்து ஒளிக் கதிர்களை நோக்கி ஓரடி எடுத்து வைத்தார்கள். பிறகு அடுத்த அடி.

ஜீன் திகிலுடன் பெருமூச்சு விட்டான். "என்னம்மா. எப்படியும் அந்தக் கதிருக்குள்ளேதானே போகப் போகி றோம்! அலாரம் அடிக்குமே!"

"சொன்னதைச் செய்!"

ஒளிக்கதிர்கள் குவிகின்ற நட்டநடு இடத்தை அவர்கள் இணைந்து நடந்து அடைந்தார்கள்.

ட்ரேஸி நின்றாள். "நான் சொல்வதைக் கவனமாகக் கேள் இப்ப நீ நேரே பெட்டகத்திடம் போகிறாய்."

"ஆனால் அந்த ஒளிக்கதிர்கள் -

"அதைப் பற்றிக் கவலைபடாதே. ஒன்றும் பண்ணாது," என்றாள் ட்ரேஸி அழுத்தமாக.

கொஞ்சம் தயங்கிவிட்டு ஜீன் ஒளிக் கதிரிலிருந்து தாண்டி அப்பால் சென்றான்.

எல்லாம் அமைதியாகவே இருந்தது. நின்று திரும்பி ட்ரேஸியைப் பயம் நிறைந்த கண்களால் பார்த்தான்.

அவள் ஆடாமல் அசையாமல் அந்த ஒளிக் கதிரின் நடுவே நின்றிருந்தாள். அவளுடைய தேகத்தின் வெப்பம், ஒளிக்கதிர்களில் ஏற்படக் கூடிய மாற்றத்தைத் தடுத்திருந்தது. மாற்றம் ஏற்படாததால் அலாரம் அடிக்கவில்லை.

ஜீன் பெட்டகத்தை நோக்கி நடந்தான்.

ட்ரேஸி ஆணி அடித்த மாதிரி நின்றாள். கொஞ்சம் அசைந்தாலும் அலாரம் அடிக்க ஆரம்பித்துவிடும்.

ஜீன் தன் மூட்டைகளை பிரித்துச் சில ஆயுதங்களை எடுப்பதையும் பெட்டகத்தின் டயலை குடைவதையும் ஓரக்

கண்ணால் பார்க்க முடிந்தது அவளால். மூச்சை நிதானமாக இழுத்து வெளியே விட்டுக் கொண்டு அங்குலமும் அசையா மல் நின்றாள். கால ஓட்டமே நின்றுவிட்டமாதிரி இருந்தது. ஜீன் இன்னும் 'வேலை' செய்து கொண்டிருந்தான். ட்ரேஸி யின் கணுக்கால் வலிக்கத் தொடங்கியது. சிறிது சிறிதாக வலி அதிகரித்தது. வலிப்பு வந்து விடும் போலிருந்தது. என்றாலும் பல்லைக் கடித்துக் கொண்டு நின்றாள். அசையவே அச்சமாக இருந்தது.

"இன்னும் எத்தனை நேரமாகும்?" என்று கிசுகிசுத்தாள்.

"பத்துப் பதினைந்து நிமிடத்தில்."

ஜென்ம ஜென்மாந்தரமாக இப்படியே நின்று கொண்டிருக்கிற மாதிரி இருந்தது ட்ரேஸிக்கு. இடது கால் மொத்தமும் மரத்துவிட்டது. வேதனை தாங்காமல் கூச்சலிட வேண்டும் போலிருந்தது. ஆனாலும் கூட, உறைந்து போன வள் போல் இம்மியும் அசையாமல் நின்றிருந்தாள்.

க்ளிக் என்ற சத்தம்!

பெட்டகம் திறந்து விட்டது.

"எப்படி நம்ம வேலை?" என்று பெருமிதத்துடன் கேட்டான் ஜீன். "பெட்டகத்தில் இருப்பது மொத்தத்தையும் சுருட்டி விடட்டுமா?"

"தஸ்தாவேஜுகள் வேண்டாம். நகைகள் மட்டும் எடு. ரொக்கப் பணம் என்ன இருந்தாலும் எடுத்துக்க. அது உனக்கு."

"ரொம்ப சந்தோஷம்!" என்றான் அவன்.

பெட்டகத்தை அவன் உண்டு இல்லையென்று சுரண்டும் ஓசை கேட்டது. சில நிமிடங்களில் அவன் அவளை நோக்கி வந்தான்.

"எப்படியோ இதவரை வேலை முடிஞ்சிட்டுது. ஆனால் எப்படி வெளியே போகப் போகிறோம்? இந்த ஒளிக் கதிர் -"

"சொல்கிறபடி செய். என் முன்னால் வந்து நில்."

அவன் அதன்படி செய்தான். ட்ரேஸி மூச்சைப் பிடித்துக்கொண்டு கவனித்தாள் ஒன்றும் நேரவில்லை. "இப்ப ரொம்ப மெதுவாய் இந்த அறையை விட்டு நாம் வெளியேறப் போகிறோம்."

"அறையைவிட்டு வெளியேறும்போது தானே அலாரம் மணி அடிக்கும்? அப்புறம்?" ஜீனின் பெரிய கண்ணாடிக்குப் பின்னால் அவனுடைய அச்சம் நிறைந்த விழிகள் பள பளத்தன.

"அப்புறம் ஒரே ஓட்டம் தான்," என்றாள் ட்ரேஸி.

அங்குலம் அங்குலமாக அவர்கள் நகர்ந்து அந்த ஒளிக் கதிர்களின் ஊடாக நடந்து, வாசல்புறத்துத் திரைச் சீலையை அடைந்தார்கள். ஒளிக்கதிர்கள் ஆரம்பமாகும் இடம் அது தான். ட்ரேஸி தீர்க்கமாக மூச்சு விட்டாள். "ரைட் என்று நான் சொன்னதும் நானும் நீயும் ஓட்டம் பிடிக்க வேண்டும்! எப்படி வந்தோமோ அதே வழி!"

ஜீன் மிடறு விழுங்கி, தலையசைத்தான். அவன் தேகம் நடுங்குவதை ட்ரேஸியினால் உணர முடிந்தது.

"ரைட்!"

ஒரே பாய்ச்சலில் கதவைத் தாண்டினாள். பின்னாலேயே ஜீன்.

ஒளிக்கதிரை அவர்கள் தாண்டிய கணமே அலாரம் அடிக்கத் தொடங்கியது.

வந்தது போலவே -

ட்ரேஸி பரணுக்குத் தாவினாள். நூலேணி வழியாக மொட்டை மாடிக்கு ஏறினாள். அதன் தளத்தில் மின்னலென ஓடி, கொடிகளைப் பிடித்துக் கொண்டு தடதடவென்று வெளியே இறங்கினாள். தோட்டத்தில் ஓட்டம் - மதில் சுவர் அங்கே இரண்டாவது நூலேணி வேனில் கூரைக்குத் தாவினாள் - இறங்கினாள் வேனுக்குள் பாய்ந்து கிளப்பினாள் ஜீன் ஓடி வந்து சேர்ந்து கொண்டான்.

காதைச் செவிடுபடுத்துகிற மாதிரி அலாரம் சத்தமிட்டு கொண்டேயிருந்தது.

வேன் அந்தத் தெருவை கடந்தபோது, மரங்களடர்ந்த ஓர் இடத்தில் ஒரு பெரிய கார் நிற்பதைக் கண்டாள் ட்ரேஸி. வேனின் ஹெட் லைட் வெளிச்சம் ஒரு கணம் அந்த காரினுள் பாய -

டிரைவர் சீட்டில் உட்கார்ந்திருப்பது ஜெஃப் என்று கண்டாள் அவனுக்கருகே ஒரு டாபர்மேன் நாய் இருந்தது.

கண்ணிமைக்கும் நேரத்தில் அவள் புரிந்து கொண்டாள்.

இவள் என்ன திட்டத்துடன் வந்திருந்தாளோ, அதே திட்டத்துடன், அதே கொள்ளைக்காக ஜெஃபும் வந்திருக்கிறான்! ஆனால் இவள் முந்திக் கொண்டு விட்டாள்!

சிரிப்புப் பொத்துக்கொண்டு வந்தது ட்ரேஸிக்கு. தன் உள்ளங்கையில் ஒரு முத்தம் பதித்து அவனுக்கு ஒரு ஃப்ளையிங் கிஸ் வீசினாள். வேன் நிற்காமல் பறந்தது.

தூரத்தில் போலீஸ் வண்டியின் ஊளை கேட்டது. மாடினி பிரபுவின் மாளிகை அலாரம் கேட்டுப் போலீசார் வந்து கொண்டிருக்கிறார்கள், பாவம்!

பிரான்ஸ் நாட்டின் தென் மேற்குக் கோடியில் ஒரு பழைய பெரிய ஓட்டல். அங்கே ஜூலை முதல் செப்டம்பர் வரை ஐரோப்பிய சீமான்களும் சீமாட்டிகளும் சீசனுக்காக வந்து குழுமுவது வழக்கம்.

அது ஓர் ஆகஸ்டு பிற்பகல்.

ஒயிலும் ஒய்யாரமும் கொண்ட மார்கரெட் சீமாட்டி உள்ளே நுழைந்தபோது அவளுடைய மகத்தான அழகில் ஓட்டல் மொத்தமும் கிறங்கிப் போயிற்று.

வரவேற்புச் சிப்பந்தியிடம் தன் அறையின் சாவியைப் பெற்றுக் கொண்டு அவள் வெகு கம்பீரமாக லிஃப்டை நோக்கி நடந்தபோது அவ்வளவு பேரும் மயங்கினார்கள்.

மூக்குக் கண்ணாடியும் கசங்கிய உடையுமாக இருந்த ஒருவர் சட்டென எழுந்தார். வேகமாக நடந்தவர் சீமாட்டியின் மீது இடித்துக் கொண்டார். அதில் அவள் கையிலிருந்த பர்ஸ் கீழே விழுந்தது.

"அடடா! ரொம்ப ஸாரி," என்று சொன்னவர் குனிந்து பர்ஸை எடுத்துக் கொடுத்தார்.

பரவாயில்லை என்று சொல்வது போல அவரைப் பெரிய மனுஷித்தனமாக ஒரு பார்வை பார்த்துத் தலையாட்டி விட்டு மேலே நடந்தாள் மார்கரெட் சீமாட்டி.

மூன்றாவது மாடியில் 312ஆம் அறையை அடைந்தாள்.

ஆடம்பரமான அறை அது. வெளியே நகரமும் கடலும் அற்புதமாகக் காட்சி தந்தன.

ட்ரேஸி மார்கரெட் சீமாட்டி கதவை உட்புறம் சாத்திக் கொண்டாள். போட்டுக் கொண்டிருந்த விக்கைக் கழற்றி வைத்துவிட்டு, தலையை அழுந்த நீவிக் கொண்டாள். 'இதுபேன்ற சீமாட்டி வேடங்கள் எனக்குப் பொருத்தமாய்த் தான் அமைகின்றன!'

தன்னைத் தானே பாராட்டிக் கொண்டாள்.

இதற்காக எவ்வளவு புத்தகங்கள் படித்திருப்பாள் அவள்! ஐரோப்பிய பிரபு வம்சங்களைப் பற்றிய புத்தகங்கள் நூற்றுக் கணக்கான வருடங்களின் சரித்திரங்கள் அவர்கள் படித்த பள்ளிகள், வசித்த மாளிகைகள், உறவினர்களின் பெயர்கள் இப்படிப் பலவற்றைக் கரைத்துக் குடித்திருந்தாள். பெரிய இடங்களில் நுழைய வேண்டுமானால் ஒரு புகழ் பெற்ற பிரபு குடும்பத்தின் பெயரைச் சொல்லிக் கொள்ள வேண்டியது. மரியாதையுடன் உபசரிப்பார்கள். செல்வ வசதியுள்ள தூரத்து உறவினர் என்று சொல்லிக் கொண்டால் இன்னும் ஏகப்பட்ட மரியாதைகள்! இன்றும் அப்படித்தான்!

வரும்போது தன்மீது இடித்த ஆளைப் பற்றி எண்ணினாள் ட்ரேஸி. 'நம் வேடம் பலிக்க ஆரம்பித்திருக்கிறது!' என்று தனக்குள் சொல்லிப் புன்னகை செய்துகொண்டாள்.

அன்று இரவு எட்டு மணிக்கு ஓட்டலின் மதுபானக் கூடத்தில் அவள் தனியே உட்கார்ந்து மது அருந்திக் கொண்டிருந்த சமயம் -

அவள் மீது இடித்த அந்த நபர் அவளை நோக்கி வந்தார். "மன்னிக்கணும். கொஞ்சம்கூட மரியாதையில்லாமல் உங்கள் மீது இடித்துவிட்டேன்!" என்றார்.

ட்ரேஸி பெருந்தன்மையாகப் புன்னகை செய்து, "அதனாலென்ன? தற்செயலாக அப்படி நேர்ந்துவிட்டது. அவ்வளவுதானே?" என்றாள்.

"உங்களுக்கு ரொம்ப இனிமையான சுபாவம்." அவர் தயங்கிவிட்டுச் சொன்னார். "உங்களுக்காக நான் ஏதாவது ட்ரிங்க்ஸ் வரவழைக்கலாமா?"

"ஓ," என்றாள் ட்ரேஸி.

அவளெதிரில் அவர் ஒரு நாற்காலியில் அமர்ந்தார். "என் பெயர் புரொபசர் அடால்ஃப்," என்றார்.

"என் பெயர் மார்கரெட்."

வெயிட்டர் அவர்களை நோக்கி வந்தான்.

"நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள்?" என்றார் புரொபசர் அடால்ஃப்.

"ஷாம்பேய்ன்... ஆனால்... உங்களால் அவ்வளவு..."

"பரவாயில்லை, பரவாயில்லை." என்று அடால்ப் கையமர்த்தினார் "என்னால் பணம் செலவு செய்ய முடியும். இன்னும் சொல்லப் போனால், உலகத்தின் எதை வேண்டுமானாலும் வாங்கக் கூடிய நிலைமையை நான் நெருங்கிக் கொண்டிருக்கிறேன்..."

"ஓ, அப்படியா!" இனிமையாகப் புன்னகை செய்தாள் ட்ரேஸி.

"ஆமாம்," என்றவர் ஷாம்பேய்னுக்கு ஆர்டர் கொடுத்தார். "சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள். ஒப்படியொரு அதிசயம் என் வாழ்க்கையில் நடந்திருக்கிறது.

உண்மையில் அந்த விஷயத்தைப் பற்றி முன்பின் தெரியாத ஒருவரிடம் நான் பேசக் கூடாதுதான். ஆனால் யாரிடமாவது சொல்லாவிட்டால் என் மண்டை வெடித்துவிடும் போல் இருக்கிறது."

அவர் முன்புறம் குனிந்து மெல்லிய குரலில் பேசினார்.

ட்ரேஸி ஒரு போலியான மரியாதையுடன் அவர் சொல்வதைக் கேட்கத் தொடங்கினாள்.

## 59

பேராசிரியர் அடால்ஃப் தனக்கும் ஒரு பானம் வரவழைத்துக் கொண்டார். பிறகு இன்னும் தாழ்வான குரலில் ட்ரேஸியிடம் சொன்னார்:

"உங்களிடம் உண்மையைச் சொல்கிறேன். நான் ஒரு சாதாரணப் பள்ளிக்கூட ஆசிரியர் - அதாவது கொஞ்ச நாள் முன்பு வரையில் நான் மாணவர்களுக்குச் சரித்திரப் பாடம் நடத்தினேன் அப்படியொன்றும் சுவாரஸ்யமான பாடம் இல்லைதான். ஆனால் சில மாதங்களுக்கு முன்பு ஒரு விஷயம் நடந்தது. ரொம்பப் பரபரப்பான, நம்பவே முடியாத விஷயம்..."

"அப்படியா?" மரியாதையுடன் புன்னகை செய்தாள் ட்ரேஸி. "என்ன நடந்தது புரொபசர்? நான் தெரிந்து கொள்ளலாமா?"

புரொபசர் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டுத் தொடர்ந்தார். "ஸ்பானிஷ் போர்க் கப்பலான ஆர்மடாவைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். மாணவர்களுக்கு அதைப் பற்றிச் சுவாரஸ்யமாகச் சொல்ல வேண்டுமென்பதற்காக ஆராய்ச்சி செய்தேன். சின்னச் சின்னத் தகவல்களைச் சேகரித்தேன். எங்கள் ஊர் மியூசியத்தில் சரித்திரச் செய்திகள் திரட்டினேன். அப்போது பழைய காகிதங்களோடு ஒரு தஸ்தாவேஜு கலந்து போய்க் கிடப்பதைக் கண்டேன்.

அதிலிருந்த விவரப்படி, 1588ஆம் வருடம் இளவரசர் பிலிப் சில கப்பல்களை ரகசியமாக எங்கோ அனுப்பினாராம். அதில் ஒரு கப்பலில் பூராப் பூரா தங்கக் கட்டிகள் இருந்ததாம். அது ஒரு புயலில் சிக்கிக் கொண்டதாம். காணாமலே போய் விட்டதாம். எங்கே போயிற்று என்று யாருக்குமே தெரிய வில்லை. என்கிறார்கள்."

ட்ரேஸி அவரைக் கூர்ந்து பார்த்தாள். "என்கிறார்கள் என்றால்? அது உண்மை இல்லையா?"

"அதே தான்!" என்றார் பேராசிரியர் அடால்ஃப். "என் கையில் அகப்பட்ட காகிதத்திலிருந்து உண்மை தெரிந்தது. அதாவது, அந்தக் கப்பலின் காப்டனும் சிப்பந்திகளுமாகச் சேர்ந்து அந்தக் கப்பலை ஒரு ரகசியமான கடற்கரைக்குக் கொண்டு சென்று, வேண்டுமென்றே மூழ்கடித்திருக்கிறார்கள். மலைப் பாறைகள் நிறைந்த பகுதி அது. யாரும் கண்டு பிடிக்க முடியாத இடம். பிற்பாடு திரும்பி வந்து அந்தத் தங்கத்தை எடுத்துக் கொள்ளலாம் என்பது அவர்கள் எண்ணம். அதன் படி அடுத்த முறை வந்து கொண்டிருந்தபோது கடற் கொள்ளைக்காரர்கள் அவர்களை மடக்கிக் கொலை செய்து விட்டார்கள். அந்தக் கொள்ளைக்காரர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. 'ஆகவே, தங்கம் ஒளித்து வைத்திருக்கும் இடம் பற்றிய தகவல்கள் எழுதியிருந்த காகிதத்தை என்னவோ காகிதம் என்று நினைத்துத் தூக்கிப் போட்டுவிட்டார்கள். அந்தக் காகிதம் தான் என் கையில் கிடைத்திருக்கிறது." பேரசிரியரின் குரல் பட படப்பினால் நடுங்கியது. மறுபடியும் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டார். "அந்த புதையல் இருக்கும் இடத்துக்கு எப்படிப் போவதென்ற தகவல்கள் என்னிடமுள்ள தஸ்தாவேஜியில் விவரமாக இருக்கிறது."

"அட! எப்படிப்பட்ட அதிர்ஷ்டமான கண்டுபிடிப்பு!" என்றாள் ட்ரேஸி. பிரமிப்பு ஒலித்தது அவள் குரலில்.

"இன்றைய நிலவரப்படி அந்தத் தங்கக் கட்டிகளின் மதிப்பு ஐந்து கோடி டாலருக்குமேலிருக்கும். போய் எடுத்து வர வேண்டும். அவ்வளவு தான்," என்றார் புரொபசர்.

"ஏன், செய்ய வேண்டியது தானே"

தர்மசங்கடத்துடன் தோளைக் குலுக்கிக் கொண்டார் அவர். "பணம் மேடம், பணம்? புதையல் இருக்கும் இடத்திற்கு செல்ல ஒரு கப்பலை வாடகைக்கு எடுக்க வேண்டுமே!"

"ஓகோ, அதற்கு என்ன செலவாகும்?"

"ஒரு லட்சம் டாலர் தேவைப்படும். உங்களிடம் ஒரு உண்மையை ஒப்புக்கொள்கிறேன் நான் ஒரு முட்டாள் தனமான காரியம் செய்து விட்டேன். இருபதாயிரம் டாலர்- வாழ்நாள் பூரா நான் சேமித்த பணம் எடுத்துக்கொண்டு இந்த ஊருக்கு வந்தேன். இங்குள்ள சூதாட்டக் கிளப்பில் பணம் வைத்து ஆடி, நிறையச் சம்பாதிக்கலாம் என்று எண்ணிவிட்டேன்.." அவர் குரல் தழுதழுத்தது.

"அத்தனை பணமும் சூதாட்டத்தில் போய்விட்டது. அப்படித் தானே?"

அவர் தலையாட்டினார். அவர் கண்ணின் முனையில் கண்ணீர் பளபளப்பதைக் கண்டாள் ட்ரேஸி.

ஷாம்பேய்ன் வந்தது. புரொபசர் இரண்டு கிளாஸிலும் ஊற்றித் தந்தார்.

"உங்களுக்கு வெற்றி கிடைப்பதாக!" என்று கூறித் தன் கிளாஸை உயர்த்தினாள் ட்ரேஸி.

"தாங்க் யூ."

இருவரும் மௌனமாக அருந்தினார்கள். அவர்கள் மனத்தில் எண்ணங்கள் ஓடிக்கொண்டிருந்தன.

"உங்களைப் போரடித்துவிட்டேன். மன்னிக்கணும்," என்றார் புரொபசர் அடால்ஃப். "உங்களைப் போன்ற அழகான பெண்ணிடம் என் தொல்லைகளைச் சொல்லிக் கொண்டிருப்பது கூடாது."

"ஆனால் நீங்கள் சொன்ன விஷயம் ரொம்பச் சுவாரஸ்யமாக இருக்கிறது." என்றாள் ட்ரேஸி. அந்தத் தங்கக் கட்டிகள் அதே இடத்தில், அப்படியே இருக்கிற தென்று நீங்கள் நம்புகிறீர்கள்? இல்லையா?"

“லவலேசமும் சந்தேகமில்லை எனக்கு! கப்பலில் இருந்த தங்கக் கட்டிகளின் கணக்கு அந்த மறைவிடத்துக்குப் போக வேண்டிய வழிக்கான வரைபடம் எல்லாம் இருக்கிறது என்னிடம். வரைபடம் கப்பலின் கேப்டனே வரைந்தது. அந்தப் புதையல் இருக்கும் இடம் எனக்குக் கனகச்சிதமாகத் தெரியும்.”

முகத்தில் சிந்தனை படர அவரைப் பார்த்தாள் ட்ரேஸி. “இப்போது உங்களுக்குத் தேவை ஒரு லட்சம் டாலர்? அப்படித்தானே?”

புரொபசர் சூள் கொட்டினார். “ஆமாம்! ஐந்து கோடி டாலர் மதிப்புள்ள புதையலை எடுத்து வர!” மௌனமாகத் தன் பானத்தை ஒரு தடவை உறிஞ்சினார்.

“ஒரு யோசனை தோன்றுகிறது...” என்று ஆரம்பித்தவள் நிறுத்திக்கொண்டாள்.

“என்ன? என்ன?”

“நீங்கள் ஏன் ஒரு கூட்டாளி சேர்த்துக்கொள்ளக் கூடாது?”

அவர் அவளை ஆச்சரியமாகப் பார்த்தார். “கூட்டாளியா? வந்து... நான் மட்டுமே தனியாகச் செய்யத்தான் முதலில் நினைத்தேன். ஆனால் இப்போது என் கையிலிருந்த பணமெல்லாம் போய்விட்டதால்...” அவர் குரல் மறுபடி கம்மியது.

“புரொபசர், உங்களுக்கு நான் ஒரு லட்சம் டாலர் தருகிறேனென்று வைத்துக்கொள்ளுங்கள்...”

“சே, சே! கூடாது.” அவர் தலையை அசைத்தார். “உங்கள் பணம் வீண் போனாலும் போய் விடும். அதற்கு இடம் கொடுக்க என் மனம் சம்மதிக்கவில்லை.”

“ஏன்? புதையல் தான் நிச்சயமாய்க் கிடைக்கும் என்கிறீர்களே?”

அதிலொன்றும் சந்தேகமில்லை. ஆனால் கைக் கெட்டியது வாய்க்கெட்டாமல் போகலாம். நடுவில்

எத்தனையோ கஷ்ட நஷ்டங்கள் ஏற்படலாம். ஒன்றும் உத்தர வாதம் இல்லையே?"

"புரொபசர், வாழ்க்கையில் எதற்குமே உத்தரவாதம் கிடையாது! உங்கள் பிரசினை சுவாரஸ்யமாக இருக்கிறது. அந்தப் பிரசினையைத் தீர்க்க நான் உதவினால், நம் இரு வருக்குமே அது லாபமாக இருக்கக் கூடும் இல்லையா?"

"இல்லை மேடம். கொஞ்சம் கூட எதிர்பாராததாக ஏதோ ஒன்று நேர்ந்து உங்கள் பணம் போய்விட்டால் என்ன ஆவது? அதற்கு என் மனம் இடம் கொடுக்கவில்லை, மேடம்."

"இந்தத் தொகை எனக்கு ஒரு பொருட்டில்லை, புரொபசர்," என்று உறுதியுடன் கூறினாள் ட்ரேஸி. "இது ஒரு முதலீடு மாதிரி தானே? எனக்குப் பெரும் லாபம் கிடைக்குமே? இல்லையா?"

"அது உண்மைதான்," என்று ஒப்புக் கொண்டார் புரொபசர் அடால்ஃப். அவள் சொல்வதை மனத்துக்குள் எடைபோட்டுப் பார்ப்பதும், பலவகை சந்தேகங்கள் அவருக்குள் உதிப்பதும் அவர் முகத்தில் தெரிந்தன. இறுதியில் சொன்னார்: "நீங்கள் பிரியப்பட்டால் நீங்கள் பாதி நான் பாதி என்று கூட்டுச் சேர்ந்து கொள்ளலாம்."

"ஓ, அப்படியே செய்யலாம்." முக மலர்ச்சியுடன் புன்னகை செய்தாள் ட்ரேஸி.

புரொபசர் சட்டென்று, "அதாவது, எல்லாச் செலவு களும் போகப் பாக்கியுள்ளதைப் பாதிப் பாதியாகப் பிரித்துக் கொள்வோம்," என்றார்.

"அதுதான் நியாயம். சரி, எப்போது ஆரம்பிக்கலாம்?"

"இப்பவே!" புரொபசரிடம் ஒரு திடீர் உற்சாகம் உதித்தது. "இந்த வேலைக்கு எற்றதாக ஏற்கெனவே ஒரு சிறு கப்பல் பார்த்து வைத்திருக்கிறேன். புதையலைக் கடல் ஆழத்திலிருந்து எடுப்பதற்குத் தேவையான நவீனக் கருவிகள் இதில் இருக்கின்றன. நாலே சிப்பந்திகள். ஆனால், என்ன கிடைத்தாலும் அதில் ஒரு சிறு சதவிகிதம் அவர்களுக்குத் தர வேண்டியிருக்கும்."

"கொடுக்க வேண்டியது தான்."

"எவ்வளவு சீக்கிரம் வேலையை ஆரம்பிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் ஆரம்பிக்க வேண்டும். இல்லாவிட்டால் வாடகைக் கப்பல் வேறெங்காவது போய்விடும்."

"ஐந்து நாளில் நான் உங்களுக்குத் தேவையான தொகையைத் தருகிறேன்."

"அருமை!" என்று பாராட்டினார் புரொபசர். "அதற்குள் எல்லா ஏற்பாடுகளையும் நான் செய்து வைக்கிறேன்."

ட்ரேஸி அந்த ஹாலைச் சுழற்றிப் பார்வையை ஓட விட்டாள் திடுக்கிட்டாள்.

ஒரு மேஜையடியில் உட்கார்ந்து பானம் அருந்திக் கொண்டிருந்தான் ஜெஃப். அவன் முகத்தில் ஒரு கேலியான புன்சிரிப்புத் தவழ்ந்தது. அவனுடன் ஒரு கவர்ச்சியான பெண் உட்கார்ந்திருந்தாள். அவள் மேனி எங்கும் நகைகள் பளபளத்தன.

ட்ரேஸியைக் கண்டு தலையாட்டினான் அவன். அவளும் புன்னகை செய்தாள். மாட்டினி பிரபுவின் மாளிகையில் கொள்ளையடித்துவிட்டுத் திரும்புகையில், வெளியே காரில் ஒரு நாயுடன் அவன் உட்கார்ந்திருந்த காட்சி ஞாபகம் வந்தது.

"அப்ப நான் புறப்படுகிறேன்," என்று கூறி எழுந்து கொண்டார் புரொபசர் அடால்ஃப். "ஏகப்பட்ட வேலைகளை நான் கவனித்தாகணும். அவ்வப்போது உங்களுடன் தொடர்பு கொள்கிறேன்."

ட்ரேஸி ஒயிலாகத் தன் கைகளை நீட்டினாள். அவர் குனிந்து அதில் முத்தமிட்டு விட்டுப் புறப்பட்டார்.

"ஏன் உன் சினேகிதர் திடீரென்று புறப்பட்டுப் போய் விட்டார்?" என்ற குரல் கேட்டது.

ஜெஃப்தான்.

"ட்ரேஸி, நீ இந்தச் சீமாட்டி வேடத்தில் அபார அழகோடு இருக்கிறாய். அப்படியிருக்க ஏன் அந்த ஆள்

போய்விட்டான்?" என்று கேட்ட வண்ணம் அடால்ஃப் காலி செய்த நாற்காலியில் உட்கார்ந்தான் ஜெஃப். பிறகு தொடர்ந்து, "கங்கிராசுலேஷன்ஸ், ட்ரேஸி! அந்த மாட்டினி மாளிகை வேலையை அற்புதமான மூளையோடு முடித்து விட்டாய்!"

"ஓ! நீயே பாராட்டுகிறாய் என்றால் உண்மையில் பிரமாதம் தான் ஜெஃப்!"

மேஜைமீதிருந்த கோப்பையைக் கையால் உருட்டிக் கொண்டே ஜெஃப் கேட்டான்: "புரொபசர் அடால்ஃப் என்ன சொன்னார்!"

"ஓ, உனக்கு அவரைத் தெரியுமா?"

"ஓரளவுக்கு."

"வந்து... சும்மா... என்னோடு... ட்ரிங்க்ஸ் சாப்பிடணும் என்றார்."

"ட்ரிங்க்ஸ் சாப்பிட்ட பிறகு, கப்பலோடு மூழ்கிய தங்கப் புதையலைப் பற்றிச் சொல்லியிருப்பாரே?"

ட்ரேஸிக்கு எரிச்சல் ஏற்பட்டது. "எப்படித் தெரியும் உனக்கு?"

ஜெஃப் அவளை வியப்புடன் பார்த்தான். "ட்ரேஸி, நீ பேசுவதைப் பார்த்தால் அந்த ஆள் சொன்னதையெல்லாம் நம்பிவிட்டாய் போலிருக்கிறதே? உலகத்திலேயே ரொம்பப் பழசான மோசடி இந்தத் தங்கப் புதையல்!"

"இந்தத் தடவை அப்படி இல்லை!"

"ட்ரேஸி! நீ அவன் பேச்சை நம்பியதாகவா சொல்கிறாய்?"

ட்ரேஸி முறைப்பாக, "அதைப் பற்றி விரிவாகப் பேச எனக்கு உரிமையில்லை. ஆனால் புரொபசர் அடால்ஃபிடம் சில ரகசியத் தகவல்கள் இருக்கின்றன. அது மட்டும் உண்மை," என்றாள்.

ஜெஃப் அதிர்ச்சியடைந்தவனாகத் தலையை அசைத்தான். "ட்ரேஸி, அந்த ஆள் உன்னை ஏமாற்றப் பார்க்கிறான். அந்தப் புதையலை வெளியே எடுக்க உன்னை எவ்வளவு பணம் போடச் சொன்னான்?"

"அதைப் பற்றி நீ கவலைப் பட வேண்டாம். அது என் பணம், என் பிஸினஸ்," என்றாள் ட்ரேஸி வெடுக்கென்று.

## 60

புரொபசர் அடால்ஃப் சொல்லும் புதையல் சமாசாரம் வெறும் மோசடி என்று ஜெஃப் எவ்வளவு சொல்லியும் ட்ரேஸி கேட்கவில்லை.

சலிப்புடன் ஜெஃப் தோளைக் குலுக்கிக் கொண்டான். "நல்லது. நான் உன்னை எச்சரிக்கவில்லை என்று பிற்பாடு என்னைக் குற்றம் சொல்லாதே. அவ்வளவுதான்."

ட்ரேஸி கேலியாக அவனைப் பார்த்துச் சிரித்தாள். "ஒரு வேளை, அந்தப் புதையலை நீயே சுருட்டலாமென்று ஏதாவது திட்டமோ?"

அவன் கைகளை அகல விரித்துப் பெருமூச்சு விட்டான். "ட்ரேஸி, ஏன் நீ என்னை எப்போதும் சந்தேகக் கண்ணுடனேயே பார்க்கிறாய்?"

"புரியவில்லையா? உன்னிடம் எனக்குக் கடுகத்தனையும் நம்பிக்கை கிடையாது," என்றவள், "அது போகட்டும், உன்னோடு உட்கார்ந்திருக்கிறாளே, அந்தப் பெண் யார்?" என்று கேட்டாள். அந்தக் கேள்வியைக் கேட்டிருக்க வேண்டாம் என்று உடனே நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

"ஸூஸனைக் கேட்கிறாயா? சினேகிதி."

"பணக்கார சினேகிதி. இல்லையா?"

ஜெஃப் அலட்சியமாகப் புன்னகை செய்தான். "கொள்ளைப் பணக்காரி என்றுதான் தோன்றுகிறது. துறை

முகத்தில் அவளுடைய பிரமாதமான உல்லாசப் படகு நிற்கிறது. இருநூற்றைம்பது அடி நீளம் என்றால் பார்த்துக் கொள். நாளை பகலுணவுக்கு அங்கே வாயேன். சாப்பாடு அருமையாய் -"

"ரொம்ப நன்றி. ஆனால் உன்னுடைய சந்தோஷத்தை நான் கெடுக்கத் தயாராயில்லை. சரி, அவளைக் கவிழ்க்க என்ன திட்டம் போட்டிருக்கிறாய்?"

"அது என் சொந்த சமாசாரம்."

"ஆமாமாம்! சொந்த சமாசாரம் தான்," என்றாள் ட்ரேஸி. ரொம்பச் சுளீரென்று சொல்லி விட்டோமோ என்று தோன்றியது. அருந்திக் கொண்டிருந்த கோப்பையின் விளிம்பு வழியே அவனை நோக்கினாள். உண்மையிலேயே நல்ல அழகன் தான் இவன் என்று எண்ணிக் கொண்டாள். செதுக்கினாற்போன்ற மோவாய்; மூக்கு; நீண்ட இமைகள்; பளபளப்பான கண்கள். ஆனால் இருதயத்தில் பாம்பு! புத்திசாலித்தனமான பாம்பு!

"சட்டத்துக்குட்பட்ட தொழில் செய்யலாமென்று என்றைக்காவது உனக்குத் தோன்றியது உண்டா, ஜெஃப்? செய்தால் ரொம்ப வெற்றிகரமாய் விளங்குவாயே?" என்றாள்.

அவன் அதிர்ச்சியடைந்தவன் போல, "என்னது! இத்தனை சுகபோகத்தையும் விட்டுவிடுவதா? சரியாப் போச்சு!" என்றான்.

"முதலிலிருந்தே நீ இப்படி மோசடிக் கலைஞனாகத்தான் இருந்து வந்திருக்கிறாயா?"

"மோசடிக் கலைஞனா! சீசீ! மோசடிக் கலையில் நான் ஒரு கத்துக்குட்டி!" என்றான் ஜெஃப். "நான் பதினாறு வயதில் என் வீட்டை விட்டு ஓடி, ஒரு நாடகக் குழுவில் சேர்ந்தேன்..." என்று தன் வாழ்க்கைக் கதையைச் சுருக்கமாகச் சொன்னவன், "உனக்குப் பெலோட்டா பிடிக்குமா?" என்றான்.

"என் தலையில் எதையும் கட்டப் பார்க்காதே. நான் வாங்கத் தயாராயில்லை."

"அட அசடே! பெலோட்டா என்பது ஒரு விளையாட்டு! இன்றிரவு அதற்கு இரண்டு டிக்கெட் வாங்கியிருக்கிறேன். நீ வருகிறாயா?"

ட்ரேஸி தன்னையுமறியாமல் சரியென்று சொல்லி விட்டாள்.

அவர்கள் அன்றிரவு உணவு அருந்தியது ஒரு சிறிய ரெஸ்டாரெண்ட்டில்.

புத்தகங்கள் பிரயாணங்கள் அரசியல் இப்படிப் பலவற்றை இருவரும் பேசிக்கொண்டே சாப்பிட்டார்கள். இவன் எவ்வளவு விஷயம் தெரிந்தவனாக இருக்கிறான் என்று ட்ரேஸி ஆச்சரியப்பட்டாள். தனக்கும் அவனுக்கும் பல விஷயங்களில் ஒற்றுமை இருப்பதை நினைத்துப் புன்னகை செய்தாள். ஜெஃப்புடன் நேரம் இனிமையாகச் சென்றது. 'ஆனால் கொஞ்சம் வாய்ப்புக் கிடைத்தால் போதும், இவன் நம்மைக் காலை வாரிவிடத் தயங்கமாட்டான்!' என்றும் எண்ணிக் கொண்டாள். இவனிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்...

'பெலோட்டா' விளையாட்டு நடைபெறும் மைதானத்தை அவர்கள் அடைந்தபோது, பட்டப் பகலாய் விளக்குகள் பிரகாசித்தன.

காங்கிரீட் சுவரில் வெகு வேகமாய்ப் பந்தை எறிய வேண்டியது. பந்து திரும்பி வரும்போது அதை ஒரு கூடையில் பிடிக்க வேண்டியது இதுதான் பெலோட்டா என்று ட்ரேஸிக்கு ஜெஃப் விளக்கினான்.

ஆட்டத்தில் வேகமும் முரட்டுத்தனமும் நிரம்பியிருந்தன. கூடியிருந்த மக்களின் கூச்சல்கள் வானைப் பிளந்தன.

"ஏதோ ரொம்பப் பயங்கரமான விளையாட்டு மாதிரி இப்படிக் கூச்சல் போடுகிறார்களே?" என்றாள் ட்ரேஸி.

"உண்மையிலேயே பயங்கரமானதுதான்," என்றான் ஜெஃப். "பந்தின் வேகம் என்ன தெரியுமா? மணிக்கு நூறு மைல்! கொஞ்சம் குறி தவறி, நம் தலையில் பட்டதோ, ஆள் குளோஸ்!"

அவன் சொல்லிக் கொண்டிருந்தபோதே ஒரு பந்து குறி தவறி அவர்களை நோக்கிப் பறந்து வர, எல்லாரும் அலறிப் புடைத்துக்கொண்டு சிதற-

ஜெஃப் சட்டென்று ட்ரேஸியைக் கீழே தள்ளி, அவள் மீது பாதுகாப்பாகத் தானும் படுத்துக் கொண்டான். பந்து விர்ரென்று அவர்கள் தலைக்கு மேலாகப் பறந்து சுவரிலே மோதி விழும் சத்தம் கேட்டது.

ட்ரேஸி தரையோடு தரையாய்க் குப்புறக் கிடந்தாள். தன்மீது ஜெஃப்பின் உடம்பு அழுத்திக் கொண்டிருப்பது தெரிந்தது. அவன் முகம் அவள் முகத்துக்கு வெகு அருகில் இருந்தது.

ஒரு நிமிடம் அவள் தோளைப் பற்றியிருந்தவன் எழுந்துகொண்டான். ட்ரேஸியையும் கையைப் பிடித்து தூக்கி விட்டான். திடீரென்று இருவரையும் கூச்சம் பற்றிக் கொண்டது.

வெளியே வந்ததும் ஒருவருக்கொருவர் குட்பை சொல்லிக் கொண்டார்கள்.

"ட்ரேஸி, அந்தப் புரொபசரின் மோசடித் திட்டத்துக்கு நீ பணம் எதுவும் கொடுக்காதே. என்ன!" என்றான் ஜெஃப்.

"இல்லை, கொடுக்கத்தான் போகிறேன்."

அவன் முகம் கறுத்தது. "நல்லது. உனக்கு அதிர்ஷ்டம் அடித்தால் சரி."

"குட் நைட், ஜெஃப்!"

அவன் செல்வதையே பார்த்தபடி நின்றிருந்தாள் ட்ரேஸி.

ஒட்டலுக்கு அவள் திரும்பிய போது ஒரு சிப்பந்தி அவளை அணுகி, "உங்களைப் போனில் கூப்பிடுகிறார்கள் மேடம்," என்று தெரிவித்தார்.

புரொபசர் அடால்ஃப்தான் கூப்பிட்டார்.

கிராஞ்சியர் என்பவன்தான் புரொபசரின் 'பாஸ்.' சட்ட விரோதமான வேலைகள் செய்வதிலும், சட்ட விரோதமான சூதாட்டக் கிளப்கள் நடத்துவதிலும் மன்னன் அவன். போலீஸ் துறையில் அவனுக்கு எராளமான நண்பர்கள் இருந்ததால் கவலையில்லாமல் ஆட்சி நடத்தி வந்தான். கப்பல் புதையல் போன்ற மோசடிகள் அவனுடைய மூளையில் உதித்தவைதான். அந்தத் திட்டத்தில் புரொபசர் அடால்ஃப் அவனுடைய கையாள்.

இன்று அவனுடைய அறையில் அவனுக்கு எதிரே உட்கார்ந்திருந்தார் அடால்ஃப்.

பாஸின் கடுமையான முகத் தோற்றம் அவரை நடுங்க வைத்தது.

"புதையல் எடுக்கிற திட்டத்துக்கு யாரோ உதவி செய்கிறாள் என்றாயே, அந்தப் பெண்பிள்ளையைப் பற்றி விவரமாகச் சொல்லு," என்றான் கிராஞ்சியர்.

பிரொபசர் அடால்ஃப் மிடறு விழுங்கிவிட்டுச் சொன்னார்: "வந்து... அவள் ஒரு விதவை... அவள் புருஷன் அவளுக்கு எக்கச்சக்கமாய்ச் சொத்து வைத்துவிட்டுச் செத்துவிட்டான். நம்ம புதையல் திட்டத்துக்கு ஒரு லட்சம் டாலர் தருகிறேன் என்று சொன்னாள்..." கொஞ்சம் கொஞ்ச மாகத் தெம்புடன் பேசினார் புரொபசர். "நம் கைக்குப் பணம் வந்ததும், வழக்கப்படி புதுக் கதை சொல்லலாம். புதையலை எடுக்கப் புறப்பட்ட கப்பலுக்கு ஒரு விபத்து நேர்ந்துவிட்டது என்றும், அதைச் சரி செய்ய இன்னொரு ஐம்பதாயிரம் டாலர் வேண்டும் என்றும் சொல்வோம். அதற்குப் பிறகு இன்னோர் லட்சம் டாலர் -"

கிராஞ்சியரின் முகத்தில் சினம் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

புரொபசர் பயத்துடன் கேட்டார்.

"வந்து... ஏதாவது பிரசினையா பாஸ்?"

“ஆமாம், பிரசினைதான்,” என்றான் கிராஞ்சியர். அவன் குரல் கத்தி மாதிரி கூராக இருந்தது. “என் ஆட்களில் ஒருவன் பாரிஸிலிருந்து இப்பத்தான் போன் செய்தான். நீ சீமாட்டி என்று சொல்லிக் கொண்டிருக்கிறாயே, இந்தப் பெண்ணுக்கு அவன்தான் போலி பாஸ்போர்ட் தயாரித்துக் கொடுத்தானாம். இவளுடைய உண்மையான பெயர் ட்ரேஸி விட்னி. அமெரிக்கப் பெண்.”

புரொபசர் அடால்ஃபின் தொண்டை வறண்டது. நாக்கினால் உதட்டை ஈரப்படுத்திக் கொண்டார். “வந்து- ஏன் அவள் என் திட்டத்துக்கு ஒப்புக் கொண்டாள்? பணம் தரத் தயாராயில்லை என்று முதலிலேயே சொல்லிவிட வேண்டியது தானே?”

“அதுதான் ஏனென்று நான் கண்டுபிடிக்கப் போகிறேன். உண்மை தெரிந்ததும் அவள் உடம்பு கடலில் மிதக்கும்! இந்தக் கிராஞ்சியரை ஏமாற்றி எவனும் உயிர் வாழ்ந்ததில்லை,” என்று பல்லைக் கடித்தான் கிராஞ்சியர். “நீ அவளைப் போனில் கூப்பிடு! இன்னொரு சிநேகிதர் பாதிப் பணம் போடத் தயாராயிருப்பதாயும், அது விஷயமாய் அவளைப் பார்த்துப் பேச ஓட்டலுக்கு வருகிறாரென்றும் சொல்லு. நான் போகிறேன்.”

“சரி பாஸ்,” என்றார் புரொபசர் அடால்ஃப்.

ட்ரேஸியை ஓட்டலில் கூப்பிட்டது அதன்படிதான்.

## 61

கப்பல் மூழ்கி, கடலின் ஆழத்தில் புதையல் கிடக்கிறது என்று கதை விட்டு எவ்வளவோ பேரை எவ்வளவோ காலமாக ஏமாற்றி வந்திருக்கிறான் கிராஞ்சியர்.

இந்த ட்ரேஸி தன்னிடம் ஏமாறாதது மட்டுமல்ல, ஏன் ஏமாந்தது போல நடிக்கிறாள் என்பதும் அவனுக்குப்

புரியவில்லை. அது தான் அவனுக்கு மிகுந்த கோபத்தை ஏற்படுத்தியது. ட்ரேஸியைக் கையும் களவுமாகப் பிடித்து, தன் கூட்டாளியான ப்ரூனோவிடம் கொடுக்க வேண்டும். சித்திரவதை செய்து கொல்லுவது என்றால் ப்ரூனோவிற்கு ரொம்பப் பிடிக்கும்.

ட்ரேஸி தங்கியிருக்கும் ஓட்டலின் வாசலில் சொகுசுக் காரில் சென்று இறங்கினான் கிராஞ்சியர். நேரே வரவேற்புக் குமாஸ்தாவிடம் போய், "மார்கரெட் சீமாட்டி தங்கியிருக்கும் அறை எது?" என்று கேட்டான்.

விருந்தாளிகள் தங்கும் அறையின் எண்களை அன்னியருக்குச் சொல்லக் கூடாது என்பது அந்த ஓட்டலின் கடுமையான சட்டமாகும். ஆனால் அந்தக் குமாஸ்தாவுக்கு கிராஞ்சியர் எப்படிப்பட்டவன் என்பது தெரியும். ஆகவே பயத்துடன், "அறை எண் முன்னூற்றுப் பன்னிரண்டு," என்றான்.

'உம்' என்று ஓர் உறுமலோடு கிராஞ்சியர் நகருகையில், "முன்னூற்றுப் பதினொன்றாம் எண் அறையும் அவர்களோடதுதான் சார்," என்றான் குமாஸ்தா.

"ஓகோ, அங்கே யார் இருக்கிறார்கள்?"

"யாருமில்லை சார்."

"யாருமில்லையா? நிச்சயமாய்த்தான் சொல்கிறாயா?"

"ஆமாம் சார். அந்த அறையைப் பூட்டியே வைத்திருக்கிறாங்க. கூட்டிப் பெருக்குகிற வேலைக்காரிகள் கூட அங்கே போகக் கூடாதென்று சொல்லியிருக்காங்க."

கிராஞ்சியர் புருவங்களை நெரித்து யோசனை செய்தான். "உன்னிடம் அதற்கு ஒரு டூப்ளிகேட் சாவி இருக்குமே?"

"இருக்கு சார்," என்று கூறிய குமாஸ்தா, சற்றும் தயங்காமல் எடுத்துத் தந்தான். கிராஞ்சியரைப் பகைத்துக் கொள்வது எவ்வளவு ஆபத்து என்று அவனுக்குத் தெரியும்.

ட்ரேஸி வசிக்கும் அறையைக் கிராஞ்சியர் அடைந்த போது அது திறந்தே இருந்தது. உள்ளே நுழைந்தான்.

முன்னறையில் யாருமில்லை. "ஹலோ, யார் இங்கே?" என்று குரல் கொடுத்தான்.

பக்கத்து அறையிலிருந்து ஒரு பெண் குரல் இனிமை யாகப் பதிலளித்தது: "குளித்துக் கொண்டிருக்கிறேன். ஒரு நிமிடத்தில் வருகிறேன். கொஞ்சம் உட்கார்ந்திருங்கள். ஏதாவது பானம் வேண்டுமென்றால் எடுத்துச் சாப்பிடுங்கள்."

அறையைச் சுற்றிச் சுற்றி வந்தான் கிராஞ்சியர். அவனுடைய நண்பர்கள் பலர் இங்கே தங்கியிருந்தது உண்டு. எனவே இந்த அறையும் சோபாக்களின் அலங்காரங்களும் அவனுக்குப் பழக்கமானவை தான். படுக்கையறைக்குள் நுழைந்தான். விலையுயர்ந்த பல நகைகள் மேஜை மீது அலட்சியமாகப் பரத்தி வைக்கப்பட்டிருந்தன.

"இதோ வந்து விடுகிறேன்," என்று மறுபடியும் பெண் குரல் கேட்டது.

"மெதுவாய் வாருங்கள், மேடம். ஒன்றும் அவசர மில்லை." என்றான் கிராஞ்சியர். மேடமாம் மேடம்! அப்படிச் சொன்னதற்காகக் கோபமாய்ப் பல்லைக் கடித்துக் கொண்டான். இருடி சிறுக்கி! என்னையா ஏமாற்றப் பார்க்கி றாய்? உன்னையே கவிழ்த்துக் காட்டுகிறேன் பார்!

மெதுவே நடந்து அடுத்த அறையை அடைந்தான். அது பூட்டியிருந்தது. குமாஸ்தா கொடுத்த டூப்ளிகேட் சாவியைக் கொண்டு திறந்தான்.

ஒரு புழுக்கமான நெடி அடித்தது. ஆள் யாருமில்லை. எதற்காக இந்த அறையை வைத்திருக்கிறாள் இவள்?

திடீரென்று அதைக் கவனித்தான்

தடியான, கறுப்பான ஒரு மின்சார ஒயர் நீளமாகச் சென்றது அறையின் குறுக்கே. அதன் ஒரு முனை சுவரில் ஒரு பிளக்கில் செருகப்பட்டிருந்தது. மறுமுனை பக்கத்திலிருந்த ஒரு சிறிய அறைக்குள் சென்றது. அந்த ஒயர் செல்லும் அளவுக்கு மட்டுமே அந்தச் சிறிய அறை திறந்திருந்தது.

கதவைத் திறந்து எட்டிப் பார்த்தான்.

அறையின் குறுக்கே ஒரு கயிறு கட்டப்பட்டிருந்தது. அதில் துணி உலர்த்துகிற மாதிரி வரிசையாக நூறு டாலர் நோட்டுகள் க்ளிப் போட்டுத் தொங்கவிடப் பட்டிருந்தன.

அத்தனையும் ஈரம் சொட்டும் நோட்டுக்கள்! காய் வதற்காக உலர்த்தப்பட்டிருந்தன!

அருகிலிருந்த மேஜையில், டைப்ரைட்டிங் மெஷின் மாதிரி ஒன்று துணியால் மூடப்பட்டிருந்தது. கிராஞ்சியர் அந்தத் துணியை அகற்றி விட்டுப் பார்த்தான். அது ஒரு சிறிய அச்சடிக்கும் யந்திரம்! அதிலும் பல நூறு டாலர் நோட்டுக்கள் ஈரமாக. அதற்குப் பக்கத்தில், நூறு டாலர் நோட்டின் அளவுக்கு வெட்டப்பபட்ட காகிதங்கள் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. கோணல் மாணலாக வெட்டப்பட்டு விட்ட சில நூறு டாலர் நோட்டுக்கள் தரையில் சிதறிக் கிடந்தன.

"என்ன செய்கிறீர்கள் இங்கே?"

பின்னாலிருந்து ஒரு கோபமான குரல் கிராஞ்சியரை அதட்டியது.

சட்டெனத் திரும்பினான் கிராஞ்சியர். ட்ரேஸி, குளித்து முடித்து, உடை மாற்றிக் கொண்டு உள்ளே வந்திருந்தாள்.

"இதெல்லாம் கள்ள நோட்டு தானே!" என்றான் கிராஞ்சியர் மெதுவான குரலில். "இந்தக் கள்ள நோட்டுக் களைத் தான் எங்களுக்குக் கொடுப்பதாக இருந்தாயா?" என்று சொல்லிவிட்டு அவள் முகத்தைக் கூர்ந்து கவனித்தான். மறுக்கப் போகிறாள், கத்தப் போகிறாள், வெளியே போகச் சொல்லப் போகிறாள் என்றெல்லாம் எதிர்பார்த்தான். ஆனால்

"ஆமாம், கள்ள நோட்டுத் தான்," என்று ஒப்புக் கொண்டாள் ட்ரேஸி. "ஆனால் அசல் நோட்டுக்கும் இதற்கும் யாராலும் வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாது!"

"மோசடிக்காரி!" என்று கிராஞ்சியர் உறுமினான். இவளை ஒழித்துக் கட்ட வழி கிடைத்தது என்ற மகிழ்ச்சி அவன் முகத்தில் பரவியது.

"இந்த நோட்டுக்கள் அத்தனையும் அப்படியே தங்கமாக்கும்!" என்றாள் ட்ரேஸி மறுபடியும்.

"ஓ, அப்படியா!" கிராஞ்சியரின் குரலில் இகழ்ச்சி நிறைந்திருந்தது. உலரப் போட்டிருந்த நோட்டுக்களில் ஒன்றை உருவி எடுத்தான். ஒரு பக்கம் பார்த்தான். பிறகு மறுபக்கம் பார்த்தான். பிறகு கண்ணெதிரே பிடித்துக் கூர்ந்து ஆராய்ந்தான். அசல் நோட்டுப் போலவே அருமையாக இருந்தது.

"இதற்கான அச்சு - பிளேட் - யார் தயாரித்தார்கள்?"

"அதைப் பற்றி உங்களுக்கென்ன? சொன்னபடி வெள்ளிக் கிழமையன்று நான் ஒரு லட்சம் டாலர் தந்து விடுவேன்!" என்றாள் ட்ரேஸி.

கிராஞ்சியர் குழப்பத்துடன் அவளை வெறித்து நோக்கினான். தங்கப் புதையலை எடுப்பது பற்றி அவள் பேசுகிறாள் என்பது புரிந்ததும் உரக்கச் சிரித்தான். "நீ சரியான முட்டாள் பெண்! புதையலும் கிடையாது, கிதையலும் கிடையாது!"

ட்ரேஸியின் முகத்தில் அதிர்ச்சி பரவியது. "என்ன சொல்லுகிறீர்கள்? புதையல் கிடையாதா? புரொபசர் அடால்ஃப் சொன்னாரே..."

"அந்த ஆள் சொன்னதைப் போய் நம்பினாயோ! வெட்கக்கேடு!" கையில் வைத்திருந்த டாலர் நோட்டை மறுபடியும் ஆராய்ந்தவன், "இது என்னிடம் இருக்கட்டும்," என்றான்.

ட்ரேஸி அலட்சியமாக, "எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். என்னைப் பொறுத்த வரையில் இது வெறும் காகிதம் தானே!" என்றாள்.

இன்னும் ஒரு கற்றை ஈரமான நோட்டுக்களை எடுத்துக் கொண்டான் கிராஞ்சியர். "ஆமாம், ஓட்டல் வேலைக்காரர் யாராவது இங்கே வந்தால் என்ன ஆவது?"

"இங்கே வரக் கூடாதென்று சொல்லி அவர்களுக்கு நிறைய இனாம் தந்திருக்கிறேன். வெளியே போகும்போது அறையைப் பூட்டிக் கொண்டு போய்விடுவேன்."

'ரொம்பத் திமிராகத்தான் பேசுகிறாள்!' என்று எண்ணிக் கொண்ட கிராஞ்சியர், "சரி, ஓட்டலை விட்டு எங்கேயும் போகாதீர்கள். என் சினேகிதன் ஒருவனை அழைத்து வருகிறேன்." என்று கூறிவிட்டு வெளியேறினான்.

தன் அடியாட்கள் மூலமாக ட்ரேஸியை தீர்த்துக் கட்ட வேண்டுமென்றுதான் கிராஞ்சியர் முதலில் நினைத்திருந்தான். இப்போது ஓர் உள்ளுணர்வு அவனைத் தடுத்தது.

ட்ரேஸியிடமிருந்து வாங்கி வந்திருந்த நோட்டை மறுபடியும் ஆராய்ந்தான்.

இதுவரை அவன் எவ்வளவோ கள்ள நோட்டுக்களைப் பார்த்திருக்கிறான். இவ்வளவு கச்சிதமான நோட்டைக் கண்டதில்லை. இதற்கு அச்சுத் தயாரித்தவன் மேதைதான். சந்தேகமில்லை. இதன் தாள் அசல் நோட்டின் தாளைப் போலவே இருந்தது. வண்ணங்களும் கோடுகளும் பெஞ்சமின் ஃப்ராங்க்ளின் உருவமும் அசல் நோட்டைப் போலவே அச்சாகியிருந்தன.

அந்தப் பெண்பிள்ளை சொன்னது சரிதான். இந்தக் கள்ள நோட்டுக்கும் அசல். நோட்டுக்கும் வித்தியாசம் கண்டு பிடிக்க முடியாது தான்.

இதை எங்காவது கொடுத்துப் பரீட்சித்துப் பார்த்தால் என்ன?

மறுநாள் காலை புரொபசர் அடால்ஃபைக் கூப்பிட்டனுப்பினான் கிராஞ்சியர். ஒரு நூறு டாலர் நோட்டை அவரிடம் கொடுத்து, "பாங்கிற்குப் போய் இதற்குச் சில்லறை வாங்கி வா," என்றான்.

"இதோ பாஸ்," என்று புறப்பட்டார் புரொபசர்.

பாங்க்கில் மாட்டிக் கொண்டால் மாட்டிக் கொள்ளட்டும். தனக்கு அந்த நோட்டை யார் தந்தது என்று நிச்சயம் போலீசில் சொல்ல மாட்டான். தண்டனை கிடைக்கும். கிடைக்கட்டும். ட்ரேஸியை நம்பியதற்குத் தண்டனை அது.

மாறாக -

அந்தக் கள்ள நோட்டு செல்லுபடியாகி விட்டால்...! பார்க்கலாம், பார்க்கலாம்.

பதினைந்து நிமிடத்தில் புரொபசர் திரும்பி வந்தார். கிராஞ்சியரின் முன்னே நூறு டாலருக்குச் சில்லறையை வைத்தார். "வேறு ஏதாவது செய்யணுமா பாஸ்?"

அந்த நாணயங்களைக் கண்கொட்டாமல் பார்த்தான் கிராஞ்சியர்.

"வந்து... போன இடத்தில் யாராவது ஏதாவது கேட்டார்களா?"

"கேட்பதா? என்ன கேட்பது?"

"சரி, மறுபடியும் பாங்கிற்குப் போ. நான் ஒன்று சொல்கிறேன். அதன்படி செய்," என்றான் கிராஞ்சியர்.

புரொபசர் அடால்ஃப் அவன் சொல்லித் தந்தபடி பாங்க்கிற்குப் போனார். பாங்க் மானேஜரின் முன்னே போய் உட்கார்ந்தார். இந்தத் தடவை அவருக்கு இது ஏதோ கள்ள நோட்டு சமாசாரம் என்று புரிந்துவிட்டது. மாட்டிக் கொண்டால் ஆபத்து என்பதும் தெரிந்தது. ஆனால் கிராஞ்சியரின் கட்டளையை மீறுவது இன்னும் பெரிய ஆபத்து என்பது அவருக்குத் தெரியும்.

"என்ன வேண்டும்?" என்று பாங்க் மானேஜர் கேட்டார்.

"வந்து..." தயக்கத்துடன் பேசினார் புரொபசர். "நான் நேற்று சில அமெரிக்கர்களுடன் பணம் வைத்துச் சீட்டாடினேன்..."

பாங்க் மானேஜர் அன்போடு தலையசைத்தார். "புரிகிறது... பணம் தோற்றுவிட்டீர்கள். கடன் வேண்டும். அவ்வளவுதானே?"

"இல்லையில்லை..." என்றார் புரொபசர். "உண்மையில் நான் ஜெயித்தேன். அவர்கள் பணம் தந்தார்கள். ஆனால் அவர்களைப் பார்த்தால் யோக்கியர்கள் மாதிரி தெரியவில்லை..." கையிலிருந்து இரண்டு நூறு டாலர் நோட்டுக்களை எடுத்து நீட்டினார். "இதோ இதுதான் அவர்கள் கொடுத்தது. இது ஒருவேளை கள்ள நோட்டாக இருக்குமோ என்று..."

பாங்க் மானேஜர் அந்த நோட்டுக்களைக் கையில் வாங்கிப் பார்த்தார்.

புரொபசரின் இருதயம் திக்திக்கென்று அடித்துக் கொண்டது.

பாங்க் மானேஜர் அந்த நோட்டுக்களைத் திருப்பித் திருப்பிப் பார்த்தார். பிறகு விளக்கு வெளிச்சத்தில் வைத்துப் பார்த்தார்.

பிறகு புரொபசரின் பக்கம் திரும்பினார். அவர் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. "நீங்கள் அதிர்ஷ்டக்காரர். இரண்டும் நல்ல நோட்டு தான்."

புரொபசருக்குப் போன மூச்சு திரும்பி வந்தது. அம்மாடி! தப்பினோம்! கடவுளுக்கு நன்றி சொல்லியபடி கிராஞ்சியரிடம் திரும்பி வந்தார்.

"எந்தப் பிரசினையும் இல்லை, பாஸ். அந்த இரண்டும் அசல் நோட்டு தானாம்!"

கிராஞ்சியருக்கு ஆனந்தம் தாள முடியவில்லை. இப்படியும் ஓர் அதிர்ஷ்டமா! அவன் மனத்தில் ஒரு திட்டம் உருவாயிற்று.

"போய் அந்த ட்ரேஸியை இங்கே அழைத்து வா," என்றான்.

*ட்ரேஸி வந்தாள்.*

*"கள்ள நோட்டு அச்சடிப்பதில் நானும் நீயும் கூட்டாளி களாக இருக்கப் போகிறோம்," என்றான் கிராஞ்சியர்.*

*ட்ரேஸி சட்டென்று எழுந்து கொண்டாள். "கூட்டாளியா! நான் எந்தக் கூட்டாளியையும் சேர்த்துக் கொள்ளத் தயாராக இல்லை!" என்றாள்.*

## 62

*ட்ரேஸி சொன்னதைக் கேட்டுக் கிராஞ்சியர் அசந்து விடவில்லை.*

*"இதோ பார், இது என்னுடைய ஊர்," என்றான் அவன். "இங்கே ஒரே ஒரு கள்ள நோட்டை மாற்ற முயன்றால் போதும். மறு வினாடி உன்னைக் கைது செய்யப் போலீஸ் வரும். அதற்கப்புறம் என்ன ஆகும் தெரியுமா? அழகான பெண் என்றால் எங்கள் ஊர் சிறையில் விடவே மாட்டார்கள். நீ சட்னி தான்: என் உதவி இல்லாமல் இந்த ஊரில் சுண்டு விரலைக்கூட அசைக்க முடியாது."*

*அவன் சொல்வது உண்மை தான் என்று பட்டது ட்ரேஸிக்கு.*

*"சரி, இப்போது சொல்லு. இந்த நோட்டுக்கான பிளேட் - அச்சு - எங்கேயிருந்து கிடைத்தது?" என்றான் அவன்.*

*வேண்டா வெறுப்பாய்ப் பதிலுரைத்தாள் ட்ரேஸி. "ஸ்விட்ஜர்லந்தில் இருக்கும் ஒரு அமெரிக்கன் கொடுத்தான். அமெரிக்காவின் நாணயச் சாலையில், நோட்டடிக்கும் அறையில் இருபத்தைந்து வருஷம் வேலை செய்தவன் அவன். ஆனால் அவன் ரிடையரானபோது அவனுக்குச் சரிவரப் பென்ஷன் தொகை கிடைக்கவில்லை. அந்தக் கோபத்தில் பழிக்குப் பழி வாங்கத் தீர்மானித்து நூறு டாலர்*

நோட்டுக்கான அச்சைத் திருடி வந்துவிட்டான். நோட்டு அச்சடிக்கும் காகிதம் எங்கே கிடைக்கிறது என்பதையும் தெரிந்து வைத்துக்கொண்டான்..."

கிராஞ்சியரின் பரபரப்பு அதிகரித்தது. "உன்னிடமிருக் கும் யந்திரம் ஒரு நாளைக்கு எத்தனை நோட்டு அச்சடிக்கும்?"

"ஒரு மணி நேரத்துக்கு ஒரு நோட்டு அடிக்கும். தாளின் ஒவ்வொரு பக்கத்தையும் சரிபண்ணி-"

கிராஞ்சியர் குறுக்கிட்டான். "இன்னும் வேகமாக அடிக்கும் யந்திரம் இல்லையா...?"

"இருக்கிறது. அந்த அமெரிக்கன் இன்னொரு அச்சு யந்திரம் வைத்திருக்கிறான். அது எட்டு மணி நேரத்தில் ஐம்பது நோட்டு அச்சடிக்கும். அதாவது. ஒரு நாளைக்கு ஐயாயிரம் டாலர். ஆனால் அதன் விலை ஐந்து லட்சம் டாலர் என்கிறான்!"

"வாங்க வேண்டியதுதானே?"

"ஐந்து லட்சம் டாலர் என்னிடம் இல்லை."

"என்னிடம் இருக்கிறது. எவ்வளவு நாளில் அது வந்து சேரும்?"

ட்ரேஸி தயக்கத்துடன் "வந்து... என்னவென்றால்... என்று இழுத்தாள்.

கிராஞ்சியர் டெலிபோனை எடுத்து யாரையோ கூப்பிட்டான். "லூயி, ஐயாயிரம் டாலர் - பிரெஞ்சு நாணயத் தில் உடனே வேண்டும். பெட்டகத்தில் எத்தனை இருக்கிறதோ அதை எடுத்துக்கொள். மீதியைப் பாங்க்கிலி ருந்து வாங்கிக் கொள். நான் இங்கே ஆபீசில் இருக்கிறேன். சீக்கிரம் எடுத்து வா."

ட்ரேஸி சங்கடத்துடன் எழுந்து கொண்டாள். "நான் போய்விட்டு அப்புறம் வருகிறேன்..."

"நீ எங்கேயும் போகக் கூடாது."

"இல்லை நிஜமாகவே..."

"உட்காரென்றால் கம்மென்று உட்கார்," என்றான் கிராஞ்சியர்.

இரண்டு மணி நேரத்தில ஒரு பெரிய பை நிறைய அவன் கேட்ட பணம் வந்து சேர்ந்தது.

உடனே போனை அவள் பக்கமாக நகர்த்தினான். "அந்த ஸ்விட்ஜர்லாந்து ஆளுக்குப் போட்டு அந்தப் பெரிய யந்திரத்தை வாங்கிக் கொள்கிறேன் என்று சொல்லு."

"அவனோட போன் நம்பர் ஓட்டலில் வைத்திருக்கிறேன். அங்கே போய்ப் பேசுகிறேன். உங்களுடைய வீட்டு விலாசம் சொல்லுங்கள். அச்சு மெஷினைக் கப்பலில் அனுப்பும்படி சொல்கிறேன்."

"கப்பல் வேண்டாம்." என்றான் கிராஞ்சியர். "எனக்கு அது எப்படி வந்தது என்கிற விவரம் யாருக்கும் தெரியக் கூடாது. ஆகவே விமானத்தில் அனுப்பச் சொல்லு. விமான நிலையத்தில் அதைப் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்கிறேன். இன்று ராத்திரி சாப்பாட்டின் போது நாம் அந்த ஏற்பாடு களைப் பேசுவோம். சரியாய் ராத்திரி எட்டு மணிக்கு நான் உன் ஓட்டலுக்கு வருகிறேன்."

ட்ரேஸி எழுந்து கொண்டாள்.

சாக்குப் பையைச் சுட்டிக் காட்டினான் கிராஞ்சியர். "பணம் பத்திரம். அதற்கு ஏதாவது நேர்ந்தால் கூடப் பரவாயில்லை. உனக்கு ஒன்றும் நேரக் கூடாது. அதுதான் எனக்கு முக்கியம்."

"நான் ஜாக்கிரதையாக இருக்கிறேன்," என்றவாறு ட்ரேஸி உறுதியளித்தாள்.

அவன் புன்னகை செய்தான். "சரி, ஓட்டல் வரை உனக்குத் துணையாகப் புரொபசர் வருவார்."

**கி**ராஞ்சியர் ஆனந்தத்தில் மிதந்து கொண்டிருந்தான்.

இன்னேரம் அந்தப் பெரிய அச்சு யந்திரத்துக்கு ஆர்டர் கொடுத்திருப்பாள் ட்ரேஸி. ஒரு நாளைக்கு 5000 டாலர்

அச்சடிக்கலாம் என்று அந்தப் பெண்பிள்ளை சொல்கிறாள். ஆனால் மூன்று ஷிப்டு வைத்து இருபத்து நாலு மணி நேரம் அடிக்கிற மாதிரி செய்தால் ஒரு நாளைக்கு 15,000 டாலர் அச்சடிக்க் முடியும். அதாவது ஒரு வாரத்திற்கு ஒரு லட்சம் டாலர்... பத்து வாரத்தில் பத்து லட்சம்...

டாணென்று மணி எட்டு அடித்ததும் கிராஞ்சியரின் படகுக் கார் ட்ரேஸி தங்கியிருந்த ஓட்டலுக்குள் நுழைந்தது.

நேரே வரவேற்பறை குமாஸ்தாவிடம் சென்றான். "மார்கரெட் சீமாட்டியிடம் நான் வந்திருக்கிறேனென்று சொல்லு," என்றான்.

குமாஸ்தா நிமிர்ந்து பார்த்து, "சார், சீமாட்டி அறையைக் காலி செய்துவிட்டுப் போய்விட்டாளே?" என்றான்.

அதிர்ச்சி ஏற்பட்டது கிராஞ்சியருக்கு. "எப்போ போனாள்?"

"எங்கேயோ வெளியே போய் விட்டுத் திரும்பி வந்தாங்க. வந்ததுமே, பில்லைத் தன் அறைக்கு அனுப்பும்படி சொன்னாங்க. ஓட்டல் பாக்கியை ரொக்கமாய்க் கொடுத்துக் கணக்குத் தீர்த்தாங்க."

கிராஞ்சியரின் மூளை வேகமாய்க் கணக்குப் போட்டது. "ரொக்கமாகவா தந்தாள்? பிரெஞ்சு நாணயத்தில்?"

"ஆமாம் சார்."

கிராஞ்சியர் வெறிபிடித்த மாதிரி கத்தினான். "அவளுடைய பெட்டிகள்? ப்ரீஃப் கேஸ்கள்? அதெல்லாம் எடுத்துப் போனாளா?"

"இல்லை சார். பிறகு ஆளனுப்பி எடுத்துக்கொண்டு போவதாகச் சொன்னாங்க."

"அவள் அறைக்கு என்னை அழைத்துப் போ!" என்று கத்தினான்.

"இதோ சார்." சட்டத்தில் மாட்டியிருந்த சாவியைச் சரேலெனப் பறித்து லிப்டை நோக்கி முன்னால் ஓடினான் குமாஸ்தா.

புரொபசரைத் தாண்டிச் செல்கையில் கிராஞ்சியருக்கு அளவு மீறிக் கோபம் வந்தது. "ஏய் இடியட்! இங்கே எதற்கு உட்கார்ந்திருக்கிறாய்? அந்தப் பெண்பிள்ளை போயாச்சு!"

புரொபசர் திகைப்புடன் அவனைப் பார்த்தார். "போயிருக்க முடியாது சார். இந்த வழியாய் அவள் போகவில்லை. நான் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன்!"

"நீ கவனித்த லட்சணம்! நர்ஸ் - கிழவி - வேலைக்காரி - இப்படி யாராவது போனதைப் பார்த்தாயா?"

"கிழவி - நர்ஸ் - எதற்கு?"

"ஏதோ ஒரு மாறுவேடத்தில் அவள் நழுவிவிட்டாள். சரி, சரி. வந்து கவனிக்கிறேன் உன்னை." என்ற கிராஞ்சியர் ட்ரேஸியின் அறையை அடைந்தான்.

முன்பு பார்த்த மாதிரி அப்படியே இருந்தது அறை. பக்கத்து அறையின் கதவு திறந்திருந்தது. வேகமாக அங்கே சென்றான். அதற்குள்ளிருந்த சிறிய அறையின் கதவை மடேரென்று திறந்தான் -

நல்லவேளை, அந்தச் சின்ன அச்சு யந்திரம் அப்படியே இருந்தது.

"ஓகோ, ஓடுகிற அவசரத்தில் இதை மறந்து விட்டாள் போலிருக்கிறது. இருக்கட்டும், இருக்கட்டும்! எங்கே போய் விடுவாள், பார்த்து விடுகிறேன்,' என்று பல்லைக் கடித்தான். ஐந்து லட்சம் டாலர் என்னை ஏமாற்றி எடுத்துப் போயிருக்கிறாள்! அதை வட்டியும் முதலுமாயத் திருப்பி வாங்காவிட்டால் என் பெயர் கிராஞ்சியர் இல்லை! போலீசில் சொல்லி அவளைக் கண்டுபிடித்துச் சிறையில் அடைப்பேன். சிறையில் என் ஆட்கள் இருக்கிறார்கள். அவளை ஓசைப் படாமல் தீர்த்துக்கட்ட அவர்களுக்குத் தெரியும்! ஆனால்

சாகடிப்பதற்குமுன் அந்த ஸ்விட்ஜர்லந்துக்காரனின் விலாசத்தை அவளிடம் வாங்கிக்கொண்டு விடுவார்கள்...!

போலீஸ் தலைமையகத்துக்குப் போன் செய்தான். அவனுக்குத் தெரிந்த இன்ஸ்பெக்டரைக் கூப்பிட்டு, விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லிவிட்டு, "நான் இங்கே காத்திருக்கிறேன். சீக்கிரம் வாருங்கள்." என்றான்.

பதினைந்து நிமிடத்துக்கெல்லாம் இன்ஸ்பெக்டர் வந்து சேர்ந்தார். அவருடன் கூடவே ஓர் இளைஞனும் வந்தான்.

"இவர் பெயர் கூப்பர்," என்று கிராஞ்சியருக்கு அவனை அறிமுகம் செய்து வைத்தார் இன்ஸ்பெக்டர். "நீங்கள் ஒரு பெண்ணைப் பற்றிச் சொன்னீர்களே, அவளைத்தான் இவரும் தேடிக் கொண்டிருக்கிறார். அதனால்தான் என்னுடன் வந்திருக்கிறார்."

கூப்பர் கேட்டான்: "அந்தப் பெண் கள்ள நோட்டு அச்சடிக்கிறாள் என்று இன்ஸ்பெக்டரிடம் சொன்னீர் களாமே?"

"ஆமாம். இப்போது அவள் ஸ்விட்ஜர்லந்துக்குப் போய்க் கொண்டிருக்கிறாள். எல்லையில் அவளைப் பிடித்து விடலாம். அவளுக்கு எதிரான அத்தனை சாட்சியமும் இதோ இங்கேயே இருக்கின்றன!" என்ற கிராஞ்சியர் அவர்களை அந்தச் சின்ன அறைக்கு அழைத்துச் சென்றான். அவர்கள் எட்டிப் பார்த்தார்கள்.

"அதோ அவள் கள்ள நோட்டு அச்சடித்த யந்திரம்," என்றான் கிராஞ்சியர்.

கூப்பர் அதன் அருகில் சென்று பரிசோதித்தான். "இதிலா அவள் நோட்டு அச்சடித்தாள்?"

"அதுதான் சொன்னேனே, காதில் விழவில்லையா?" என்று கிராஞ்சியர் வெடித்தான். பையிலிருந்து ஒரு நோட்டை வெளியே எடுத்தான். "இதோ பாருங்கள். அவள் எனக்குக் கொடுத்த கள்ள நோட்டில் ஒன்று."

கூப்பர் ஜன்னலருகே சென்று வெளிச்சத்தில் தூக்கிப் பிடித்துப் பார்த்தான். "இதைக் கள்ள நோட்டு என்று யார் சொன்னது? இது அசல் நோட்டு!"

"ஆமாம்! பார்ப்பதற்கு அசல் நோட்டு மாதிரியே இருக்கும். ஆனால்..."

"நீ ஒரு அடிமடையன்!" என்று முரட்டுத்தனமாகச் சொன்னான் கூப்பர். "இது ரொம்பச் சாதாரணமான அச்சு யந்திரம். லெட்டர் ஹெட் தாள்கள் தான் இதில் அடிக்கலாம்."

"லெட்டர்ஹெட் தாளா?" கிராஞ்சியருக்கு அந்த அறையே சுழன்றது.

"இந்த யந்திரத்தில் நூறு டாலர் நோட்டு அடிக்கலாமென்று அவள் கதை விட்டிருக்கிறாள்! நீ நம்பியிருக்கிறாய்!"

"இல்லையே! நான் என் கண்ணாலே பார்த்தேனே," என்று ஆரம்பித்த கிராஞ்சியர் சட்டென்று நிறுத்திக் கொண்டான்.

என்ன பார்த்தான் அவன்? கயிற்றில் தொங்கிக் கொண்டிருந்த சில ஈரமான நோட்டு, சில வெற்றுத்தாள். ஒரு காகிதம் வெட்டுகிற மெஷின்...

தான் எவ்வளவு பெரிய மோசடியில் ஏமாந்து போனோம் என்று அவனுக்கு இப்போதுதான் புரிந்தது.

கள்ள நோட்டு எதுவுமே கிடையாது! ஸ்விட்ஜர்லாந்தில் அச்சடிக்கிற ஆள் யாரும் கிடையாது!

கப்பலில் போய்த் தங்கப் புதையல் எடுக்கப் போகிறோம் என்கிற கதையில் ட்ரேஸி துளியும் ஏமாறவில்லை. ஏமாந்த மாதிரி காட்டிக் கொண்டு, இவனையே ஐந்து லட்சம் டாலர் பறிகொடுக்கும்படி பண்ணி விட்டாள்!

இதையெல்லாம் சொல்லப் போனால் நாமே மாட்டிக் கொள்வோம்...

இருவரும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். "என்ன கிராஞ்சியர், இந்தப் பெண்பிள்ளை மீது வேறு ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிறீர்களா?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

'என்னத்தை எடுப்பது? என்ன சொல்ல முடியும்? கள்ள நோட்டு அச்சடிப்பதற்கு முதல் கொடுத்து ஏமாந்ததாகச் சொல்ல முடியுமா?'

"இல்லை... வந்து... நான் கம்ப்ளெயிண்ட் எதுவும் கொடுக்கப்போவதில்லை." என்றான் கிராஞ்சியர்.

கூப்பர் தன்னுள் நினைத்துக் கொண்டான்: 'ட்ரேஸி! இந்த முறை தப்பி விட்டாய்! இருக்கட்டும். அடுத்த முறை உன்னைப் பிடிக்காமல் விடமாட்டேன்!'

## 63

மஜோர்க்கா தீவில் ஏராளமான குகைகள் இருந்தன. டூரிஸ்டுகளை வழிகாட்டிகள் அழைத்துச் சென்று, வளைந்து வளைந்து செல்லும் குகைப் பாதைகளையும், நீர் சொட்டச் சொட்ட விசித்திர விசித்திரமாக அமைந்திருக்கும் பாறை வடிவங்களையும் காட்டுவது வழக்கம்.

உல்லாசப் பிரயாணிகளின் கூட்டத்தோடு கூட்டமாக ட்ரேஸி சென்று கொண்டிருந்தாள்.

அவளுடைய நடவடிக்கைகளைச் சர்வதேசப் போலீஸ் கண்காணித்து வந்தது. முக்கியமாக, கூப்பர் அவளைத் தேடிக் கொண்டிருந்தான்.

இந்த ஊருக்கு அவள் வந்திருக்கிறாள் என்று நிச்சயமாய்த் தெரிந்தது. ஆனால் கூட்டத்தில் கலந்து விட்ட அவளைக் காண முடியவில்லை.

அந்தக் குகைகளின் அருகில் ஒரு வட்டமான மைதானம் இருந்தது. சுற்றிப் பல சிமெண்ட் ஆசனங்கள் அடுக்கு மேல்

அவர் மேலும் குனிந்து அவள் காதில் கிசுகிசுத்தார். "இந்த வேலையைச் செய்ய ரொம்பப் புத்திசாலித்தனம் வேண்டும். அது உன்னால் தான் முடியும் ட்ரேஸி."

"ரொம்பப் புகழ்கிறீர்கள் என்னை! எவ்வளவு பணம் தருவான் என்று சொன்னீர்கள்? ஐந்து லட்சமா?"

"சுளையாய்."

ட்ரேஸி ஒப்புக் கொண்டாள்.

குகைகளிலிருந்து வெளியே வரும் வழியில் ஒவ் வொருவரையும் கூப்பர் கவனித்தவாறு இருந்தான்.

ட்ரேஸி வருவதைக் கவனித்தான்.

'தனியாக வருகிறாளே! கூட்டாளி யாருமில்லையா?' என்று எண்ணிக் கொண்டான்.

மாட்ரிட் நகரிலுள்ள ரிட்ஸ் ஓட்டல் ஸ்பெயின் நாட்டிலேயே மிகச் சிறந்தது என்று கருதப்பட்டது. ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக, எவ்வளவோ ஜனாதிபதிகள், சர்வாதிகாரிகள், கோடீஸ்வரர்கள் பலரும் வந்து அந்த ஓட்டலில் தங்கியிருக்கிறார்கள்.

ட்ரேஸியும் அங்கேதான் தங்க ஏற்பாடு செய்திருந்தாள்.

ஓட்டலின் உதவி மானேஜர் அவளை அவளுடைய அறைக்குக் கொண்டு வந்துவிட்டு, "தங்களுக்குத் திருப்தியாக இருக்குமென்று நினைக்கிறேன், மேடம்," என்றார்.

ட்ரேஸி ஜன்னலை நெருங்கி வெளியே பார்த்தாள். நேர் கீழே, எதிர் சாரியில் ப்ராடோ மியூசியம் தெரிந்தது.

"தாங்க்ஸ். அறை நன்றாயிருக்கிறது." என்று சொல்லி உதவி மானேஜருக்கு விடை கொடுத்தனுப்பினாள்.

இரவுச் சாப்பாட்டைத் தன் அறைக்கே வரவழைத்துக் கொண்டு சாப்பிட்டாள். பிறகு படுக்கையில் படுத்தாள். புராதன காலத்து ராஜாக்களுக்காகச் செய்யப்பட்ட வேலைப்பாடுகள் நிறைந்த கட்டில் அது. 'தூக்கம் அவ்வளவுதான்!' என்று தோன்றியது.

அடுக்காகப் போடப்பட்டிருந்தன. அரையிருளில் இசை நிகழ்ச்சி ஆரம்பமாகிக் கொண்டிருந்தது.

ட்ரேஸி ஒவ்வோர் இருக்கையின் எண்களையும் பார்த்தபடி சென்றாள். பத்தாவது அடுக்கை அடைந்து இருபதாவது எண் இருக்கையில் உட்கார்ந்தபோது, இருபத்தொன்றாவது இருக்கையில் இருந்த ஆள், "ஒன்றும் பிரசினை இல்லையே ட்ரேஸி?" என்றார்.

"இல்லை கந்த்தர்," என்றாள் ட்ரேஸி.

"உன்னை யாராவது பின்தொடர்ந்து வரக்கூடும். அதனால் தான் நாம் இருவரும் சேர்ந்து எங்கேயும் போக வேண்டாம் என்று சொல்லியிருக்கிறேன்."

ட்ரேஸி சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டாள். கூட்டம் நிரம்பி வழிந்தது. அந்தக் கூச்சலில் அவர்கள் பேச்சு யார் காதிலும் விழாது, "எந்தப் பயமுமில்லை. இந்த இடத்துக்கு, இந்த நேரத்துக்கு என்னை எதற்கு வரச் சொன்னீர்கள்? மிக முக்கியமான விஷயமாகத்தான் இருக்கும். இல்லையா?"

"ஆமாம்," கந்த்தர் அவள் பக்கமாகச் சாய்ந்து மெதுவே பேசினார். "ஒரு கோடீஸ்வரன். அவனுக்குப் புகழ்பெற்ற ஓவியர் கோயா தீட்டிய ப்யூர்டோ என்ற ஓவியம் வேண்டு மாம். அதை யார் எடுத்து வந்து தந்தாலும் ஐந்து லட்சம் டாலர் தருவதாகச் சொல்கிறான். ரொக்கமாக ஐந்து லட்சம்! என் கமிஷன் தனி."

ட்ரேஸி யோசனையுடன் சொன்னாள்: "வேறு சிலரும் முயற்சி பண்ணிக் கொண்டிருப்பார்களே?"

"ஆமாம். ஆனால் அவர்களுக்கு வெற்றி கிடைப்பது கஷ்டம். நீதான் சரியான ஆள்."

"எங்கே இருக்கிறது அந்த ஓவியம்?"

"மாட்ரிட் நகரில் - ப்ராடோ மியூசியம்."

'ப்ராடோ மியூசியமா? நடவாத காரியம்!' என்பதுதான் ட்ரேஸிக்குத் தோன்றிய முதல் எண்ணம்.

ஓட்டலின் முன்னறையில் ரகசியப் போலீஸ் ஆள் உட்கார்ந்திருந்தான். நள்ளிரவு நேரம். அடுத்த ஷிப்ட் போலீஸ்காரன் வந்து சேர்ந்ததும், "அந்தப் பெண்பிள்ளை இதுவரை தன் அறையை விட்டு வெளிவரவில்லை. தூங்கப் போய்விட்டாள்." என்று அவனுக்குத் தெரிவித்தான் முதல் ஷிப்ட் போலீஸ்காரன்.

முந்தின நாள்தான் -

மாட்ரிட் நகரப் போலீஸ் இலாகாவுக்குச் சர்வதேசப் போலீஸிலிருந்து செய்தி வந்திருந்தது.

'ட்ரேஸி என்ற கெட்டிக்காரியான கிரிமினல் பெண் பிள்ளை அங்கே வருகிறாள். அவளைப் பிடிப்பதற்காக, அமெரிக்கத் துப்பறியும் நிபுணரான கூப்பர் என்பவர் உங்களுடன் தொடர்பு கொள்ளுவார். அவருக்கு எல்லா உதவிகளும் செய்து கொடுக்கவும்.'

கூப்பர் வந்தவுடனேயே, கமிஷனரிடம், "ஐரோப்பாவில் அரைடஜன் போலீஸ் இலாகாக்களை முட்டாளாக்கிய அந்த ட்ரேஸி உங்களையும் அப்படித்தான் செய்யப் போகிறாள்." என்று சொன்னான்.

கமிஷனர் தன் கோபத்தை அடக்கிக் கொண்டு. "மிஸ்டர் கூப்பர். இன்று காலை விமான நிலையத்தில் இறங்கிய நிமிடம் முதல் என் ஆட்கள் அந்த ட்ரேஸியைக் கண் காணித்து வருகிறார்கள். என்ன வேலையாக அவள் இங்கே வந்திருக்கிறாள்?" என்றார்.

"நிச்சயமாய்த் தெரியவில்லை. ஆனால் ஒன்று. அது அற்ப சொற்பமான வேலை அல்ல என்பது மட்டும் நிச்சயம்," என்றான் கூப்பர்,

**கா**லையில் ட்ரேஸி கண் விழித்தபோது முந்தின இரவு சரியான தூக்கமில்லாததால் உடம்பெல்லாம் வலித்தது. காலைச் சிற்றுண்டியைத் தன் அறைக்கே வரவழைத்துச் சாப்பிட்ட பிறகு, ஜன்னலுக்குச் சென்று ப்ராடோ மியூசியத்தைக் கவனித்தாள். இரண்டு பிரம்மாண்டமான

தூண்களுக்கிடையில் இருக்கும் படிகளும் பிரதான நுழை வாயிலும் தென்பட்டன. தெரு மட்டத்தில் இரண்டு சிறிய நுழைவாயில்கள் இருந்தன. பள்ளிக் குழந்தைகளும் உல்லாச யாத்திரிகர்களும் அங்கே வரிசையாக நின்றனர். சரியாய் மணி பத்தடித்ததும் காவலர்கள் கதவைத் திறக்க, சுழல் கதவு வழியே அவர்கள் ஒவ்வொருவராய் உள்ளே சென்றார்கள்...

ட்ரேஸி அதைப் பார்த்துக் கொண்டிருந்த சமயம் டெலிபோன் அடித்தது. அவள் திகைத்தாள். இங்கே அவள் தங்கியிருப்பது கந்த்தரைத் தவிர யாருக்கும் தெரியாதே?

"ஹலோ," என்றாள்.

"வணக்கம் சீமாட்டி அவர்களே, மாட்ரிட் வர்த்தக சபையின் சார்பாகத் தங்களை வரவேற்கிறேன். தங்களுக்கு என்ன உதவி தேவைப்பட்டாலும் செய்து தரும்படி எனக்குச் சொல்லியிருக்கிறார்கள்..."

அந்தக் குரலையும் அதில் தொனித்த கிண்டலையும் புரிந்து கொண்டாள் ட்ரேஸி. "நான் மாட்ரிட்டுக்கு வந்திருப்பது உனக்கு எப்படித் தெரியும் ஜெஃப்?"என்றாள்.

"தாங்கள் மாட்ரிட்டுக்கு வருகை தருவது இதுதான் முதல் தடவையா, மேடம்?"

"ஆமாம்."

"அப்படியானால் தங்களுக்கு இந்த ஊரில் எல்லா இடங்களையும் நான் காட்டுகிறேன். எத்தனை நாள் இங்கே தங்கப் போகிறீர்கள்?"

"நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. சும்மா ஊர் சுற்றிப் பார்க்கத் தான் நான் வந்திருக்கிறேன். நீ என்ன வேலையாக வந்திருக்கிறாய்?"

"நானும் சும்மா ஊர் சுற்றிப் பார்க்கத்தான்," என்றான் ஜெஃப்.

அவன் சொல்வது பொய் என்று ட்ரேஸி ஊகித்தாள். அவள் என்ன வேலையாக இங்கே வந்திருக்கிறாளோ அதே

*வேலையாகத்தான் அவனும் இங்கே வந்திருக்கிறான்-மியூசியத்திலிருந்து கோயாவின் புகழ் பெற்ற ஓவியத்தைத் திருடுவதற்காக!*

'இன்றிரவு என்னுடன் விருந்துண்ண வா, ட்ரேஸி," என்று ஜெஃப் அழைத்தான். அவளால் மறுக்க முடியவில்லை.

அவன் குறிப்பிட்டிருந்த ஓட்டலை அடைந்தபோது ட்ரேஸிக்காக ஜெஃப் வாசலிலேயே காத்திருந்தான். ஏன் தன்னையும் அறியாமல் மனம் இவனிடம் செல்கிறது என்பதை எண்ணி ட்ரேஸிக்கு ஆச்சரியமாயிருந்தது. அவன் ரொம்ப அழகாக இருக்கிறான் என்று அவளுக்குத் தோன்றியது. 'அதற்குக் காரணம், ஒரே தொழிலில் ஒருவருக்கொருவர் போட்டியாக இருப்பதுதானோ?' என்று நினைத்தாள்.

'ஆனால் நான்தான் ஜெயிக்கப் போகிறேன், ஜெஃப். எனக்கு முன்னால் நீ அதைத் திருடிச் செல்ல இடம் கொடுக்கப் போவதில்லை!" என்று அவள் எண்ணம் ஓடியது.

"ட்ரேஸி, ஒரு விஷயம் காதில் விழுந்தது," என்றான் ஜெஃப் "உன்னை நான் எச்சரிக்க வேண்டும். கூப்பர் என்று ஓர் ஆளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா? அமெரிக்க இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்காக வேலை செய்யும் துப்பறியும் நிபுணன்."

"என்ன அவனுக்கு?"

"அவன் ரொம்ப ஆபத்தானவன். அவனால் உனக்கு எந்தக் கெடுதலும் ஏற்படக் கூடாது..."

"கவலைப்படாதே," என்றாள் ட்ரேஸி.

"இல்லை, ட்ரேஸி. உன்னைப் பற்றி எனக்குக் கவலை தான்."

ட்ரேஸி சிரித்தாள். "என்னைப் பற்றியா? ஏன்?"

அவன் அவள் கையைப் பற்றினான். "ஏனென்றால், என் வாழ்க்கைக்கே அர்த்தம் கொடுக்கிறவள் நீ. உன்னை நான் காதலிக்கிறேன்."

ட்ரேஸி பேச்சை மாற்றினாள். "பசிக்கிறது. சீக்கிரம் சாப்பாடு வரவழை."

அடுத்த சில நாட்கள் ட்ரேஸியும் ஜெஃப்பும் சேர்ந்தே ஊர் சுற்றினார்கள். கடைகளுக்குப் போனார்கள். கண்காட்சிக ளைப் பார்த்தார்கள்.

ஆனால் அவர்கள் எங்கே போனாலும் மாட்ரிட் நகர ரகசியப் போலீசார் இருவர் அவர்கள் பின்னாலேயே சென்றார்கள். கூடவே கூப்பரும் சென்றான்.

ட்ரேஸியுடன் சதா ஒட்டிக் கொண்டிருக்கும் ஜெஃப்பைப் பற்றித் தான் கூப்பருக்கு ஒன்றும் புரியவில்லை. யார் அவன்? அடுத்தாற் போல் ட்ரேஸியிடம் பலியாகப் போகிற ஏமாளியா? அல்லது இரண்டு பேருமாகச் சேர்ந்து கொள்ளை நடத்தத் திட்டம் போட்டிருக்கிறார்களா?

அன்று காலை பத்து மணிக்கு மியூசியம் திறந்தபோது, நீண்ட க்யூவில் ட்ரேஸியும் ஒருத்தியாக நின்று உள்ளே நுழைந்தாள்.

விலையுயர்ந்த பல வகையான ஓவியங்கள் ஒவ்வோர் அறையிலும் நிறைந்திருந்தன. எல்லா இடங்களிலும் பலத்த காவல் போடப்பட்டிருந்தது. கோயாவின் படங்கள் இருந்த அறையிலும் அப்படித்தான்.

அறை வாசலில் யூனிபார்ம் தரித்த காவலாள் நின்றிருந் தான். அவனுடைய முழங்கைக்கு அருகே ஒரு சிவப்புப் பொத்தான் இருந்தது. அதை அவன் அழுத்தினால் அலாரம் ஒலிக்கும் என்பதும் அந்த வினாடியே மியூசியத்தின் எல்லாக் கதவுகளும் சாத்தப்பட்டு விடும் என்பதும் ட்ரேஸிக்குத் தெரியும்.

கோயாவின் ஓவியங்களை ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டே மெல்ல நகர்ந்தாள் ட்ரேஸி.

அதோ, 'ப்யூரிடோ' என்ற ஓவியம்!

அழகழகான ஆண்களும் பெண்களும் உட்கார்ந்திருக்க, பின்னணியில் மூடு பனியும், துறைமுகமும், மீன்பிடி கப்பல் களும், எட்டத்தில் ஒரு கலங்கரை விளக்கமும்... அற்புதமான ஓவியம்.

அடியில், இடது பக்க ஓரமாக ஓவியர் கோயாவின் கையெழுத்து இருந்தது.

இந்த ஓவியம்தான்... இதைத் திருடிச் சென்றால் ஐந்து லட்சம் டாலர்!

ட்ரேஸி சுற்று முற்றும் பார்த்தாள். அறை வாசலில் ஒரு காவலாள் வெளியே வெராந்தாவில் மேலும் பல காவலாட்கள்...

போலீஸ் கமிஷனர் ராமிரோவிடம் கூப்பர் சொன்னான்: "ட்ரேஸியின் திட்டம் தெரிந்துவிட்டது. உங்கள் ப்ராடோ மியூசியத்திலிருந்த ஏதோ ஓர் ஓவியத்தை அவள் திருடப் போகிறாள்."

"என்னது! ப்ராடோ மியூசியத்திலிருந்தா! திருட்டா! யாராலும் முடியாது! முடியவே முடியாது!" என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்னார் போலீஸ் கமிஷனர்.

## 64

ப்ராடோ மியூஸியத்திலிருந்து ஓர் ஓவியத்தைத் திருடத்தான் ட்ரேஸி வந்திருக்கிறாள் என்பதைத் துளியும் நம்பத் தயாராயில்லை அந்தப் போலீஸ் கமிஷனர்.

"அந்தப் பெண் சும்மா ஊர் சுற்றிப் பார்க்கத்தான் இங்கே வந்திருக்கிறாள். அவளைப் பின் தொடரும்படி ரகசியப் போலீஸ் அமர்த்தியிருப்பதைக்கூட வாபஸ் வாங்கிவிடப் போகிறேன்," என்றார்.

கூப்பருக்கு ஒரே அதிர்ச்சி. "அப்படியானால் நானே ஒண்டியாய் இந்த வேலையைச் செய்கிறேன்," என்றான்.

"தாராளமாக," என்றார் கமிஷனர்.

ட்ரேஸி தன் ஒட்டல் அறையிலிருந்து மியூசியத்தின் மாடியைப் பார்த்த வண்ணமே இருந்தாள்.

யாரும் புக முடியாத எஃக்குக் கோட்டையாக அது தோன்றியது. இரவெல்லாம் பெரிய பெரிய ஸெர்ச் லைட்டுகள் அந்தக் கட்டிடத்தைச் சுற்றிக் கொண்டிருந்தன. உள்ளே மர்ம ஒளிக் கதிர்கள் கழுகுக் கண்படைத்த காவலர்கள்.

மறுநாளும் மியூசியத்தை அடைந்தாள். மெல்லப் பார்வையிட்டபடி நடந்தாள். காவலர்கள் விறைப்பாக நிற்பதையும், ஓவியம் கற்கும் மாணவர்கள் முக்காலிகளில் உட்கார்ந்து கொண்டு தங்கள் முன்னுள்ள பிரபல ஓவியங்களைப் பார்த்து நகல்கள் வரைந்து கொண்டிருப்பதையும், மக்கள் கூட்டம் கூட்டமாகப் போவதையும் வருவதையும் கண்ணுற்றவாறு நடந்த போது-

திடீரென்று அவளுக்கு வழி புலப்பட்டுவிட்டது!

ட்ரேஸி ஒரு பப்ளிக் டெலிபோன் கூண்டிலிருந்து போன் செய்தாள்.

எட்டத்தில் நின்றிருந்த துப்பறியும் நிபுணன் கூப்பர் தவித்தான். அவள் யாருடன் பேசுகிறாள், என்ன பேசுகிறாள் என்பதை அறிய முடியாமல். வெளி நாட்டில் யாரிடமோ பேசுகிறாள் என்பதை மட்டும் அவனால் ஊகிக்க முடிந்தது.

அங்கே ட்ரேஸி பேசி முடிக்கையில், "நீங்கள் அனுப்புகிற ஆள் ரொம்ப ஸ்பீடாய் வேலை செய்கிறவனாக இருக்க வேண்டும். அவனுக்கு இரண்டே நிமிடம் தான் அவகாசம் இருக்கும். அதற்குள் வேலையை முடிக்க வேண்டும். புரிகிறதா?" என்று சொல்லி டெலிபோனை வைத்தாள்.

இரண்டு நாள் கழித்து, காலை ஒன்பது மணி சுமாருக்கு நகரத்தின் மிக அழகான பூங்காவில் ஒரு பெஞ்சில் அமர்ந்திருந்தாள் ட்ரேஸி.

சீஸர் என்பவன், கையில் ஒரு சின்னக் காகிதப் பையுடன் அங்கே வந்தான். சற்றே கூனல் விழுந்தவன். வயதானவன். நரைத்த தலை.

ட்ரேஸிக்குப் பக்கத்தில் உட்கார்ந்தவன், காகிதப் பையைப் பிரித்து அதிலிருந்த ரொட்டித் துண்டுகளை இறைத்தான். பறவைகள் ஆவலுடன் வந்து கொத்தித் தின்ன ஆரம்பித்தன.

"வணக்கம் மேடம்," என்றான் அவள் பக்கம் தலையைத் திருப்பாமலே.

"வணக்கம். பிரசினை எதுவும் இல்லையே?" என்றாள் ட்ரேஸி.

"எதுவுமில்லை, மேடம். நீங்கள் நாளும், நேரமும் சொல்ல வேண்டியதுதான் பாக்கி."

"இன்னும் நிச்சயம் பண்ணவில்லை. பண்ணியதும் சொல்கிறேன்," என்று கூறிவிட்டு ட்ரேஸி எழுந்து ஓயிலாக ஒடந்தாள்.

அவள் பூங்காவில் உட்கார்ந்திருந்த அதே சமயம் கூப்பர் அவளுடைய ஓட்டல் அறையில் திருட்டுத்தனமாக நுழைந்து குடைந்து கொண்டிருந்தான்.

ஏதோ ஓர் ஓவியத்தைக் களவாடுவதுதான் ட்ரேஸியின் திட்டம் என்று அவன் உறுதியாக நம்பினான். திருடப் போகும் ஓவியத்துக்குப் போலி ஓவியம் தயாரித்து வைத்திருப்பாள் என்பது அவன் நினைப்பு. எப்படிப் போலியை வைத்து அசலைக் களவாடப் போகிறாள் என்பது மட்டும் அவனுக்குப் புரியவில்லை.

அறையை அங்குல இடம் வைக்காமல் சோதனை போட்டும் எந்தப் போலி ஓவியமும் அவனுக்குக் கிடைக்க

வில்லை. ட்ரேஸியின் உள்ளாடைகள் தான் கிடைத்தன. அவற்றின் மணம் அவனை என்னவோ செய்தது.

அடுத்த நாள். டிரேஸி கடை கடையாகப் பார்த்தபடி ஒரு டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோருக்குள் நுழைவதைக் கண்டவன், அவளறியாமல் அங்கும் சென்றான். ஆனால் அவள் பெண்களுக்கான டாய்லெட்டில் நுழைந்ததும் அவனால் எதுவும் செய்ய முடியவில்லை. அவளைப் பின்தொடர முடியாத இடம் அது ஒன்றுதான்!

உள்ளே நுழைந்த ட்ரேஸி கண்ணாடியின் முன் நின்று லிப்ஸ்டிக்கைப் பூசிக் கொண்டவாறு, அருகில் நின்றிருந்த ஒரு குண்டுப் பெண்மணியிடம் சொன்னாள்: "கோயாவின் ப்யூரிட்டோ ஓவியம். நாளைக் காலை பதினொரு மணி."

அந்தப் பெண்மணி பலமாய்த் தலையசைத்து மறுத்தாள். "நாளைக்கா? வேண்டவே வேண்டாம் என்று சொல்வார் சீஸர். நாளைக்கு லக்ஸம்பர்க் இளவரசர் அரசாங்க விருந்தாளியாக வருகிறார். அவர் ப்ராடோ மியூசியத்தைப் பார்வையிட வருவார் என்று பேப்பரில் போட்டிருந்தது. அப்போது நீங்கள் ப்யூரிட்டோ ஓவியத்தைக் கிளப்பவே முடியாது. வழக்கத்தைவிடப் பலமான காவல் இருக்கும். எங்கே பார்த்தாலும் அதிகப்படியான போலீஸ்காரர்கள் நிற்பார்கள்."

"அவ்வளவுக்கவ்வளவு நல்லது. நான் சொன்னபடி அவரிடம் சொல்லிவிடு."

பன்னிரண்டு மணி சுமாருக்கு லக்ஸம்பர்க் இளவரசர் ஏராளமான ஜபர்தஸ்து, பந்தோபஸ்து, ஆடம்பரங்களுடன் வந்து சேர்ந்தார்.

மியூசியத்தின் இயக்குநரான கிறிஸ்டியன் ஒரே பரபரப்பாக இருந்தார். ஓர் இளவரசர் தன் மியூசியத்தைப் பார்க்க வருவதில் அவருக்கு ஏகப்பட்ட பெருமை.

அவருக்கு ஒரே ஒரு சிறிய கவலை. பார்வையாளர்களின் கூட்டத்தைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அதனாலென்ன!

காவல் எக்கச்சக்கமாய் இருக்கிறது. இளவரசரைப் பார்த்துக் கொள்வார்கள்.

இளவரசர் வந்ததும், அவரை ஒவ்வோர் இடமாக அழைத்துச் சென்று, அங்குள்ள அருமை பெருமைகளை விளக்கியவாறு இருந்தார் கிறிஸ்டியன். இளவரசரின் கூடவே ஆயுதம் தாங்கிய காவலர்கள் வந்து கொண்டிருந்தார்கள்.

"இப்போது புகழ்பெற்ற ஓவியர் கோயாவின் படைப்புக்கள் நிறைந்துள்ள இடத்துக்குத் தங்களை அழைத்துப் போகிறேன் இளவரசர் அவர்களே. ஒவ்வோர் ஓவியமும் ஒவ்வொரு தனித் தனி அறையில் உள்ளன," என்றார் கிறிஸ்டியன்.

நிமிடங்கள் ஓட ஓட ட்ரேஸி பதைத்துக் கொண்டிருந்தாள். இதோ, இதோ இளவரசர் வந்து விடுவார். அதற்குள் திட்டமிட்டபடி.

ப்யூரிட்டோ ஓவியம் இருந்த இடத்துக்கு அடுத்த அறை இது. வேறோர் ஓவியம் இங்கே இருந்தது.

திடீரென்று ஒரு ஜப்பானிய டூரிஸ்ட் கும்பல் திமுதிமுவென்று நுழைந்தது, சளசளவென்று பேசிய வண்ணம்.

ட்ரேஸியின் முகம் மலர்ந்தது. ஆ! இதுதான் நான் எதிர்பார்த்த தருணம்!

ஜப்பானியரின் கூட்டத்தில் மோதிவிடாமல் நகர்ந்து கொள்கிற மாதிரி, ஓவியம் நகலெடுத்துக் கொண்டிருந்த பெண்ணின் பக்கமாகச் சென்றாள் ட்ரேஸி. ஒரு ஜப்பானிய இளைஞன் ட்ரேஸியை உரசினாற்போல் கடந்தான். உடனே தன்னை யாரோ தள்ளிவிட்டது போல ட்ரேஸி அந்தப் பெண்மீது விழுந்தாள்.

உடனே அந்தப் பெண் குப்புற விழ, அவளுடைய பெயிண்டிங் தூரிகை, வண்ணக் குப்பிகள், மேஜை முதலியன கவிழ்ந்து தரையெங்கும் சிதற -

"ஸாரி, ரொம்ப ரொம்ப ஸாரி," என்றாள் ட்ரேஸி. "கொஞ்சம் இருங்கள். இதோ நான் உதவிக்கு வருகிறேன்."

அந்தப் பெண்ணுக்கு உதவி செய்யும் சாக்கில் ட்ரேஸியின் குதிகால் செருப்பு இன்னும் சில பெயிண்டிங் ட்யூப்களை நசுக்கி, தரை பூராவும் பரப்பிற்று.

ட்ரேஸியைப் பின் தொடர்ந்து வந்து இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான் கூப்பர். வேகமாக வந்து நின்றான். ட்ரேஸி தன் வேலையை ஆரம்பித்துவிட்டாள் என்று மட்டுமே தெரிந்ததேயொழிய, என்ன செய்கிறாள் என்று புரியவில்லை அவனுக்கு.

காவலாளி ஓடிவந்தான். "என்ன இங்கே? என்ன?"

பார்வையாளர்களாகச் சென்றவர்களுக்கு என்ன அமளி என்றறிய ஆவலேற்பட்டது. விழுந்த பெண்ணையும் தரையில் ஏற்பட்டிருந்த கோரம் கோரமான வண்ணக் கலவைகளையும் கண்டு தலைக்குத் தலை பேச, வினாடிக்கு வினாடி அமளி அதிகரித்தது.

காவலாளிக்குக் கலவரம் ஏற்பட்டது. எந்த நிமிடத்தி லும் லக்ஸம்பர்க் இளவரசர் வரப் போகிறார்...

பக்கத்து அறையில் இருந்த மற்ற காவலர்களை உதவிக் குக் கூப்பிட்டான். அவர்கள் ஓடிவந்தார்கள் ப்யூரிட்டோ ஓவியம் இருந்த அறையின் காவலாளி உள்பட.

எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டுதானிருந்தாள் ட்ரேஸி.

இப்போது ப்யூரிட்டோ ஓவியத்தின் அருகே கிழவன் சீசரைத் தவிர யாருமில்லை. இந்த அறையில் அமளிகளின் நடுவே இருந்தாள் ட்ரேஸி. டூரிஸ்டுகளின் கூட்டத்தை விரட்டிக் கலைப்பதில் மும்முரமாக இருந்தார்கள் காவலாளிகள்.

இரண்டு நிமிடத்துக்கெல்லாம் இயக்குநர் கிறிஸ்டியன் அங்கே ஓடிவந்தார். அறையெங்கும் சிதறியிருந்த பயங்கரத் தைக் கண்டதும் பதறிப் போனார். "சீக்கிரம்! சீக்கிரம்! யாராவது கூட்டுகிற பெண் பிள்ளையைக் கூப்பிடு! டர்பன் டைனைக் கொட்டி, துணியைப் போட்டுத் துடைக்கச் சொல்லு!"

அவர் ஆணையை நிறைவேற்ற ஒருவன் ஓடினான்.

ப்யூரிட்டோ ஓவியம் இருந்த அறையின் காவலாளி இங்கே நின்றிருப்பதைக் கண்டவர், "போய் உன் இடத்தில் நில்லு!" என்று அதட்டினார்.

அவன் கூட்டத்தை விலக்கிக் கொண்டு சீஸர் இருந்த அறைக்குச் செல்வதைக் கண்டாள் ட்ரேஸி.

சற்று எட்டத்தில் நின்றிருந்த கூப்பர். ட்ரேஸியின் மீது வைத்த கண்ணை எடுக்கவில்லை.

அடுத்தபடி என்னவோ செய்யப் போகிறாள் என்று எதிர்பார்த்தபடி காத்திருந்தான். ட்ரேஸி எதுவும் செய்ய வில்லை. அவள் எந்த ஓவியத்தின் அருகேயும் செல்லவில்லை. அவளுக்குக் கூட்டாளி யாரும் இருப்பதாயும் தெரியவில்லை.

சுவர்களை நோட்டமிட்டான். எல்லா ஓவியங்களும் அதனதன் இடங்களில் இருந்தன. எதுவும் காணாமற் போக வில்லை.

அடுத்த அறைக்கு ஓடினான். கூனல் விழுந்த கிழவ னொருவன், ப்யூரிட்டோ ஓவியத்துக்கு அருகிலிருந்த மாஜா ஓவியத்தைப் பார்த்து நகல் வரைந்து கொண்டிருந்தான் அமைதியாக. அங்கேயும் எதுவும் வித்தியாசமாகப் படவில்லை.

இருந்தாலும்... இருந்தாலும்...

இயக்குநர் கிறிஸ்டியனிடம் ஓடினான். "கடந்த சில நிமிடங்களில் இங்கேயிருந்து ஓர் ஓவியம் களவாடப் பட்டிருக்கிறது," என்றான்.

லக்ஸம்பர்க் இளவரசரை அனுப்பிவிட்டு. எரிச்சலும், அலுப்புமாக இருந்த கிறிஸ்டியன் அவனை வெறித்து நோக்கினார். ஏற்கெனவே அவன் தன்னை அவருக்கு அறிமுகம் செய்து கொண்டிருந்தான். "என்ன சொல்கிறீர்கள்? ஓவியம் திருட்டுப் போயிருந்தால் காவலர்கள் உடனே எச்சரிக்கை மணி அடித்திருப்பார்கள். போலி ஓவியத்தை வைத்துவிட்டு அசல் ஓவியத்தைத் திருடிப் போயிருப்பதும்.

முடியாத காரியம். பொது மக்களுக்குத் தெரியாத ஒரு விஷயத்தை உங்களுக்கு இப்போது சொல்கிறேன். ஒவ்வோர் ஓவியத்தின் பின்னாலும் ஒரு ரகசிய அலாரம் இருக்கிறது. ஓவியத்தைக் கழற்ற முயன்றால் உடனே மணியடிக்கும். தெரிகிறதா?"

கூப்பரால் எதுவும் சொல்ல முடியவில்லை. "நல்லது. இருந்தாலும் உங்கள் ஊழியர்களிடம் சொல்லி எல்லா இடத்தையும் பரிசோதிக்கச் சொல்லுங்கள். எந்த ஓவியமாவது காணாமல் போயிருந்தால் எனக்குத் தெரிவியுங்கள். நான் ஓட்டலில் காத்திருப்பேன்," என்றான்.

அன்றிரவு அவனுக்குப் போன் வந்தது. இயக்குநர் கிறிஸ்டியன் தான் பேசினார். "மிஸ்டர் கூப்பர், உங்களுக்காக நானே எல்லா இடத்தையும் பரிசோதித்தேன். எல்லா ஓவியங்களும் பத்திரமாக இருக்கின்றன. எதுவும் திருட்டுப் போகவில்லை."

கூப்பர் பெருமூச்சு விட்டான். இந்த முறையும் ட்ரேஸி ஜெயித்து விட்டாள் என்று அவனுக்குப் புரிந்தது. எப்படி என்றுதான் விளங்கவில்லை.

## 65

ரிட்ஸ் ஓட்டலில் இரவு விருந்துக்கு ட்ரேஸியை அழைத்திருந்தான் ஜெஃப்.

"இன்று நீ ஜகஜோதியாய் ஜொலிக்கிறாய் ட்ரேஸி." என்று அவளை அவன் பாராட்டியதும் -

"ஆமாம். எனக்குள்ளே அற்புதமான பரவசம் நிரம்பியிருக்கிறது."

"எதனால் தெரியுமா? நான் உன்னோடு இருப்பதால் தான் அடுத்த வாரம் நான் பார்ஸிலோனாவுக்குப் போகிறேன். அருமையான ஊர். நீயும் என்னுடன் வாயேன்."

"ஸாரி ஜெஃப். நான் ஸ்பெயினை விட்டுப் புறப் படுகிறேன்."

"நிஜமாகவா?" அவன் குரலில் வருத்தம் தொனித்தது. "எப்போ போகிறாய்?"

"இன்னும் கொஞ்ச நாளில்."

"எனக்கு ரொம்ப ஏமாற்றமாயிருக்கிறது."

ட்ரேஸி தனக்குள் சிரித்துக் கொண்டாள். ஏமாற்றம் பெரிதில்லை ஜெஃப். கோயாவின் ப்யூரிட்டோ ஓவியத்தை நான் உன்னை முந்திக் கொண்டு திருடி விட்டேனே. அது தெரிந்தால் உன் ஏமாற்றம் இன்னும் பெரிதாக இருக்கப் போகிறது!

ஜெஃப் அந்த ஓவியத்தை எப்படித் திருடத் திட்ட மிட்டிருந்தான் என்பது அவளுக்குத் தெரியவில்லை. ஆனால் மகா கெட்டிக்காரனான ஜெஃப்பை ஜெயித்து விட்டோம் என்று அவளுக்கு ஒரு வகையில் திருப்தியாக இருந்தது. இன்னொரு வகையில் ஏனோ அவளுக்கு ஜெஃப்பின் தோல்வியைப் பற்றி வருத்தமாயும் இருந்தது.

ப்ராடோ மியூசியத்தின் அதிபரான கிறிஸ்டியன் ஆனந்தமாக இருந்தார் தன் அறையில். அந்தப் பெயிண்ட்கள் கீழே கொட்டி ரகளையான சிறு சம்பவத்தைத் தவிர மற்ற எல்லா விஷயத்திலும் இளவரசரின் விஜயம் ஜாம்ஜாமென்று நடந்து முடிந்து விட்டதில் அவருக்கு ஏகப்பட்ட திருப்தி. அந்த அமெரிக்கத் துப்பறியும் நிபுணன் கூப்பரோ கீப்பரோ மகா மடத்தனமாய் உளறினானே, ஓவியம் திருட்டுப் போகப் போகிறது என்று! நடக்குமா எங்காவது! ப்ராடோ மியூசியத்தி லிருந்து ஓவியம் திருட்டுப்போனது என்பது நேற்றும் கிடையாது. இன்றும் கிடையாது, நாளையும் கிடையாது!

கிறிஸ்டியனின் செக்ரட்டரி உள்ளே வந்தாள். "சார், உங்களைப் பார்க்க ஒருவர் வந்திருக்கிறார். இந்த லெட்டரைக் கொடுத்தார்."

ஒரு கடிதத்தை நீட்டினாள். ஜூரிச் மியூசியத்தின் லெட்டர் ஹெட் தாளில் அதன் இயக்குநர் எழுதியிருந்தார்.

"மதிப்பிற்குரிய நண்பரே,

இக்கடிதம் கொண்டு வரும் ஹென்றி ரெண்டால் ஓவியக் கலையில் தலைசிறந்த நிபுணர். உலக மியூசியங்களைச் சுற்றிப் பார்த்து வருகிறார். தங்கள் மியூசியத்திலுள்ள ஒப்பற்ற ஓவியங்களைப் பார்வையிட விரும்புகிறார். அவருக்கு உதவி செய்தால் மிகவும் நன்றியுள்ளவனாக இருப்பேன்."

கிறிஸ்டியன் தனக்குள் பெருமையுடன் நினைத்துக் கொண்டார், உலகத்தின் எல்லாப் பெரிய மனிதர்களும் என்னைப் பார்க்க ஒவ்வொருவராக வந்து கொண்டிருக் கிறார்கள்!

ஹென்றி ரெண்டால் உள்ளே வந்தார். ஆஜானு பாகுவாய்ப் பெரிய ராணுவ வீரர்போல் தோற்றமளித்தார். ஸ்விட்ஜர்லாந்துக்காரர். கை குலுக்கும் போது அவருடைய ஒரு கையில் ஆள்காட்டி விரல் இல்லை என்பதைக் கவனித்தார் கிறிஸ்டியன்.

"என்னுடன் வாருங்கள், காட்டுகிறேன்," என்று அவரை அழைத்துக்கொண்டு நடந்தார் கிறிஸ்டியன், ஒவ்வோர் ஓவியத்தையும் பார்த்து வியந்து, விமரிசனம் செய்தபடி, ஒவ்வோர் ஓவியரின் தனிச் சிறப்பையும் வண்ணச் சேர்க்கை யையும் அலசியபடி அவர்கள் நடந்தார்கள்.

கோயாவின் ஓவியங்கள் நிறைந்த கூடத்தை அடைந்தார்கள்.

"எங்கள் நாட்டின் கலைச் சிகரம் இது," என்றார் கிறிஸ்டியன்.

"ஆகா! என்ன அற்புதம்!' என்றார் ரெண்டால். "கண்ணுக்கு எப்பேர்ப்பட்ட விருந்து! கொஞ்சம் நின்று ரசிக்கிறேன்."

"ஆ! அருமை!"

"அடடா! என்ன அழகு!"

சொல்லிக் கொண்டே சென்ற ரெண்டால் கோயாவின் ப்யூரிட்டோ ஓவியத்தைப் பார்த்தார். "என்ன தத்ரூபமான போலி!" என்று சொன்னவாறு அதைக் கடந்தார்.

சட்டென்று அவர் கையைப் பிடித்தார் கிறிஸ்டியன். "என்ன? என்ன? என்ன சொன்னீர்கள்?"

"தத்ரூபமான போலி என்றேன்."

கிறிஸ்டியன் ரோஷத்துடன், "மிஸ்டர், நீங்கள் பேசுவது ரொம்பத் தப்பு," என்றார்.

"நான் சரியாய்த்தான் சொல்கிறேன்."

"இல்லையில்லை. நீங்கள் சொல்வது தப்புதான். இது கோயாவே வரைந்த மிக அசலான ஓவியம். அதற்குண்டான ஆதாரமெல்லாம் வாங்கி வைத்திருக்கிறோமாக்கும்!"

ரெண்டால், ப்யூரிட்டோ ஓவியத்தை இன்னும் நெருங்கிக் கூர்ந்து பார்த்தார். "உங்கள் ஆதாரம் எல்லாமே போலிதான். இந்த ஓவியத்தை வரைந்தவன் கோயாவின் சிஷ்யனான லூகாஸ் என்பவன். உங்களுக்கே தெரிந்திருக்குமே, அந்த லூகாஸ் கோயாவின் பெயரில் நூற்றுக்கணக்கான போலி ஓவியங்களை வரைந்து வெளியிட்டிருக்கிறான்."

"அது தெரியும். ஆனால் இது அதில் ஒன்று அல்ல."

ரெண்டால் தோளைக் குலுக்கிக் கொண்டார். "நல்லது, நீங்கள் அப்படி அபிப்பிராயப்பட்டால் நான் என்ன செய்ய முடியும்?" என்று சொல்லிவிட்டு மேலே நடந்தார்.

ஆனால் கிறிஸ்டியனுக்கு உதறலெடுத்தது. "இந்த ஓவியத்தை நானே நேரிடையாக வாங்கினேன். எல்லா விதமான டெஸ்டுகளும் செய்து பார்த்துவிட்டுத்தான் வாங்கினோம். அசல் கோயாவின் ஓவியம்.. "

"இல்லையென்று நான் சொல்லவில்லையே?" என்றார் ரெண்டால். "அந்த லூகாஸ் கோயாவின் காலத்திலேயே வாழ்ந்தவன். கோயா என்ன வண்ணக் கலவை உபயோகித்

தாரோ அதையே உபயோகித்திருக்கிறான். ஆகவே நீங்கள் என்ன டெஸ்ட் செய்தாலும் கோயாவின் ஓவியம் என்றுதான் தெரியும்.'' ரெண்டால் குனிந்து ஓவியத்தின் அடியில் உள்ள கையெழுத்தையும் பார்த்தார். "நீங்கள் விரும்பினால் ரொம்ப சுலபமாய் ஒரு சோதனை செய்யலாம். உங்களுடைய சோதனைக் கூடத்துக்கு இந்த ஓவியத்தை எடுத்துக் கொண்டு போங்கள். கையெழுத்தை மெல்லச் சுரண்டிப் பாருங்கள்.'' கேலியாக ஒரு சிரிப்புச் சிரித்தார் ரெண்டால். "அந்த லூகாஸுக்கு அகம்பாவம் ஜாஸ்தி. தான் வரைந்த ஓவியங் களில் லூகாஸ் என்று தன் சொந்தக் கையெழுத்தைத்தான் அவன் போட்டுக் கொள்வான். ஆனால் கோயாவின் பெயரைப் போட்டால் தான் எக்கச்சக்கமான விலைக்கு அந்த ஓவியம் விற்பனையாகும் என்று அவனுக்குத் தெரியும். ஆகவே தன் கையெழுத்தை மறைத்து அதன் மேலேயே கோயாவின் கையெழுத்தைப் போடுவான். உங்கள் சோதனைக் கூடத்தில் கொஞ்சம் சுரண்டிப் பார்த்தாலே தெரியும்.'' கைக் கடியாரத் தைப் பார்த்துக் கொண்டார் ரெண்டால். "மன்னிக்கணும். எனக்கு வேறு எங்கேஜ்மெண்ட் இருக்கிறது. இந்த அற்புத மான ஓவியங்களைப் பார்க்க ஒரு வாய்ப்புக் கொடுத்தீர்கள். ரொம்ப நன்றி.''

"வணக்கம்,'' என்று கிறிஸ்டியன் விடை கொடுத்தார் இந்த ஆள் சுத்த மடையன் என்று மனசுக்குள் நினைத்தபடி.

"நான் வில்லா மாக்னாவில் தங்கியிருக்கிறேன். ஏதாவது வேண்டுமானால் கூப்பிடுங்கள்.'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார் ரெண்டால்.

கிறிஸ்டியன் ப்யூரிட்டோ ஓவியத்தை ஒரு முறை நோக்கினார். இதையா...

பயம் அவர் மனத்தை அரித்தது.

ரெண்டால் சொன்னது ஒரு வகையில் உண்மை என்று அவருக்கும் தெரியும். கோயாவின் சீடனான லூகாஸ் ஏராள மான ஓவியங்களைத் தானே வரைந்து கோயாவின்

கையெழுத்தைப் போட்டு எக்கச்சக்கமாகப் பணம் சம்பாதித்தது மெய்தான்.

இந்த ஓவியத்தை முப்பத்தைந்து லட்சம் டாலருக்கு அவர் வாங்கியிருந்தார்.

இப்போது என்ன செய்யலாம்?

ரெண்டால் சொன்னபடி செய்வதே மேல்.

மியூசியத்தின் சோதனைக் கூடத்துக்கு இதை அனுப்பி, கோயாவின் கையெழுத்தைச் சுரண்டிப் பார்க்கலாம். அதன் அடியில் லூகாஸ் கையெழுத்து இருக்கிறதா என்று பார்த்துவிடலாம்.

ஆய்வுக் கூடத்தில் சோதனை ஆரம்பமாயிற்று. ரொம்ப நுணுக்கமான ரசாயனத் திரவத்தைப் பயன்படுத்தினார் ஆய்வுக் கூடத்தின் தலைவர். மிகமிக ஜாக்கிரதையாகத் தடவினார்.

இந்தக் காரியத்தை ஏன் கிறிஸ்டியன் செய்யச் சொல்கிறார் என்று அவருக்குப் புரியவில்லை. இருந்தாலும் எச்சரிக்கையாகத் துடைத்துத் துடைத்துச் சுரண்டினார்.

பக்கத்தில் நின்று கவனித்துக் கொண்டிருந்த கிறிஸ்டியனுக்குத் தன் கண்ணை நம்ப முடியவில்லை.

'GOYA' என்பதில் 'G' அழிந்து, அந்த இடத்தில் 'L' தெரிந்தது.

"மேலே தொடரட்டுமா சார்?" என்றார் ஆய்வுக் கூட அதிகாரி.

கிறிஸ்டியனுக்குத் தொண்டை வறண்டது. 'ஊம், ஊம்' என்றார்.

மெதுவே மெதுவே ஒவ்வோர் எழுத்தாக அழிந்து GOYA என்பது மறைந்து LUCAS என்ற எழுத்துக்கள் வெளிப்படத் தொடங்கின.

கிறிஸ்டியன் தமது அறைக்கு ஓடினார் - ரெண்டாலுக்கு டெலிபோன் செய்ய.

ஒவ்வோர் எழுத்தும் வெளிப்பட வெளிப்பட கிறிஸ்டியனின் வயிற்றில் புளியைக் கரைத்தது. புகழ்பெற்ற கலைக் கூடத்தில் இப்படிப்பட்ட ஏமாளித்தனமான வேலை நடந்திருப்பது குறித்து உலகத்துக்குத் தெரிந்தால் எத்தனை அவமானம்!

கொஞ்ச நேரத்தில் ரெண்டால் வந்து சேர்ந்தார்.

"நீங்கள் சொன்னது உண்மைதான். இது கோயாவின் அசல் ஓவியம் அல்ல. போலி. முப்பத்தைந்து லட்சம் டாலர் கொடுத்து இதை வாங்கினோம்." என்றார் அழாத குறையாக கிறிஸ்டியன்.

"பணத்தைத் திருப்பி வாங்க முடியுமா பாருங்களேன்?"

"இதை ஒரு விதவையிடமிருந்து வாங்கினேன். மூன்று தலை முறையாகத் தங்கள் குடும்பத்தில் இது இருந்து வருகிறது என்று அந்த அம்மாள் சொன்னாள். இப்போது வழக்குத் தொடுத்தால் இழுத்துக் கொண்டே போகும். எங்கள் மியூசியத்துக்கும் கெட்ட பெயர். இங்கே உள்ள எல்லா ஓவியமும் போலிதானோ என்று ஜனங்கள் நினைப்பார்கள்."

ரெண்டால் யோசனையில் ஆழ்ந்திருந்தார். திடீரென்று நிமிர்ந்து உட்கார்ந்தார். "ஒரு வழி இருக்கிறது. எனக்குத் தெரிந்த ஒருவர் லூகாஸின் ஓவியங்களைச் சேகரித்து வருகிறார். அவர் இதை வாங்கிக் கொள்ளக்கூடும். ஐம்பதாயிரம் டாலர் வரை கொடுப்பார். என்ன சொல்கிறீர்கள்?"

கிறிஸ்டியன் பதைத்தார். "அப்பாடா! ரொம்ப நன்றி! உடனே அவரைக் கூப்பிட்டுச் சொல்லுங்கள்!"

கிறிஸ்டியனின் மேலதிகாரிகள் அவசரமாகக் கூடி ஆலோசனை செய்தார்கள். கோயாவின் பெயரால் இருந்து வந்த ஓவியம் போலி என்று தெரிந்தால், மியூசியத்துக்கே கெட்ட பெயர் என்று எல்லாரும் தீர்மானித்தார்கள். ஆகவே அதை வெளியே தெரியாமல் அமுக்கிவிடுவதே மேல் என்று முடிவு செய்தார்கள். ரெண்டால் சொல்லும் ஆளுக்கு இந்த ஓவியத்தை விற்றுவிடத் தீர்மானித்தார்கள்!

அன்று மாலையே ரெண்டால் தன் நண்பருக்காக ஐம்பதாயிரம் டாலர் கொண்டுவந்து தந்தார். ஓவியத்தைப் பெற்றுக் கொண்டார். ஒரு டாக்ஸியை அமர்த்திக் கொண்டவர், மாட்ரிட் நகரின் மறு கோடியில், ஒரு வீட்டின் மூன்றாவது மாடியை அடைந்து கதவைத் தட்டினார்.

ட்ரேஸி கதவைத் திறந்தாள். அவள் பின்னால் கூனல் கிழவரான ஓவியர் சீஸர் நின்றிருந்தார்.

"இதைத் தொலைத்துத் தலை முழுகத் துடியாய்த் துடித்தார்கள்!" என்று சிரித்தபடி கூறி, ஓவியத்தை ட்ரேஸியிடம் ஒப்படைத்தார் ரெண்டால்.

அவரை ஆனந்தத்துடன் கட்டிக் கொண்டாள் ட்ரேஸி.

கூனல்கார சீசர், ஓவியத்தைப் பெருமையுடன் வாங்கி ஒரு மேஜை மீது வைத்தார்.

"இப்போது ஓர் அதிசயம் நடக்கப்போகிறது பாருங்கள். கோயா உயிர் பெற்று வரப் போகிறார்," என்று சொன்னபடி, ரசாயன திரவம் நிறைந்த சில புட்டிகளையும், பிரஷையும் வெளியே எடுத்தார்.

## 66

'கோயா இப்போது உயிர் பெற்றுத் திரும்பி வரப் போகிறார் பாருங்கள்' என்று சொன்ன கூனல் ஓவியன் சீஸர்-

கொஞ்சம் ஸ்பிரிட்டில் பஞ்சை நனைத்து, லூகாஸ் என்ற கையெழுத்தை மெதுமெதுவே துடைக்கத் தொடங்கினார்.

இப்போது லூகாஸ் என்ற எழுத்து மறைந்து, அதன் கீழே கோயாவின் கையெழுத்து தெரிந்தது.

"ஆகா! ஆற்புதம்!" என்று வியந்து பாராட்டினார் ரெண்டால்.

"ட்ரேஸியின் ஐடியா இது," என்று புன்னகையுடன் சொன்னார் சீஸர். "கோயா ஒரிஜினல் கையெழுத்துக்கு மேலே லூகாஸ் என்ற கையெழுத்தைப் போட்டு, அதன் மேலேயே கோயா என்ற கையெழுத்தை மறுபடி போட வேண்டும், முடியுமா என்று ட்ரேஸி கேட்டார். இரண்டு நிமிடத்துக்குள் செய்து முடிக்க வேண்டியிருக்கும் என்று சொன்னார். முடியும் என்று சொல்லிச் செய்து காட்டினேன்."

"சில நிமிடங்களுக்கு மியூசியத்தில் ரகளைகளும் குழப்பமும் நடக்க வேண்டும் என்றார். அதற்கு நான் ஏற்பாடு செய்தேன்," என்றாள் ட்ரேஸி.

சீசர் அடக்கத்துடன் சொன்னார். "ரொம்ப ஸிம்பிளாய்க் காரியம் முடிந்துவிட்டது. ஆனால் குறிப்பிட்ட பெயின்ட்டையும் ரசாயன திரவமும் நான் உபயோகித்ததால் தான் அது முடிந்தது. முதலில் கோயாவின் கையெழுத்தை மறைத்து, அதன் மீது லூகாஸின் கையெழுத்தைப் போட்டேன். பிறகு அதையும் மறைத்து கோயாவின் கையெழுத்தைப் போட்டேன். மியூசியத்தின் சோதனைக் கூடத்தில், கோயாவின் கையெழுத்தை மட்டும் சுரண்டிப் பார்த்திருக்கிறார்கள். அதன் கீழே லூகாஸின் கையெழுத்து வெளிப்பட்டிருக்கிறது. அதையும் சுரண்டிப் பார்த்திருந்தால் கோயாவின் ஒரிஜினல் கையெழுத்து வெளிப்பட்டிருக்கும். நல்லகாலம், அவர்கள் அப்படிச் செய்யவில்லை."

இருவருக்கும் இரண்டு கனத்த கவர்களைக் கொடுத்தாள் ட்ரேஸி, கரென்ஸி நிறைந்த கவர்கள். "இரண்டு பேருக்கும் ரொம்ப நன்றி,"

பெரிய கலை வல்லுநர் போல மியூசியம் அதிகாரிகளிடம் நடித்த ரெண்டால் கண்ணைச் சிமிட்டி "இன்னொரு முறை ஓவிய எக்ஸ்பர்ட் தேவைப்பட்டால் என்னைக் கூப்பிட மறக்காதீர்கள்," என்று சிரித்தார்.

"இந்த ஓவியத்தை எப்படி எடுத்துப் போகப் போகிறீர்கள்" என்று சீசர் கேட்டார்.

"இங்கேயே வைத்திருங்கள், ஓர் ஆள் ஏற்பாடு செய்து போன் பண்ணுகிறேன். அவரிடம் கொடுத்துவிடுங்கள்."

இருவரிடமும் கைகுலுக்கிவிட்டுப் புறப்பட்டாள் ட்ரேஸி.

ஓட்டலுக்குத் திரும்பும்போது அவள் உள்ளம் கர்வத்தால் விம்மிக் கொண்டிருந்தது. 'எல்லாம் மனத் துத்துவம்!' என்று எண்ணிக் கொண்டாள். ப்ராடோ மியூசியத்திலிருந்து அந்த ஓவியத்தைத் திருடி எடுத்துச் செல்ல முடியாது என்பது ஆரம்பத்திலேயே அவளுக்கு விளங்கி விட்டது. அந்த ஓவியம் கையை விட்டுப் போனால் சரி என்ற எண்ணம் மியூசியம்காரர்களுக்கே ஏற்பட வேண்டும். அப்படி ஏற்படும்படி செய்ததால் வெற்றி கிட்டியது...

ஜெஃப் நம்மோடு போட்டியிடப் பார்த்தானே! நாம் ஜெயித்து விட்டோம் என்பது தெரிந்ததும் அவன் முகம் போகும் போக்கு! கற்பனை செய்து பார்த்துச் சிரித்தாள் ட்ரேஸி.

ஓட்டலை அடைந்ததும் ஒரு நம்பகமான ஆளை ஏற்பாடு செய்தாள். சீஸரைக் கூப்பிட்டாள்.

"ஆள் ஏற்பாடு செய்துவிட்டேன். கொஞ்ச நேரத்தில் அங்கே வருவான். அவனிடம் பத்திரமாய்-" என்று அவள் சொல்லும்போதே சீஸர் வீரிட்டார்.

"என்னது! என்ன சொல்றீங்க? நீங்கள் அனுப்பியதாய்ச் சொல்லி ஒரு ஆள் வந்தானே! வந்து ஓவியத்தை வாங்கிக் கொண்டு போய் விட்டானே!"

ட்ரேஸிக்குத் தலை சுற்றியது.

**கை**க்கெட்டியது வாய்க்கெட்டாதபடி தட்டிப் பறித்தவன் ஜெஃப் தான்!

கந்த்தரைச் சந்தித்தபோது தான் அது தெரிந்தது.

"ட்ரேஸி, அந்த ஓவியத்தைத் திருடுவதற்கு நான் உன்னையும் அமர்த்தியிருந்தேன். ஜெஃபையும் அமர்த்தியிருந்

தேன். ஓவியத்தைக் கொண்டு வந்து என்னிடம் தந்தவன் அவன் தான். பேசிய பணத்தை அவனுக்குக் கொடுத்து விட்டேன்,” என்றார் கந்த்தர்.

“அநியாயம்! முதலில் ஓவியத்தைக் கிளப்பியவள் நான் தான்.”

“இருக்கலாம். ஆனால் இங்கே என்னிடம் கொண்டு வந்து தந்தவன் ஜெஃப்தானே? அதைக் கேட்டிருந்த என் கஸ்டமரிடம் அது போய்ச் சேர்ந்து விட்டது!”

ட்ரேஸியால் ஒன்றும் செய்ய முடியவில்லை. பல்லைக் கடித்தாள். எத்தனை திட்டமிட்டோம்! எவ்வளவு ஏற்பாடுகள் செய்தோம்! எல்லாவற்றையும் கையைக் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்தபடி உட்கார்ந்திருக்கிறான் ஜெஃப்! எல்லா வேலைகளையும் அவள் முடித்தாள். பின் ஜாம் ஜாமென்று அவன் பாட்டுக்கு நுழைந்து ஓவியத்தைத் தட்டிக் கொண்டு ஜாம் ஜாமென்று கூலியை வாங்கிக் கொண்டு போய் விட்டான்!

எப்படிச் சிரித்துக்கொண்டிருப்பான் இப்போது! சே! எப்பேர்ப்பட்ட முட்டாள் நான்!

“அவனைக் கொலை செய்தால் கூட என் ஆத்திரம் தணியாது,” என்றாள் கந்த்தரிடம்.

“கொஞ்சம் பொறுமையாக இரு,” என்றார் கந்த்தர். “உனக்கு இன்னொரு வேலை கொடுக்கப் போகிறேன். அதை நீ ஒண்டியாகச் செய்ய முடியாது. ஒரு கூட்டாளி தேவைப் படும். அதற்குச் சரியான ஆள் ஜெஃப்...”

“யார்? ஜெஃப்பா?” என்று வெடித்தாள் ட்ரேஸி. “செத்தாலும் சாவேனே தவிர ஜெஃப் மாதிரி ஒரு அயோக்கி யனுடன் சேர்ந்து -”

“யாரோ என் பெயரைச் சொல்கிற மாதிரி இருக்கிறதே?” என்ற குரல் கேட்டது.

மலர்ந்த முகத்துடன் ஜெஃப் உள்ளே வந்தான்.

"ட்ரேஸி, டார்லிங், உன் அழகு என்னமா அசத்துகிறது ஒரு நாள்!" என்றவன் கந்த்தருடன் கை குலுக்கினான்.

ட்ரேஸி அவனுடன் பேசத் தயாராயில்லை.

"என்மீது கோபமாயிருக்கிறாய், இல்லையா?"

ட்ரேஸி அவனை முறைத்துப் பார்த்தாள்.

"ட்ரேஸி, அந்தக் கோயா ஓவியத்தை மியூசியத்திலிருந்து கிளப்ப நீ போட்ட திட்டம் ரொம்பப் பிரமாதம்! அருமையான மூளையுடன் செய்தாய். ஒரே ஒரு சின்னத் தவறு செய்துவிட்டாய். ஸ்விட்சர்லந்துக்காரர்களை நம்பக் கூடாது. அதுவும் ஆட்காட்டி விரல் இல்லாத ஆள் என்றால் ரொம்ப எச்சரிக்கையாக இருக்க வேண்டும்! ரெண்டாலைச் சொல்கிறேன்!"

அடப் பாவி! கோயா ஓவியத்தை, ஜெஃப் தட்டிப் பறிக்க அந்த ரெண்டால் தான் உடந்தையாக இருந்திருக்கிறானா! நினைக்க நினைக்கக் கோபமாய் வந்தது ட்ரேஸிக்கு. அடக்கிக்கொண்டாள்

"நான் பிறகு வருகிறேன்," என்று கந்த்தரிடம் விடை பெற்றுக் கொண்டு எழுந்தாள்.

"ட்ரேஸி, நான்-"

"இல்லையில்லை, இந்த ஆளுடன் சேர்ந்து நான் எந்த வேலையும் செய்ய மாட்டேன்!"

"செய்ய வேண்டாம். விஷயம் என்னவென்று கொஞ்சம் கேட்கக் கூடாதா?" என்றார் கந்த்தர். "இன்னும் மூன்று தினங்களில் பாரிஸிலிருந்து ஆம்ஸ்டர்டாமுக்கு ஒரு வைரப் பெட்டி விமானத்தில் செல்கிறது. சரக்கு ஏற்றிச் செல்லும் விமானம். வைரத்தின் மதிப்பு மொத்தம் நாற்பது லட்சம் டாலர்."

ட்ரேஸி சிறிது நின்று அவர் பேச்சைக் கேட்கத் தொடங்கினாள்.

கந்த்தர் தொடர்ந்தார்: "அந்தச் சரக்கு விமானத்தில் பல பெட்டிகளை ஏற்றுவார்கள். அதில் ஒரு பெட்டிக்குள் நீ இருந்து கொள்வாய். விமானம் பறக்க ஆரம்பித்தபின் நீ வெளியே வந்து, வைரம் வைத்திருக்கிற பெட்டியைத் திறந்து, அதை எடுத்துக் கொள்ள வேண்டும். வேறொரு போலி வைரப் பெட்டியை அங்கே வைத்துவிட்டு உன் பெட்டிக்குள் திரும்பப் போய்ப் புகுந்துவிட வேண்டும்."

"பெட்டிக்குள் ஒளிந்து கொள்ளும் அளவுக்கு எனக்குத் தான் சின்ன உடம்பு என்று முடிவு செய்திருக்கிறீர்கள்?"

"உடம்பு மட்டுமில்லை, ட்ரேஸி. இந்த வேலையைச் செய்வதற்கான தைரியம், புத்திசாலித்தனம் இரண்டும் உனக்குத்தான் இருக்கிறது."

"உங்கள் திட்டம் சுவாரஸ்யமாகத்தான் இருக்கிறது, கந்த்தர். ஆனால் இந்த ஆளுடன் சேர்ந்து வேலை செய்வது தான் எனக்குப் பிடிக்கவில்லை. இவன் ஒரு திருடன்."

ஜெஃப் வாய்விட்டுச் சிரித்தான். "ஒருவகையில் நாம் எல்லாருமே திருடர்கள்தானே, ட்ரேஸி? இந்த வேலையை முடித்தால் நமக்குப் பத்து லட்சம் டாலர் தருவதாகக் கந்த்தர் சொல்கிறார்."

"பத்து லட்சம் டாலர்!" நம்ப முடியாமல் கந்த்தரைப் பார்த்தாள் அவள்.

"ஆமாம். உனக்கு ஐந்து லட்சம். ஜெஃப்புக்கு ஐந்து லட்சம்" என்றார் கந்த்தர்.

"சுலபமாக வேலையை நிறைவேற்ற முடியும். ஏனென் றால், விமான நிலையத்தில் சரக்குகள் ஏற்றும் பிரிவில் எனக்கு ஒரு சினேகிதன் இருக்கிறான். ரொம்ப நம்பிக்கையானவன்," என்றான் ஜெஃப்.

"அதாவது உன் மாதிரி இல்லை என்கிறாய்?" குத்தலாகச் சொல்லிவிட்டு, "குட்பை!" என்றாள் ட்ரேஸி.

கந்த்தர் ஏமாற்றத்துடன் அவள் போவதையே பார்த்தபடி இருந்தார். "அந்த ஓவிய விஷயத்தில் நிஜமாகவே

உன்மீது கோபமாயிருக்கிறாள். இந்த வேலையை அவள் ஒப்புக் கொள்ள மாட்டாள் என்று தோன்றுகிறது."

"நீங்கள் நினைப்பது தப்பு." ஜெஃப் உற்சாகமாகப் பேசினான். "எனக்கு ட்ரேஸியைத் தெரியும். அபாயமான வேலை என்றால் அவள் விடவே மாட்டாள்!"

ஜெஃப் சொன்னது உண்மை தான்.

மறுநாள், திட்டம் பற்றி அவர்களுடன் பேசுவதற்கு வந்து விட்டாள் ட்ரேஸி.

உல்லாசப் படகொன்றில் கந்தரும் ஜெஃப்பும் ட்ரேஸியும் தங்கள் திட்டம் பற்றி விவரமாக விவாதித்தார்கள். விமான நிலையத்தில் சரக்குகள் ஏற்றும் வாபான் என்பவனும் அவர்களுடன் இருந்தான். அவன் தான் ஜெஃபின் தோழன்.

"வைரம் வைத்திருக்கிற பெட்டிக்குப் பக்கத்திலேயே நீங்கள் இருக்கிறமாதிரி நான் பார்த்துக் கொள்கிறேன்," என்றான் வாபான். "விமானம் பறந்து கொண்டிருக்கும்போது நீங்கள் வெளியே வந்து வைரப் பெட்டியை எடுத்துக்கொண்டு போலி வைரத்தை வைத்துவிட வேண்டும். ரொம்பச் சுலபமான வேலை."

கந்தர் சொன்னார்: "ஆம்ஸ்டர்டாமில் விமானம் இறங்கியதும் அந்தப் போலி வைரப் பெட்டியை வைர வியாபாரிகளிடம்கொண்டு போய்த் தருவார்கள். வந்திருப்பது போலி வைரம் என்று அவர்கள் கண்டு பிடிப்பதற்குள் நீ ஹாலந்தை விட்டே கிளம்பியிருப்பாய். நீ ஜெனிவா போவதற்கான விமான டிக்கெட் ஆம்ஸ்டர்டாம் விமான நிலையக் கவுண்ட்டரில் உனக்காகக் காத்திருக்கும்."

ட்ரேஸி என்ன பதில் சொல்லப் போகிறாள் என்று மூன்று பேரும் அவள் முகத்தையே ஆவலுடன் பார்த்தார்கள்.

"மொத்தம் எத்தனை நேரம் நான் பெட்டிக்குள் இருக்க வேண்டியிருக்கும்?" என்றாள் ட்ரேஸி.

“பெட்டியை விமானத்துக்குள் ஏற்றச் சில நிமிடங்கள். பிறகு ஆம்ஸ்டர்டாமுக்கு ஒரு மணி நேரப் பயணம். அவ்வளவு தான்.”

“நாம் எல்லோரும் இந்த விசேஷத்தைக் கொண்டாடுகிற வகையில் இன்று சேர்ந்து விருந்து சாப்பிடுவோமே?” என்றான் ஜெஃப்.

“ஊகூம். எனக்குக் களைப்பாக இருக்கிறது.” என்றாள் ட்ரேஸி. ஜெஃப்பைத் தவிர்ப்பதற்காக அப்படிச் சொன்னாலும் நிஜமாகவே உடம்பு அசதியாக இருந்தது அவளுக்கு. புதியதொரு சாகசத்தில் இறங்கப் போகிறோம் என்று நினைக்கையில் உற்சாகமாயும் அதே சமயம் களைப்பாயும் இருந்தது. ‘இதெல்லாம் முடியட்டும். லண்டனுக்குப் போய் அக்கடா என்று ஓய்வெடுத்துக் கொள்வேன்’ என்று தனக்குள் செல்லிக் கொண்டாள்.

“உனக்காக ஒரு சிறு பரிசு வாங்கி வந்திருக்கிறேன்,” என்றான் ஜெஃப்

அவன் நீட்டிய பெட்டியை திறந்தபோது உள்ளே மிக அழகிய ஸ்கார்ஃப் இருப்பதைக் கண்டாள். அதன் ஒரு மூலையில் ட்ரேஸி விட்னி என்ற பெயரைக் குறிக்கும் TW என்ற எழுத்துக்கள் மிக நேர்த்தியாகப் பூவேலை செய்யப் பட்டிருந்தன.

“நன்றி,” என்றாள் ட்ரேஸி - அந்த ஸ்கார்ஃபினால் தான் மாட்டிக் கொள்ளப் போகிறோம் என்பதை அறியாதவளாக.

## 67

விடிகாலை ஐந்து மணிக்கு விமான நிலையத்துக்குப் புறப்படுவதென்று ட்ரேஸி தீர்மானித்திருந்தாள்.

ஆனால் இரவு பூரா அவளுக்குத் தூக்கம் இல்லை. தலையை யாரோ மடேர் என்று இடிக்கிற மாதிரி வலித்தது.

ஆஸ்பிரின் மாத்திரை விழுங்கினாள். அப்படியும் உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது.

ஐந்து மணிக்கு அலாரம் அடித்தது. ட்ரேஸி விழித்துக் கொண்டாள். ஆனால் கண்கள் எரிந்தன. மார்பில் பாறாங்கல் வைத்த மாதிரி கனத்தது. பழைய சிறைச்சாலையில் அடைபட்டிருப்பது போலவும், சாப்பாட்டு மணி அடிப்பது போலவும், 'ஊம் ஊம்! கிளம்பு,' என்று குண்டு பெர்த்தா விரட்டுவது போலவும் பிரமைகள் ஏற்பட்டன. கஷ்டப்பட்டு எழுந்து குளியலறையை அடைந்தாள். கண்ணாடியில் பார்த்தபோது முகம் வீங்கியிருப்பது தெரிந்தது. வாந்தியெடுக்க வரும்போலிருந்தது. கூடாது, கூடாது. இன்றைக்கு நான் காய்ச்சலில் படுத்துக் கொள்ளக் கூடாது. எடுத்துக் கொண்ட வேலையை முடித்தாக வேண்டும்.

மெதுவே உடை மாற்றிக் கொண்டாள். இருதயம் அடித்துக் கொள்ளும் சத்தம் கேட்டது. அது ஜுரத்தினாலா அல்லது பரபரப்பினாலா என்று தெரியவில்லை. தொண்டை வறண்டிருந்தது.

புறப்பட்ட சமயம், மேஜை மீது ஜெஃப் கொடுத்த ஸ்கார்ஃப் இருப்பதைக் கண்டாள். அதை எடுத்துக் கழுத்தில் சுற்றிக் கொண்டாள்.

யாரும் தன்னைக் கவனிக்காத வண்ணம் ஓட்டலின் பின்வாசல் வழியே சென்று டாக்ஸி அமர்த்திக் கொண்டு கிளம்பினாள். டாக்ஸி ரொம்ப வேகமாய்ப் போவது போல் தோன்றியது.

முப்பது நிமிட நேரத்தில் ஒரு கடை முன் டாக்ஸி நின்றது. டாக்ஸியின் கதவைத் திறந்ததும் ஒரு நடுத்தர வயது ஆள் வந்து, "என் பின்னால் வாருங்கள். சீக்கிரம், நேரமில்லை," என்றான். தட்டித் தடுமாறிச் சென்ற ட்ரேஸி, கடையினுள் பற்பல பெரிய பெட்டிகள் இருப்பதைக் கண்டாள். எல்லாம் விமானத்தில் ஏற்றப்படுவதற்குத் தயாராய் இருந்தன. ஒரு பெட்டி, ஒரு பக்கம் மட்டும் கேன்வாஸ் துணி

தைக்கப்பட்டு இருந்தது. அதனுள் ஏதேதோ கண்டாமுண்டா சாமான்கள் இருந்தன.

“சீக்கிரம்! இதற்குள் உட்கார்ந்து கொள்ளுங்கள்,” என்றான் அந்த ஆள்.

ட்ரேஸிக்கு மயக்கம் வருவது மாதிரி இருந்தது. பெட்டியை நோக்கினாள். ‘இதற்குள் இருப்பதா? முடியாது! நான் செத்து விடுவேன்!’ என்று எண்ணிக் கொண்டாள்.

“ஆகட்டும் அம்மா! சீக்கிரம்!” என்றான் அந்த ஆள்.

வேண்டாம். இப்போது திரும்பி விடலாம். என்னால் முடியாது என்று சொல்லிவிடலாம். இதுதான் வாபஸ் வாங்க கடைசித் தருணம்...

ஆனால் அவளையறியாமல் அவள், “சரி,” என்று முணுமுணுத்தாள்.

இன்னும் ஒன்றிரண்டு மணி நேரம்தான். ஜெனீவாவுக்குப் போய் விடாலாம். பிறகு எல்லாம் சரியாகி விடும்...

“இந்தாருங்கள்,” என்று சொல்லி ஒரு கத்தியும் ஒரு கயிற்றுச் சுருளும் கொடுத்தான் அவன். டார்ச்லைட்டும் தந்தான்.

பிறகு, சிவப்பு ரிப்பன் சுற்றிய ஒரு சிறிய நகைப் பெட்டியைக் கொடுத்தான்.

“இதுதான் நீங்கள் மாற்றி வைக்கவேண்டிய டூப்ளிகேட் பெட்டி,” என்றான்.

ட்ரேஸி ஆழ்ந்து ஒரு பெருமூச்சை வெளியிட்டபின் அந்தப் பெட்டிக்குள் புகுந்து கொண்டாள். கான்வாஸ் துணி மூடப்பட்டு, கயிறு கட்டப்படுவதை உணர்ந்தாள்.

பெட்டியின் இடுக்கு வழியே அவன் சொன்னான்: “இந்த நிமிடம் முதல் நீங்கள் அசையக் கூடாது. சத்தம் போடக் கூடாது... பெட்டியின் பக்கவாட்டில் சிறு சிறு ஓட்டைகள் போட்டிருக்கிறேன். மூச்சுவிடக் கஷ்டமிருக்காது.”

பெட்டிக்குள் அவளால் தாராளமாக இருக்க முடிய வில்லை. என்னென்னவோ சாமான்கள் அவளை இடித்தன. உடம்பில் எங்கே தொட்டாலும் கொதித்தது. 'நல்ல ஜுரம் வந்திருக்கிறது,' என்று எண்ணியவள், மறு கணமே, 'உடம்பைப் பற்றி நினைக்கக் கூடாது. வேறு விஷயங்களை நினைப்போம்,' என்று எண்ணிக் கொண்டாள்.

கந்த்தர் சொன்னதையெல்லாம் ஞாபகப்படுத்திக் கொண்டாள். 'நீ எதைப் பற்றியும் க்வலைப்படத் தேவை யில்லை. ஆம்ஸ்டர்டாமில் விமானம் இறங்கியதும். சரக்குப் பெட்டிகளை இறக்குவார்கள். நீ இருக்கிற பெட்டியை மட்டும் ஒரு தனிக் கார் ஷெட்டுக்குக் கொண்டு போக ஏற்பாடு செய்திருக்கிறேன். அங்கே ஜெஃப் காத்திருப்பான். அவனிடம் வைரப் பெட்டியைக் கொடுத்துவிட்டு, எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் விமான நிலையத் திற்குத் திரும்பிவிடு. ஸ்விட்ஜர்லாந்து விமானக் கம்பெனி கவுண்ட்டரில் ஜெனிவா செல்வதற்கான டிக்கெட் உனக்காகக் காத்திருக்கும். பெற்றுக்கொண்டு ஜெனிவா விமானத்தில் ஏறிக்கொண்டு ஆம்ஸ்டர்டாமை விட்டுக் கிளம்பிவிடு. காரணம், வைரப் பெட்டி திருடப் பட்டுவிட்ட சமாசாரம் தெரிந்த மறு வினாடியே போலீசார் உஷாராகி விடுவார்கள். ஊரை விட்டு யாரும் வெளியே போக முடியாதபடி வலை போட்டு விடுவார்கள். அதற்குள் நீ கிளம்பிவிடு. இந்தத் திட்டம் தப்பாகவே போகாது. ஒருவேளை தப்பாய்ப் போனால், இந்தா சாவி, அட்ரஸ். ஆம்ஸ்டர்டாமுக் குள்ளேயே நீ இந்த வீட்டில் பத்திரமாகத் தங்கிக் கொள்ளலாம். அங்கே யாரும் கிடையாது.'

இதையெல்லாம் நினைத்தபடியே சில நிமிடம் கண்ணயர்ந்து விட்டாள் போலும். தான் இருக்கும் பெட்டி தூக்கப்படுவது தெரிந்தது. ஒரு லாரியில் அது ஏற்றப் படுவதையும், விமான நிலையத்தை நோக்கிச் செல்வதையும் ஊகித்துக் கொண்டாள்.

"இன்னும் வரவில்லையே, இன்னும் வரவில்லையே?" என்று விமான நிலையத்தில் தவித்துக் கொண்டிருந்தான் வாபான். விமானத்தில் சரக்குப் பெட்டிகளை ஏற்றும் பொறுப்பு அவனுடையது.

"என்ன, எல்லாம் ஏற்றியாகி விட்டதா?" என்று விமானி விரட்டிக் கொண்டிருந்தான் அவனை.

"இதோ, ஒன்றே ஒன்று பாக்கி," என்று வாபான் சொல்லிக் கொண்டிருக்கையில், ட்ரேஸியை உள்ளடக்கிய பெட்டி வந்துவிட்டது. 'அப்பாடா!' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டான் வாபான்.

சில நிமிடங்களில் பெட்டி விமானத்துக்குள் ஏற்றப்பட்டு விட்டது.

ஜுரத்தினால் ட்ரேஸியின் எண்ணங்கள் கன்னா பின்னாவென்று சிதறின. கடலில் புயல் வீசிக் கொண்டிருக் கிறது. அவளுடைய படகு ஆடுகிறது... இல்லையில்லை... எழுந்து கொள்ள முயன்றபோது தலை எதிலோ இடித்தது. அவளுக்கு நினைவு திரும்பியது. தான் எங்கே இருக்கிறோம் என்பதும், என்ன செய்ய வேண்டும் என்பதும் ஞாபகம் வந்தன. ஒரு மணி நேரம்தானே விமானப் பயணம்? ஐயோ, நாம் ரொம்ப நேரம் தூங்கி விட்டோமோ?

பையிலிருந்து கத்தியை எடுப்பதே பெரும் பிரயத் தனமாக இருந்தது. அதை எடுத்துக் கான்வாஸைச் சுற்றி யிருக்கும் கயிற்றை வெட்டினாள். கொஞ்சம் இடைவெளி கிடைத்தது. ஆனால் வெளியே போக அது போதவில்லை. இன்னும் கொஞ்சம் அறுத்தாள்.

வெளியே வந்தாள். தேகம் மொத்தமும் நடுங்கிக் கொண்டிருந்தது. விமானம் குலுங்கிக் குலுங்கிப் பறந்ததால் எந்த நிமிடமும் வாந்தி வரும் போலிருந்தது.

மறுபடியும் தன் சிந்தனைகளை ஒருமுகப்படுத்திக் கொண்டாள்.

விமானம் தடாலென்று கீழே இறங்கி மேலே எழும்பியது. ட்ரேஸியும் விழுந்து எழுந்தாள்.

சிவப்புப் பெயின்ட் அடித்த பெட்டியில் தான் வைரம் இருப்பதாகச் சொல்லியிருந்தார்கள். நல்ல வேளை, அதோ அந்த மூன்றாவது பெட்டி.

எழுந்து நின்றாள். மறுபடியும் நினைவு சிதறியது. அம்மா! அம்மா! ஒரு நிமிஷம் படுத்துத் தூங்கினால் எவ்வளவு சுகமாயிருக்கும்!

மீண்டும் உடம்பு நடுங்கியது. கத்தியைக் கையில் கெட்டி யாகப் பிடித்துக் கொள்வதே பெரும்பாடாக இருந்தது.

என்னால் முடியாது. இப்படியே விழுந்துவிடப் போகி றேன். என்னைப் பிடித்து, பழையபடி சிறைக்கு அனுப்பி விடப் போகிறார்கள்.

ஒரு வழியாய்க் கயிற்றை அறுத்தாள். டார்ச் லைட்டை அடித்து அந்தப் பெட்டியின் உட்புறத்தை ஆராய்ந்தபோது -

காதை ஏதோ குப்பென்று அடைக்கிற மாதிரி இருந்தது.

புரிந்தது. விமானம் இறங்கத் தொடங்கிவிட்டது.

பதற்றத்துடன் பார்த்தாள். சிவப்பு ரிப்பன் சுற்றிய இரண்டு நீலப் பெட்டிகள் இருப்பது தெரிந்தது. இரண்டா? ஒன்றுதானே இருக்க வேண்டும்? தலையை உலுக்கிக் கொண்டாள். இரண்டு அல்ல! அவளுடைய மனப் பிரமை! ஒன்றுதான் இருந்தது.

அதை எடுத்துக்கொண்டு, தன் பைக்குள்ளிருந்த டூப்ளிகேட் பெட்டியை எடுத்தாள். இரண்டையும் கையில் வைத்துக் கொண்டிருந்த கணத்தில் குபுக்கென்று ஒரு குமட்டல் வந்தது. சிரமத்துடன் அதை அடக்கிக் கொண்டு கண்களை விழித்த போது, எது, தான் எடுத்துக் கொள்ள வேண்டிய அசல் வைரப் பெட்டி; எது, உள்ளே வைக்க வேண்டிய டூப்ளிகேட் பெட்டி என்பது தெரியாமல் போயிற்று.

விமானம் வெகு வேகமாய் கீழே இறங்குவதை உணர்ந் தாள். கடவுள் மேல் பாரத்தைப் போட்டு விட்டு, ஒரு பெட்டியை உள்ளே வைத்தாள். மற்றதைப் பையில் போட்டுக் கொண்டாள். ஜெஃப் கொடுத்த ஸ்கார்ஃபினால் முகத்தின் வியர்வையைத் துடைத்துக் கொண்டாள்.

வாபான் சொல்லிக் கொடுத்திருந்தபடி அந்தப் பெட்டியைப் பழையபடி கட்டினாள். தன் பெட்டிக்குள் புகுந்துகொண்டு, அங்கேயும் முன்போலக் கயிற்றைக் கட்டிக் கொண்டாள். வாபான் சொன்ன போது மிகச் சுலபமாய்த் தோன்றிய அதே காரியம் இப்போது மலையைப் புரட்டுவதாக இருந்தது.

தலை கிர்கிர்ரென்று சுற்றியது. ஏதேதோ பயங்கரக் கனவுகள் அவளை ஆட்டிப் படைத்தன.

'காப்பாற்றுங்கள்! என்னைக் காப்பாற்றுங்கள்!' என்று பயங்கரமாய்க் கூச்சலிட்டாள். இல்லை, கூச்சலிடுவதாக நினைத்துக் கொண்டாள். எந்தச் சத்தமும் எழவில்லை.

விமானம் தரையிறங்கியது. பெட்டிகள் இறக்கப்பட்டன. தானிருக்கும் பெட்டி ஒரு லாரியில் ஏற்றப்படுவதைக் கூட ட்ரேஸியால் உணர முடியவில்லை. ஜுர வேகத்தில் அவள் நினைவு நீச்சின்றிக் கிடந்தாள்.

அங்கே, விமானத்தின் உள்ளே, தரையில் அந்த ஜெஃப் கொடுத்த ஸ்கார்ஃப் கிடந்தது. TW என்று எம்பிராய்டரி செய்த ஸ்கார்ஃப்.

## 68

ஜுரத்தின்வேகத்தில் முதலில் எங்கே போகிறோம், என்ன செய்கிறோம் என்பதே ட்ரேஸிக்கு விளங்கவில்லை.

தான் ஒளிந்திருக்கும் பெட்டியை லாரி ஏற்றிக் கொண்டு செல்வது மட்டும் புரிந்தது. லாரி நின்றது. அவளுடைய

பெட்டியின் கான்வாஸ் திறக்கப்பட்டு, விளக்கு வெளிச்சம் பளீரெனப் பரவிய பிறகு ட்ரேஸிக்குச் சற்றே விழிப்பு வந்தது.

கந்த்தர் ஏற்பாடு செய்திருந்தபடி ஒரு கிடங்குக்கு அவள் கொண்டு வரப்பட்டிருந்தாள்.

ஜெஃப் அவளைப் பார்த்தவாறு இருந்தான். அவன் முகம் மலர்ந்திருந்தது. "பிரமாதம் ட்ரேஸி, பிரமாதம்! அருமையாய் வேலையை முடித்துவிட்டாய்!" என்று அவன் பாராட்டுவது எங்கோ சொப்பனத்தில் கேட்கிற மாதிரி இருந்தது. "அபாரமான பெண் தான் நீ! வைரப் பெட்டியைக் கொடு! சீக்கிரம்!"

அவள் மசமசவென்றிருப்பதைக் கண்டு அவனே அவளுடைய பாக்கெட்டில் கையை விட்டு வைரங்கள் கொண்ட பெட்டியை எடுத்துக் கொண்டான். "நல்லது! லிஸ்பன் நகரில் உன்னைச் சந்திக்கிறேன். வரட்டுமா?" என்று புறப்பட்டவன், நின்று திரும்பி அவளை நோக்கினான். "ட்ரேஸி, ஏன் பேயடித்த மாதிரி இருக்கிறாய்? உடம்புக்கு ஒன்றுமில்லையே?"

அவளால் பேசக்கூட முடியவில்லை. "ஜெஃப், நான்..."

அவள் பேசியதைச் சரியாய்க் காதில் வாங்கிக் கொள்ளாமலே அவன் வேகமாய்ப் போய்விட்டான்.

அதற்குப் பிறகு என்னென்ன நடந்ததென்று ட்ரேஸிக்குச் சரியாகவே நினைவில்லை. யாரோ ஒரு பெண் வந்தாள். மாற்று உடைகள் கொடுத்து அணியச் சொன்னாள். "உங்களுக்கு ஏதோ உடம்பு சரியில்லை போல் தோன்றுகிறதே, மேடம்? டாக்டர் யாரையாவது அழைத்து வரட்டுமா?" என்றாள்.

"வேண்டாம்," என்பதைக் கூடக் கிசுகிசுத்த குரலில்தான் ட்ரேஸியால் சொல்ல முடிந்தது.

கந்த்தர் சொல்லியிருந்ததெல்லாம் தெளிவில்லாமல் ஞாபகம் வந்தன.

ஸ்விட்சர்லாந்து விமானக் கம்பெனியின் கவுண்ட்டருக்குப் போ ட்ரேஸி. நீ ஜெனிவா போவதற்கான டிக்கெட் அங்கே தயாராயிருக்கிறது. வாங்கிக் கொள். எவ்வளவு வேகமாக முடியுமோ அவ்வளவு வேகமாக ஆம்ஸ்டர்டாமை விட்டுப் புறப்பட்டு விடு. ஏனென்றால் வைரப் பெட்டி திருட்டுப் போன செய்தி தெரிந்த மறு நிமிடமே, நகரத்தை விட்டு யாரும் வெளியே போக முடியாதபடி போலீசார் எல்லா மார்க்கங்களையும் அடைத்து விடுவார்கள். பயப்படாதே. எதுவும் தப்பாய்ப் போகாது. எதற்கும் இந்த வீட்டு விலாசத்தை வைத்துக் கொள். இதோ சாவி. ஆம்ஸ்டர்டாமில் இது பாதுகாப்பான தனி வீடு. அங்கே யாரும் கிடையாது...

ட்ரேஸி நினைவுபடுத்திக் கொண்டாள். விமான நிலையம்! ஆமாம், விமான நிலையம்! உடனே அங்கே போயாக வேண்டுமே!

"ட்ாக்ஸி," என்று முனகினாள். "டாக்ஸி... ஒரு டாக்ஸி..."

"அந்தப் பெண் ஒரு நிமிடம் தயங்கினாள். பிறகு தோளைக் குலுக்கிக்கொண்டு, "சரி, மேடம். டாக்ஸி அழைத்து வருகிறேன். இங்கேயே இருங்கள்," என்றாள்.

உடம்பெல்லாம் கொதிக்கக் கொதிக்க மேலே பறப்பது போலிருந்தது ட்ரேஸிக்கு. சூரியனை நோக்கிப் போகிற மாதிரி இருந்தது.

"டாக்ஸி," என்று ஓர் ஆண் குரல் கேட்டது.

ஏன் இப்படி எல்லாரும் என் பிராணனை எடுக்கிறார்கள்? கொஞ்ச நேரம் என்னைத் தூங்க விடக் கூடாதா? ட்ரேஸியின் நெஞ்சு கெஞ்சியது.

"எங்கே மேடம் போகணும்?" என்று டாக்ஸி டிரைவர் கேட்டான்.

ஸ்விட்சர்லாந்து விமான அலுவலகத்தில் உனக்கு ஜெனிவாவுக்கு டிக்கெட் காத்திருக்கிறது...

'இல்லை, முடியாது. விமானத்தில் ஏறுகிற அளவுக்கு நம் உடம்பில் சக்தி இல்லை,' என்று ட்ரேஸிக்குத்

தோன்றியது. விமான நிலையத்தில் அவள் நிலையைப் பார்த்ததுமே தடுத்து நிறுத்தி விடுவார்கள். டாக்டரைக் கூப்பிடுவார்கள். கேள்விகள் கேட்பார்கள்.

வேண்டாம். சில நிமிஷங்கள் படுத்துத் தூங்கினால் போதும். எல்லாம் சரியாகிவிடும்.

டாக்ஸி டிரைவர் எரிச்சலுடன், "எங்கேம்மா போகணும்?" என்று மறுபடி கேட்டான்.

எங்கே போவது?

கந்த்தர் சொன்ன வீடு ஞாபகம் வந்தது. அந்த விலாசத்தை டாக்ஸியோட்டியிடம் கொடுத்தாள்.

அந்த வீட்டை அடைந்து, படுக்கையில் விழுந்தபோது ட்ரேஸியின் நினைவுகள் பறந்தன. சிதறின. என்னென்னவோ ஞாபகங்கள்...

போலீசார் வந்து விட்டார்கள். வைரப் பெட்டி எங்கே என்று கேட்கிறார்கள். ட்ரேஸி பதில் சொல்ல மறுக்கிறாள். அவர்களுக்கு ரொம்பக் கோபம். அவளைப் பிடித்து ஒரு தனி அறையில் அடைக்கிறார்கள். சூடேற்றும் கருவியைக் கொண்டு அந்த அறைக்குள் வெப்பம் ஏற்றுகிறார்கள்...

பிறகு நினைவு தெளிகிறது.

அவள் ஒரு கட்டிலில் படுத்திருக்கிறாள். குளிர்க் காய்ச்சலில் உடம்பு வெடவெடவென்று நடுங்குகிறது. காலடியில் கனத்த கம்பளி இருந்தும் அதை எடுத்து இழுத்துப் போர்த்திக்கொள்ளக்கூட அவள் உடம்பில் திராணியில்லை.

அவள் உடை மொத்தமும் நனைந்திருந்தது. முகமும் கழுத்தும் ஈரமாகியிருந்தன.

இங்கேயே நான் செத்துவிடப் போகிறேன்.

இங்கே என்றால் எங்கே?

'பாதுகாப்பான வீடு.' கந்த்தர் சொன்னது திரும்பத் திரும்ப நினைவு வந்தது. அந்த வார்த்தையே வேடிக்கையாகத் தோன்றியது. நினைக்க நினைக்கச் சிரிப்பு வந்தது.

கடகடவென்று சிரித்தாள். சிரித்ததால் கமறிக் கமறி இருமல் வந்தது.

நினைவு மேலும் சிறிது தெளிவடைந்தது.

நாம் செய்ததெல்லாம் தப்பு. இன்னேரம் ஜெனிவாவுக்குப் பறந்து கொண்டிருக்க வேண்டும். ஆம்ஸ்டர்டாம் நகரை விட்டு வெளியேறாமலே இருந்துவிட்டோம். தப்பு. இந்த நகர் பூரா போலீசார் வலை போட்டுத் தேடிக் கொண்டிருப்பார்கள். விமான நிலையத்தில் விசாரிப்பார்கள்.

ட்ரேஸி விட்னி என்ற பெண்ணுக்காக ஜெனிவாவுக்கு ஒரு டிக்கெட் இருக்கிறது. ஆனால் அந்தப் பெண் டிக்கெட்டைப் பெற்றுக் கொள்ளவில்லை. ஆகவே அவள் வெளிநாடு போகவில்லை. இங்கேதான் ஆம்ஸ்டர்டாமுக்குள் இருக்கிறாள். இப்படியெல்லாம் போலீசார் கணக்கிடுவார்கள்... தேடுவார்கள்...

எத்தனை நேரமாய்ப் படுக்கையில் கிடக்கிறோம் என்று தெரிந்து கொள்ள விரும்பினாள் ட்ரேஸி. மணிக்கட்டைத் தூக்கிக் கைக் கடியாரத்தைப்பார்த்தாள். முட்கள் எதுவும் சரியாய்த் தெரியவில்லை. பார்க்கும் ஒவ்வொன்றும் இரட்டை இரட்டையாகத் தெரிந்தன. இரண்டு கட்டில்கள், இரண்டு ட்ரெஸ்ஸிங் டேபிள்கள், நாலு நாற்காலிகள்...

இப்போது குளிர் குறைந்தது. உடம்பு மட்டும் கொதித்தது. ஜன்னலைத் திறந்தால் தேவலை என்று தோன்றியது. ஆனால் எழுந்து திறக்க முடியாமல் பலவீனம் தடுத்தது. அறையெங்கும் மறுபடி குளிர் நிறைவது போலிருந்தது.

மறுபடியும் பிரமைகள்... அந்தச் சரக்கு விமானத்தில், பெட்டிக்குள் முடங்கிக் கிடக்கிறாள். 'ஐயோ, யாராவது உதவிக்கு வாருங்களேன்!'

பிரமாதம் ட்ரேஸி! பிரமாதமாய் வேலையை முடித்து விட்டாய்! அபாரமான பெண் நீ! வைரப் பெட்டியைக் கொடு!

ஜெஃப் தன்னிடமிருந்து வைரப் பெட்டியைப் பெற்றுக் கொண்டது ஞாபகம் வந்தது. இந்நேரம் அவளுக்குச் சேர வேண்டிய பணத்தையும் சேர்த்துப் பெற்றுக் கொண்டு பிரேஸில் நாட்டுக்குப் பறந்து கொண்டிருப்பான். ஒரு பெண்ணை அணைத்துக் கொண்டு ஆனந்தமாய்ச் சிரித்துக் கொண்டிருப்பான். இன்னொரு முறையும் அவனே ஜெயித்து விட்டான். அவனை நினைத்தாலே வெறுப்பாயிருக்கிறது. இல்லை, அவன்மீது வெறுப்பு ஏற்படவில்லை. இல்லை, வெறுப்பாய்த் தான் இருக்கிறது... இல்லை...

ஜன்னி வருவதும் போவதுமாயிருந்தது ட்ரேஸிக்கு. கனமான பந்து ஒன்று அவளை நோக்கி உருண்டு வருகிற மாதிரி இருந்தது. ஜெஃப் சடேரென்று அவளைத் தாங்கிக் கொள்கிறான். படுக்கையிலிருந்து அவளைக் கீழே தள்ளி அவளை இறுக்கி அணைத்துக் கொள்கிறான். அவன் உதடுகள் அவள் உதடுகளை நெருங்கி வருகின்றன. உடனே அவர்கள் நட்சத்திர ஓட்டலில் விருந்து உண்கிறார்கள். 'ட்ரேஸி, இன்று நீ எவ்வளவு அழகாய் இருக்கிறாய் தெரியுமா?' 'சரி, போட்டியை இத்துடன் நிறுத்திக் கொள்ளலாம்,' என்று செஸ் சாம்பியன் போரிஸ் சொல்கிறார்...

அவள் தேகம் மீண்டும் நடுங்கத் தொடங்கியது. அடக்க முடியாமல் நடுங்கியது. எக்ஸ்பிரஸ் ரயிலில் இருண்ட குகைக்குள் தடதடவென்று ஓடிக் கொண்டிருப்பது போலிருந்தது. குகையிலிருந்து ரயில் வெளி வரும்போது அவள் செத்திருப்பது நிச்சயம். எல்லாப் பிரயாணிகளும் இறங்கி விட்டார்கள். ஒருவன் மட்டுமே இருக்கிறான். ரொம்பக் கோபமாக அவளை உலுக்குகிறான். குலுக்குகிறான். கத்துகிறான்.

"ட்ரேஸி! புண்ணியமாப் போகட்டும்! கண்ணைத் திற! திறந்து என்னைப் பார்!"

ஓர் அமானுஷ்யமான சக்தியுடன் ட்ரேஸி கண்ணைத் திறந்தாள்.

அவளை நோக்கிக் குனிந்தபடி நின்றிருந்தான் ஜெஃப். அவன் முகம் வெளுத்திருந்தது. அவன் குரலில் பதற்றம் தொனித்தது.

இதெல்லாம் சொப்பனம்... கனவு...

"ட்ரேஸி, எவ்வளவு நேரமாய் இப்படிக் கிடக்கிறாய்?" என்றான் ஜெஃப்.

"நீ பிரேஸிலில் அல்லவா இருக்க வேண்டும்?" என்றாள் ட்ரேஸி.

அதன் பிறகு அவளுக்கு எதுவுமே நினைவில்லை.

அங்கே போலீஸ் கமிஷனரின் அலுவலகம் அமளி துமளிப்பட்டுக் கொண்டிருந்தது. வைரப் பெட்டி கள வாடப்பட்டு விட்டது தெரிந்து போய், விமான நிலையத்தைச் சல்லடை போட்டுச் சலித்தார்கள். முக்கியமாக, அந்தச் சரக்கு விமானத்தை.

ஒரு போலீஸ்காரர் உள்ளே வந்தார். "சார், அந்தச் சரக்கு விமானத்தில் தரையில் இது கிடந்தது," என்று சொல்லி ஒரு ஸ்கார்ஃபைக் கொடுத்தார்.

கமிஷனர் அதை வாங்கிப் பார்த்தார். அதன் மூலையில் TW என்ற எழுத்துகள் எம்பிராய்டரி செய்யப்பட்டிருப்பதைக் கண்டார்.

அவருக்கு ஞாபகம் வந்தது.

TW - ட்ரேஸி விட்னி.

இந்த ட்ரேஸி விட்னியைப் பற்றி ஆரம்பம் முதல் துப்பறியும் நிபுணன் கூப்பர் எச்சரித்துக் கொண்டிருந்ததும், அவனை அலட்சியப்படுத்தி விரட்டி விட்டதும் நினைவு வந்தது.

உடனே, "அந்தக் கூப்பர் எங்கே இருந்தாலும் இப்பவே கூப்பிடு," என்று கட்டளையிட்டார்.

ஜெஃப்புக்குத் தோன்றிய முதல் எண்ணம், உடனே ட்ரேஸியை ஓர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்பதுதான். ஆனால் அதில் பல ஆபத்து இருக்கிறது. அதே சமயம், ஆம்ஸ்டர்டாம் நகருக்குள் அவள் தங்கியிருப்பதும் அபாயம்.

போர்வைகள் நிறைய போர்த்தி அவளைக் காருக்கு எடுத்துச் சென்றான். அப்போதும் அவள் நினைவற்றுத்தான் இருந்தாள்.

ஆம்ஸ்டர்டாம் நகருக்கு வெளியே, ஹாலந்து நாட்டின் ஒரு கோடியில் அல்க்மார் என்று ஒரு சிறு கிராமம் இருப்பது அவனுக்கு நினைவு வந்தது. கடற்கரை ஓரத்தில் அழகான கிராமம். ஒரு விமானப் பணிப் பெண்ணுடன் அங்கே பலமுறை சென்றிருக்கிறான். ஓரளவு டச்சு மொழியையும் அவள் கற்றுத் தந்திருந்தாள்.

அல்க்மாரை நோக்கிக் காரை ஓட்டினான். போகும் வழி பூரா ட்ரேஸி நினைவு நீச்சின்றியே கிடந்தாள்.

அல்க்மார் கிராமத்தில் ஜனங்கள் அதிகம் இல்லை. இருந்தவர்களும் அவரவர் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தார்களே தவிர யார் வருகிறார்கள், யார் போகிறார்கள் என்று மூக்கை நுழைத்துக் கெண்டிருக்க வில்லை. மொத்தத்தில் போலீசார் கண்ணில் படாமல் ஒளிந்திருக்க வசதியான ஊர்.

ஒரு சின்ன விடுதியின் வாசலில் காரை நிறுத்தினான் ஜெஃப். அறை எடுத்துக் கொண்டான்.

ட்ரேஸியை இரு கைகளிலும் தூக்கிக்கொண்டு அவன் மாடிக்குச் செல்வதைக் கண்டு விடுதிக்காரர் புருவத்தை உயர்த்தினார்.

"நாங்கள் தேனிலவுக்கு வந்திருக்கும் புதுத் தம்பதி," என்று அவருக்கு விளக்கினான் ஜெஃப். "என் மனைவிக்கு உடம்பு சரியில்லை. கொஞ்சம் மூச்சுத் திணறல்... வேறொன்றுமில்லை..."

"டாக்டர் யாராவது வேண்டுமா?"

ஜெஃப்பால் டாக்டர் வேண்டுமென்றும் சொல்ல முடியவில்லை. வேண்டாமென்றும் சொல்ல முடியவில்லை. "கொஞ்சம் பொறுத்துச் சொல்கிறேன்," என்று கூறிவிட்டு அறைக்குச் சென்றான்.

முதலில் இவளுடைய ஜுரத்தைக் குறைத்தாக வேண்டும்.

படுக்கையில் மெல்லக் கிடத்தி, அவளுடைய உடைகளைக் கழற்றினான். வியர்வையில் உடம்பெங்கும் நனைந்திருந்தது. சாய்ந்தாற்போல் அவளை உட்கார்த்தி வைத்து, தலைக்கு மேலாக ஒவ்வொரு உடையாகக் களைந்தான். பிறகு உள்ளாடைகளையும் உருவினான். காலணிகளை அகற்றினான். தொட்ட இடமெங்கும் சுட்டது.

குளிர்ந்த தண்ணீரில் துவாலையை நனைத்து, காலோடு தலை மெல்ல ஒற்றினான். ஒரு போர்வை எடுத்துப் போர்த்தினான்.

பிறகு அவள் தாறுமாறாகச் சுவாசம் விடுவதைப் பார்த்தபடி படுக்கையோரத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

நாளைக்குள் சரியாகாவிட்டால் டாக்டரைக் கூப்பிட வேண்டியதுதான் என்று முடிவு செய்தான்.

அங்கே போலீசார் ட்ரேஸியைத் தேடிக் கொண்டிருந்தார்கள்.

## 69

மறுநாள் காலை -

ட்ரேஸியின் ஜுர வேகத்தால் படுக்கைத் துணிகள் மீண்டும் சொத சொதத்திருந்தன. இன்னும் நினைவு வராமலே கிடந்தாள். ஆனால் அவளுடைய சுவாசம் இப்போது சீராக வருகிறதென்று ஜெஃப்புக்குத் தோன்றியது.

விடுதியின் வேலைக்காரி உள்ளே வந்து ட்ரேஸியின் நிலைமையைப் பார்ப்பது ஆபத்து என்று அவன் நினைத்தான். அனாவசியமான சந்தேகங்களுக்கு இடம் ஏற்படக்கூடும். ஆகவே தானே விடுதிக்காரரிடம் சென்று வேறு போர்வை தலையணைகளை வாங்கி வந்தான். ஈரத் துவாலை கொண்டு ட்ரேஸியின் உடம்பைத் துடைத்து விட்டான். மருத்துவமனைகளில் நர்ஸ்கள் செய்வதுபோல நோயாளியைத் தொந்தரவு செய்யாமலே மெல்லப் படுக்கை விரிப்புக்களால் போர்த்திவிட்டான்.

வெளியே வந்து கதவைச் சாத்தினான். 'தயவுசெய்து தொந்தரவு செய்யாதீர்கள்' என்ற அறிவிப்பை மாட்டிவிட்டு, அருகே மருந்துக் கடை எங்கே இருக்கிறதென்று தேடிச் சென்றான். கடையில் கொஞ்சம் ஆஸ்பிரின் மாத்திரைகள், தர்மா மீட்டர், ஸ்பாஞ்ச், உடம்புக்குத் தேய்த்துவிடும் ஆல்கஹால் முதலியன வாங்கிக் கொண்டான். அறையைத் திரும்ப அடைந்தபோதும் ட்ரேஸி கண்களைத் திறக்கவில்லை. தர்மா மீட்டரை வைத்துப் பார்த்தான். 104 டிகிரி இருந்தது. குளிர்ந்த ஆல்கஹாலினால் உடம்புக்கு ஒத்தடம் கொடுத்தபின்னர் ஜுரம் இறங்கியது.

ஆனால் ஒரு மணி நேரம் கழித்துப் பார்த்தபோது மறுபடி ஜுரம் ஏறியிருந்தது.

டாக்டரைக் கூப்பிட வேண்டியதுதான் என்று தோன்றியது. ஆனால் ட்ரேஸியை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகும்படி டாக்டர் சொல்வார். அங்கே கேள்விகள் கேட்பார்கள்.

போலீசில் தங்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்களோ இல்லையோ, ஜெஃப்புக்குத் தெரியாது. தேடிக் கொண்டிருக்கும் பட்சத்தில் இருவரையும் கைது செய்வது நிச்சயம்.

அது வேண்டாம். வேறு ஏதாவதுதான் செய்ய வேண்டும்.

நாலு ஆஸ்பிரின் மாத்திரைகளைப் பொடி செய்தான். அதை ட்ரேஸியின் உதடுகளுக்கிடையே செலுத்தி, ஒவ்வொரு

ஸ்பூனாக மெதுவே தண்ணீர் ஊட்டினான். கொஞ்சம் கொஞ்சமாக அவள் விழுங்கினாள். ஈரத் துவாலையால் மறுபடி ஒருமுறை அவள் உடம்பைத் துடைத்து, பிறகு உலர்ந்த துணியினால் துடைத்தான். தேகம் முன் போல் அவ்வளவு கொதிக்கவில்லை என்று தோன்றியது. மணிக் கட்டைப் பிடித்து நாடி பார்த்தான். சீராக இருப்பதுபோல் தோன்றியது. மார்பின் மீது காது வைத்துக் கேட்டான். கபம் அடைத்திருக்கிறமாதிரி தோன்றியது. அல்லது நமக்குத்தான் அப்படிப் பிரமையோ? அவனுக்கு நிச்சயமாய்த் தெரிய வில்லை. ஆனால் ஒன்று நிச்சயமாய்த் தெரிந்தது. குணமாகி விடுவாள். அதையே மந்திரம் போல் திருப்பித் திருப்பிச் சொன்னான்: 'நீ குணமடைவது நிச்சயம். நீ குணமடைவது நிச்சயம். நீ குணமடைவது...'

சொல்லிக்கொண்டே அவள் நெற்றியில் மிருதுவாய் முத்தமிட்டான்.

அவனுக்கும் தூக்கம் கண்களைச் சுழற்றியது.

தூங்கிவிட்டான்.

ட்ரேஸி கண்களை விழித்தாள்.

தூக்கக் கலக்கத்துடன், அறையைச் சுற்றிப் பார்வையைச் சுழல விட்டாள். பழக்கமில்லாத அறை என்று தெரிந்தது. அங்கே -

ஜெஃப்! அவள் இதயம் ஒரு கணம் நின்றுவிட்ட மாதிரி இருந்தது.

ஜன்னலுக்கருகே ஒரு நாற்காலியில் சரிந்தாற்போல் உட்கார்ந்திருந்தான் ஜெஃப், ஆழ்ந்த உறக்கம்.

அவனைக் கடைசியாய் அந்தக் கிடங்கில் சந்தித்தது ஞாபகம் வந்தது. தன்னிடமிருந்து வைரங்களை வாங்கிக் கொண்டு புறப்பட்டுச் சென்றானே... இப்போது இங்கே உட்கார்ந்திருக்கிறானே... இங்கே என்ன செய்கிறான்? எதுவும் புரியவில்லை.

பிறகு விடை கிடைத்தது. ஆமாம்...

அந்தச் சரக்கு விமானத்தில் வைரப் பெட்டியை எடுத்த போது, எது அசல், எது அதன் இடத்தில் வைக்க வேண்டிய போலி என்பது தெரியாமல் ஒரு வினாடி தடுமாறினாளே... பிறகு ஏதோ ஒன்று என்று மனசில் தோன்றியதை வைத்து விட்டு வந்தாளே...

அப்போது, அசல் வைரத்தைவிட்டுவிட்டு, போலி வைரத்தை எடுத்து வந்திருக்கிறோம். அதைத் தான் ஜெஃப்பிடம் கொடுத்திருக்கிறோம். நாம் அவனை வேண்டு மென்றே ஏமாற்றிவிட்டதாக நினைத்து, கந்தர் தங்கச் சொல்லியிருந்த வீட்டுக்கு வந்து என்னைப் பிடித்து, இங்கே ஏதோ ஒரு இடத்துக்குக் கொண்டு வந்திருக்கிறான்...

எழுந்து உட்கார்ந்தாள். அந்தச் சத்தம் கேட்டு ஜெஃப் கண்ணைத் திறந்தான். ட்ரேஸி தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டான். அவன் முகத்தில் மகிழ்ச்சி மலர்ந்து கொஞ்சம் கொஞ்சமாக ஒரு புன்னகையாய் விரிந்தது.

"ஐயம் ஸாரி," என்றாள் ட்ரேஸி. அவள் குரல் கரகரப் பான முனகலாக இருந்தது. "நான் போலி வைரங்ளை எடுத்து வந்து உன்னிடம் கொடுத்து விட்டேன்..."

"என்னது?"

"ஆமாம் விமானத்தில் இருந்த போது எனக்கு ஜுரம். ஒரே தடுமாற்றம். அதில் எது அசல் வைரம் எது போலி என்று தெரியாமல் மாறிவிட்டது..." அவள் கண்களில் நீர் துளித்தது.

அவன் எழுந்து அவளருகே வந்து மெதுவாய் அவள் முகத்தைக் கைகளில் ஏந்திக் கொண்டான். "ட்ரேஸி, நீ எந்தத் தப்பும் செய்யவில்லை. சரியான வைரத்தைத்தான் எடுத்து வந்திருக்கிறாய். அந்த அசல் வைரப் பெட்டி கந்தரிடம் போய்ச் சேர்ந்து விட்டது."

திகைப்புடன் ட்ரேஸி அவனைப் பார்த்தாள். "பின்னே... அப்படியானால் நீ ஏன் இங்கே இருக்கிறாய்?"

அவன் படுக்கை முனையில் அவளை நெருங்கி உட்கார்ந்தான். "என்னிடம் வைரப் பெட்டியைக் கொடுத்தபோது உன் முகம் சவம் மாதிரி வெளுத்துக் கிடந்தது. எப்படியும் நீ விமான நிலையத்துக்கு வருவாய் என்று நினைத்தேன். நீ பத்திரமாக ஜெனிவா விமானத்தில் ஏறிச் செல்ல வேண்டுமே? அதை பார்ப்பதற்காகக் கவலையுடன் அங்கே காத்திருந்தேன். ஆனால் நீ வரக் காணோம். எனக்குக் கவலை பிடித்துக் கொண்டது. ஏதோ சங்கடத்தில் சிக்கியிருக்கிறாய் என்று ஊகித்து விட்டேன். கந்த்தர் உன்னிடம் கொடுத்திருந்த வீட்டு முகவரி எனக்குத் தெரியும். அங்கே போய்ப் பார்த்தேன். எந்த நிமிடமும் இறந்து விடுகிற மாதிரி நீ அங்கே கிடந்தாய்..."

ட்ரேஸி திகைப்புடன் அவனையே நோக்கியவாறு இருந்தாள். "நிஜத்தைச் சொல்லு. எதற்காக என்னைத் தேடி வந்து காப்பாற்றினாய்?"

"அதெல்லாம் அப்புறம் பேசலாம். அப்புறம் பேசலாம். இப்போது டெம்பரேச்சர் எடுக்கிற நேரம்." தெர்மாமீட்டரை வைத்துப் பார்த்தவன், "நூறுக்குக் கொஞ்சம் மேலே யிருக்கிறது. ட்ரேஸி, நீ டாக்டருடன் ஒத்துழைக்கிற அருமை யான நோயாளி!"

"ஜெஃப்-"

"என்ன வேண்டும், தயங்காமல் சொல்லு," என்றான் அவன். "பசிக்கிறதா?"

"ஆமாம், பசி ஆளைக் கொல்கிறது," என்றாள். நிஜ மாகவே பயங்கரப் பசியாயிருந்தது அவளுக்கு.

"இதோ போய் ஏதாவது வாங்கி வருகிறேன்," என்று புறப்பட்டான் ஜெஃப்

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ஒரு பை நிறைய வாங்கி வந்தான். ஆரஞ்சு ஜூஸ், பால், புத்தம் புதிய பழங்கள், வெண்ணெய், ஜாம் முதலியன தடவிய ரொட்டித் துண்டுகள்...

அவளைத் தாங்கிப் பிடித்து உட்கார்த்தி வைத்து, உணவை ஜாக்கிரதையாக, மென்மையாக ஊட்டினான்.

'ஏதோ ஒரு உள்நோக்கத்துடன் தான் இவ்வளவும் செய்கிறான்' என்று ட்ரேஸிக்கு மனத்தின் ஒரு மூலையில் சந்தேகம் எழுந்தபடி இருந்தது.

சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது ஜெஃப் சொன்னான்: "வெளியே போனபோது கந்த்தருக்கு டெலிபோன் செய்தேன். வைரம் வந்து சேர்ந்துவிட்டது என்று சொன்னார். உன் பங்குப் பணத்தை ஸ்விஸ் பாங்க்கில் டெபாசிட் செய்து விட்டாராம்."

ட்ரேஸிக்குத் திகைப்பு. "மொத்தப் பணத்தையும் நீயே எடுத்துக் கொண்டிருக்க முடியுமே? ஏன் அப்படிச் செய்ய வில்லை?"

ஜெஃப் பதிலளித்தபோது அவன் குரல் ஆழத்துடன் இருந்தது. "இதோ பார், ட்ரேஸி, நீயும் நானும் இன்னும் எத்தனை நாளைக்குக் கண்ணாமூச்சி ஆடிக் கொண்டி ருப்பது? போதும் ட்ரேஸி."

இப்போதுகூட ட்ரேஸி அவனை நம்பத் தயாரா யில்லை. அவனுடைய வழக்கமான பசப்புப் பேச்சு என்றே நினைத்தாள்.

"உன்னுடைய ஆடைகளின் சைஸ்களைச் சொல்லு. நான் கடைக்குப் போய் வாங்கி வருகிறேன்." என்றான் அவன்.

ட்ரேஸி அப்போதுதான் தன்னைப் பார்த்துக் கொண்டாள். முக்கால் நிர்வாணமாகக் கிடப்பதை உணர்ந்ததும் சட்டெனப் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டாள்.

ஜெஃப் தன்னுடைய உடைகளைக் களைந்ததும், ஈரத் துணியால் உடம்பைத் துடைத்து விட்டதும் எங்கோ சொப்பனத்தில் கண்ட மாதிரி மங்கலாக நினைவு வந்தது.

இவன் போலீசில் மாட்டிக் கொள்ளக்கூடிய அபாயம் இருந்தும் அதைப் பொருட்படுத்தாமல் என்னைக் காய்ச்சலிலிருந்து காப்பாற்றியிருக்கிறான்... ஏன்...? இவனை உள்ளும் புறமுமாகப் புரிந்து வைத்திருக்கிறோம் என்று

இத்தனை நாளாய் நினைத்து வந்தேன். இல்லை. இவனைப் புரியவில்லை. புரியவேயில்லை.

மறுபடி ட்ரேஸி தூக்கத்தில் ஆழ்ந்தாள்.

அன்று பிற்பகல் ஜெஃப் மீண்டும் வெளியே சென்று ஒரு செய்தித்தாள் வாங்கி வந்தான்.

அதன் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்தில் -

விமானத்தில் வைரம் களவாடப்பட்டிருந்த செய்தி வெளியாகியிருந்தது. ஆனால் திருடர்கள் தடயம் எதுவும் விட்டு வைக்கவில்லை என்றும் செய்தி கூறியது.

"பார்த்தாயா! நம்மை யாரும் கண்டுபிடிக்கவில்லை! நாம் சுதந்திரப் பறவைகள்! நீ சீக்கிரம் குணமாக வேண்டும். அதுதான் பாக்கி," என்றான் ஜெஃப் உற்சாகமாக.

விமானத்தில் கண்டெடுத்த ஸ்கார்ஃபைப் பற்றியும், அதில் TW என்ற இனிஷியல் இருந்ததைப் பற்றியும் பத்திரிகைகளுக்கு எந்தச் செய்தியும் கொடுக்க வேண்டா மென்று கூப்பர் தான் போலீஸ் கமிஷனருக்குச் சொல்லி யிருந்தான்.

"இந்த ஸ்கார்ஃப் ட்ரேஸி விட்னிக்குச் சொந்தமானது தான். அதில் சந்தேகமில்லை. ஆனால் அவள்மீது குற்றம் சாட்ட இது ஒன்றே போதுமான சாட்சியமாகாது. அவளுடைய வக்கீல்கள், இதே TW இனிஷியலுடன் உள்ள நூறாயிரம் பெண்களைக் கோர்ட்டில் கொண்டுவந்து நிறுத்துவார்கள். உங்கள் முத்தில் அசடு வழியும்!" என்றான் கூப்பர்.

ஏற்கெனவே பல அசட்டுத்தனங்களைப் போலீசார் செய்துவிட்டார்கள் என்று அவனுக்குக் கோபம்.

'அந்த ட்ரேஸி மட்டும் என் கையில் கிடைத்தால்..." என்று பல்லைக் கடித்தான்.

ட்ரேஸி கண் விழித்தபோது அறை இருட்டில் மூழ்கியிருந்தது. தலை மாட்டிலிருந்த விளக்கைத் தட்டி விட்டாள்.

அறையில் தான் மட்டுமே தனியாக இருப்பது தெரிந்தது. ஜெஃபைக் காணோம். எங்கே போனான்?

அவள் மனத்தில் கலவரம் மூண்டது. தன்னைத்தானே நொந்து கொண்டாள். ஜெஃப்பை ரொம்பத் தான் நம்பி விட்டோம். ரொம்பத்தான் அவன் மீது சார்ந்து விட்டோம். இது தப்பு.

மீண்டும் தலையணையில் சாய்ந்து படுத்துக் கண்ணை மூடிக்கொண்டாள். ஜெஃப் இல்லாததற்காக மனம் ஏன் இப்படித் தவிக்கிறது? ஏன் இந்தத் தவிப்பு? கடவுள் என்னிடம் இப்படி விளையாடக் கூடாது. ஊரிலே உலகத்திலே எல்லாரையும் விட்டு விட்டு இவன்மீது ஏன் நான் பிரியம் வைத்தேன்? கூடாது...

கதவு திறக்கும் ஓசை கேட்டது. “ட்ரேஸி, எழுந்து விட்டாயா? உனக்காகக் கொஞ்சம் பத்திரிகைகள் வாங்கி வந்தேன். உனக்கு...” என்றவன் அவள் முகத்தில் தென்பட்ட உணர்ச்சிகளைக் கண்டான். “என்ன ட்ரேஸி, ஏன் அப்படிப் பார்க்கிறாய்? ஏதாவது கவலையா?”

“இல்லை இல்லை...” என்று கிசுகிசுத்த குரலில் ட்ரேஸி பதிலளித்தாள். “இப்போது இல்லை...”

மறுநாள் காலை ட்ரேஸியின் காய்ச்சல் முற்றிலும் அகன்றுவிட்டது.

“வெளியே எங்காவது போக வேண்டும்போல் இருக்கிறது,” என்றாள். “நாம் கொஞ்சம் வாக் போகலாமா

இருவரும் வெளியே புறப்பட்டார்கள்.

விடுதியின் முன்னறையில் இருந்தவர்கள் அவர்களைக் குறுகுறுப்புடன் பார்த்தார்கள். விடுதியின் சொந்தக் காரருக்கும் அவர் மனைவிக்கும் ட்ரேஸி குணமடைந்ததில் ரொம்ப மகிழ்ச்சி. ட்ரேஸியிடம் வந்து, "என்ன அற்புதமான மனிதர் உங்கள் கணவர்! உங்களுக்காக எங்களை எந்த வேலையும் செய்யவிடவில்லை. எதுவானாலும் தானேதான் செய்ய வேண்டும் என்று ஒரே பிடிவாதம்! பாவம், ரொம்பக் கவலைப்பட்டுவிட்டார் உங்களைப் பற்றி. இத்தனை பிரியம் வைத்திருக்கிற கணவன் கிடைப்பதற்கு எந்தப் பெண்ணும் கொடுத்து வைத்திருக்க வேண்டும்!" என்றார்கள்.

ஜெஃப்பின் முகத்தைப் பார்த்தாள் ட்ரேஸி. வெட்கத்தை மறைத்துக்கொள்ள அவன் முயற்சிப்பது அப்பட்டமாய்த் தெரிந்தது.

அன்றிரவு, ஜெஃப் தனக்கென்று ஒரு சிறிய கட்டில் வரவழைத்துக் கொண்டான். ட்ரேஸியின் படுக்கைக்குப் பக்கத்தில் அதைப் போட்டுக் கொண்டு படுத்தான்.

ட்ரேஸியின் நினைவெல்லாம் ஜெஃபைப் பற்றியே இருந்தது. எவ்வளவு நன்றாய் நம்மைக் கவனித்துக் கொண்டான்! எப்படியெல்லாம் நம் தேவைகளைக் கவனித் தான்! மருந்து கொடுத்ததோடு, தன்னுடைய நிர்வாணமான உடம்பைத் துடைத்துச் சுத்தம் செய்தானே!

அவன் நினைப்பு அவள் மனத்தை ஆக்கிரமித்திருந்தது. ஒரு பக்கம் ஜெஃப்தான் தனக்குப் பாதுகாப்பு என்று தோன்றியது. இன்னொரு பக்கம் சங்கடமாயிருந்தது.

மெல்ல மெல்ல ட்ரேஸி குணமடைந்து பழைய தெம்பைத் திரும்பப் பெற்றாள்.

அவளும் ஜெஃபும் அந்தச் சின்னஞ்சிறு ஊரின் எல்லாப் பகுதிகளையும் சுற்றிப் பார்ப்பதில் பெருமளவு நேரத்தைச் செலவழித்தார்கள். நூற்றாண்டு நூற்றாண்டாக இருந்து வரும் கல் பதித்த தெருக்களில் நடந்தார்கள் ஊருக்கு

வெளியில் உள்ள வயல்களில் பூத்துள்ள மலர்களை ரசித்தார் கள். நகரசபை மியூசியம், மார்க்கெட் என்று சுற்றினார்கள்.

உள்ளூர் ஜனங்களிடம் ஜெஃப் டச்சு மொழியில் பேசுவதைக் கண்டு ட்ரேஸிக்கு ஆச்சரியமாயிருந்தது.

"எங்கே கற்றுக்கொண்டாய் இதை?" என்று கேட்டாள்.

"ஒரு டச்சுப் பெண்ணை எனக்குத் தெரியும்," என்றான் அவன்.

ட்ரேஸிக்கு ஏனோ வேதனை ஏற்பட்டது. ஏன் அதைக் கேட்டோம் என்று நினைத்துக் கொண்டாள்.

நாளாக ஆக ட்ரேஸியின் இளமையான தேகம் தானாகவே நலமடைந்தது. அவளுக்குப் போதுமான பலம் வந்துவிட்டது என்று அறிந்ததும் ஜெஃப் வாடகைக்குச் சைக்கிள்கள் எடுத்துவந்தான். இருவருமாக அக்கம்பக்கத்துக் கிராமங்களுக்குச் சென்றார்கள். எங்கு பார்த்தாலும் காற்றாடி யந்திரங்கள் சுழல்வதைக் கண்டார்கள். ஒவ்வொரு நாளும் ஒரு சந்தோஷமான விடுமுறைத் தினமாக இருந்தது ட்ரேஸிக்கு. இப்படியே முடிவில்லாமல் இது நீடிக்க வேண்டும் என்று விரும்பினாள்.

ஜெஃபைப் பற்றி ட்ரேஸிக்கு வியப்பாகவே இருந்தது. எப்போதும் மென்மையுடனும் அக்கறையுடனும் அவளிடம் நடந்து கொண்டான். அவனிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும் என்று ட்ரேஸி கட்டிவைத்திருந்த கோட்டைச் சுவர்கள் இடிந்து விழுந்துவிட்டன. இருந்தாலும் அவன் ஒருமுறைகூட அவளிடம் தப்பாக நடந்து கொள்ள வில்லை. அவன் ஒரு புரியாத புதிராகத் தோன்றினான் ட்ரேஸிக்கு.

எதைப் பற்றியெல்லாம் யாருடனும் பேசக் கூடாது என்று இத்தனை நாளும் வைராக்கியமாக இருந்தாளோ அதையெல்லாம் தன்னையும் மறந்து ஜெஃபுடன் பேசினாள். அம்மாவை ஏமாற்றிய ரொமானோவைப் பற்றியும், ஆர்ஸெட்டியைப் பற்றியும், சிறை வாழ்க்கையைப் பற்றியும்,

குழந்தை ஆமியைப் பற்றியும் குண்டு பெர்த்தாவைப் பற்றியும் ஜெஃப்புக்குச் சொன்னாள். ஜெஃப் அதைக் கேட்டுச் சில சமயம் ஆத்திரப் பட்டான். சில சமயம் அனுதாபப்பட்டான். அவனும் தன் சிற்றன்னையைப் பற்றியும் நாடகக் குழுவில் சேர்ந்து தான் ஊர் ஊராகச் சுற்றிதைப் பற்றியும் சொன்னான்.

அவ்வளவு நெருக்கமாக யாருடனும் தான் பழகிய தில்லை என்று ட்ரேஸிக்குத் தோன்றியது.

புறப்பட வேண்டிய நாள் வந்தது.

அன்று காலை ஜெஃப் சொன்னான்: "ட்ரேஸி, போலீசில் நம்மைத் தேடக் காணோம். ஆகவே நாம் இந்த ஊரை விட்டுக் கிளம்பி விடலாம் என்று நினைக்கிறேன்."

ஏமாற்ற உணர்வு ட்ரேஸியைச் சுரீரென்று குத்தியது. "சரி, எப்போது புறப்படலாம்?"

"நாளைக்கு."

அவள் மெதுவாகத் தலையசைத்தாள். "காலையில் துணிமணிகளைக் கட்டி வைத்துவிடுகிறேன்."

அன்றிரவு ட்ரேஸிக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. கொட்டக் கொட்ட விழித்துக்கொண்டு படுத்திருந்தாள். அந்த அறை மொத்தத்திலும் ஜெஃப் வியாபித்திருப்பது போல் தோன்றியது. ஜெஃப் படுத்திருந்த கட்டிலை நோக்கினாள்.

"ஜெஃப்... தூங்கிவிட்டாயா?"

"இல்லை..."

"எதைப் பற்றி யோசனை?"

"நாளைய தினத்தைப் பற்றி... இந்த இடத்தை விட்டுப் போகிறோமே என்று வருத்தமாயிருக்கிறது."

"உன்னைவிட்டுப் பிரியப் போகிறோமே என்று வருத்த மாக இருக்கிறது ஜெஃப்" அவளையும் மீறி அந்த வார்த்தை கள் வந்து விட்டன.

ஜெஃப் மெல்ல எழுந்து உட்கார்ந்து கொண்டான். அவளைப் பார்த்து, "ரொம்ப வருத்தமா?" என்றான்.

"பயங்கர வருத்தம்."

அடுத்த நிமிடம் அவன் எழுந்து வந்து அவளுடைய படுக்கையில் உட்கார்ந்தான்.

"ட்ரேஸி..."

"ஷ்! எதுவும் பேசாதே. என்னை அணைத்துக்கொள். இறுக்கி அணைத்துக்கொள்," என்றாள் ட்ரேஸி.

அந்த ராத்திரி மொத்தமும் அவர்கள் தங்களை மறந்திருந்தார்கள்.

ட்ரேஸி தனக்குள் சொல்லிக் கொண்டேயிருந்தாள்- இந்த ஓர் இரவுதான். இந்த ஒரு முறைதான். இது ஜெஃப்புக்கு நான் கொடுக்கும் பிரிவுப் பரிசு...

**வி**டிகாலையின் வெளிச்சம் அறைக்குள் பரவிய போது ஜெஃப் சொன்னான்: "ட்ரேஸி, என்னை மணந்து கொள்வாயா?"

ட்ரேஸி திகைத்தாள். ஏதோ தப்பாக நம் காதில் விழுந்திருக்கிறது என்று எண்ணினாள். அவன் மறுமுறையும் அதையே சொன்னான்.

இது பித்துக்குளித்தனம், இது அசாத்தியமானது, இது ஒரு நாளும் சரிப்படாது என்றெல்லாம் ட்ரேஸி எண்ணினாள். அதே சமயம், அற்புதமான விஷயம் இது, நிச்சயமாகச் சரிப்படும் என்றும் எண்ணினாள். கிசுகிசுத்த குரலில், "சம்மதம்! எனக்குச் சம்மதம்!" என்றாள். சொல்லி விட்டு உணர்ச்சி மிகுதியினால் விம்மினாள். அவனுடைய வலிய கரங்கள் அவளைப் பாதுகாப்பாக அணைத்துக் கொண்டன.

'இனி என்றைக்குமே நான் தனியாளாக இருக்க மாட்டேன்' என்று நினைத்துக் கொண்டாள் ட்ரேஸி. நானும் இவனும் ஒருவருக்காகவே ஒருவர் பிறந்தவர்கள். என்னுடைய நாளைய தினங்கள் அனைத்திலும் இவன் என்னில் ஒரு பாகம்...

வெகு நேரத்துக்குப் பிறகு ட்ரேஸி கேட்டாள்: "என்மீது உனக்குக் காதல் ஏற்பட்டது எப்போது ஜெஃப்?"

"உன்னை அந்த வீட்டில் பார்த்தேனே. அப்போது. நீ இறக்கப் போகிற மாதிரி கிடந்தாய். அந்த நிமிடமே என் உள்ளத்தை உன்னிடம் பறிகொடுத்துவிட்டேன்..."

"வைரப் பெட்டியை எடுத்துக் கொண்டு நீ ஓடிவிட்டாய் என்று நான் நினைத்தேன்," என்று ஒப்புக் கொண்டாள் ட்ரேஸி.

அவன் அவளை மீண்டும் அணைத்துக்கொண்டான். "ட்ரேஸி, ஒன்று சொல்லட்டுமா? மாட்ரிட் மியூசியத்தில் நீ எடுத்து வந்திருந்த ஓவியத்தை நான் பறித்துச் சென்றது பணத்துக்காக அல்ல. அது ஒரு போட்டி - அது ஒரு சவால். ஆமாம் ட்ரேஸி. நாம் இரண்டு பேருமே இந்தத் தொழிலில் இருப்பது பணத்துக்காக அல்ல. சவாலுக்காகத்தான். இல்லையா? ஒரு புதிர் உன் கையில் கிடைத்திருக்கிறது. அதை விடுவிப்பது எப்படி என்று உனக்கே தெரியவில்லை. அப்படித்தானே?"

"ஆம்." என்று தலையசைத்தாள் ட்ரேஸி. "முதலில் எனக்குப் பணம் தேவையாயிருந்தது. அதற்காக இதில் இறங்கினேன். பிறகு ஏழை எளியவர்களுக்கு நிறைய வழங்கினேன். அதற்காக மேலும் சம்பாதித்தேன். பிறகு வாழ்க்கையே ஒரு சவாலாகி விட்டது. அயோக்கியத்தனமாகச் சம்பாதித்து வெற்றிகரமாக விளங்குகிறவர்களை என் மூளைப் பலத்தால் தோற்கடிப்பது எனக்கு ஆனந்தமாக இருந்தது. அபாயமான கத்தி முனையில் வாழ்வது எனக்குப் பிடித்திருக்கிறது."

ஜெஃப் நீண்ட நேரம் மௌனமாக இருந்தான். "ட்ரேஸி, இந்த வாழ்க்கையை நீ விட்டுவிடேன். என்ன சொல்கிறாய்?"

அவள் அவனைத் திகைப்புடன் பார்த்தாள். "விட்டு விடுவதா? ஏன்?"

“இதுவரை நாம் இரண்டு பேரும் நம் இஷ்டப்படி வாழ்க்கை நடத்திவந்தோம். இப்போது எல்லாம் மாறி விட்டது. இனி உனக்கு ஏதாவது நேரிட்டால் என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. இனிமேலும் எதற்காக அபாயங் களை மேற்கொள்ள வேண்டும்? என்றென்றைக்கும் நமக்குப் போதுமான அளவுக்குப் பணம் சம்பாதித்தாயிற்று. நாம் இரண்டு பேருமே ரிடையராகி விடுவோமே?”

“அதன் பிறகு என்ன செய்வது, ஜெஃப்?”

அவன் சிரித்தான். “ஏதாவது செய்வோம்.”

“நான் சீரியஸாகவே சொல்கிறேன் ஜெஃப். எப்படி நம் வாழ்க்கையைக் கழிப்போம்?”

“ஏன்? நமக்கு என்னென்ன பிடிக்குமோ அவ்வளவும் செய்வோம். பல நாடுகளுக்குப் பயணம் போவோம். பிடித்த பொழுதுபோக்குகளைச் செய்வோம். எனக்குத் தொல் பொருள் ஆராய்ச்சி என்றால் எப்போதுமே பிடிக்கும். டுனீஷியாவில் ஒரு சினேகிதன் இருக்கிறான். அங்கு வருவதாக முன்பே சொல்லியிருக்கிறேன். நம் சொந்தப் பணத்தைச் செலவழித்துத் தொல்பொருள் ஆராய்ச்சிகள் செய்வோம். உலக மொத்தமும் சுற்றுவோம்.”

“கேட்கவே உற்சாகமாக இருக்கிறது, ஜெஃப்.”

“அப்படியானால் என்ன சொல்கிறாய்?”

அவன் முகத்தை ஒரு நிமிடம் பார்த்துவிட்டு, “உன் விருப்பப்படி,” என்றாள் மென்மையாக.

அவன் அவளை அணைத்துக் கொண்டு சிரித்தான். “நாம் ரிடையராகிவிட்டோம் என்று போலீசுக்கு அறிவிப்புக் கொடுக்கலாம் போலிருக்கிறது,” என்றான் வேடிக்கையாக.

அவளும் அவன் சிரிப்பில் சேர்ந்து கொண்டாள்.

மறுநாள் கந்த்தரிடமிருந்து போன் வந்தது. அப்போது ஜெஃப் வெளியே போயிருந்தான். ட்ரேஸி போனை எடுத்தாள்.

இந்தத் தொழிலை விட்டு விட்டுப் புது வாழ்க்கை ஆரம்பிக்கலாமென்று ட்ரேஸியும் ஜெஃபும் தீர்மானித்திருந்த சமயம் -

கந்த்தர் டெலிபோனில் கூப்பிட்டார்.

"எப்படி இருக்கிறே, ட்ரேஸி?" என்றார்.

"பிரமாதமாய் இருக்கிறேன்," என்று ட்ரேஸி உறுதி கூறினாள்.

அவள் உடம்பு சரியில்லாமற் போனதிலிருந்து தவறாமல் கந்த்தர் போன் செய்து விசாரித்துக் கொண்டிருந்தார். தானும் ஜெஃபும் மணந்து கொள்வதாக இருப்பதைப் பற்றி ட்ரேஸி அவருக்குத் தெரிவிக்கவில்லை. இன்னும் கொஞ்ச நாள் ஆகட்டும் என்பது அவள் எண்ணம். தன் காதலை யாரிடமும் வெளிப்படுத்தாமல், தனக்குள்ளேயே வைத்து வளர்த்து அழகு பார்க்க வேண்டும் போலிருந்தது அவளுக்கு.

"உனக்கும் ஜெஃபுக்கும் சரிப்பட்டு வருகிறதா?" என்று கந்த்தர் கேட்டார்.

ட்ரேஸி புன்னகையுடன், "அருமையாய்," என்றாள்.

"நீயும் ஜெஃபும் சேர்ந்து ஒரு வேலை செய்ய வேண்டும். என்ன சொல்கிறாய்?"

உண்மையைச் சொல்ல வேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டது என்று ட்ரேஸிக்குத் தோன்றியது. "கந்த்தர்... நாங்கள்... வந்து... இந்தத் தொழிலையே விட்டுவிடப் போகிறோம்."

ஒரு நிமிடம் மௌனம் நிலவியது. "நீ சொல்வது புரியவில்லையே?"

"ஜெஃபும் நானும் இனிமேல் நேர்வழியில் வாழப் போகிறோம்."

“என்னது..! ஆனால்... ஏனிப்படி?”

“ஜெஃப்தான் அப்படிச் சொன்னார். நானும் ஒப்புக் கொண்டேன். இனிமேல் அபாயங்களில் அகப்பட்டுக் கொள்ளப் போவதில்லை.”

“நான் சொல்கிற காரியத்துக்கு இருபது லட்சம் டாலர் உங்களுக்குக் கிடைக்கும். எந்தவித அபாயமும் இல்லாத வேலை. இப்போது என்ன சொல்கிறாய்?”

“எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது. கந்த்தர்.”

“நான் சீரியஸாய்ச் சொல்கிறேன், ட்ரேஸி. நீ ஆம்ஸ்டர்டாமுக்குப் போக வேண்டும். இப்போது நீ இருக்கும் இடத்திலிருந்து ஒரு மணி நேரப் பயணம்தான்.”

“நீங்கள் வேறு யாரையாவது அமர்த்திக் கொள்வது நல்லது.”

அவர் பெருமூச்சு விட்டார். “இந்த வேலையைச் செய்வதற்கு உன்னை விட்டால் ஆள் கிடையாது. குறைந்த பட்சம் ஜெஃப்புடன் பேசிப் பாரேன், நான் சொன்னதைப் பற்றி.”

“செய்கிறேன். ஆனால் பலன் இருக்காது.”

“சாய்ந்தரம் நான் மறுபடி போன் செய்கிறேன்,” என்றார் கந்த்தர்.

வெளியே போயிருந்த ஜெஃப் சற்றைக்கெல்லாம் திரும்பி வந்தான். கந்த்தருடன் பேசியதைச் சொன்னாள் ட்ரேஸி.

“சட்டத்துக்குட்பட்டு நடக்கிற நல்ல பிரஜைகளாக நாம் மாறி விட்டோம் என்று அவரிடம் நீ சொல்லவில்லையா?”

“சொல்லாமலிருப்பேனா? சொன்னேன். வேறு ஆள் பார்த்துக் கொள்ளுங்கள் என்றும் சொன்னேன்.”

“வேறு ஆளிடம் ஒப்படைக்க கந்த்தர் இஷ்டப் படவில்லை போலிருக்கிறது.”

“நாம்தான் வேண்டும் என்று வற்புறுத்திச் சொல்கிறார். அபாயமே கிடையாதாம். சின்ன வேலைதானாம். செய்தால் இருபது லட்சம் கிடைக்குமாம்.”

"அப்படி அவர் சொன்னால் நிச்சயம் அபாயமான வேலையாய்த் தான் இருக்கும்," என்று சிரித்தான் ஜெஃப். அதைத் தொடர்ந்து தாங்கள் செய்த அபாய வேலைகளைப் பற்றியும் தங்களுக்குள் காதல் உதித்தது பற்றியும் சிறிது நேரம் பேசிக் கொண்டார்கள்.

"சரி, கந்த்தருக்கு என்ன சொல்லட்டும்?" என்றாள் ட்ரேஸி மீண்டும்.

"அதுதான் நீ சொல்லிவிட்டாயே?" என்றான் ஜெஃப். "அந்த லைனுக்கு நாம் தலை முழுகியாகி விட்டது."

"அவர் திட்டம் என்ன என்பதைச் சும்மா கேட்டுக் கொள்வோமே? அதிலென்ன நஷ்டம்?"

"இதோ பார் ட்ரேஸி, முன்பே நாம் முடிவு செய்த மாதிரி"

ட்ரேஸி குறுக்கிட்டாள். "எப்படியும் நாம் ஆம்ஸ்டர் டாமுக்குத் தானே போகப் போகிறோம்?"

"ஆமாம். ஆனால்..."

"அப்புறம் என்ன? அங்கே கந்த்தரைப் பார்த்து, என்ன விஷயம் என்று கேட்டு வைப்போமே?"

ஜெஃப் அவளை ஆழமாகப் பார்த்தான். "அந்த வேலையைச் செய்ய வேண்டுமென்று உனக்கு ஆசை ஏற்பட்டு விட்டது. அப்படித் தானே?"

"சே, சே! அப்படியொன்றுமில்லை. கந்த்தர் என்ன சொல்கிறார் என்பதைக் கேட்டு வைத்துக் கொள்வதால் ஒன்றும் நஷ்டமில்லையே என்று சொல்கிறேன்..."

மறுநாள் அவர்கள் ஆம்ஸ்டர்டாம் நகரை அடைந்தார்கள். வசதியான ஓட்டலில் தங்கி, கந்த்தருக்குச் சொல்லியனுப்பினார்கள். லண்டனில் இருந்த கந்த்தர் அவர்களைச் சந்திப்பதற்காக வந்தார்.

சொகுசுப் படகொன்றை அமர்த்திக்கொண்டு, உல்லாச யாத்திரிகர்கள் மாதிரி மூவரும் நதியில் பயணம் செய்தார்கள்.

"நீங்கள் இரண்டு பேரும் கல்யாணம் செய்து கொள்கிறது பற்றி எனக்கு ரொம்ப சந்தோஷம். என் மனமார்ந்த வாழ்த்துக்கள்," என்றார் கந்த்தர்.

"தாங்க்யூ," என்றாள் ட்ரேஸி. மனப்பூர்வமாகத்தான் அவர் வாழ்த்துகிறார் என்று அவளுக்குத் தெரியும்.

"இந்தத் தொழிலை விட்டு விலகி, இரண்டு பேருமே ரிடையராகப் போவதாய்ச் சொல்கிறீர்கள். சந்தோஷம். உங்கள் முடிவுக்கு நான் மதிப்புக் கொடுக்கிறேன். இருந்தாலும், ஓர் அருமையான வேலை வந்திருக்கிறது. உங்களிடம் சொல்லாமல் இருக்க முடியவில்லை. பாட்டுக் கச்சேரியில் மங்களம் பாடுகிற மாதிரி அந்த வேலையைச் செய்துவிட்டு நீங்கள் ரிடையராகலாமே என்று தோன்றியது."

"சொல்லுங்கள்," என்றாள் ட்ரேஸி.

கந்த்தர் முன்புறம் குனிந்து ரொம்ப ரகசியமான குரலில் விஷயத்தைச் சொன்னார்.

சொல்லி முடித்தபின், "இதை மட்டும் வெற்றிகரமாகச் செய்து முடித்துவிட்டால், கை மேல் இருபது லட்சம் டாலர் கிடைக்கும்." என்றார்.

ஜெஃப் முரட்டுத்தனமாக, "ஊகூம், எதுவும் வேண்டாம்," என்று சொல்லிவிட்டு, "ட்ரேஸி," என்றவாறு அவள் பக்கம் திரும்பினான்.

ட்ரேஸி அவனைக் கவனிக்கவில்லை. கந்த்தர் சொல்லும் வேலையை எப்படிச் செய்யலாம் என்று திட்டம் போடுவதில் முனைந்து விட்டாள்.

ஆம்ஸ்டர்டாம் நகரின் போலீஸ் தலைமையகத்தில் எல்லாப் பெரிய அதிகாரிகளும் துப்பறியும் நிபுணர்களும் கூடியிருந்தார்கள். அவர்கள் எல்லாரும் டச்சுக்காரர்கள். கூப்பர் மட்டும் வெளி ஆள்.

ஜூப் என்ற பெரிய அதிகாரி ஆம்ஸ்டர்டாம் நகரப் போலீஸ் கமிஷனரை நோக்கிப் பேசினார். "ட்ரேஸி விட்னி என்கிற அந்தப் பெண் இன்று காலை ஆம்ஸ்டர்டாமுக்கு வந்திருக்கிறாள். ஏற்கெனவே விமானத்தில் வைரத்தைக் கடத்தியவள் அவள் தான் என்று சர்வதேசப் போலீஸ் உறுதியாகச் சொல்கிறார்கள். இப்போது அவள் பயங்கரமான கொள்ளையை நடத்தத்தான் இங்கே வந்திருக்கிறாள் என்று இங்கே உள்ள நம் நண்பர் கூப்பர் சொல்கிறார்."

கமிஷனர் கூப்பரிடம் கேட்டார்: "அப்படிச் சொல்வதற்கு ஆதாரம் ஏதாவது இருக்கிறதா மிஸ்டர் கூப்பர்?"

கூப்பருக்கு எந்த ஆதாரமும் தேவைப்படவில்லை. ட்ரேஸியை அவன் உள்ளும் புறமுமாக அங்குலம் அங்குலமாக அறிவான். நிச்சயமாய் ஒரு கொள்ளையை நடத்தத்தான் அவள் வந்திருக்கிறாள் என்று அவனது உள்ளுணர்வு சொல்லிற்று. பயங்கரமான, பிரமாதமான திட்டமொன்று அவள் வைத்திருக்கிறாள். அது இவர்களுடைய சின்ன மூளைகளுக்கு விளங்காது.

ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு அமைதியாக, "எந்த ஆதாரமும் இல்லை. அதனால்தான், அவளைக் கையும் களவுமாய்ப் பிடிக்க வேண்டும் என்று நான் சொல்கிறேன்."

"எப்படிப் பிடிப்பது?"

"அவள் நம் கண் பார்வையிலிருந்து ஒரு விநாடிகூட விலகாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்."

"நாம்" என்று அவன் குறிப்பிட்டது பெரிய போலீஸ் அதிகாரிக்கு என்னவோ போலிருந்தது. ஆனால் மற்ற நாட்டுப் போலீஸ் அதிகாரிகள் இவன் பேச்சைக் கேட்காததால் ஏமாந்து போனதைக் கமிஷனர் அறிந்திருந்தார். எனவே கூப்பரின் சொல்படி நடப்பதென்று தீர்மானித்தார்.

"நல்லது. இந்த ஊர் போலீசாரின் திறமையைப் பரீட்சிப்பது என்று அந்தப் பெண் பிள்ளை வந்திருந்தால்,

அதையும் பார்த்து விடுவோம்," என்றவர், "இவர் சொல்கிற படி தக்க நடவடிக்கை எடுங்கள்," என்று ஆணை பிறப்பித்தார்.

ஆம்ஸ்டர்டாம் நகரம் ஆறு போலீஸ் வட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. எல்லா வட்டங்களையும் சேர்ந்த போலீஸ் அதிகாரிகளும் துப்பறியும் நிபுணர்களும் வரவழைக்கப்பட்டார்கள்.

"அந்த ட்ரேஸியை இருபத்து நாலு மணி நேரமும் கண்காணிக்க வேண்டும். ஒரு நிமிடம் கூட உங்கள் பார்வையை விட்டு அவள் போகக் கூடாது," என்றார் கமிஷனர். பிறகு, "என்ன மிஸ்டர் கூப்பர், இப்ப திருப்திதானே?" என்றார்.

"அவளைப் பிடிக்கிறவரையில் எனக்குத் திருப்தி கிடையாது." என்றான் கூப்பர்.

"கவலையே படாதீர்கள். கட்டாயம் பிடிப்போம். உலகத்திலேயே சிறந்த போலீஸ் படை என்று எங்களுக்குப் பெயர் உண்டு," மார் தட்டினார் போலீஸ் கமிஷனர்.

அதே சமயம் ட்ரேஸியும் ஜெஃப்பும் கைகோத்துக் கொண்டு குஷாலாகத் திரிந்து கொண்டிருந்தார்கள்.

உல்லாசப் பிரயாணிகளின் சொர்க்கம் ஆம்ஸ்டர்டாம் நகரம். காற்றாடி யந்திரங்களும், சிறுசிறு மதகுகளும், இரு கரையிலும் மரங்கள் அடர்ந்த கால்வாய்களும், பூக்களும் செடிகளும் நிறைந்ததாக மிதந்து செல்லும் படகு வீடுகளும்...

டச்சு மக்களும் ரொம்ப சிநேகமாய்ப் பழகுகிறவர்கள். ஆகவே ட்ரேஸிக்கும் ஜெஃப்புக்கும் ஊர் சுற்றிப் பார்ப்பது தனி ஆனந்தமாக இருந்தது. ஜெஃப்பின் கையைக் கோத்துக் கொண்டு துணிக் கடைகளுக்கும் பழக் கடைகளுக்கும் புராதனப் பொருள்கள் விற்கும் கடைகளுக்கும் செல்வது

26313

ட்ரேஸிக்கு ரொம்பப் பிடித்திருந்தது. தெருக்களில் அங்கங்கே இளம் ஜோடிகள் பாடுவதும் ஆடுவதுமாக இருந்தார்கள்.

ஷிபால் எனப்படும் விமான நிலையத்தைக் கடந்து செல்கையில் ஜெஃப் சொன்னான்: "இந்த இடம் ஒரு காலத்தில் கடலாக இருந்தது. அதைத் தூர்த்து விமான நிலையம் கட்டியிருக்கிறார்கள். ஷிபால் என்றால் டச்சு மொழியில் 'கப்பல்களின் கல்லறை' என்று அர்த்தம்."

ட்ரேஸி அவனை ஒட்டி நெருங்கிக்கொண்டு, "எவ்வளவு விஷயம் தெரிந்து வைத்திருக்கிறாய்! உன்னைப் போன்ற அறிவாளியைக் காதலனாகப் பெற்ற நான் கொடுத்து வைத்தவள்தான்," என்றாள்.

"இன்னும் எவ்வளவோ விஷயம் உனக்குச் சொல்ல வேண்டும். இந்த நாட்டின் பரப்பில் இருபத்தைந்து சதவிகிதம் கடலைத் தூர்த்துக் கட்டியது தான். மொத்தத் தேசமும் கடல் மட்டத்துக்குப் பதினாறு அடி கீழே இருக்கிறதாக்கும்!"

"நிஜமாகவா?" என்று வியப்புத் தெரிவித்த ட்ரேஸி இன்னும் இறுக்கமாய் அவன் இடுப்பை அணைத்துக் கொண்டாள்.

ஜெஃப்பும் ட்ரேஸியும் எங்கே சென்றாலும் அவர்கள் பின்னால் ரகசியப் போலீஸ் ஆட்கள் சென்று கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு நாளும் போலீஸ் தலைமை நிலையத்துக்கு அறிக்கை தந்தார்கள். அதைக் கூப்பர் ஆழ்ந்து படித்து ஆராய்ந்தான். அதில் வித்தியாசமாக எதுவும் காணோம். ஆனால் கூப்பரின் சந்தேக உள்ளம் துறுதுறுத்துக் கொண்டே இருந்தது.

'ட்ரேஸி என்னவோ செய்யத்தான் போகிறாள்,' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். ஏதோ ஒரு பெரிய வேலையில் இறங்கியிருக்கிறாள். தன்னை ரகசியப் போலீஸ் பின்தொடர்ந்து கொண்டிருப்பது அவளுக்குத் தெரியுமா? அவளை உண்டு இல்லையென்று பண்ணுவதென நான் கங்கணம் கட்டிக் கொண்டிருப்பது அவளுக்குத் தெரியுமா...?

# 72

ட்ரேஸி ஏதோ பெரிய திட்டத்தோடு வேலை செய்து கொண்டிருக்கிறாள் என்று துப்பறியும் நிபுணன் கூப்பர்தான் நிச்சயமாய் நம்பினானே தவிர, ஆம்ஸ்டர்டாம் நகரத்துப் போலீசாருக்கு அப்படித் தோன்றவில்லை.

ட்ரேஸியும் ஜெஃபும் ஊர் சுற்றிப் பார்க்க வந்திருக்கும் உல்லாசப் பிரயாணிகள் என்றுதான் நினைத்தார்கள்.

இன்ஸ்பெக்டர் ஜூப் வாய் விட்டுக் கேட்டே விட்டார் தன் சந்தேகத்தை. "ஏன் மிஸ்டர் கூப்பர், நீங்கள் நினைத்திருப்பது ஒருவேளை தப்போ என்னவோ. ஹாலந்து நாட்டைத் தமாஷாகச் சுற்றிப் பார்க்கலாமென்றுதான் அவர்கள் வந்திருக்கிறார்களோ என்னவோ," என்றார்.

"ஒரு நாளுமில்லை," என்று முரட்டுப் பிடிவாதமாகக் கூப்பர் அவரை மறுத்தான். "என் கணக்குப் பிசகவே பிசகாது. அவர்கள் மீதிருந்து கண்ணை எடுக்காதீர்கள். பின் தொடர்வதை ஒரு விநாடிகூட நிறுத்தாதீர்கள்."

அப்படிச் சொன்னானே தவிர, நேரம் நழுவிக் கொண்டிருக்கிறதே என்ற கவலையும் உள்ளூர அவனை அரித்தது. ட்ரேஸி என்ன திட்டமிட்டிருக்கிறாளோ தெரியவில்லை. செய்வதைச் சீக்கிரம் செய்து தொலைத்தால் தேவலை என்று எண்ணினான். இல்லாவிட்டால் போலீசாருக்கு அலட்சியம் வந்துவிடும். அவளைக் கண்காணிப்பதை நிறுத்திவிடுவார்கள். அதற்கு இடம் கொடுத்துவிடக் கூடாது என்று தீர்மானித்தவனாக, ட்ரேஸியைக் கண்காணித்துக் கொண்டிருக்கும் ரகசியப் போலீசாருடன் தானும் சேர்ந்து கொண்டான்.

ட்ரேஸியும் ஜெஃப்பும் ஓட்டலில் தனித் தனி அறைகள் எடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் பக்கத்துப் பக்கத்து அறைகள். ஒன்றிலிருந்து இன்னொன்றுக்குச் செல்ல வழி இருந்தது.

"பார்ப்பவர்களுக்குக் கௌரவமாகத் தோன்ற வேண்டும். அதற்காகத்தான் இந்த ஏற்பாடு," என்று சிரித்தான் ஜெஃப். "என்னை விட்டு அதிக தூரம் நீ போகவிட மாட்டேன்."

"அத்தனைக்கு அத்தனை எனக்குச் சந்தோஷம்," என்றாள் ட்ரேஸி.

ஒவ்வோர் இரவும் அவள் அறைக்கு வந்து படுத்துக் கொள்வான் ஜெஃப். விடிகாலை எழுந்து தன் அறைக்குப் போய்விடுவான். ஒருநாள் முரட்டுக் காதலனாக இருப்பான். இன்னொரு நாள் மென்மையே உருவெடுத்த மாதிரி நடந்து கொள்வான்.

"எதற்காக இந்த உடம்பைக் கடவுள் எனக்குக் கொடுத்திருக்கிறார் என்று இப்போதுதான் முதல் தடவையாக எனக்குப் புரிகிறது," என்று அவன் காதோடு கிசுகிசுப்பாள் ட்ரேஸி. "தாங்க் யூ மை லவ்."

நகரத்தில் ஓர் இடம் பாக்கியில்லாமல் அவர்கள் சுற்றினார்கள். பெரிய பெரிய உணவு விடுதிகளுக்குச் சென்றார்கள். எதெல்லாம் அந்த நாட்டுக்கே உரிய உணவோ, எதெல்லாம் விலையுயர்ந்ததோ அதையெல்லாம் வரவழைத்துச் சாப்பிட்டார்கள். நகரத்தின் சிவப்பு விளக்குப் பகுதிகளுக்குப் போனார்கள். வகை வகையான பெண்கள், வாளிப்பான பெண்கள் தங்களுடைய வாளிப்பான தேகங்களைக் காட்டி ஆடவர்களைச் சுண்டியிழுப்பதைப் பார்த்தார்கள்.

ஒவ்வொரு நாளும் இன்ஸ்பெக்டர் ஜூப்புக்கு ரிப்போர்ட் வரும். அதைக் கூப்பரும் பார்ப்பான். அதில் ஒரே வரிதான் இருக்கும்: "சந்தேகப் படும்படியாக ஒன்றுமில்லை."

'பொறுமை! பொறுமையாக இரு!' என்று கூப்பர் தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

ட்ரேஸியும் ஜெஃபும் பேசிக் கொள்ளும் விஷயங்களை ஒட்டுக் கேட்பதற்காக அவர்களுடைய அறையில் ரகசிய ஒலிப்பதிவுக் கருவிகளை வைக்கவேண்டுமென்று கூப்பருக்குத்

தோன்றியது. அதை இன்ஸ்பெக்டர் ஜூப்பிடம் தெரிவிக்க, அவர் தன் மேலதிகாரியான கமிஷனருக்குத் தெரிவித்தார்.

ஆனால் கமிஷனர் அதற்கு அனுமதியளிக்க மறுத்து விட்டார்.

"உங்கள் சந்தேகம் உண்மையானதுதான் என்பதற்கு இன்னும் வலுவான ஆதாரங்கள் கொண்டு வாருங்கள். பிறகு அனுமதி தருகிறேன். மற்றபடி, ஹாலந்து நாட்டுக்கு வந்திருக்கும் நிரபராதிகளான டூரிஸ்டுகளின் பேச்சை ஒட்டுக்கேட்க நான் அனுமதி தரமாட்டேன்," என்று சொல்லி விட்டார்.

இது நடந்தது ஒரு வெள்ளிக்கிழமையன்று.

திங்கள்கிழமை மாலை ட்ரேஸியும் ஜெஃப்பும் ஆம்ஸ்டர்டாம் நகரத்தின் பிரபலமான வைர வியாபாரப் பகுதிக்குச் சென்றார்கள். பெரிய பெரிய வைரக் கற்களை வெட்டிப் பட்டை தீட்டும் தொழிற்சாலை அங்கே இருந்தது. டூரிஸ்டுகளுக்கு அந்த பாக்டரியைச் சுற்றிக் காட்டுவது வழக்கம்.

டூரிஸ்டுகளோடு டூரிஸ்டாக ஜெஃப்பும் ட்ரேஸியும் சேர்ந்து அங்கே போனபோது, ரகசியப் போலீசார் அவர்களைப் பின் தொடர்ந்தார்கள். அவர்களுடன் கூப்பரும் இருந்தான்.

இங்கிலீஷ் பேசும் கைடு ஒருவன் எல்லா டூரிஸ்டுகளையும் தொழிற்சாலைக்குள் அழைத்துச் சென்று, வைரம் பட்டை தீட்டப்படும் ஒவ்வொரு பகுதியையும் காட்டினான். அது முடிந்ததும், விற்பனைக்கு வைரங்கள் வைக்கப்பட்டுள்ள பகுதிக்கு அழைத்துப் போனான். ஷோகேஸ்களில் வகை வகையான வைரங்கள் அடுக்கப் பட்டிருந்தன.

பாக்டரியைச் சுற்றிக் காட்டியதன் நோக்கமே வருகிற டூரிஸ்டுகள் வைரம் வாங்க வேண்டும் என்பதற்காகத்தான்.

அறையின் மையத்தில் ஒரு கண்ணாடிப் பெட்டி வைக்கப்பட்டிருந்தது. அதற்குள் உயரமான, கறுப்பு நிறப்

பீடத்தில், ரொம்ப அற்புதமான வைரக்கல் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அவ்வளவு நேர்த்தியான வைரத்தை ட்ரேஸி அதுவரை பார்த்ததே கிடையாது.

கைடு மிகப் பெருமையுடன் விவரித்தான்: "சீமான்களே, சீமாட்டிகளே! இதோ இங்குள்ள வைரத்தின் பெயர் லூகுவான் வைரம். இதைப் பற்றி நீங்கள் நிறையக் கேள்விப் பட்டிருப்பீர்கள். ஒரு காலத்தில் ஒரு பிரபல நடிகர் தன் நட்சத்திர மனைவிக்குப் பரிசளிப்பதற்காக வாங்கியது இது. பிறகு பல கைமாறி இங்கே வந்திருக்கிறது. உலகத்தின் ஒப்பற்ற வைரக் கற்களில் இதுவும் ஒன்று. இதன் இன்றைய மதிப்பு ஒரு கோடி டாலர்."

"அடேங்கப்பா! திருடர்களுக்குக் கை ஊறுமே இதைக் கொள்ளையடிக்க!" என்று ஜெஃப் உரத்த குரலில் சொன்னான். பலர் சிரித்தார்கள்.

அவனை இன்னும் நெருங்கி வந்து நின்றான் கூப்பர். அவன் பேசுவதைச் சரியாய்க் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று.

"திருட்டு கிருட்டெல்லாம் நடக்காது சார்," என்றான் கைடு புன்சிரிப்புடன், வாசற்புறம் நின்றிருந்த ஆயுதம் தாங்கிய காவலர்களைச் சுட்டிக் காட்டி, "லண்டன் டவரில் மணி மகுடத்திற்குப் போட்டிருக்கும் காவலைவிட இங்கே அதிகக் காவல்! இந்தக் கண்ணாடிப் பெட்டியை யாராவது தொட்டால் போதும் உடனே அலாரம் அடிக்கும். அந்த நிமிடமே இந்த அறையின் எல்லாக் கதவுகளும், ஜன்னல்களும் மூடிக் கொண்டு விடும். யாரும் இங்கிருந்து வெளியே போக முடியாது. இரவில் எலெக்ட்ரானிக் கதிர்கள் வேலை செய் கின்றன. யாராவது உள்ளே நுழைந்தால் அந்தக் கணமே போலீஸ் தலைமையகத்தில் அலாரம் அடிக்கும்."

ஜெஃப் ட்ரேஸியைப் பார்த்து, "யாரும் இந்த வைரத்தைத் திருட முடியாது!" என்றான்.

கூப்பரும் அவனுடன் இருந்த ரகசியப் போலீசாரும் தங்களுக்குள் பார்வையைப் பரிமாறிக் கொண்டனர்.

ஜெஃப்பும் ட்ரேஸியும் பேசிக் கொண்ட பேச்சு அன்று மாலை போலீஸ் தலைமை நிலையத்துக்குச் சென்றது.

**ம**றுநாள் ட்ரேஸியும் ஜெஃப்பும் மியூசியத்துக்கு விஜயம் செய்தார்கள். அந்த மியூசியத்தில் என்னென்ன பொருள்கள் எங்கெங்கே உள்ளன என்பதைத் தெரிவிக்கும் பிரசுரத்தை, மியூசியத்தின் வாயிலில் வாங்கிக் கொண்டார்கள்.

உலகப் புகழ் பெற்ற ஓவியர்களின் படைப்புக்கள் வரிசை வரிசையாக மாட்டப்பட்டிருந்த இடத்தில் இருவரும் நின்று ஒவ்வோர் ஓவியத்தையும் ரசித்து ரசித்துப் பார்த்தார்கள். பிறகு ரெம்ப்ராண்டின் ஓவியம் வைக்கப்பட்டிருந்த அறையில் நுழைந்தார்கள். அங்கே வெகு நேரம் நின்றிருந்தார்கள்.

அவர்களைப் பின்தொடர்ந்த போலீசாரில் அழகிய இளம்பெண் ஒருத்தியும் இருந்தாள். அவள் வியப்புடன் தனக்குள் சொல்லிக் கொண்டாள்: "ஓ! இதை அடித்துப் போகத்தான் திட்டமா இவர்களுக்கு?"

ரெம்ப்ராண்ட் தீட்டிய அந்த ஓவியத்துக்குத் தலைப்பு மிக நீளமாயிருந்தது. சில ராணுவ வீரர்கள் தங்கள் வேலைக்குப் புறப்பட ஆயத்தம் செய்து கொண்டிருக்கும் காட்சி அந்தப் படத்தில் தீட்டப்பட்டிருந்தது. அவர்களுடைய தலைவனான காப்டன் கண்ணைப் பறிக்கும் வண்ண யூனிபாரம் அணிந்து, அவர்களை மேற்பார்வை செய்து கொண்டிருந்தான்.

ஓவியத்தின் ஒவ்வொரு அங்குலத்திலும் அற்புதமான தெளிவும் துல்லியமும் நிறைந்திருந்தன. ஓவியத்தை யாரும் நெருங்காத வண்ணம் வெல்வெட் கயிறு கட்டித் தடுத்திருந்தார்கள். துப்பாக்கி ஏந்திய காவலனொருவன் அருகில் நின்றிருந்தான்.

"இந்த ஓவியத்துக்கான பணத்தை வாங்குவதற்குள் ரெம்ப்ராண்டின் பாதிப் பிராணன் போய் விட்டதாம். உனக்குத் தெரியுமா?" என்றான் ஜெஃப் ட்ரேஸியிடம்.

"ஏன்! ரொம்ப அற்புதமான ஓவியமாக இருக்கிறதே?"

“இதை வரையும்படி ஆர்டர் தந்தவர் படத்தின் நடு நாயகமாக இருக்கிறாரே, அந்தக் காப்டன்தான். ரெம்ப்ராண்டை ஆதரித்து வந்த பெரிய மனிதர் அவர். ஆனால் இந்த ஓவியத்தில் தனக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்காமல் மற்றவர்களையும் சேர்த்து வரைந்தது அந்தக் காப்டனுக்குப் பிடிக்கவில்லை” என்று ட்ரேஸியிடம் விளக்கினான் ஜெஃப். பிறகு காவலாளியிடம் “இந்த ஓவியத்துக்குப் பலமாய்க் காவல் போட்டிருக்கிறார்கள் இல்லையா?” என்று கேட்டான்.

“ஆமாம், சார்” என்றான் அந்தக் காவலன். “இந்த இடத்தில் மட்டுமில்லை. இந்த மியூசியம் பூராவுமே பலமான காவல். எலெக்ட்ரானிக் கதிர்கள், ரகசியக் காமெராக்கள், ராத்திரியில் காவல்காரர்களுடன் வேட்டை நாய்கள்... ஒன்றும் பண்ணிக் கொள்ள முடியாது.”

பரந்த புன்னகையுடன் ஜெஃப் சொன்னான்: “இந்த ஓவியம் இந்த இடத்தை விட்டு அசையாது என்கிறீர்கள்?”

இந்தப் பேச்செல்லாம் அன்று பிற்பகல் போலீஸ் தலைமையகத்துக்கு ரிப்போர்ட் செய்யப்பட்டது.

இன்ஸ்பெக்டர் ஜூப், “ஓகோ! ரெம்ப்ராண்ட் ஓவியத்தைத் திருடத் திட்டமா? ஒரு நாளும் நடவாது!” என்றார்.

ஆனால் கூப்பர் ஏதுவும் பேசவில்லை.

அதற்கு அடுத்த நாள் சர்வதேசத் தபால் தலை சேகரிப்போர் கூட்டம் ஆம்ஸ்டர்டாம் நகரில் நடைபெற்றது. விலை மதிக்க முடியாத அபூர்வமான தபால் தலைகள் அங்கே காட்சிக்கு வந்திருந்தன. அங்கும் பலமாய்க் காவல் போட்டிருந்தார்கள்.

ஜெஃபும் ட்ரேஸியும் தபால் தலைகளைப் பார்த்தவாறு நடந்தார்கள்.

பின்னாலேயே ரகசியப் போலீஸ் - கூப்பர்.

# 73

அபூர்வத் தபால் தலைகளின் கண்காட்சியில்

பிரிட்டிஷ் கயானா நாட்டுத் தபால் தலையொன்றைப் பார்த்தபடி ட்ரேஸி நின்றாள். ஆறு முனைகள் கொண்ட சாதாரணத் தபால் தலை அது.

"ஐய! கொஞ்சம்கூட நன்றாயில்லையே! இதைப் போய்க் கண்காட்சியில் வைத்திருக்கிறார்களே?" என்று முகம் களித்தாள் ட்ரேஸி.

"இதைப் பற்றி மட்டமாய்ப் பேசாதே, டார்லிங்!" என்றான் ஜெஃப். "உலகத்திலேயே இந்த ஸ்டாம்ப் இந்த ஒன்றே ஒன்றுதான் இருக்கிறதாக்கும்!"

"அப்படியா? என்ன விலை இருக்கும்?"

"பத்து லட்சம் டாலர்!"

அருகிலிருந்த ஓர் ஊழியர், "நீங்கள் சொல்வது கரெக்ட் சார். ரொம்பப் பேர் இந்த ஸ்டாம்புகளைச் சாதாரணமாய்ப் பார்த்துவிட்டுப் போகிறார்கள். ஆனால் நீங்கள் நன்றாய்த் தெரிந்து வைத்திருக்கிறீர்கள். உலகத்தின் சரித்திரமே இந்தத் தபால் தலைகளில் இருக்கிறது," என்று ஜெஃபைப் பாராட்டினார்.

அடுத்தாற்போல், தப்பாகத் தலை கீழாய் அச்சாயிருந்த ஒரு தபால் தலையைப் பார்த்தார்கள்.

"வேடிக்கையாயில்லை?" என்றாள் ட்ரேஸி.

அருகிலிருந்த ஓர் ஊழியர், "இதன் மதிப்பு... என்று ஆரம்பித்ததுமே -

"எழுபத்தையாயிரம் டாலர்," என்று முடித்தான் ஜெஃப்.

"ஆமாம் சார். கச்சிதமாய்ச் சொல்லி விட்டீர்களே!"

அபூர்வமான இன்னும் பல தபால் தலைகளை ஜெஃபும் ட்ரேஸியும் பார்த்தவாறு செல்ல, கூப்பரும் ரகசியப்

போலீசாரும் கூட்டத்தோடு கூட்டமாகக் கலந்து அவர்களை நெருங்கி அவர்கள் பின்னலேயே நடந்து கொண்டிருந் தார்கள்

"ஒவ்வொன்றும் தம்மாத்துண்டு சைஸில் இருக்கிறதே! யார் வேண்டுமானாலும் சுலபமாய் எடுத்துக் கொண்டு போய்விட முடியும்!" என்றாள் ட்ரேஸி.

அங்கிருந்த காவலர் புன்னகை செய்து, "அப்படியல்ல மேடம். ஒவ்வொரு பெட்டியிலும் மின்சார ஒயர்கள் இருக்கின்றன. துப்பாக்கி ஏந்திய போலீசார் இரவும் பகலும் காவல் காக்கிறார்கள்," என்றார்.

"ஆமாமாம், இந்த காலத்தில் ரொம்ப ஜாக்கிரதை யாகத்தான் இருக்க வேண்டியிருக்கிறது," என்று ஆமோதித்தான் ஜெஃப்.

அன்று மாலை கூப்பரும் இன்ஸ்பெக்டர் ஜூப்பும் பெரிய கமிஷனரைச் சந்தித்து, அதுவரை தயாரித்திருந்த கண் காணிப்பு அறிக்கைகளைக் காட்டினார்கள்.

கமிஷனர் அவைகளை ஆழ்ந்து படித்தார். "இதில் குறிப்பாக எதுவும் தெரியவில்லை. ஆனால் ரொம்ப விலையுயர்ந்த ஏதோ ஒன்றைக் களவாட அவர்கள் திட்டம் போட்டிருக்கிறார்கள் என்று புரிகிறது. ஆல்ரைட் இன்ஸ் பெக்டர், உங்கள் விருப்பப்படியே செய்யுங்கள். அவர் களுடைய ஒட்டல் அறைகளில் ரகசிய ஒலிப்பதிவுக் கருவி வைக்க அனுமதிக்கிறேன்," என்றார்.

கூப்பருக்கு ஏகப்பட்ட சந்தோஷம்.

இந்த நிமிடம் முதல், ட்ரேஸி என்ன பேசினாலும், என்ன நினைத்தாலும், என்ன செய்தாலும் அவனுக்குத் தெரிந்துவிடும்!

அன்று மாலை ட்ரேஸியும் ஜெஃபும் வெளியே சென்றார்கள். இரவுச் சாப்பாட்டுக்காக. அந்த நேரத்தில்

போலீஸ் துறை எஞ்சினியர்கள் அவர்களுடைய அறைகளுக்குள் நுழைந்தார்கள். ஜெஃப்பின் அறைக்குள்ளும் ட்ரேஸியின் அறைக்குள்ளும் சென்று ரகசிய டிரான்ஸ் மிட்டர் கருவிகளைப் பொருத்தினார்கள். படங்களுக்குப் பின்னாலும், விளக்குகளின் பின்னாலும் படுக்கையருகேயும் ஒளித்து மறைத்து அந்தக் கருவிகளை வைத்தார்கள்.

அவர்களுடைய அறைக்கு நேர் மேலேயிருந்த ஓர் அறையில் போலீஸ் அதிகாரி ஜூப், தனக்கு நம்பகமான ஆள் ஒருவனை அமர்த்தி, ஒலிப் பதிவுக் கருவிகளைக் கொண்டு அவர்களுடைய பேச்சை ஒட்டுக் கேட்டுப் பதிவு செய்யும்படி ஏற்பாடு செய்தார்.

"இது ரொம்ப உயர்தரமான கருவி," என்றார் எஞ்சினியர், "எவரும் இங்கேயே இருந்து பேச்சைப் பதிவு செய்ய வேண்டிய தேவை கிடையாது. அவர்கள் என்ன பேசினாலும் இங்கே ஆட்டமாடிக்காகப் பதிவாகி விடும்."

ஆனால் அந்த அறையிலேயே எப்போதும் இருப்ப தென்று கூப்பர் முடிவு செய்து கொண்டான். இருந்தால்தான் உண்மையைக் கண்டுபிடிக்க முடியும் என்பது அவன் நம்பிக்கை.

மறுநாள் காலையில் போலீஸ் அதிகாரி ஜூப்பும் அவருடைய உதவியாளர்களும் கூப்பரும் அந்த ஓட்டலில் அந்த அறையில் தங்கியிருந்தார்கள். கீழே உள்ள அறையில் ஜெஃப்பும் ட்ரேஸியும் பேசிக் கொள்வது அவர்களுக்குத் தெளிவாகக் கேட்டது.

"இன்னும் கொஞ்சம் காப்பி சாப்பிடுகிறாயா?" என்றான் ஜெஃப்.

"போதும் டார்லிங்," ட்ரேஸியின் குரல். "ரூம் சர்வீஸ் காரர்கள் இந்தச் சீஸ் அனுப்பினார்கள். ரொம்ப அருமையாக இருக்கிறது. சாப்பிட்டுப் பாரேன்."

கொஞ்சம் நிசப்தம்.

“ம்ம்... ரொம்ப ருசியாக இருக்கிறது,” என்றான் ஜெஃப். “இன்றைக்கு உனக்கு என்ன திட்டம்? ராட்டர்டாம் வரை காரில் போய் வரலாமா?”

“எனக்கென்னவோ இன்றைக்கு இங்கேயே அக்கடா என்று படுத்திருக்கலாம் என்று தோன்றுகிறது.”

“அதுவும் சரிதான்.”

கூப்பர் பல்லைக் கடித்துக் கொண்டான்.

மறுபடி பேச்சு.

“இன்றைக்கு ஹாலந்து ராணி ஓர் அனாதை விடுதியைத் திறந்து வைக்கிறாராம்.”

“ஆமாம், நானும் கேள்விப்பட்டேன். பொதுவாகவே இந்த நாட்டு ஜனங்களுக்கு ரொம்பத் தாராள மனசு. விருந்தாளிகளை உபசரிக்கிறதென்றால் ரொம்பப் பிடிக்கும். ஆனால் கட்டுப்பாடு, சம்பிரதாயம், சட்டதிட்டம் இதெல்லாம் பிடிக்கிறதில்லை.”

ஒரு சிரிப்புச் சத்தம்.

“ஆமாமாம். அதனால் தான் இந்த நாட்டு ஜனங்களை நமக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது.”

அவர்களின் சம்பாஷணை -

இளம் ஜோடிகள் பேசிக் கொள்கிற பொதுவான விஷயங்களாகவே இருந்தன.

கேட்கக் கேட்கக் கூப்பர் தனக்குள் பொருமிக் கொண்டிருந்தான். ஜெஃபை ட்ரேஸி காதலிப்பது ஆரம்ப முதலே அவனுக்குப் பொறாமையாக இருந்தது. இருக்கட்டும். இருக்கட்டும். அவள் இதற்கெல்லாம் தண்டனை பெறாமல் போகப் போவதில்லை!

“தாராள மனசுள்ளவர்கள் என்று சொன்னாயே, இப்பத்தான் ஞாபகம் வருகிறது,” என்றான் ஜெஃப் “இங்கே ஓட்டலில் யார் வந்து தங்கியிருக்கிறார். தெரியுமோ? மாக்ஸ்மிலியன் ராணி எலிஸபெத் கப்பலில் வருவாரென்று நான்

எதிர்பார்த்து, வராமலேயே போய்விட்டாரே, அந்தக் கோடீஸ்வரன்."

"அட அப்படியா! நான் கூட ஓரியண்ட் எக்ஸ்பிரஸ் ரயிலில் அவரைப் பார்க்க நினைத்தேன். பார்க்க முடியாமல் போய்விட்டது." என்றாள் ட்ரேஸி.

"ஏதாவது ஒரு பெரிய கம்பெனியை முழுங்கி வாயில் போட்டுக் கொள்ளத்தான் மனிதன் வந்திருக்கிறார். அதுதான் அவர் வழக்கம்," என்றான் ஜெஃப்.

"அவர் இங்கே இருக்கிறபோது நாம் ஏதாவது செய்தாக வேண்டும். விட்டால் அகப்பட மாட்டான் ஆசாமி. என்ன சொல்கிறாய்?"

"நிச்சயமாய்," என்று ட்ரேஸி சிரித்தாள்.

"அவர் எங்கே போனாலும் விலையுயர்ந்த பல பொருள்கள் கொண்டு போகிறவரென்று கேள்விப் பட்டிருக்கிறேன். எனக்கு ஒரு ஐடியா-"

அதற்குள், "அம்மா, அறையைக் கூட்டிப் பெருக்கணும். உள்ளே வரட்டுங்களா?" என்று ஒரு பெண் குரல் கேட்டது. ஓட்டல் வேலைக்காரியின் குரல்.

அறையைச் சுத்தப்படுத்தும் சத்தம்... ஜெஃப்பும் ட்ரேஸியும் பேசுவது நின்றுவிட்டது.

ஜூப் தன் உதவியாளருக்குக் கட்டளையிட்டார். "இதோ பாருங்கள், இப்போது முதல் அந்த மாக்ஸ்மிலியன் மீது நமது ஆட்கள் ஒரு கண் வைத்திருக்க வேண்டும். ஜெஃப்போ அல்லது ட்ரேஸியோ அவரைத் தொடர்பு கொள்கிற மாதிரி தெரிந்தால் உடனே எனக்குத் தெரிவிக்க வேண்டும். புரிகிறதா?"

அன்று பிற்பகல் தன் மேலதிகாரியான கமிஷனரைச் சந்தித்து, தாங்கள் கேட்டதையெல்லாம் தெரிவித்தார் ஜூப்.

"அமெரிக்காவிலிருந்து மாக்ஸ்மிலியன் என்று ஒரு கோடீஸ்வரர் வந்திருக்கிறார் அவர் மீது இவர்கள் கண் வைத்திருப்பதாகத் தெரிகிறது." என்றார்.

"எல்லாம் உங்கள் ஊகம் தான். நிச்சயமாய் எதுவும் கண்டு பிடிக்கவில்லையே?" என்றார் கமிஷனர் சலிப்புடன்.

"இல்லை சார். ஆனால் ரகசிய ஒலிப்பதிவுக் கருவிகள் வைத்திருப்பதால் சீக்கிரம் கண்டுபிடித்துவிடலாம்."

ஆனால் கமிஷனருக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. நேரத்தையும் போலீஸ் ஆட்களையும் வீணடித்துக் கொண்டிருக்கிறார் ஜூப் என்றே நினைத்தார்.

அடுத்த நாள் காலை 9.30 மணி காலைச் சிற்றுண்டி நேரம்.

போலீசார் திடீர் சுறுசுறுப்படைந்தார்கள். காரணம், ஜெஃப்பும் ட்ரேஸியும் பேசிக் கொண்டிருந்த விஷயம்தான்.

ட்ரேஸியின் அறைக்கு மேலிருந்த அறையில், போலீஸ் அதிகாரி ஜூப்பும் அவருடைய உதவியாளராக இன்ஸ்பெக்டர் விட்காம்பும், கூப்பரும் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

கோப்பைகளில் காப்பி ஊற்றப்படும் ஓசை...

"ஒரு சுவாரஸ்யமான தகவல் கிடைத்திருக்கிறது. ட்ரேஸி," என்றான் ஜெஃப். "என் நண்பன் அனுப்பியிருக்கிற தகவலைப் படிக்கிறேன். கேள். 'ஆம்ரோ பாங்க் ஐம்பது லட்சம் டாலர் தங்கத்தை டச்சு மேற்கிந்தியத் தீவுக்கு அனுப்புகிறது' என்கிறது எனக்கு வந்துள்ள செய்தி."

மேலறையிலிருந்த ஒரு போலீஸ்காரர், "ஆனால் அதை..." என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தார்.

"ஷ்!" என்று அதட்டினார் இன்ஸ்பெக்டர்.

தொடர்ந்து ஒட்டுக் கேட்டார்கள்.

ட்ரேஸியின் குரல்: "ஐம்பது லட்சம் டாலர் தங்கமா? ஏகப்பட்ட கனமாக இருக்கும் இல்லை?"

"இரு, நான் கரெக்டாகவே சொல்கிறேன், டார்லிங்," என்றான் ஜெஃப். "ஆயிரத்து அறுநூற்று எழுபத்திரண்டு பவுண்டு. அதாவது அறுபத்தேழு தங்கக் கட்டிகள் தங்கத்தில்

ஒரு விசேஷம் கவனித்திருக்கிறாயா? அதை உருக்கிவிட்டால் பிறகு இது இன்னாருக்குச் சொந்தமானது என்று எந்த அடையாளமும் இருக்காது. ஆனால் அந்தத் தங்கக் கட்டிகளை ஹாலந்திலிருந்து வெளியே எடுத்துக் கொண்டு போவது கஷ்டம்."

"வெளியே எடுத்துப் போவது இருக்கட்டும். முதலில் எப்படி நாம் அதைக் கைப்பற்றுவது?...?...நாம் பாட்டுக்கு பாங்க்கில் நுழைந்து நாம் பாட்டுக்குத் தூக்கி வந்துவிட முடியுமா?"

"அப்படித்தான் என்று வைத்துக் கொள்ளேன்."

"ஜோக்கடிக்கிறாயா?"

"பண விஷயத்தில் நான் எப்பவுமே ஜோக்கடிக்க மாட்டேன்." என்றான் ஜெஃப். "வா, ஆம்ரோ பாங்க் பக்கமாய் வாக் போய் ஒரு பார்வை பார்த்துவிட்டு வரலாம்."

"உன் திட்டம்தான் என்ன?"

"போகிற வழியில் எல்லாம் விளக்கமாய்ச் சொல்கிறேன், வா."

கதவு சாத்தும் சத்தம் கேட்டது. பிறகு குரல்கள் நின்று விட்டன.

## 74

ஆம்ரோ பாங்க்கிலிருந்து தங்கக் கட்டிகளைக் கொள்ளையடிக்க ஜெஃப்பும் ட்ரேஸியும் திட்டமிட்டிருக்கிறார்களா!

இன்ஸ்பெக்டர் ஜூப் தன் மீசையை முறுக்கிவிட்டுக் கொண்டார். "அந்தத் தங்கத்தின் மீது எவரும் கை வைக்க முடியாது. அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை நானே நேரடியாகச் செய்திருக்கிறேனாக்கும்!"

"ஹூம்! அந்தப் பாதுகாப்பு ஏற்பாட்டில் ஒரு தம்மாத் துண்டு தவறு இருந்தால்கூடப்போதும், ட்ரேஸி பயன்

படுத்திக் கொண்டு விடுவாள்," என்று கூப்பர் முணு முணுத்தான்.

அவனை நாலு அறை விடலாம் போல ஜூப்புக்கு ஆத்திரமாய் வந்தது. இந்த அமெரிக்கன் இப்படித் தான் எப்போதும் எரிச்சல் மூட்டிக் கொண்டிருக்கிறான். தனக்கு எல்லாம் தெரியும் என்று மகா மண்டைக்கனம்...

ஆனால் ஜூப் தன்கோபத்தைக் காட்டாமல் அடக்கிக் கொண்டார். அவர் ஓர் உண்மையான போலீஸ் அதிகாரி. இந்தக் கூப்பருடன் ஒத்துழைக்கும்படி மேலிடம் கட்டளை யிட்டிருக்கிறது, ஒத்துழைக்க வேண்டியதுதான் என்று எண்ணிக் கொண்டார். தன் உதவியாளரான விட் காம்ப்பை நோக்கித் திரும்பினார். "ஆம்ரோ பாங்க்கில் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் கண்காணிப்பையும் தீவிரப் படுத்துங்கள். அதுவும் உடனே செய்ய வேண்டும். பாங்கிற்கு வருகிறவர்கள் போகிறவர்கள் அனைவரையும் பற்றி யார் என்னவென்று விசாரிக்க வேண்டும் ரகசியமாய்ப் போட்டோ எடுக்க வேண்டும். புரிகிறதா?"

"சரி சார்."

"ஆனால் ரொம்ப எச்சரிக்கையாகச் செய்ய வேண்டும். தாங்கள் கண்காணிக்கப்படுகிறோம் என்று எவருக்கும் துளியும் சந்தேகம் வரக்கூடாது."

"சரி, சார்."

கூப்பரிடம், "என்ன, இப்ப சரிதானா?" என்று கேட்டார் ஜூப்.

கூப்பர் பதிலேதும் சொல்லவில்லை.

அடுத்த சில தினங்களுக்குப் போலீசார் ரொம்பக் கடுமையாக ஜெஃப்பையும் ட்ரேஸியையும் கண் காணித்தார் கள். அவர்கள் கொணர்ந்து தரும் அறிக்கைகளைக் கூப்பர் வெகு கவனமாக ஆராய்ந்தான். ட்ரேஸியின் அறைக்கு மேலுள்ள அறையில், அவர்கள் பேசிக்கொள்வது அனைத்

தும் ஒட்டுக் கேட்கப்பட்டன. இரவு மற்ற எல்லாப் போலீஸ் அதிகாரிகளும் போன பின்னர்கூடக் கூப்பர் அங்கேயே நீண்ட நேரம் தங்கியிருந்தான். ட்ரேஸியும் ஜெஃப்பும் அந்தரங் கமாக இருக்கும்போது பேசுவதையும் ட்ரேஸியின் இன்ப முனகல்களையும் கேட்டுக் கேட்டு அவனுக்கு வெறியே பிடித்துவிட்டது.

'இரு, இரு. விரைவில் உன்னை என்னவளாக்கிக் கொள்கிறேன் பார்! நீ என்னைத் தவிர வேறு யாருக்கும் சொந்தமாகாதபடி பண்ணுகிறேன்!' என்று ஆத்திரத்துடன் கறுவிக் கொண்டேயிருந்தான்.

பகல் வேளைகளில் ட்ரேஸியும் ஜெஃப்பும் தங்கள் வழிகளில் பிரிந்து சென்றார்கள். ஆனால் எங்கே யார் போனாலும் பின்னாலேயே ரகசியப் போலீஸ்காரர்கள் பின்தொடர்ந்து கொண்டிருந்தனர்.

ஒரு நாள் ஜெஃப் ஒரு சிறிய அச்சகத்துக்குள் சென்றான்.

அச்சகத்தின் உரிமையாளருடன் அவன் பேசுவதைத் தூரத்தில் நின்றவாறு இரண்டு ரகசியப் போலீசார் கவனித்தார்கள். ஜெஃப் புறப்பட்டுச் சென்றதும் இருவரில் ஒருவன் ஜெஃபைப் பின்தொடர்ந்து சென்றான். மற்றவன் அந்த அச்சகத்துக்குள் நுழைந்தான். தான் ரகசியப் போலீஸ் என்பதற்கான அடையாள அட்டை, அத்தாட்சிக் காகிதம் முதலியவற்றைக் காட்டியபின்

"இப்போது வந்துவிட்டுப் போகிறானே ஒரு ஆள், அவன் எதற்காக இங்கே வந்தான்?" என்று விசாரித்தான்.

"அவருடைய விசிட்டிங் கார்டுகள் தீர்ந்துவிட்டதாம். புதிதாக அச்சடித்துத் தரும்படி ஆர்டர் கொடுத்தார்."

"என்ன எழுதிக் கொடுத்தான், காட்டு?"

அச்சாபீஸ்காரர் ஜெஃப் தந்த காகிதத்தை நீட்டினார்.

'**வில்ஸன்**

புலனாய்வு அதிகாரி

ஆம்ஸ்டர்டாம் செக்யூரிட்டி கம்பெனி'

- என்று அதில் இருந்தது.

'ஏதோ பேரைச் சொல்லி, யாரையோ ஏமாற்றப் பார்க்கிறான்,' என்று தலையைச் சொறிந்து கொண்டான் அந்தப் போலீஸ் ஆள்.

மறு நாள்.

ட்ரேஸியைப் பின்தொடர்ந்து ஒரு போலீஸ் ஆள் சென்றான்.

வீட்டில் வளர்ப்பதற்கான செல்லப் பிராணிகளை விற்பனை செய்யும் கடையொன்றில் நுழைந்தாள் ட்ரேஸி.

பதினைந்து நிமிடம் கழித்து அவள் திரும்பிச் சென்றதும், போலீஸ் ஆள் கடைக்குள் போனான். தான் ரகசியப் போலீஸ் என்பதற்கான அத்தாட்சிகளைக் காட்டியபின், "இப்போது வந்து சென்றாளே ஒரு பெண், என்ன கேட்டாள்?" என்று விசாரித்தான்.

"தங்க மீன்களுடன் ஒரு பெரிய கிண்ணம், இரண்டு லவ்பேர்ட்ஸ், ஒரு பாடும் பறவை, ஒரு புறா வேண்டுமென்று ஆர்டர் கொடுத்தாள்," என்றாள் கடைக்காரி.

சம்பந்தா சம்பந்தமில்லாமல் என்னென்னவோ வாங்குகிறாள்! போலீஸ் ஆளுக்கு எதுவும் புரியவில்லை. "புறா கேட்டாள் என்றாயே? என்ன புறா? சாதாரணப் புறாவா?"

"ஆமாம். ஆனால் பொதுவாகச் செல்லப் பிராணிகள் விற்கும் கடைகளில் புறா விற்பதில்லை. ஆகையால் வேறெங்கிருந்தாவது வரவழைத்துத் தருகிறோம் என்று சொல்லியிருக்கிறேன்."

"அவள் கேட்ட பிராணிகளை எந்த இடத்துக்கு அனுப்பச் சொன்னாள்?"

"அவள் தங்கியிருக்கும் ஓட்டல் ஆம்ஸ்டெலுக்கு."

இன்னொரு நாள் நகரத்தின் இன்னொரு பகுதியில், ஆம்ரோ பாங்க்கின் மானேஜருடன் ஜெஃப் பேசிக் கொண்டிருந்தான்.

இருவரும் அரைமணி நேரம் தனியறையில் உரை யாடினார்கள். ஜெஃப் கிளம்பிச் சென்றதும், ஒரு ரகசியப் போலீஸ்காரர் மானேஜரின் அறைக்குள் நுழைந்து, தன் அடையாள அட்டையைக் காட்டியபின் -

"இப்போது உங்களுடன் பேசினாரே ஒருவர், அவர் எதற்கு இங்கே வந்தார்?"

"யார்? மிஸ்டர் வில்ஸனைச் சொல்கிறீர்களா? ஒரு செக்யூரிட்டி கம்பெனியில் புலனாய்வு அதிகாரி அவர். அந்தக் கம்பெனிதான் எங்கள் பாங்க்கின் காவல், பாதுகாப்பு ஏற் பாடுகளைக் கவனித்துக்கொள்கிறது," என்றார் மானேஜர்.

"தற்சமயம் என்னென்ன பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி அவர் உங்களைக் கேட்டாரா?"

"ஆமாம், கேட்டார்."

"நீங்களும் சொன்னீர்கள்?"

"ஆமாம், சொன்னேன். ஆனால் முன்னெச்சரிக்கையாக, வந்திருக்கிறவர் உண்மையான ஆள்தானா என்று டெலி போன் செய்து ஊர்ஜிதம் செய்து கொண்டேன்."

"யாருக்கு டெலிபோன் செய்தீர்கள்?"

"பாதுகாப்பு கம்பெனிக்குத் தான். மிஸ்டர் வில்ஸன் கொடுத்த விசிட்டிங் கார்டில் டெலிபோன் நம்பர் இருந்தது."

ரகசியப் போலீஸ் ஆள் மேற்கண்ட தகவல்களைக் குறித்துக் கொண்டு திரும்பினான்.

அன்று பிற்பகல் மூன்று மணி.

ஒரு கவச வேன் ஆம்ரோ பாங்க்கிற்கு வெளியே நின்றிருந்தது.

எதிர் சாரியிலிருந்து ஜெஃப் அதைப் போட்டோ பிடித்தான்.

சில கெஜ தூரத்துக்கப்பால், ஒரு வீட்டு வாசலில் நின்றிருந்த ஒரு ரகசியப் போலீஸ்காரர், ஜெஃப் போட்டோ பிடிப்பதைப் போட்டோ பிடித்தார்.

போலீஸ் தலைமையகம்.

தாங்கள் வெகு வேகமாகச் சேகரித்த தகவல்களைக் கமிஷனரிடம் தெரிவித்துக் கொண்டிருந்தார் போலீஸ் அதிகாரி ஜூப்.

"இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?" என்றார் கமிஷனர் தனது உணர்ச்சியற்ற குரலில்.

"அந்தப் பெண்ணின் திட்டம் என்னவென்று நான் சொல்கிறேன்," என்றான் கூப்பர். அவன் குரலில் உறுதி தொனித்தது. "பாங்க் அனுப்பவிருக்கும் தங்கக் கட்டிகளை ஹைஜாக் செய்ய அவள் திட்டமிட்டிருக்கிறாள்."

எல்லாப் போலீஸ் அதிகாரிகளுக்குமே தூக்கிவாரிப் போட்டது. அவனைத் திகைப்புடன் வெறித்துப் பார்த்தார்கள்.

கமிஷனர் கிண்டலாக, "அப்படிப்பட்ட அபார அற்புத சாதனையை அவள் எப்படிச் செய்யப் போகிறாள் என்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்குமே?" என்றார்.

"ஆமாம், தெரியும்," என்றான் கூப்பர்.

இவர்களுக்கெல்லாம் ட்ரேஸியைப் பற்றித் தெரியாது என்று எண்ணிக்கொண்டான் அவன். நான் தான் அவளை உள்ளும் புறமுமாக அறிந்து வைத்திருப்பவன். அவளுக்குள்ளேயே புகுந்து, அவளுக்குள்யே நான் வசிக்கிறேன். அவள் நினைப்பது என்ன, திட்டமிடுவது என்ன, அவளுடைய ஒவ்வோர் அசைவும் என்னென்ன என்று எனக்குத் தெரிந்த மாதிரி இவர்களுக்குத் தெரியாது.

"சொல்கிறேன் கேளுங்கள்: பாங்க்காரர்களுக்கு வழக்கமாக வருகிற கவச வேனைப் போலவே ஒரு போலி வேன் தயாரிக்கப் போகிறாள். அசல் வேன் பாங்க்கிற்கு வருவதற்குக் கொஞ்சம் முன்னதாக அவளுடைய போலி வேனில் வந்து தங்கக் கட்டிகளை எடுத்துக் கொண்டு ஓடிவிடப் பார்க்கிறாள்."

"அசாத்தியமான கற்பனையாக இருக்கிறது நீங்கள் சொல்வது, மிஸ்டர் கூப்பர்."

ஜூப் குறுக்கிட்டுச் சொன்னார்: "பாங்க்கின் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்னென்ன என்று அவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். எந்த நேரத்துக்குக் கவச வேன் வந்து தங்கக் கட்டிகளைப் பெற்றுக் கொள்ளும் என்பதையும் அறிந்து வைத்திருக்கிறார்கள்..."

போலீஸ் கமிஷனர் தன் மேஜை மீதிருந்த அவர்கள் அறிக்கையை மீண்டும் ஆராய்ந்தார். "லவ் பேர்ட்ஸ், புறா, தங்க மீன், பாடும் பறவை சுத்தக் கிறுக்குத் தனமாக இருக்கிறது! இதற்கும் பாங்க் கொள்ளைக்கும் சம்பந்தம் இருக்க முடியுமா என்ன? அபத்தம்," என்றார்.

ஒரு ரகசிய போலீஸ்காரர் ட்ரேஸியைப் பின் தொடர்ந்து சென்றார். அவள் ஒரு கால்வாய்க் கரையை அடைந்து, பாலத்தின் வழியே அக்கரையை அடைந்தாள். அங்கே ஒரு பொது டெலிபோன் கூண்டுக்குள் நுழைந்தாள். ஐந்து நிமிட நேரம் போனில் பேசினாள்.

போலீஸ்காரர் முடியைப் பிய்த்துக் கொண்டார் - அவள் என்ன பேசுகிறாள் என்பது காதில் விழாததால். அப்படியே காதில் விழுந்திருந்தாலும் அதில் அவருக்குத் தலையும் புரிந்திருக்காது. காலும் புரிந்திருக்காது.

லண்டனில் உள்ள கந்த்தருடன் ட்ரேஸி பேசிக் கொண்டிருந்தாள். கந்த்தர் சொன்னார்: "சரி, மார்கோவை. நாம் நம்பலாம். ஆனால் அவளுக்கு அவகாசம் போதாது. இன்னும் இரண்டு வாரமாவது தேவை என்று கேட்பாள்."

ஒரு நிமிடம் ட்ரேஸி சொல்வதைக் கேட்டபின் கூறினார்: "புரிகிறது. எல்லாம் தயாரானவுடன் நான் உன்னுடன் தொடர்பு கொள்கிறேன். எச்சரிக்கையாக இரு. ஜெஃப்பை நான் கேட்டதாகச் சொல்லு."

ட்ரேஸி ரிசீவரைத் திரும்ப வைத்துவிட்டு டெலிபோன் கூண்டைவிட்டு வெளியேறினாள்.

அடுத்த நாள் காலை பதினொரு மணி.

இன்னொரு ரகசியப் போலீஸ் ஆள் இன்ஸ்பெக்டர் ஜூப்பைப் போனில் கூப்பிட்டான்: "சார், வேன்கள் வாடகைக்கு விடும் வால்ட்டர்ஸ் கம்பெனியிலிருந்து நான் பேசுகிறேன். ஜெஃப் இங்கே ஒரு வேனை வாடகைக்கு எடுத்துப் போயிருக்கிறான்."

"என்ன மாதிரியான வேன்?"

"சாமான்கள் எடுத்துச் செல்லும் வேன் சார்."

"அதன் அளவுகள் என்ன, சொல்லு. நான் லயனில் காத்திருக்கிறேன்."

சில நிமிடங்கள் கழித்து அந்தப் போலீஸ்காரர் பேசினார்: "சார், அது ஒரு கவச வேன். அதன்-"

"நீளம் இருபது அடி, அகலம் ஏழு அடி, உயரம் ஆறு அடி, இரட்டை ஆக்ஸில்..." என்றார் ஜூப்.

போலீஸ்காரரின் குரலில் ஆச்சரியம்.

"ஆமாம் சார். எப்படி இவ்வளவு கரெக்ட்டாய்ச் சொல்கிறீர்கள்?"

"அதிருக்கட்டும். அதன் கலர் என்ன?"

"நீலம் சார்.

"ஜெஃபை யாரேனும் பின் தொடர்ந்து செல் கிறார்களா?"

"ஆமாம் சார். ஜேக்கப் போகிறார்."

"ரைட். தகவல் கிடைத்ததும் சொல்லு." என்று கூறி விட்டு டெலிபோனை வைத்தார் ஜூப். எதிரிலிருந்த

கூப்பரைப் பார்த்து, "நீங்கள் சொன்னது சரிதான். ஆனால் வேனின் நிறம்தான் வேறே. நீலக்கலர்," என்றார்.

"அதனாலென்ன? வேன்கள் பெயின்ட் செய்யும் கடைக்கு அந்த வேனைக் கொண்டுபோய், பெயிண்ட்டை மாற்றச் சொல்வான். பார்த்துக் கொண்டேயிருங்கள்," என்றான் கூப்பர் அமைதியாக.

## 75

கூப்பர் சொன்னது போலவே, ஜெஃப் தான் வாங்கியிருந்த வேனை ஒரு பெயிண்ட் அடிக்கும் கடைக்கு எடுத்துச் சென்றான்.

அதற்கு வெண்கலப் பழுப்பு நிறத்தில் ஸ்ப்ரே அடிக்கும் படி சொன்னான்.

அந்த வேலை நடந்து கொண்டிருந்தபோது, வேனின் பக்கத்திலேயே ஜெஃப் நின்றிருந்தான். எதிர்க்கட்டிடத்தின் மாடியிலிருந்து ஒரு ரகசியப் போலீஸ்காரர் அதைப் புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தார்.

ஒரு மணி நேரத்துக்கெல்லாம் இன்ஸ்பெக்டர் ஜூப்பின் மேஜை மீது அந்தப் புகைப்படங்கள் இருந்தன.

எதிரிலிருந்த கூப்பரிடம் அவர் அவற்றைக் காட்டினார். "நீங்கள் சொன்னது கரெக்ட். பாங்க்கிற்கு வாடிக்கையாக என்னென்ன பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுகிறது, எந்த நேரத்துக்குக் கவச வேன் வருகிறது என்ற விவரங்களைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். இப்போது கவச வேன் என்ன நிறமோ அதே நிறத்தை அடித்திருக்கிறான் ஜெஃப். இனி அவனைத் தாராளமாய்க் கைது செய்யலாம் இல்லையா?"

"கைதா? என்ன குற்றத்தின் பேரில்?" என்றான் கூப்பர். "பொய்யான பெயரில் விசிட்டிங் கார்டு அடித்தான் என்பது ஒரு பெரிய குற்றமா? அல்லது ஒரு வேனைத் தன் இஷ்டப்படி பெயிண்ட் அடிக்கச் சொன்னான் என்பதுதான் குற்ற மாகுமா?"

“பின்னே என்ன தான் வழி?”

“அவர்கள் தங்கக் கட்டிகளைக் கடத்துகிற சமயம் கையும் களவுமாய்ப் பிடிக்க வேண்டும். அது ஒன்று தான் வழி.”

இன்ஸ்பெக்டர் ஜூப்புக்கு அவனுடைய தன்னம்பிக்கை நிறைந்த பேச்சு மேலும் மேலும் எரிச்சலைத் தான் தந்தது. ‘இவன் என்னவோ இந்த நாட்டுப் போலீஸ் இலாகாவே தன் கையின் கீழே தான் இருக்கிறது என்கிற மாதிரி பேசுகிறானே!’ என்று பொருமிக் கொண்டார் உள்ளுக்குள்.

கூப்பர் அந்தப் புகைப்படங்களின் மீது மீண்டுமொரு முறை பார்வையைச் செலுத்தினான். குறிப்பாகக் கவச வேனின் படங்களை ஆராய்ந்தான். உதட்டைப் பிதுக்கினான். “ஊகூம். இந்த வேனின் அடிப்பலகை தங்கக் கட்டிகளின் கனத்தைத் தாங்காது. அடிப்புறத்தை இன்னும் பலமானதாக மாற்ற வேண்டியிருக்கும். மாற்றுவான் பாருங்கள்,” என்றான்.

**ந**கரத்தின் கோடியில், ஒரு சிறிய தெருவில் இருந்தது அந்தச் சிறிய கார் பட்டறை.

ஜெஃப் தன் வேனிலிருந்து இறங்கினான்.

“குட்மார்னிங் சார். தங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?” என்று பணிவுடன் கேட்டான் மெக்கானிக்.

“நான் இந்த வேனில் கொஞ்சம் பழைய இரும்புச் சாமான்களைக் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது,” என்றான் ஜெஃப். “ஆனால் இதன் அடிப்பகுதி அவ்வளவு கனத்தைத் தாங்குமா என்று சந்தேகமாக இருக்கிறது. கெட்டித் தகடு போட்டுத் தந்தால் சரியாக இருக்கும். உங்களால் முடியுமா?”

மெக்கானிக் எழுந்து சென்று வேனின் உட்புறத்தை ஆராய்ந்தான். “ஓ, செய்யலாம், சார். ஒரு கஷ்டமும் இல்லை.”

“சரி, எப்போ வேலையை முடித்துத் தருவீர்கள்?”

“வந்து... வெள்ளிக்கிழமை ரெடியாகிவிடும் சார்.”

"எனக்கு நாளைக்கே வேண்டும்."

"நாளைக்கேயா? முடியாது சார்."

"எப்படியாவது முடியுங்கள் இரட்டிப்புக் கூலி தருகிறேன்."

"இல்லை... வேண்டுமானால் வியாழக்கிழமை..."

"நாளைக்குத்தான் வேண்டும். மூன்று மடங்கு கூலி தருகிறேன்."

மெக்கானிக் தன் மோவாயைச் சொறிந்து கொண்டு யோசனை செய்தான். "நாளைக்கு எப்போது வேண்டும் சார்?"

"நாளை பன்னிரண்டு மணிக்கு."

"ஓ.கே."

"நன்றி."

"நன்றி. வணக்கம்."

வேனை ஒப்படைத்துவிட்டு ஜெஃப் புறப்பட்டுச் சென்ற சில நிமிடங்களுக்கெல்லாம் ஒரு போலீஸ் ஆள் அந்தப் பட்டறைக்குள் நுழைந்தான்.

நடந்த விவரங்களை மெக்கானிக்கிடம் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

அதே தினம் காலை.

நகரத்தின் இன்னொரு கோடியில் உள்ள கால்வாயை நோக்கி நடந்தாள் ட்ரேஸி.

ரகசியப் போலீஸ் பட்டாளம் அவளைப் பின் தொடர்ந்தது.

ஒரு படகின் சொந்தக்காரனிடம் ட்ரேஸி அரைமணி நேரம் பேசிக் கொண்டிருந்தாள்.

அவள் திரும்பிப் போனதும் ரகசியப் போலீஸ் கோஷ்டியைச் சேர்ந்த ஓர் ஆள் படகுக்காரனிடம் சென்றான். தான் போலீஸ்காரன் என்பதைத் தெரிவித்துக் கொண்டபின்,

"அந்தப் பெண் உங்களிடம் என்ன பேசினாள்?" என்று விசாரித்தான்.

ஜூஸ் உறிஞ்சிக் கொண்டிருந்த அந்தப் படகுக்காரன், "அவளும் அவள் கணவனும் எல்லாக் கால்வாய்களையும் படகிலேயே சுற்றிப் பார்க்கப் போகிறார்களாம். ஒரு வாரத்துக்கு என் படகை வாடகைக்கு எடுத்திருக்கிறாள்" என்றான்.

"என்றையிலிருந்து ஒரு வாரத்துக்கு?"

"வெள்ளிக்கிழமை முதல். அந்த உல்லாசப் பிரயாணம் ரொம்ப அருமையாயிருக்கும் சார். நீங்களும் உங்கள் மனைவியும்கூட...."

அவன் பேச்சை முடிக்குமுன் ரகசியப் போலீஸ் போய் விட்டான்.

வளர்ப்புப் பிராணிகள் கடையில் ட்ரேஸி கொடுத்திருந்த ஆர்டரின் படி, ஒரு புறாவை அவள் தங்கியிருந்த ஓட்டலுக்கு வந்து டெலிவரி கொடுத்துவிட்டுப் போனார்கள்.

கூப்பர் அந்தக் கடைக்குச் சென்று கடைக்காரம்மாளி ட்ம் விசாரணை செய்தான்.

"நீங்கள் கொடுத்தது எந்த வகையான புறா?"

'ஏன், சாதாரணப் புறாதான்."

"கழுத்தில் செய்தி கட்டி அனுப்புவார்களே, அந்த வகையைச் சேர்ந்த அஞ்சல் புறாவா?"

"இல்லையில்லை," என்று சிரித்தாள் கடைக்காரி. "சாதாரணப் புறாதான். எனக்கு நிச்சயமாய்த் தெரியும். நேற்று ராத்திரி நான் தானே அதைப் பூங்காவில் பிடித்தேன்?"

ஆயிரம் பவுண்டு தங்கம்! ஒரு சாதாரணப் புறா! ஏன்? எதற்கு? எப்படி? கூப்பர் திகைத்துக் கொண்டிருந்தான்.

ஆம்ரோ பாங்க்கிலிருந்து தங்கக் கட்டிகளை அனுப்பு வதற்கான தினம் நெருங்கிக் கொண்டே வந்தது.

இன்னும் ஐந்தே நாட்கள் தான்.

இன்ஸ்பெக்டர் ஜூப்பின் மேஜை மீது குவியல் குவியலாய்ப் புகைப்படங்கள் நிறைந்திருந்தன.

ஒவ்வொரு படமும் ஒரு கணு. இந்தக் கணுக்களை இணைத்துச் சங்கிலியாக்கிவிட்டால் ட்ரேஸி சிக்கிக் கொண்டு விடுவாள். ஆனால் எப்படி இணைப்பது?

கூப்பர் யோசனையில் ஆழ்ந்தான். 'இந்த ஆம்ஸ்டர் டாம் போலீசாருக்கு மூளை கிடையாது. ஆனால் ஒன்று ஒப்புக்கொள்ள வேண்டும். கொடுத்த வேலையைக் கச்சித மாய் முடிக்கிறார்கள்' என்று எண்ணிக் கொண்டான்.

அடுத்த கொள்ளையை நோக்கி ட்ரேஸி வைக்கும் ஒவ்வோர் அடியையும் புகைப்படம் எடுத்தாயிற்று. அவள் பேசிய பேச்சுக்களைப் பதிவு செய்தாயிற்று. சட்டத்தின் பிடியிலிருந்து ட்ரேஸி வழுக்கியோட வழியே கிடையாது.

அவளுக்குத் தண்டனை கிடைக்க வேண்டும். அதன் பிறகு தான் எனக்கு நிம்மதி...

**க**வச வேன் புதிதாகப் பெயிண்ட் அடிக்கப்பட்டு, அடிப்பலகை பொருத்தப்பட்டதும், அதை ஆம்ஸ்டர்டாம் நகரின் பழைய பகுதிக்கு ஓட்டிச் சென்றான் ஜெஃப். முன்பே அங்கு ஒரு ஷெட் வாடகைக்கு எடுத்திருந்தான். அதில் காரை நிறுத்தினான்.

ஆறு காலி மரப்பெட்டிகள் அங்கு வந்து சேர்ந்தன. அவற்றின் மீது 'மெஷின் உதிரிப் பாகங்கள்' என்று முத்திரை குத்தப்பட்டிருந்தது.

இவைகளை யெல்லாம் ரகசியப் போலீசார் போட்டோ பிடித்து, இன்ஸ்பெக்டர் ஜூப்பின் மேஜை மீது வைத்திருந் தார்கள்.

ஜெஃபும் ட்ரேஸியும் லேட்டஸ்டாய்ப் பேசிக் கொண்ட பேச்சு ரகசிய முறையில் டேப் செய்யப்படிருந்தது. அதைப் போட்டுக் கேட்டார் ஜூப்.

ஜெஃபின் குரல்: "இன்று வேனை பாங்க்கிலிருந்து படகுக்கு ஓட்டிப் போய்ப் பார் ஸ்பீட் லிமிட்டை மீறாமல்

வேனை ஓட்டு. பாங்க்கிலிருந்து படகுக்குப் போகக் கரெக்டாய் எத்தனை நேரம் ஆகிறது என்று எனக்குத் தெரிய வேண்டும். இந்தா ஸ்டாப் வாட்ச்."

ட்ரேஸியின் குரல்: "நீ வரவில்லையா டார்லிங்?"

"இல்லை. இன்று எனக்கு வேலை இருக்கிறது."

"மான்ட்டி சமாசாரம் என்ன ஆச்சு?"

"மான்ட்டி வியாழக்கிழமை இரவு வந்து சேருவான்."

டேப் அத்துடன் முடிந்தது.

"யார் இந்த மான்ட்டி என்கிறவன்?" என்று கூப்பரைக் கேட்டார் இன்ஸ்பெக்டர் ஜூப்.

"இரண்டாவது செக்யூரிட்டி கார்டாக வேடம் போடப் போகிற ஆளாக இருக்கும்," என்றான், கூப்பர். "அடுத்த படியாக அவர்கள் யூனிபாரம் வாங்கப் போவார்கள். பாருங்கள்."

அவன் சென்னது போலவே -

கடைத் தெருவில், பலவகையான உடைகள் விற்பனை செய்யும் கடைக்கு ஜெஃப் சென்றான்.

"ஒரு நாடகத்துக்காக இரண்டு யூனிபாரம் தேவைப் படுகிறது. வெளியே ஷோ கேசில் மாட்டியிருக்கிறீர்களே, அது போல வேண்டும்." என்றான்.

ஒரு மணி நேரத்துக்கெல்லாம் அந்த இரண்டு யூனி பாரம்களின் போட்டோ ஜூப்புக்கு வந்து சேர்ந்து விட்டது.

"இரண்டு யூனிபாரம் ஆர்டர் தந்திருக்கிறான். வியாழக் கிழமை வந்து வாங்கிக் கொள்வதாய்ச் சொல்லியிருக்கிறான்," என்றான் ரகசியப் போலீஸ் ஆள்.

அந்த இரண்டில் ஒன்றுதான் ஜெஃப்பின் அளவுக்குச் சரியானது. மற்றது அவனைவிடப் பெரிய ஆளுக்கானது போல் இருந்தது.

இன்ஸ்பெக்டர் ஜூப் அவைகளைக் கணக்கிட்டுவிட்டுச் சொன்னார்: அந்த மான்ட்டி என்கிற கூட்டாளி ஆறடி

மூன்றங்குல உயரமும் இருநூற்றியிருபது பவுண்டு எடையும் இருப்பானென்று தெரிகிறது. சர்வதேசப் போலீசுக்குத் தெரிவித்தால், கம்ப்யூட்டர்கள் மூலம் இந்த மான்ட்டியைப் பற்றிய அடையாளங்களைச் சொல்லுவார்கள்," என்றவர், உதவியாளர்களுக்கு உத்தரவிட்டார்.

**வா**டகைக்கு எடுத்திருந்த கார் ஷெட்டில் வேனின் கூரை மீது ஏறி உட்கார்ந்திருந்தான் ஜெஃப். டிரைவர் சீட்டில் ட்ரேஸி இருந்தாள்.

"ரெடியா, ட்ரேஸி?

"ரெடி."

"ரைட்!"

ட்ரேஸி ஒரு பொத்தானை அழுத்தினாள். உடனே வேனின் இருபக்கமும் இரண்டு படுதாக்கள் அவிழ்ந்து விழுந்தன. அவற்றின் மேல் 'ஹாலண்ட் பீர் கம்பெனி' என்ற எழுத்துப் பளபளத்தது.

"படுதா ஜம்மென்று வேலை செய்கிறது!" குதூகலமாய்க் கூவினான் ஜெஃப்.

"**எ**ன்னது! ஹாலண்ட் பீர் கம்பெனி என்ற எழுத்துப் போட்ட படுதாவா?' என்று நினைத்தார் இன்ஸ்பெக்டர் ஜூப்.

அவரும் ரகசியப் போலீஸ் ஆட்களும் அவருடைய அறையில் குழுமியிருந்தார்கள் புகைப்படங்களும் குறிப்புக் களும் பெரிது பண்ணப் பட்டுச் சுவர்களில் மாட்டப் பட்டிருந்தன.

ஒவ்வொன்றையும் ட்ரேஸி திட்டமிட்டுத்தான் செய்து கொண்டிருக்கிறாள் என்று கூப்பர் ஊகித்தான். இதெல்லாம் போலீசாருக்கு அவள் வைக்கும் பொறி. கொஞ்சம் கொஞ்சமாய் அந்தப் பொறிக்குள் இவர்கள் நுழைந்து கொண்டிருக்கிறார்கள். முழுவதும் உள்ளே போய்ச் சிக்கிக் கொள்ளப் போகிறார்கள்.

போலீஸ் அதிகாரிகள் எல்லாரும் படபடக்கும் இதயத்தோடு பெரிதாய் ஏதோ நடைபெறப் போகிறது என்று எதிர்பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

ஆனால் கூப்பர் அப்படி நினைக்கவில்லை. கடைசியாய் இவ்வளவும் சப்பென்று முடியப் போகிறது என்று அவனுக்கு நிச்சயமாய்த் தெரிந்தது.

## 76

"எல்லா விஷயமும் இப்போது கச்சிதமாய்த் தெளிவாய்த் தெரிகிறது," என்றார் இன்ஸ்பெக்டர் ஜூப் ரொம்ப உற்சாகமாக. "அசல் கவச வேன் எத்தனை மணிக்குப் பாங்க்கிற்கு வரப் போகிறது என்பதை இவர்கள் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு அரை மணி நேரம் முன்னதாகப் போய், தாங்கள் தான் அசல் கார்டுகள் என்று சொல்லிக் கொள்வதென்று திட்டமிட்டிருக்கிறார்கள்."

"அசல் வேன் வருவதற்குள் தாங்கள் தங்கக் கட்டிகளை அடித்துக் கொண்டு போகலாமென்று எண்ணியிருக்கிறார் கள்." மேஜை மீதிருந்த வேன்களின் புகைப் படங்களைக் காட்டினார். "இதோ அவர்களுடைய கவசவேன். இதில் வந்து தங்கக் கட்டிகளை ஏற்றிக்கொள்வார்கள்." இன்னொரு புகைப் படத்தைக் காட்டினார் ஜூப். "இரண்டு தெரு தாண்டியதும் வேனில் உள்ள ஒரு பட்டனைத் தட்டுவார்கள். இதோ இதில் இருக்கிற மாதிரி வேறொரு படுதா இரண்டு பக்கமும் தொங்கும், ஹாலந்து பீர் கம்பெனி என்ற வாசகத்தோடு. யாரும் அவர்களைக் கண்டுபிடிக்க முடியாது. தாங்கள் பாட்டுக்கு ஜாலியாய்ப் போவார்கள்."

அறையின் பின்புறம் நின்றிருந்த போலீஸ் அதிகாரி இப்போது முன்னே வந்து இன்ஸ்பெக்டர் ஜூப்பிடம் கேட்டார்: "ஏன் சார், இவர்கள் தங்கக் கட்டிகளைப் பாங்க்கி லிருந்து கடத்தி விட்டதாகவே வைத்துக் கொள்வோம்.

ஆனால் இந்த நாட்டை விட்டு வெளியே எப்படிக் கொண்டு போவார்கள்?"

படகுக்காரனிடம் ட்ரேஸி பேசிக் கெண்டிருக்கும் புகைப்படத்தை அவருக்குத் தூக்கிக் காட்டினார் ஜூப். "முதலில் படகின் மூலம் அதை எடுத்துப் போவாள். இந்த ஹாலந்து நாடு பூரா குறுக்கும் நெடுக்குமாய் ஏராளமான கால்வாய்களும் சிற்றாறுகளும் ஓடுகின்றன. அவர்கள் எந்தக் கால்வாயில் வேண்டுமானாலும் புகுந்து மறைந்து கொண்டு விட முடியும்." இன்னொரு புகைப்படத்தைக் காட்டினார்.

கால்வாய்க் கரைக்குக் கவச வேன் விரைந்து செல்லும் காட்சி அதில் படமாக்கப்பட்டிருந்தது. "பாங்க்கிலிருந்து கால்வாயில் உள்ள தங்கள் படகை அடைவதற்கு எத்தனை நேரம் பிடிக்கும் என்று கணக்குப் போட்டிருக்கிறார்கள். என்ன நடந்தது, எது நடந்தது என்று யாரும் கவனிப்பதற்கு முன் படகில் தங்கத்தை ஏற்றிப் போயே போய் விடுவார்கள். அதற்குத் தேவையான நேரம் நிறையவே இருக்கிறது."

இதைச் சொல்லிவிட்டுச் சுவரில் மாட்டியிருந்த கடைசிப் புகைப்படத்தைக் காட்டினார் இன்ஸ்பெக்டர் ஜூப். "இது ஒரெஸ்டா என்ற பெயருள்ள சரக்குக் கப்பல். அடுத்த வாரம் இந்தக் கப்பல் ராட்டர்டாம் துறைமுகத்திலிருந்து புறப் படுகிறது. இரண்டு நாள் முன்பு இதில் சரக்கு அனுப்புவதற்கு இடம் ரிசர்வ் செய்து வைத்திருக்கிறான் ஜெஃப். சரக்கின் பெயரை 'யந்திர உதிரிப் பாகங்கள்' என்று குறிப்பிட்டிருக் கிறான். சரக்குப் போய்ச் சேர வேண்டிய இடம் ஹாங்காங் என்று எழுதி வைத்திருக்கிறான்."

அறையிலிருந்த நண்பர்களை நோக்கித் திரும்பினார் ஜூப். "நல்லது நண்பர்களே, இந்த நபர்களின் திட்டத்துக்கு நாம் ஒரு சிறு வேட்டு வைக்கப் போகிறோம். அதாவது, பாங்க்கிலிருந்து தங்கக் கட்டிகளை கடத்திக் கொண்டு போய்ப் படகில் ஏற்றுகிற வரை விட்டு வைக்கப் போகி றோம்." கூப்பரைப் பார்த்துப் புன்னகை செய்தார். "தங்கக்

கட்டிகளைப் படகில் ஏற்றியவுடனே அவர்களைக் கையும் களவுமாய்ப் பிடித்து விடப் போகிறோம். இவர்களுக்கு என்னமோ தாங்கள்தான் பிரமாத கெட்டிக்காரர்கள் என்று எண்ணம்! அதைத் தகர்க்கப் போகிறோம்!"

ட்ரேஸி அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் அலுவலகத்தில் நுழைந்து ஒரு நடுத்தர சைஸ் பாக்கெட்டுடன் வெளியே வந்தாள். உடனே தன் ஓட்டலுக்குத் திரும்பிவிட்டாள்.

அதை ஒரு ரகசியப் போலீஸ் ஆள் கவனித்து மேலிடத்துக்குத் தெரிவித்தான்.

"அந்தப் பாக்கெட்டில் என்ன இருந்தது என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை," என்றார் ஜூப், கூப்பரிடம். "அவர்கள் வெளியே போனதும் அவர்களுடைய அறைகளை நன்றாகச் சோதனை போட்டோம். ஆனால் புதிதாய் எதுவும் கிடைக்கவில்லை," என்று கூறியவர், "சர்வதேசப் போலீஸி லிருந்து அந்த மான்ட்டி என்பனைப் பற்றி ஏதாவது தகவல் வந்ததா?" என்று தன் இலாகா ஆட்களைக் கேட்டார்.

"இல்லை, சார். அப்படி யாரையும் கண்டுபிடிக்க முடிய வில்லை என்கிறார்கள்." என்றார் உதவியாளர்.

ட்ரேஸியும் ஜெஃப்பும் தங்கியுள்ள ஆம்ஸ்டெல் ஓட்டல். அவர்கள் அறைக்கு நேர் மேலேயிருந்த அறையில் கூப்பரும், இன்ஸ்பெக்டர் ஜூப்பும், அவருடைய உதவியாளரான விட்காம்ப்பும் உட்கார்ந்து, ஜெஃப்பும் ட்ரேஸியும் பேசிக் கொள்வதை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஜெஃப்பின் குரல்: "பாதுகாப்பு கார்டுகள் வருவதற்குச் சரியாய் முப்பது நிமிடம் முன்னதாக நான் பாங்க்குக்குப் போய்விடுவேன். ஆகவே நிறைய அவகாசம் இருக்கும். தங்கக் கட்டிகளை வேனில் ஏற்றிக் கொண்டு நாம் கிளம்பி விடலாம். அசல் கார்டுகள் அசல் வேனில் பாங்க்குக்கு வந்து சேருகிற நேரம் நாம் தங்கக் கட்டிகளைப் படகில் ஏற்றிக் கொண்டிருப்போம்."

ட்ரேஸியின் குரல்: "நான் ஒரு மெகானிக்கை அழைத்து வேனைச் செக் பண்ணச் சொன்னேன். எந்தக் கோளாறும் இல்லை. வழிய வழியப் பெட்ரோலும் இருக்கிறது. எல்லாம் ரெடி."

உதவியாளர் விட்காம்ப் சொன்னார்: "சரியான கில்லாடிகள் சார் இவங்க! எந்த விஷயத்தையாவது விட்டு வைத்திருக்கிறார்களா பாருங்களேன்!"

"இப்படிப்பட்டவர்கள் எங்கேயாவது ஒரு இடத்தில் சறுக்கி விடுவது உண்டு," என்றார் ஜூப், கண்டிப்பான குரலில்.

கூப்பர் மௌனமாக இருந்தான், இவர்கள் பேச்சைக் கேட்ட வண்ணம்.

மீண்டும் கீழேயிருந்து பேச்சுக் குரல்கள்:

"ட்ரேஸி, இதெல்லாம் முடிந்தவுடன், நாம் எதிர் காலத் திட்டம் போட்டிருந்தோமே அதன்படி செய்ய வேண்டியது தானே?"

"எதைச் சொல்கிறாய்? டுனீஷியாவுக்குச் செல்லும் திட்டம் தானே? அது அருமையான ஏற்பாடு, ஜெஃப்."

"ரைட், அதற்கு நான் ஏற்பாடு பண்ணுகிறேன். இதற்குப் பிறகு நமக்கு எந்த வேலையும் கிடையாது. ஹாய்யாய்ப் படுக்கையில் சாய்ந்துகொண்டு வாழ்க்கையை அனுபவிக்க வேண்டியதுதான்!"

இன்ஸ்பெக்டர் ஜூப் கோபமாக முணுமுணுத்தார். "ஆமாமாம்! வாழ்க்கையை அனுபவிக்க வேண்டியதுதான் இருபது வருட காலத்துக்கு ஜெயிலில்!" எழுந்து சோம்பல் முறித்துக்கொண்டார். "நல்லது, நாளைக் காலை எடுக்க வேண்டிய நடவடிக்கைகள். எல்லாம் கச்சிதமாய் ஏற்பாடாகி விட்டது. வீட்டுக்குப் போய் ராத்திரி நிம்மதியாய்த் தூங்குவோம்."

ஆனால் கூப்பருக்குத் தூக்கம் வரவில்லை.

ட்ரேஸி போலீசாரிடம் பிடிபடுவதும் அவர்கள் அவளை முரட்டுத்தனமாக அடித்து உதைப்பதும் அவன் கண் முன்னால் காட்சிகளாக விரிந்தன. அவள் முகத்தில் படரும் பயம்! மிரட்சி!

அதை நினைக்கையில் அவன் உடம்பெங்கும் ஒரு திமிர் ஓடிற்று.

படட்டும், சிறுக்கி நாய்! ஒழுக்கம் கெட்ட கழுதைகள் எவ்வளவோ பேருக்கு நாம் தண்டனை வாங்கித் தந்திருக்கிறோம். அதுபோல இவளும் நாளைக்குத் தண்டனை அடைவது அனேகமாய் நிச்சயம்.

'நாளை இந்த நேரம் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருப்போம்' என்று எண்ணியவன் உடனே திருத்திக் கொண்டான். வீடா! வீடேது வாசலேது! அபார்ட்மென்ட் கட்டிடத்தில் ஓர் அறை!

வீடென்பது வேறு அங்கே அம்மா இருப்பாள் உலகத்தில் வேறு யாரையும் காட்டிலும் அதிகமாக இவன் மீது அன்பு பொழியும் அம்மா இருப்பாள்.

**கூ**ப்பருக்கு நாலு வயதாகியிருந்தபோது, அவன் அப்பா திடீரென்று ஓடிப் போய்விட்டார்.

கூப்பர் அவரைக் கண்டபடி திட்டிக் கொண்டிருந்தான் முதலில். பிறகு தான் அவன் அம்மா சொன்னாள் - வேறொரு பெண்பிள்ளையிடம் சினேகம் கொண்டு அப்பா ஓடி விட்டாரென்று. அந்தப் பெண்ணை அவன் மனமார வெறுத்தான். ஏனென்றால், அம்மா எப்போது பார்த்தாலும் அழுது கொண்டிருப்பது அவளால்தானே? அவளை அவன் பார்த்தது கிடையாது. "அவள் ஓர் தேவடியாள்" என்று அம்மா அடிக்கடி திட்டுவதைக் கேட்டு நிச்சயம் அவள் ஒரு தேவடியாள் தான் என்று கூப்பர் முடிவு செய்தான்.

ஒரு வகையில், அவள் அவன் அப்பாவை இழுத்துக் கொண்டு ஓடியதைப் பற்றிச் சந்தோஷமே ஏற்பட்டது.

இனிமேல் அம்மா வேறு யாருக்கும் சொந்தமில்லை, நமக்கே - நமக்குத்தான் சொந்தம் என்று உறுதி ஏற்பட்டது.

அவர்கள் ஊரில் குளிர் ரொம்பக் கடுமையாக இருக்கும். அவன் அம்மாவின் போர்வைக்குள் புகுந்து கொண்டு அவளைக் கட்டிக் கொண்டு படுத்துவிடுவான்.

'உன்னைத்தான் நான் கல்யாணம் பண்ணிக்கப் போறேம்மா,' என்பான். அம்மா சிரித்து அவன் தலையைக் கோதிவிடுவாள்.

படிப்பில் எப்போதும் அவன் முதலாக இருந்தான். 'உன் பிள்ளை எவ்வளவு கெட்டிக்காரனாக இருக்கிறான்!' என்று மற்றவர்கள் சொல்லும்போது அம்மாவின் முகம் பெருமையில் ஜொலிக்கும். அவள் அப்படிப் பெருமைப்பட வேண்டும் என்பதற்காகவே மேலும் மேலும் நன்றாகப் படிப்பான்.

அவனுக்கு ஏழு வயதாகியிருந்தபோது, அம்மா பக்கத்து வீட்டுக்காரனொருவனை அடிக்கடி வீட்டுக்கு வர வழைப்பதும் சாப்பிடச் சொல்வதுமாக இருந்தாள். எருமை மாடு மாதிரி இருந்த அவனைக் கூப்பருக்குப் பிடிக்கவில்லை. அவன் வரக் கூடாது என்று அழுது அடம் பிடிப்பதில் ஜுரம் வந்து ஒரு வாரம் படுத்த படுக்கையாகக் கிடந்தான்.

"இனிமேல். அவனை வரச் சொல்ல மாட்டேனடா கண்ணா. உலகத்தில் நீ ஒருவனே எனக்குப் போதும்" என்று அம்மா வாக்களித்தாள்.

இன்று ஆம்ஸ்டர்டாம் ஓட்டலில் தன் அறையில் படுத்திருந்தபோது இதெல்லாம் அவனுக்கு அடுக்கடுக்காய் ஞாபகம் வந்தன.

தன் அம்மா கொலை செய்யப் பட்ட அந்தப் பயங்கர தினமும் நினைவு வந்தது.

# 77

தன் அம்மா கொலை செய்யப்பட்ட அந்தப் பயங்கர தினம், இன்று ஓட்டலில் படுத்திருந்தபோது கூப்பருக்கு ஞாபகம் வந்தது.

அன்று அவனுக்குப் பன்னிரண்டாவது பிறந்த நாள்.

அவனுக்கு அன்றைய தினம் காது வலி. அதனால் ஆசிரியர் அவனை வீட்டுக்கு அனுப்பி விட்டார். காது வலி உண்மையில் வலித்ததைக் காட்டிலும்அதிகமாகவே வலிக்கிற மாதிரி அழுது ஆர்ப்பாட்டம் செய்தான். அப்போதுதான் ஆசிரியர் அவனுக்கு லீவு கொடுத்து வீட்டுக்குப் போகச் சொன்னார். 'அம்மாவின் அணைப்பில் படுத்திருக்கலாம். காதுக்கு மருந்து போட்டுத் தலையை வருடி விடுவாள்...'

வீட்டுக்கு வந்தவன் நேரே அம்மாவின் படுக்கை யறையை நெருங்கியவன் -

சட்டென்று நின்றான்.

அம்மா அசிங்கமான முறையில் நிர்வாணமாய்ப் படுத்திருந்தாள் அந்த அடுத்த வீட்டு எருமை மாட்டு ஆசாமியுடன். அவன் உடம்பு பூரா முத்தமிட்டு, "உன்னை எவ்வளவு காதலிக்கிறேன் தெரியுமா?" என்று முனகிக் கொண்டிருந்தாள்.

அந்தக் காட்சி கூப்பரின் வயிற்றைப் புரட்டியெடுத்தது. நேரே தன் அறைக்குச் சென்று வாஷ் பேசினில் குபுக்கென்று வாந்தி எடுத்தான்.

சட்டை மீதெல்லாம் வாந்தி!

அதன்பின் நிதானமடைந்தான். உடைகளைக் கழற்றிக் குளித்துச் சுத்தம் செய்து கொண்டான். எப்போதும் சுத்தமாக இருக்க வேண்டும் என்று அவன் அம்மா அவனுக்குச் சொல்லிக் கொடுத்திருந்தாள்.

இப்போது உண்மையிலேயே காதை ரொம்ப வலித்தது.

வாசல்புறம் பேச்சுக் குரல்கள் கேட்டன.

அம்மா சொல்லிக் கொண்டிருந்தாள். "சரி, போய் வா டார்லிங். நான் போய்க் குளித்து உடைமாற்றிக் கொள்ளணும். கூப்பர் ஸ்கூலிலிருந்து வருகிற நேரம். இன்று அவனுக்குப் பிறந்த நாள். பார்ட்டிக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். நாளை மறுபடி சந்திப்போம்."

வாசல் கதவு சாத்தப்படும் சத்தம் கேட்டது. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் குளியலறையில் குழாய்த் தண்ணீர் கொட்டும் சத்தம் கேட்டது. அம்மா குளிக்கிறாள்.

அம்மாவா!

'இனிமேல் அவள் அம்மா இல்லை. தேவடியாள்! படுக்கையறையில் கண்ட ஆளோடு அசிங்கமாய் நடந்து கொள்ளும் தேவடியாள்!'

கூப்பர் நேரே அவளுடைய குளியலறைக்குள் நுழைந்தான்.

தொட்டியில் குளித்துக் கொண்டிருந்தாள் அவள். கூப்பர் வருவதைக் கண்டதும், "வாடா கண்ணா," என்று புன்னகையுடன் சொன்னவள், தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்ததும் திடுக்கிட்டாள். "என்னடா அது கையில்?" என்றாள்.

காரணம் -

கூப்பர் ஒரு பெரிய கத்திரிக் கோலைக் கையில் வைத்திருந்தான்.

"கூப்பர்!" என்று கத்துவதற்காகத் திறந்த வாய் மூடவில்லை. அதற்குள் கூப்பர் அவள் மார்பில் ஒரே குத்தாய்க் குத்தினான் கத்திரிக் கோலால்.

அவள் துடித்து எழுந்து வெளியே விழுந்தாள். ஆனால் கத்த முடியவில்லை. அதற்குள் அவன் அவளை வெறி பிடித்தவனாக ஓங்கிப் பல முறை குத்தினான். "தேவடியாள்!

தேவடியாள்! தேவடியாள்!" என்று அவன் வாய் கத்திக் கொண்டேயிருந்தது.

தன் சக்தியனைத்தையும்திரட்டி அவள் கூவினாள். அவனுடைய கத்தலும் அவள் கூச்சலும் சில வினாடிகளுக்குச் சேர்ந்து ஒலித்தன.

பிறகு அவளுடைய குரல் ஒடுங்கி விட்டது.

காலோடு தலை கூப்பரின் மீது ரத்தம் தெறித்திருந்தது. ஷவரைத் திறந்துவிட்டு. உடம்பைப் பளிச்சென்று சுத்தம் செய்துகொண்டான்.

அவன் மனம் தெளிவாக இருந்தது. அவன் அம்மா செத்ததற்குக் காரணம் அந்த அடுத்த வீட்டு ஆள். அவன் இதற்கு விலை கொடுத்தாக வேண்டும்.

இப்படித் தீர்மானித்தபின் ஒவ்வொரு காரியத்தையும் கச்சிதமாக ஸ்லோ மோஷன் சினிமா மாதிரி திட்டம் போட்டுச் செய்தான்.

முதலில் ஒரு கந்தல் துணியை எடுத்துக் கத்திரிக்கோலில் தன் கைரேகை சிறிதளவும் இல்லாதபடி சத்தமாய்த் துடைத்தான். பிறகு கத்திரிக்கோலைக் குளியல் தொட்டிக்குள் எறிந்தான். கிளிங் என்ற ஓசையுடன் அது தண்ணீருக்குள் விழுந்தது.

வேறு நல்ல உடை அணிந்து கொண்டான். போலீசுக்கு டெலிபோன் செய்தான்.

சைரன்கள் ஊளையிட இரண்டு போலீஸ் கார்கள் வந்து சேர்ந்தன. பின்னாலேயே ஒரு கார் நிறையத் துப்பறியும் நிபுணர்கள் வந்தார்கள். கூப்பரைக் கேள்வி மேல் கேள்வி களாகக் கேட்டார்கள். எல்லாவற்றுக்கும் அவன் பிசிறில்லா மல் பதிலளித்தான்.

அவனுக்குக் காது வலி என்பதால் பள்ளிக் கூடத்திலி ருந்து சீக்கிரமே அவனை வீட்டுக்கு அனுப்பி விட்டதாயும், வீட்டை அடைந்த போது பக்கத்து வீட்டுக்காரனான ஜிம்மர்

பின் வாசல் வழியாக நழுவிக் கொண்டிருந்ததைக் கண்டதாக வும் போலீசாரிடம் சொன்னான்.

போலீஸார் அந்தப் பக்கத்து வீட்டு ஜிம்மரை விசாரித்தார்கள்.

தனக்கும் கூப்பரின் அம்மாவுக்கும் தொடர்பு உண்டு என்பதை அவன் ஒப்புக் கொண்டான். ஆனால் தான் அவளைக் கொலை செய்யவில்லை என்றான்.

ஆனால் நீதிமன்றம் கூப்பரின் பேச்சைத்தான் நம்பியது.

"ஏன் தம்பி, நீ பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்கு வந்த போது, உன் பக்கத்து வீட்டுக்காரனான ஜிம்மர் பின் வாசல் வழியே நழுவிக் கொண்டிருப்பதைப் பார்த்தாயா?" என்று நீதிபதி கேட்டார்.

"ஆமாம் சார்."

"அவரை நீ நன்றாகப் பார்த்தாயா?"

"ஆமாம் சார். அவர் கையெல்லாம் ஒரே ரத்தமாக இருந்தது."

"பிறகு நீ என்ன தம்பி செய்தாய்?"

"எனக்கு ஒரே பயமாய்ப் போயிட்டுது சார். என் அம்மாவுக்குத் தான் என்னவோ பயங்கரமாய் நேர்ந்திருக் கணும் என்று நினைத்தேன்."

"பிறகு நீ வீட்டுக்குள்ளே போனாய்?"

"ஆமாம் சார்."

"அப்புறம்?"

"அம்மா என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே ஓடினேன். அம்மாவின் குரல் கேட்கவில்லை. அதனால் அம்மாவின் குளியலறைக்குப் போனேன். அங்கே... அங்கே..."

இந்தக் கட்டத்தில் துயரம் தாளாதவன் போல் கூப்பர் கதறிக் கதறி அழுதான். சிறுவனைக் கூண்டிலிருந்து மெதுவே இறக்கி, அழைத்துச் செல்லும்படி நீதிபதி போலீசாருக்குக் கட்டளையிட்டார்.

சரியாய் பதின்மூன்றாவது மாதம் அந்தப் பக்கத்து வீட்டுக்காரன் மரண தண்டனை அடைந்தான்.

சிறுவன் கூப்பரை வளர்க்கும் பொறுப்பு அவனுடைய தூரத்து உறவான ஓர் அம்மாளிடம் ஒப்படைக்கப்பட்டது. டெக்ஸாஸில் இருந்தாள் அந்த அம்மாள். மேட்டி என்று பெயர். கூப்பருக்குப் பெரியம்மா முறை என்றாள். அவளைக் கூப்பர் அதற்கு முன் பார்த்ததுகூட இல்லை. ரொம்பக் கண்டிப்பான பெண்மணி. தீவிரமான மதப் பற்றுக் கொண்டவள். சின்னப் பாவம் செய்தால்கூடக் கொடும் நரகம் கிடைக்கும் என்று கூப்பரிடம் அடிக்கடி சொல்வாள்.

அந்த வீட்டில் அன்பு இல்லை. சந்தோஷம் இல்லை. அனுதாபம் இல்லை.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் கூப்பர் வளர்ந்தான். தான் செய்த அந்தப் பயங்கரக் காரியம் யாருக்கும் தெரியாத பயங்கர ரகசியம் - அவனைச் சதா வாட்டி எடுத்தது. கடவுள் தன்னை மிகக் கடுமையாகத் தண்டிக்கப் போகிறார் என்று எண்ணி நடுங்கினான்.

அம்மா இறந்த கொஞ்ச நாளைக்கெல்லாம் அவனுடைய கண் பார்வையில் கோளாறு ஏற்பட்டது. கண்ணில் கோளாறு எதுவும் இல்லையென்றும் அவனுடைய மனசில் தான் ஏதோ கோளாறு என்றும் டாக்டர்கள் கூறினார்கள்.

தடவைக்குத் தடவை அவனுடைய கண்ணாடியின் தடிமன் அதிகரித்தது.

பதினேழாவது வயதில் அவன் டெக்ஸாஸையும் பெரியம்மாவையும் விட்டு ஓட்டம் பிடித்தான். பின்னால் அவன் டெக்ஸாஸ் பக்கமே எட்டிப் பார்க்கவில்லை.

நடந்தே நியூயார்க்கை அடைந்தான். அங்கே இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் ஆபீஸ் பையன் வேலை கிடைத்தது. மூன்றே ஆண்டுகளில், புலன் விசாரணை செய்யும் அதிகாரியாக அவனுடைய பதவி உயர்ந்தது. மிகச் சிறந்த துப்பறியும் நிபுணன் என்று வெகு விரைவில் பெயரெடுத்தான்.

தனக்குச் சம்பள உயர்வு வேண்டுமென்று அவன் என்றைக்குமே கேட்டது கிடையாது. வசதிகள் செய்து தரும்படி கோரியதில்லை. அதெல்லாம் ஒரு பெரிய விஷயம் என்று அவன் நினைத்தது கிடையாது.

தான் கடவுளின் வலது கரம் என்பது அவன் எண்ணம். கெட்டவர்களைத் தண்டிப்பதற்காகக் கடவுள் தன்னைப் படைத்திருக்கிறார். அதற்காக அவனிடம் சவுக்கைக் கொடுத்திருக்கிறார். இதுதான் அவன் நம்பிக்கை.

தன் கடந்த காலத்தை நினைத்தவாறு குளியல் தொட்டியில் படுத்திருந்த கூப்பர் எழுந்து கொண்டான்.

நாளை! நாளைய தினம் ஒரு இழி மகளுக்குத் தண்டனை கிடைக்கப் போகிறது!

ஆம்ஸ்டர்டாம் நகரம்.

ஆகஸ்டு இருபத்திரண்டாம் தேதி, வெள்ளிக்கிழமை. காலை எட்டு மணி.

கீழ் அறையில் ஜெஃப்பும் ட்ரேஸியும் சிற்றுண்டி அருந்திய வண்ணம் பேசிக் கொண்டிருப்பதை மேல் அறையிலிருந்து கூப்பரும் இரண்டு ரகசியப் போலீசாரும் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

ட்ரேஸியின் குரல்: "ரொட்டி ரொம்ப இனிப்பாக இருக்கிறது, ஜெஃப். காப்பி கொடுக்கட்டுமா?"

"வேண்டாம், தாங்க்ஸ்." என்கிறான் ஜெஃப்.

'நீங்கள் இருவரும் சேர்ந்து சாப்பிடப் போகும் கடைசிச் சாப்பாடு இதுதான்!' என்று கூப்பர் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

"எதை நினைத்து நான் ரொம்ப சந்தோஷமாயிருக்கிறேன் தெரியுமா?" என்கிறாள் ட்ரேஸி. "நம்முடைய படகுப் பிரயாணத்தை எண்ணித்தான்."

"இன்று நாம் எத்தனை பெரிய வேலை செய்யப் போகிறோம். நீ என்னடாவென்றால் நம் படகுப் பிர

யாணத்தை நினைத்துச் சந்தோஷப்படுகிறாய்! ஏன் ட்ரேஸி அப்படி?"

"ஏனா? தெரியவில்லை? படகில் தனியாய்ப் பிரயாணம் பண்ணப் போகிறோமே! நாம் இரண்டே பேர் மட்டும்! என்னைச் சரியான பைத்தியம் என்று நீ நினைக்கிறாய்! அப்படித்தானே?"

"ஆமாம். நீ பைத்தியம் தான். என் பிரியமுள்ள பைத்தியம்."

"முத்தம் கொடு."

முத்தம் பரிமாறிக் கொள்ளும் ஒலி கேட்கிறது.

அவர்களுடைய சகஜமான பேச்சு கூப்பருக்குப் புதிராக இருந்தது.

இன்று ட்ரேஸி சிறிது பயத்துடன் இருக்க வேண்டாமோ? என்ன தைரியம்?

"ஒரு வகையில் இந்த ஊரை விட்டுப் போக எனக்கு வருத்தமாக இருக்கிறது, ஜெஃப்," என்கிறாள் ட்ரேஸி.

"உண்மைதான், டார்லிங். ஆனால் யோசனை பண்ணிப் பார், இனிமேல் ஒருபோதும் நாம் ஏழைகளாக இருக்க மாட்டோமே!"

"உண்மை. உண்மை!" ட்ரேஸி கலகலவென்று சிரிக்கிறாள்.

மணி ஒன்பதாகிவிட்டது. அவர்கள் பாட்டுக்கு இன்னும் பேசிக் கொண்டேயிருக்கிறார்களே என்று கூப்பர் நினைத்துக் கொண்டான். புறப்படத் தயாராக வேண்டாமோ? பிரயாண ஏற்பாடுகளெல்லாம் சரியாக இருக்கிறதா என்று கடைசி நிமிடச் செக் அப்புகள் செய்ய வேண்டாமோ? அதிருக்கட்டும். அந்த மான்ட்டி என்கிற ஆள்? அவன் எப்போது வரப் போகிறான்? இவர்கள் அவனை எங்கே சந்திக்கப் போகிறார்கள்?

கூப்பர் குழம்பிக் கொண்டிருந்தான்.

## 78

ட்ரேஸியும் ஜெஃப்பும் பேசிக் கொண்டிருப்பதைத் தொடர்ந்து ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தான் கூப்பர். ரகசியப் போலீஸ் ஆள் ஒருவனும் அருகில் கேட்டுக்கொண்டு இருந்தான்.

மணி ஒன்பதுக்கு மேலாகியும் இன்னும் ஏன் ட்ரேஸியும் ஜெஃப்பும் பாங்க் கொள்ளைக்குப் புறப்படாமலே இருக்கிறார்கள் என்று கூப்பருக்குக் குழப்பமாக இருந்தது.

ஜெஃப் சொல்லிக் கொண்டிருந்தான்: "டார்லிங், நாம் புறப்படுவதற்கு முன்பு ஒட்டல் மேனேஜரிடம் கணக்குகளை ஸெட்டில் பண்ணு. எனக்கு நிறைய வேலை இருக்கிறது."

"ஓ, எஸ். அவர் ரொம்ப நல்ல ஆள்," என்றாள் ட்ரேஸி. "எனக்கு ஒரு சந்தேகம், ஜெஃப். ஒட்டல் மேனேஜர்களை இங்கெல்லாம் கான்ஸியர்ஸ் என்று அழைக்கிறார்கள். அமெரிக்காவில் அப்படிச் சொல்வதில்லையே?"

"இது ஐரோப்பிய வழக்கத்தில் வந்த பிரெஞ்சு வார்த்தை. அது எப்படி வந்தது என்று உனக்குத் தெரியுமோ?"

"தெரியாதே?"

'1672ஆம் வருஷம் ஹ்யூ என்ற பிரெஞ்சு மன்னன் பாரிசில் ஒரு சிறை கட்டினான். அதை நிர்வகிக்கும் பொறுப்பை ஒரு பிரபுவிடம் ஒப்படைத்து, அவருக்குக் கான்ஸியர்ஸ் என்று ஒரு பட்டமும் கொடுத்தான். 'மெழுகுவத்தி காப்பாளர்' என்று அதற்கு அர்த்தம். அந்தச் சொல் அப்படியே, சிறை, கோட்டை, அரண்மனை முதலியவற்றைப் பார்த்துக் கொள்கிற எல்லாருக்குமே பொதுவானதாக வந்து விட்டது. கடைசியில் இப்போது ஒட்டல் நிர்வாகிக்கும் அதே சொல் ஏற்பட்டு விட்டது.'

'என்ன இழவு இப்படி ஊர்க் கதையெல்லாம் பேசிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள்!' என்று கூப்பர் முடியைப்

பிய்த்துக் கொண்டான். மணி ஒன்பதரை. இவர்கள் புறப்பட வேண்டிய நேரம்.

ட்ரேஸியின் குரல்: "இந்த வார்த்தையெல்லாம் எங்கே கற்றுக் கொண்டாய் நீ? சில அழகான பெண் நிர்வாகிகளுடன் சுற்றியிருக்கிறாய்! அப்படித்தானே?"

ஒரு புதிய குரல் பெண்ணின் குரல் பிரெஞ்சு மொழியில் யாரிடமோ ஏதோ பேசுவது குறுக்கே கேட்டது.

மீண்டும் ஜெஃப்பின் குரல்: "ஓட்டல் நிர்வாகிகளில் அழகான பெண் யாருமே கிடையாது."

மறுபடியும் அந்தப் புதிய குரல் - மறுபடியும் பிரெஞ்சு மொழியில் ஏதோ பேசுகிற சத்தம் குறுக்கிட்டது.

கூப்பரின் குழப்பம் அதிகரித்தது. "என்ன ஐயா இது, கீழே என்னதான் நடக்கிறது? இவர்கள் பேச்சுக்கு நடு நடுவே வேறு யாரோ பிரெஞ்சுப் பெண்ணின் குரல் கேட்கிறதே?" என்று ரகசியப் போலீஸ்காரரிடம் எரிந்து விழுந்தான்.

ரகசியப் போலீஸ்காரரின் முகத்தில் திகைப்புக் கூத்தாடியது. "எனக்கும் புரியவில்லை சார். முதலில், ரூம் கூட்டுகிற வேலைக்காரி இவர்கள் ரூமிலிருந்து மேனேஜரை டெலிபோனில் கூப்பிட்டாள்."

"சரி, கூப்பிட்டு என்ன சொன்னாள்?"

"அதுதான் எனக்கும் விளங்கவில்லை. அறையைச் சுத்தம் செய்வதற்காக வந்தாளாம். 'யாரோ இரண்டு பேர் பேசுவது கேட்கிறது. ஆனால் ரூமில் யாருமே இல்லை,' என்று மேனேஜரிடம் சொல்கிறாள்..."

"என்ன?" அவர் சொல்லி முடிக்குமுன் துள்ளி எழுந்தான் கூப்பர். கதவை மடேலென்று திறந்து வெளியே பாய்ந்தவன் நாலு படிக்கு ஒரு காலாக மடமடவென்று கீழே இறங்கினான்.

சில வினாடிகளில் அவனும் மற்ற ரகசியப் போலீசாரும் ட்ரேஸியின் அறையைடமாலென்று தள்ளித் திறந்து உள்ளே நுழைந்தார்கள்.

அந்த வேலைக்காரி ஒருத்தி மட்டுமே திகைத்துப் போய்த் தலையைச் சொறிந்துகொண்டு நின்றாள். அறையில் யாரையும் காணவில்லை.

சோபாவின் முன்னே இருந்த முக்காலியில் ஒரு டேப் ரெகார்டர் ஓடிக் கொண்டிருந்தது.

ஜெஃப்பின் குரல்: "காப்பி நன்றாக இருக்கிறதென்று சொன்னாயே? கொடு, சாப்பிட்டுப் பார்க்கிறேன். சூடாக இருக்கிறதா?"

ட்ரேஸியின் குரல்: "ஓ! நல்ல சூடு."

கூப்பரும் ரகசியப் போலீசாரும் ஒருவரையொருவர் பார்த்து விழித்தார்கள்.

"எ... எனக்கு எதுவும் புரியவில்லை சார்," என்று திணறினார் ஒரு போலீஸ்காரர்.

கூப்பர் அவர் பேச்சை வெட்டி, "போலீஸ் இலாகா நம்பர் என்ன?" என்று கத்தினான்.

"இருபத்திரண்டு - இருபத்திரண்டு - இருபத்திரண்டு."

ஓடிச் சென்று டெலிபோனை எடுத்து நம்பரைச் சுழற்றினான் கூப்பர்.

டேப் ரெகார்டரில் ஜெஃபின் குரல் பாட்டுக்குத் தொடர்ந்து கொண்டிருந்தது. "என்னதான் சொல்லு, நம் ஊர்க் காப்பியைவிட இந்த ஊர்க் காப்பி அருமையாய்த் தான் இருக்கிறது. எப்படித்தான் தயாரிக்கிறார்களோ? விசாரிக்க வேண்டும்..."

கூப்பர் போனில் கத்தினான்: "நான் கூப்பர் பேசுகிறேன். இன்ஸ்பெக்டர் ஜூப் எங்கே இருந்தாலும் உடனே பிடியுங்கள். பிடித்து, ட்ரேஸியும் ஜெஃபும் ஓட்டலை விட்டு ஓடிவிட்டார்கள் என்று தெரியப்படுத்துங்கள். அவர்கள் வேனை நிறுத்தி வைத்திருந்த ஷெட்டை உடனே பார்க்கச் சொல்லுங்கள். வேன் அங்கிருந்து போய் விட்டதா என்று தெரிய வேண்டும். நான் பாங்க்கிற்குப் போகிறேன்."

போனை டொம்மென்று வைத்தான் கூப்பர்.

டேப் ரெகார்டரில் ட்ரேஸியின் குரல்: "ஏன் ஜெஃப், நீ எப்போதாவது காப்பியில் முட்டை கலந்து சாப்பிட்டிருக் கிறாயோ? ரொம்பப் பிரமாதமாய்-"

புயலாக வெளியேறினான் கூப்பர். பின்னாலேயே வந்த போலீஸ்காரனுடன் ஒரு டாக்ஸியில் தாவினான்.

"பதட்டமே வேண்டாம்," என்றார் இன்ஸ்பெக்டர் ஜூப். "ஷெட்டிலிருந்து வேன் கிளம்பி விட்டது. இங்கேதான் வந்து கொண்டிருக்கிறது."

ஆம்ரோ பாங்க்கின் எதிரிலிருந்த ஒரு கட்டிடத்தின் கூரையில் மறைவாக ஒரு போலீஸ் கோஷ்டியே உட் கார்ந்திருந்தது. கூப்பர், ஜூப், இன்னும் சில போலீசார்...

ஜூப் சொன்னான்: "தங்கள் பேச்சை நாம் ரகசியமாக ஒட்டுக் கேட்கிறோம் என்பது அவர்களுக்குத் தெரிந்து விட்டது போலிருக்கிறது. அதனால், தங்கள் திட்டத்தைக் கொஞ்சம் முன்னதாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் பரவாயில்லை, நண்பரே. கவலைப்படாதீர்கள். அங்கே பாருங்கள்!" என்றவர், கூரையின் மீதிருந்த டெலஸ் கோப்பின் வழியே பார்க்கும்படி கூப்பரைத் தன் பக்கமாய் இழுத்தார்.

கூப்பர் பார்த்தான்.

யூனிபாரம் அணிந்த பாங்க் சிப்பந்தி ஒருவன், பாங்க்கின் பெயர் கொண்ட பித்தளை எழுத்துக்களை அழுத்தித் துடைத்துக் கொண்டிருந்தான்.

ஒரு துப்பரவு ஆள் தெருவைக் கூட்டிக் கொண்டி ருந்தான்.

தெரு மூலையில் ஒருவன் தினசரிப் பேப்பர் விற்றுக் கொண்டிருந்தான்.

இன்னொரு கோடியில் மூன்று ஆட்கள் தெருவைத் தோண்டி ஏதோ பழுது பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

எல்லாரிடமும் சின்னஞ்சிறிய வாக்கி டாக்கி கருவிகள் இருந்தன.

இன்ஸ்பெக்டர் ஜூப் தன் வாக்கி டாக்கியில் கூப்பிட்டார். "பாயின்ட் ஒன்! கேட்கிறதா?"

பித்தளை எழுத்தைச் சுத்தம் செய்து கொண்டிருந்தவன், "எஸ் சார், கேட்கிறது," என்றான்.

"பாயின்ட் பி?"

"எஸ் சார்," என்றான் தெருக் கூட்டிக் கொண்டிருந்தவன்.

"பாயிண்ட் ஸி?"

பேப்பர் விற்றுக் கொண்டிருந்தவன் நிமிர்ந்து பார்த்துத் தலையை ஆட்டினான்.

"பாயிண்ட் டி?"

சாலையில் பழுது பார்த்துக் கொண்டிருந்த ஆட்கள் தங்கள் வேலையை நிறுத்தினார்கள். ஒருவன், "எல்லாரும் ரெடியாக இருக்கிறோம் சார்," என்றான்.

இன்ஸ்பெக்டர் ஜூப் பெருமையுடன் கூப்பரை நோக்கித் திரும்பினார்.

"ஏற்பாடுகளைப் பார்த்தீர்களா? கவலையே வேண்டாம். தங்கக் கட்டிகள் இன்னும் பாங்கிற்குள் பத்திரமாக இருக்கிறது. அவர்கள் நேரில் வந்துதான் அதை எடுத்துக் கொள்ள வேண்டும். பாங்கிற்குள் அவர்கள் நுழைந்த அந்த வினாடியே, இந்தத் தெருவின் இரண்டு கோடிகளையும் அடைத்துக் காவல் போட்டுவிடுவோம். அவர்கள் தப்பிச் செல்ல வழியே கிடையாது." கைக் கடியாரத்தைப் பார்த்துக் கொண்டார். "ஆயிற்று, இதோ எந்த நிமிடமும் வேன் வருவது தெரியும்."

**பா**ங்க்கிற்குள்ளே நிமிடத்துக்கு நிமிடம் டென்ஷன் அதிகரித்துக் கொண்டிருந்தது.

என்ன விஷயமென்று முன்னதாகவே பாங்க் ஊழியர்களுக்குத் தெரிவித்து வைத்திருந்தார்கள். கவசவேன் வந்ததும் அதில் தங்கக் கட்டிகளை ஏற்றுவதற்குப் பாங்க் காவலர்கள் உதவி செய்ய வேண்டுமென்று கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஊழியர்கள் அனைவரும் ஒத்துழைப்பு அளிப்பதாக உறுதி கூறியிருந்தார்கள்.

பாங்க்கிற்கு வெளியே ரகசியப் போலீசார் மப்டி உடையில் தங்கள் தங்கள் வேலையில் ஈடுபட்டவாறே, வேன் வருகிறதா என்பதை ஓரக் கண்ணால் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

எதிர்க் கட்டிடத்தின் உச்சியில் இருந்த இன்ஸ்பெக்டர் ஜூப் பத்தாவது தடவையாகக் கேட்டார். "என்னய்யா. அந்த வேன் வருகிற அறிகுறி ஏதாவது தெரிகிறதா?"

"இல்லை சார்."

ஒரு ரகசியப் போலீஸ் அதிகாரி தன் கைக் கடியாரத்தைப் பார்த்தார். "அவர்கள் வரவேண்டிய நேரத்துக்கு மேல் பதின்மூன்று நிமிடம் தாண்டிவிட்டது. இனி-"

திடீரென வாக்கி டாக்கி உயிர் பெற்றுக் குரல் கொடுத்தது. "இன்ஸ்பெக்டர், இப்போது வேன் வருவது தெரிகிறது. சதுக்கத்தைக் கடந்து பாங்க்கை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. இன்னும் ஒரு நிமிடத்தில் நீங்களும் அதைப் பார்க்க முடியும்."

மின்சாரம் பாய்ந்தாற்போல மொத்தச் சூழ்நிலையும் பரபரப்படைந்தது.

இன்ஸ்பெக்டர் ஜூப் வாக்கி டாக்கி மூலம் கட்டளை பிறப்பித்தார். "அட்டென்ஷன்! எல்லா யூனிட்டுகளும் கவனிக்கவும். மீன்கள் வலைக்கருகே வந்து விட்டன. நீந்தி உள்ளே வந்து சிக்க வேண்டியதுதான் பாக்கி."

ஒரு பழுப்பு நிறக் கவச வேன் பாங்க்கின் வாசலில் வந்து நின்றது.

ஜூப்பும் கூப்பரும் மூச்சைப் பிடித்துக் கொண்டு பார்த்தார்கள்.

யூனிபாரம் அணிந்த இரண்டு செக்யூரிட்டி கார்டுகள் வேனிலிருந்து இறங்கிப் பாங்க்கிற்குள் நுழைந்தார்கள்.

"அவள் எங்கே? ட்ரேஸி? அவளைக் காணோமே?" கூப்பர் பதறியபடி கேட்டான்.

"இப்போது அவள் வராவிட்டால் பரவாயில்லை," என்று ஜூப் உ றுதி கூறினார். "தங்கம் பிடிபடும்போது அவளும் பிடிபட்டு விடுவாள்.

கூப்பரும் அப்படியே எண்ணினான். ட்ரேஸி பேசிய பேச்சுக்கள் டேப்பில் பதிவாகியிருக்கின்றன. அதை வைத்தே அவளைக் கூண்டில் ஏற்றி விடலாம்...

அச்சமும் சங்கடமுமாக நெளிந்து கொண்டிருந்த பாங்க் ஊழியர்கள், வேன்காரர்கள் வந்ததும் கஜானா அறைக்குச் சென்று பெட்டகங்களைத் திறந்து, தங்கக் கட்டிகளை வைத்தார்கள். வாசலிலிருந்தே வேனுக்குத் தள்ளிக் கொண்டு வந்தார்கள்.

தெருவில் இரண்டு முனைகளிலும் பார்த்தார்கள் கூப்பரும் ஜூப்பும். பல உருவங்கள் அங்கே நிற்பது தெரிந்தது.

தங்கக் கட்டிகளை வேனில் ஏற்ற எட்டு நிமிடங்களாகின. வேனின் பின் கதவு சாத்திப் பூட்டப் பட்டது. இரண்டு ஆட்களும் முன் சீட்டில் உட்காரப் போன சமயம் -

ஜூப் தன் வாக்கி டாக்கியில் கத்தினார். "வாருங்கள் எல்லாரும்! வேனைச் சூழ்ந்து கொள்ளுங்கள்!"

மறு வினாடி தெரு அமளிதுமளிப்பட்டது. ஏதேதோ வேலை பார்க்கிற மாதிரி பாசாங்கு செய்து கொண்டிருந்த போலீசாரும் இன்னும் ஏராளமான ரகசியப் போலீசாரும் விரைந்து வந்தார்கள். துப்பாக்கியை உயர்த்திப் பிடித்து வேனை வளைத்துக் கொண்டார்கள்.

தெருவுக்குள் யாரும் வராதபடி இரண்டு முனையிலும் போலீசார் வழியடைத்து நின்றார்கள்.

இன்ஸ்பெக்டர் ஜூப் முகம் மலர்ந்த சிரிப்புடன் கூப்பரைப் பார்த்தார். "என்ன, கையும் களவுமாகப் பிடிக்க வேண்டும் என்றீர்களே, இப்போது சரிதானே? கதை முடிந்தது!" என்றார்.

"ஆம். கதை முடிந்தது," என்று கூப்பரும் எண்ணினான்.

## 79

'அரெஸ்ட்' என்று இன்ஸ்பெக்டர் ஜூப் சொன்னதும் வேனில் ஏறப்போன அந்த இரண்டு பேரும் அதிர்ச்சியுடன் திரும்பினார்கள்.

ஜூப்பும் திகைப்புடன் அவர்களைப் பார்த்தார். அவர்களை ஜெஃப்புடனோ ட்ரேஸியுடனோ முன்னே பின்னே பார்த்தது கிடையாது.

"யார்... யார் நீங்கள்?" ஜூப் கத்தினார்.

"ஏன் சார்... நாங்கள்... நாங்கள் செக்யூரிட்டி கம்பெனி யிலிருந்து வந்திருக்கிறோம்," என்று பயத்தில் திக்கித் திணறியபடி ஒருவன் சொன்னான். "சுடாதீர்கள்! ப்ளீஸ்! எங்களைச் சுட்டு விடாதீர்கள்! நாங்கள் உண்மையைத்தான் சொல்கிறோம்."

கூப்பரின் பக்கம் திரும்பினார் இன்ஸ்பெக்டர் ஜூப்.

"ஜெஃப்பும் ட்ரேஸியும் போட்டிருந்த திட்டம் பிசகாய்ப் போய் விட்டது போலிருக்கிறது!" என்று கத்தினார். "திட்டத்தைக் கைவிட்டு விட்டார்கள். இவர்கள் அசல் ஆட்கள்!"

கூப்பரின் அடிவயிற்றில் எதோ உருண்டு புரண்டு தொண்டையை அடைத்தது. கடைசியில் ஒருவழியாய்ப் பேச முடிந்தபோது, அவன் குரல் கமறியது. "இல்லை, இன்ஸ் பெக்டர். அவர்கள் போட்ட திட்டத்தில் எதுவும் பிசக வில்லை."

"என்ன சொல்கிறீர்கள் நீங்கள்?"

"தெரியவில்லை? அவர்கள் திட்டம் இந்தப் பாங்க்கிலிருந்து தங்கக் கட்டிகளை எடுத்துச் செல்வதே அல்ல! மொத்தமும் ஒரு செட் அப்! நம் கவனத்தைத் திசை திருப்புவதற்காக ஏற்படுத்திய செட் அப்!" என்றான் கூப்பர்.

"இருக்க முடியாது, ஒரு நாளும் இல்லை! அந்தக் கவசவேன், படகு, யூனிபாரம் எல்லாமே பொய்யா? போட்டோ எடுத்து வைத்திருக்கிறோமே!"

"இப்போது கூட உங்களுக்குப் புரியவில்லையா? நாம் அவர்களைப் பிடிப்பதற்காகக் கண்காணித்துக் கொண்டிருக்கிறோம் என்பது ஆரம்பத்திலிருந்தே அவர்களுக்குத் தெரியும். நம் கண்ணில் மண்ணைத் தூவி கவனத்தைத் திருப்புவதற்காகவே ஒரு பெரிய நாடகம் நடத்தியிருக்கிறார்கள்!"

இன்ஸ்பெக்டர் ஜூப்பின் முகம் வெளிறியது. "நிஜமாகவா! கடவுளே! அப்படியானால் இப்போது அவர்கள் எங்கே? எங்கே?"

ஆம்ஸ்டர்டாம் வைரக் கம்பெனியின் வாசலில் இருந்தார்கள் ஜெஃப்பும் ட்ரேஸியும். ஒரு பஸ் நிறைய டூரிஸ்டுகள் இறங்கி உள்ளே நுழைய, அவர்களும் அந்தக் கூட்டத்தோடு சேர்ந்து கொண்டார்கள்.

ஜெஃப் தாடியும் மீசையும் அணிந்து, ஸ்பாஞ்ச் உதவியுடன் மூக்கையும் கன்னங்களையும் சிறிது மாற்றிக் கொண்டிருந்தான். ஸ்போர்ட்ஸ்மேன் போல அரை நிஜார் முதுகில் ஒரு கித்தான் பை.

ட்ரேஸி கறுப்பு நிற விக் அணிந்து, குளிர்க் கண்ணாடி மாட்டிக் கொண்டிருந்தாள். அசல் கர்ப்பிணி போல உள்ளே பேடிங் கொடுத்து வயிற்றைத் தூக்கிக் கட்டியிருந்தாள். கடுமையான லிப்ஸ்டிக் மேக்கப்.

"கனவான்களே, சீமாட்டிகளே!" என்று குரல் கொடுத்தார் கைடு. "தயவு செய்து என் பின்னே வாருங்கள்.

வைரக்கல் பட்டை தீட்டும் வேலை எப்படி நடக்கிறது என்பதைப் பார்க்கலாம்... இங்கே சிறந்த வைரங்கள் விற்பனைக்குக் கிடைக்கும். நீங்கள் விரும்பியதை வாங்கிக் கொள்ளலாம்..."

கைடு முன்னே நடக்க, டூரிஸ்டுகள் அவரைத் தொடர்ந்து பாக்டரிக்குள் நுழைந்தார்கள். ட்ரேஸி அவர்களுடன் சென்றாள். ஜெஃப் மட்டும் பின்தங்கி, படிகளின் வழியே கட்டிடத்தின் அடித் தளத்து அறையை அடைந்தான். மின்சார ஃப்யூஸ் பாக்ஸ் அங்கே இருந்தது.

ஜெஃப் பரபரவென்று தன் கித்தான் பையைப் பிரித்தான். அதனுள்ளிருந்து, எண்ணெய்ப் பிசுக்குப் பிடித்த ஒரு தொழிலாளர் கோட்டை எடுத்து மாட்டிக்கொண்டான். சிறு கருவிகள் கொண்ட பெட்டியை எடுத்துக் கொண்டு ஃப்யூஸ் பாக்ஸ் அருகே சென்று நின்றான். கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டான். காத்திருந்தான்.

மேலே, டூரிஸ்ட்களுடன் சேர்ந்து பகுதி பகுதியாகப் பார்த்துக் கொண்டே சென்றாள் ட்ரேஸி. வைரக் கற்கள் எப்படி வெட்டப்பட்டு, பட்டை தீட்டப்பட்டு, மெருகேற்றப் படுகின்றன என்பதைக் கைடு விளக்கியவாறிருந்தார். ட்ரேஸி அவ்வப்போது தன் கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டாள். எல்லாரும் மெதுவாக நடை போட்டதால், ஏற்கெனவே ஐந்து நிமிடம் தாமதமாகி விட்டது. இந்தக் கைடு இன்னும் வேகமாக நடந்தால் தேவலை என்று எண்ணிக் கொண்டாள்.

ஒருவழியாக பாக்டரியைப் பார்த்து முடித்து, வைரங்கள் கண் காட்சியாக வைக்கப்பட்டுள்ள இடத்துக்கு வந்தார்கள். தடுப்புக் கயிற்றுக்குப் பின்னே, ஒரு ஷோ கேசில் வைக்கப் பட்டிருந்த ஒரு பெரிய வைரத்தைக் காட்டிப் பெருமையுடன் விளக்கினார் கைடு:

"சீமான்களே, சீமாட்டிகளே! இங்கே கண்ணாடிக் கேஸுக்குள் இருப்பதுதான் உலகப் புகழ்பெற்ற லூகுலான்

வைரம். ஒரு பிரபல நடிகர் தன் நட்சத்திர மனைவிக்காக வாங்கியது இது. இதன் மதிப்பு ஒரு கோடி டாலர். மிக நவீன முறையில் இதைப் பாதுகாத்து-"

சரேலென விளக்குகள் அணைந்தன. உடனேயே எச்சரிக்கை மணி அடிக்க, ஷட்டர்கள் சடசடவென்று இறங்கி, கதவுகளையும், ஜன்னல்களையும் மூடிக் கொண்டன. யாரும் வெளியே போக எந்த வழியும் கிடையாது. சில டூரிஸ்டுகள் பயந்து போய்க் கூச்சலிட்டார்கள்.

"ப்ளீஸ்!" எல்லாச் சத்தத்தையும் அடக்குகிற மாதிரி உரக்கக் கத்தினார் கைடு. "யாரும் கவலைப்பட வேண்டாம். சாதாரண மின்சாரக் கோளாறு. அவ்வளவுதான். எமர் ஜென்ஸி ஜெனரேட்டர்கள் ஒரு நிமிடத்தில் - "

விளக்குகள் மீண்டும் எரிந்தன.

"பார்த்தீர்களா?" என்றார் கைடு. "ஒரு கவலையும் வேண்டாம்!"

ஒரு ஜெர்மன் டூரிஸ்ட், "அது எதற்கு?" என்று ஷட்டர் களைக் காட்டிக் கேட்டார்.

"பாதுகாப்பு ஏற்பாடுதான்," என்று கூறிய கைடு, தன் பையிலிருந்த ஒரு சாவியை எடுத்து, சுவரிலிருந்த துவாரத்தில் வைத்துத் திருகினார். கதவுகளையும் ஜன்னல்களையும் மூடிக் கொண்டிருந்த ஷட்டர்கள் பழையபடி மேலே ஏறின.

மேஜை மீதிருந்த டெலிபோன் மணியடித்தது. கைடு எடுத்தார். "ஆமாம், சார், நான் ஹென்றி தான் பேசுகிறேன். இல்லை, எல்லாம் சரியாகி விட்டது. ஏதோ கோளாறினால் அலாரம் அடித்து விட்டது. ஷார்ட் சர்க்யூட் ஆகியிருக்கும். என்னவென்று பார்க்கிறேன். சார்..." என்று தன் மேலதி காரிக்குச் சொல்லிவிட்டு, டூரிஸ்டுகளிடம் திரும்பி வந்தார். "கனவான்களும், சீமாட்டிகளும் தொல்லைகளுக்கு மன்னிக்க வேண்டும்... மிக விலையுயர்ந்த வைரம் இங்கே இருப்பதால் நாங்கள் பலமாகப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருக்கிறது. அருமையான வைரங்கள் இங்கே விற்பனைக்கு உள்ளன. உங்களுக்கு விருப்பமானால்-"

மீண்டும் விளக்குகள் அணைந்தன. அலாரம் அடித்தது. ஷட்டர்கள் மறுபடியும் இறங்கின.

கூட்டத்தில் ஒரு பெண், "ஜான், எனக்குப் பயமாயிருக்கு! போய்விடலாம் வா!" என்று கூவினாள்.

"கொஞ்சம் வாயை மூடிக் கொண்டு கிட!" என்று அவள் கணவன் இரைந்தான்.

மேலே டூரிஸ்ட்களின் கூப்பாடுகளைக் கேட்ட வண்ணம் கீழே ஃப்யூஸ் பாக்ஸ் அருகே நின்றிருந்தான் ஜெஃப். சில நிமிடம் பொறுத்தபின், ஒயர்களை மறுபடி இணைத்தான். மேலே விளக்குகள் எரிந்தன.

கூட்டத்தின் அமளி துமளிக்கு மேலாகக் குரலை உயர்த்தினார் கைடு. "மறுபடியும் ஏதோ மின்சாரக் கோளாறு தான்," என்று கூறிவிட்டு, மறுபடியும் சாவியை எடுத்துத் திருக, ஷட்டர்கள் மேலே ஏறின.

டெலிபோன் மணியடித்தது. கைடு ஓடிச் சென்று எடுத்து, "ஆமாம் சார்.. இல்லை... சார்... மறுபடி கோளாறு தான்... இதோ உடனே கவனிக்கிறேன்," என்றான்.

அறைக் கதவைத் திறந்து கொண்டு ஜெஃப் உள்ளே வந்தான். தொழிலாளர் உடையும் கையில் பழுது பார்க்கும் பெட்டியுமாக.

நேரே கைடிடம் வந்து, "என்ன ப்ராப்ளம் இங்கே? ஏதோ மின்சாரக் கோளாறு என்று சொன்னார்களே?" என்று கேட்டான்.

"விளக்கு அணைந்து அணைந்து எரிகிறது," என்று விளக்கினார் கைடு. "சீக்கிரம் பழுது பார். ப்ளீஸ்," என்றவர் டூரிஸ்டுகளை நோக்கி வலுக்கட்டாயமாக ஒரு புன்னகையை வரவழைத்துக் கொண்டு, "நாம் அடுத்த பகுதிக்குப் போகலாமே? விற்பனைக்கு உள்ள சில நல்ல வைரங்களை அங்கே பார்க்கலாம்..." என்றார்.

கூட்டம் நகரத் தொடங்கிய கணமே அந்தச் சலசலப்பைப் பயன்படுத்திக் கொண்டான் ஜெஃப். தன்

கோட்டுக்குள்ளிருந்து ஒரு சிறிய உருண்டையான பொருளை எடுத்து, அதன் 'பின்'னை அகற்றியபிறகு, ஓசைப்படாமல் அந்த லூகுலான் வைரத்தின் பின்புறத்துக்கு உருட்டி விட்டான்.

அங்கிருந்து சிறு தீப்பொறிகளும் புகையும் கிளம்பின.

"ஆ! அதோ பார்!" என்று கைடைக் கூப்பிட்டான் ஜெஃப். "என்ன ப்ராப்ளம் என்று தெரிந்து விட்டது. அதோ அங்கே தரையில் ஒயர் ஷார்ட் சர்க்யூட் ஆகியிருக்கிறது!"

யாரோ ஒரு பெண் "ஐயோ! தீ தீ!" என்று கூச்சலிட்டாள்.

"ப்ளீஸ், ப்ளீஸ்!" என்று கத்தினார் கைடு. "தயவு பண்ணி அமைதியாக இருங்கள். ஒரு கவலையும் இல்லை." என்றவர் ஜெஃப்பிடம் சீறினார். "அதைச் சரிபண்ணு! சீக்கிரம்!"

"ஏன் பதட்டப்படுகிறீர்?" என்று கூறிய ஜெஃப் அமைதியாக லூகுலான் வைரத்தைச் சுற்றியிருந்த கயிற்றை நெருங்கினான்.

கைடு சத்தம் போட்டார்:

"நோ, நோ! அங்கெல்லாம் நீ போகக் கூடாது!"

ஜெஃப் தோளைக் குலுக்கிக் கொண்டான்.

"ஓகோ, அப்படியா? அப்ப நீயே ரிப்பேர் பார்!" திரும்பிப் போகிற மாதிரி நடந்தான்.

புகை இப்போது வேகமாக வரத் தொடங்கியது. டூரிஸ்டுகளைக் கலவரம் கப்பிக் கொண்டது.

"இருப்பா. இரு! ஒரு நிமிடம்!" என்றார் கைடு. டெலிபோனுக்குச் சென்று ஒரு நம்பரைச் சுழற்றி ".....பேசுகிறேன். ஆமாம் சார்... மின்சாரக் கோளாறைச் சரி பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதுவரை எல்லா அலாரங்களையும் நிறுத்தி வையுங்கள் சார்" ஜெஃப்பிடம் திரும்பினான். "எத்தனை நேரம் பிடிக்கும் உனக்கு?"

"ஐந்து நிமிடம்," என்றான் ஜெஃப்.

"ஐந்த நிமிடம் தான் சார்," என்று டெலிபோனில் திருப்பிச் சொன்ன கைடு, "தாங்க்ஸ் சார்." என்று கூறிப் போனை வைத்தார். "சீக்கிரம் ரிப்பேர் செய், ஐயா! எல்லா அலாரங்களையும் நிறுத்தி வைத்திருக்கிறோம் உனக்காக. இந்த மாதிரி நிறுத்தியதே கிடையாது! சீக்கிரம்!"

"எனக்கு இரண்டு கைதான் ஐயா இருக்கு!" என்று கூறி விட்டு தடுப்புக் கயிற்றைத் தாண்டினான் ஜெஃப். லூகுலான் வைரம் வைத்திருந்த ஷோகேஸை நெருங்கினான்.

அறை வாசலில் துப்பாக்கி ஏந்திய காவலர் ஒருவர் நின்றிருந்தார். அவருக்குக் கைடு கண் ஜாடை காட்ட, 'நான் பார்த்துக் கொள்கிறேன்' என்று தலையை அசைத்த காவலர், ஜெஃபின் மீது கண் வைத்துக் கொண்டார்.

ஷோ கேஸின் பின்னே ஜெஃப் வேலை செய்து கொண்டிருந்தான். கைடு இருப்புக் கொள்ளாமல், டூரிஸ்டு களிடம், "நான் முன்பே சொன்ன மாதிரி இங்கே சில நல்ல வைரங்கள் விற்பனைக்கு உள்ளன. நீங்கள் செக்காகவோ, கிரெடிட் கார்டாகவோ, ரொக்கமாகவோ தரலாம்."

திடீரென்று ட்ரேஸி உரத்த குரலில், "நீங்கள் வைரங்களை விலைக்கு வாங்கிக் கொள்கிறீர்களா?" என்று கேட்டாள்.

கைடு அவளை முறைத்தார். "என்னது?"

"என் கணவர் தென்னாப்பிரிக்காவில் வைரச் சுரங்கங்கள் வைத்திருக்கிறார். அவர் கொஞ்ச நாள் முன்புதான் ஊர் திரும்பினார். இந்த வைரங்களையெல்லாம் விற்க முடியுமா பார் என்று என்னிடம் கொடுத்திருக்கிறார்..."

சொல்லிக் கொண்டே ட்ரேஸி தன் ப்ரீஃப்கேஸைத் திறந்தாள் - தவறிப் போய்த் தலைகீழாக!

மறுவினாடி

டாலடிக்கும் வைரக் கற்கள் நீர்வீழ்ச்சி போலக் கடகடவென்று கொட்டித் தரையெங்கும் சிதறி ஜொலித்தன.

"ஐயோ! என் வைரங்கள்! என் வைரங்கள்! கொஞ்சம் எடுத்துக் கொடுங்கள்!" என்று ட்ரேஸி கூறினாள்.

கூட்டம் ஒரு நிமிடம் பிரமித்து நின்றது.

அடுத்த நிமிடம் அந்த இடம் அல்லோலகல்லோலப் பட்டது. அத்தனை டூரிஸ்டுகளும் ஒருவர் மீதொருவர் விழுந்து புரண்டு அடித்துக்கொண்டார்கள், அந்த வைரங் களை எடுத்து அமுக்கிக் கொள்ள!

80

ட்ரேஸியின் கைப்பையிலிருந்த வைரக் கற்கள் விழுந்ததும், கூட்டத்தில் ஒரே அமளி!

கையில் அகப்பட்ட கற்களையெல்லாம் பொறுக்கிப் பைகளிலும் பர்ஸ்களிலும் அடைத்துக் கொண்டார்கள். கைடும் காவலரும் பேச்சிழந்து நின்றார்கள். பேராசைப் பேய் அத்தனை பேரையும் பிடித்து ஆட்டியது. ஒருவரையொருவர் இடித்துத் தள்ளித் தவழ்ந்து தடவினார்கள்.

"என்கிட்டே கொஞ்சம் அகப்பட்டிருக்கு!"

"ஜான், கை நிறைய எடுத்துக் கொள்!"

"விடு விடு! இது என்னுது!"

கார்டு தொண்டை கிழியக் கத்தினார். "நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!"

கூட்டம் அவரைக் கீழே தள்ள, இன்னொரு பெரிய டூரிஸ்ட் கும்பல் உள்ளே நுழைய, அதற்கும் விஷயம் தெரிய, அவர்களும் அந்த வெறி பிடித்த வேட்டையில் இறங்கி னார்கள்.

கைடு எழுந்து அலாரம் மணியை நெருங்க முயன்றார். ஆனால் ஜனக் கூட்டம் அவரைப் பின்னுக்குத் தள்ளி, காலின் கீழ் போட்டு மிதித்தது. உலக மொத்தத்துக்கும் பைத்தியம்

பிடித்து விட்டதா என்ன? இந்தப் பிரளயத்துக்கு முடிவே கிடையாதா?

துப்பாக்கி ஏந்திய காவலர் எப்படியோ எழுந்து நின்று கூட்டத்தை விலக்கி, லூகுவான் வைரம் இருந்த ஷோ கேசின் அருகே சென்றார்.

கண்களை நம்ப முடியாமல் நின்றார்.

லூகுவான் வைரக் கல்லைக் காணோம்.

அந்த மின்சாரத் தொழிலாளியையும் காணோம்.

அந்த வைரக் கடைக்குப் பல தெருக்கள் தள்ளியிருந்த ஒரு பூங்காவை அடைந்தாள் ட்ரேஸி. பொதுக் குளியலறைக்குள் நுழைந்து, தன் கர்ப்பிணி வேடத்தையும் கறுப்பு முடியையும் களைந்தாள். ஒரு பெரிய பொட்டலத்துடன் வெளிப்பட்டவள், ஒரு பெஞ்ச்சில் போய் உட்கார்ந்து கொண்டாள்.

எல்லாம் திட்டப்படி கச்சிதமாய் நடக்கிறது.

சாதாரணக் கண்ணாடிக் கற்களுக்காக அந்த ஜனங்கள் அடித்துக் கொண்ட அடி! நினைக்கும் போதே சிரிப்பு வந்தது ட்ரேஸிக்கு.

ஜெஃப் வருவது தெரிந்தது.

அழகிய பழுப்பு நிற சூட் அணிந்திருந்தான். தாடியும் மீசையும் மறைந்து விட்டன.

ட்ரேஸி குதித்தெழுந்தாள். அவன் அவளை நெருங்கிப் புன்னகை செய்து, கோட்டுப் பைக்குள்ளிருந்து லூகுவான் வைரத்தை அவளிடம் தந்தான். அவளை அணைத்தபடி "ஐ லவ் யூ ட்ரேஸி," என்றவன், "உன் புறாவுக்குத் தீனி போடு," என்றான்.

அவன் திரும்பிச் செல்வதைச் சிறிதுநேரம் பார்த்தவாறு இருந்தாள் ட்ரேஸி. மகிழ்ச்சியினால் அவள் கண்கள் மின்னின.

இருவரும் தனித் தனி விமானங்களில் புறப்பட்டுச் சென்று பிரேஸில் நாட்டில் சந்திப்பது என்று திட்டமிட்டிருந்தார்கள்.

அதன் பிறகு ஆயுளுக்கும் பிரியப் போவதில்லை...

ட்ரேஸி சுற்றுமுற்றும் பார்த்து யாரும் இல்லையென்று நிச்சயப்படுத்திக் கொண்டாள். பிறகு கையிலிருந்த பொட்டலத்தைப் பிரித்தாள். அதற்குள் ஒரு கூண்டும் கூண்டுக்குள் ஓர் அஞ்சல் புறாவும் இருந்தன.

மூன்று நாள் முன்பு அதை அமெரிக்கன் எக்ஸ்பிரஸுக்கு வந்து பெற்றுக் கொண்டிருந்தாள் ட்ரேஸி. ஓட்டலுக்கு வந்ததும், ஏற்கெனவே கடையில் வாங்கிய சாதாரணப் புறாவை ஜன்னல் வழியே சுதந்திரமாகப் பறக்கவிட்டு விட்டு, இந்த அஞ்சல் புறாவைக் கூண்டினுள் வைத்திருந்தாள்.

இப்போது பர்ஸுக்குள்ளிருந்து ஒரு சுருக்குப் பையை எடுத்து, வைரத்தை அதற்குள் போட்டாள். கூண்டுக்குள்ளிருந்த அஞ்சல் புறாவை வெளியே எடுத்து, அதன் காலில் கவனமாகச் சுருக்குப் பையைக் கட்டினாள்.

திடீரென்று எங்கிருந்தோ ஒரு போலீஸ்காரர் முளைத்தார். "இரும்மா இரு! என்ன செய்கிறாய்?"

ட்ரேஸியின் இதயம் ஒரு கணம் நின்றது. "வந்து... என்ன சார்..."

அந்தப் போலீஸ்காரரின் கண்கள் அந்தக் கூண்டையே பார்த்தன. கோபத்துடன், "ஒன்றும் தெரியாத மாதிரி கேட்கிறீர்களே! சட்டம் தெரியாது? இங்கே பூங்காவிலுள்ள புறாக்களுக்குத் தீனி போடலாம். ஆனால் பிடித்துக் கூண்டில் அடைத்து எடுத்துப் போகக் கூடாது. உடனே அதை விடுவிக்கிறீர்களா, இல்லை, உங்களை அரெஸ்ட் பண்ணட்டுமா?"

'அம்மாடி!' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் ட்ரேஸி. "இதோ விட்டு விடுகிறேன் சார்!" என்று கூறி, கைகளை உயர்த்தி ஆகாயத்தில் பறக்க விட்டாள் புறாவை.

அது உயரே உயரே காற்றில் ஏறி, ஒரு முறை வட்ட மிட்டு விட்டுப் பறந்தது - லண்டனை நோக்கி. மேற்கே 250 மைல்.

சராசரியாக மணிக்கு நாற்பது மைல் வேகத்தில் அது பறக்கும் என்று கந்த்தர் சொன்னது அவளுக்கு ஞாபகம் வந்தது. இன்னும் ஆறு மணி நேரத்தில் அவரிடம் இது போய்ச் சேர்ந்து விடும்.

அன்று இரவு விமான நிலையத்தில், பிரேசிலுக்குப் புறப்படும் விமானத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தாள் ட்ரேஸி.

ஒரு மூலையில் நின்றபடி கூப்பர் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கண்களில் கசப்புக் கொப்பளித்தது.

லூகுவான் வைரத்தை இவள் தான் திருடியிருக்கிறாள். கூப்பருக்குச் சந்தேகமேயில்லை. வைரக் கொள்ளையைப் பற்றிய செய்தி கிடைத்தவுடனேயே அவனுக்குத் தெரிந்து விட்டது. இது ட்ரேஸியின் வேலைதான் என்று. இத்தனை உத்தியும், துணிச்சலும் கற்பனையும் வேறு யாருக்கும் வராது.

ஆனால் அவளை ஒன்றும் செய்யமுடியவில்லை.

வைரக் கம்பெனியின் காவலாட்களிடம் ட்ரேஸியின் புகைப்படத்தையும் ஜெஃபின் புகைப்படத்தையும் காட்டி இன்ஸ்பெக்டர் ஜூப் விசாரித்தார். "இல்லை சார், இவர்களை நான் பார்க்கவேயில்லை. அந்தத் திருடன் தாடி மீசையுடன் இருந்தான். கன்னமும் மூக்கும் இன்னும் கொழு கொழு வென்று இருந்தது. அந்த அம்மாளுக்குக் கறுப்பு முடி. கர்ப்பிணி வேறே," என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள்.

ஜெஃப், ட்ரேஸி இருவருடைய லக்கேஜ்களையும் காலோடு தலை சோதனை போட்டார்கள். எந்த வைரமும் இருக்கவில்லை.

"வைரம் நிச்சயமாய் நமது நகரத்துக்குள் தான் இருக்கிறது. கண்டுபிடித்து விடுவோம்," என்றார் ஜூப்.

ஒரு நாளும் உங்களால் முடியப் போவதில்லை என்று கோபத்துடன் நினைத்துக் கொண்டான் கூப்பர். அவள் சாதாரணப் புறா வாங்குகிற மாதிரி வாங்கி, அஞ்சல் புறா மூலம் வைரத்தை வெளியே அனுப்பியிருக்கிறாள்! இந்த முட்டாள்களுக்கு அது தெரியவில்லை.

கேட்டைத் தாண்டுமுன் ட்ரேஸி ஒரு நிமிடம் தயங்கினாள். திரும்பிப் பார்த்தாள். கூப்பரின் கண்களை அவள் கண்கள் நேருக்கு நேர் சந்தித்தன.

ஐரோப்பாவில் எங்கு சென்றாலும் அவன் தன்னைப் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்ததை அவள் அறிவாள். அவனைக் கண்டு அவளுக்கு அச்சமாயும் இருந்தது. பரிதாபமாயும் இருந்தது.

ஏனோ தெரியவில்லை, அவனை நினைத்து இன்று அவளுக்கு வருத்தம் ஏற்பட்டது. விடைபெறுகிற மாதிரி மெல்லக் கையை ஆட்டினாள்.

விமானத்தில் ஏறிக் கொண்டாள்.

கூப்பர் தன் பையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். வேலையை ராஜினாமா செய்வதாக எழுதிய கடிதம் பத்திரமாக இருந்தது.

பிரேஸிலை நோக்கிப் பறக்கத் தொடங்கியது அந்த மகா சொகுசான விமானம்.

ட்ரேஸியின் உள்ளம் மகிழ்ச்சியில் மிதந்தது. இன்னும் சில மணி நேரப் பிரயாணம் தான் ஜெஃபைச் சந்திக்க. இருவரும் பிரேஸிலில் மணந்துகொள்ளப் போகிறார்கள். 'இனி என் வாழ்க்கையில் தில்லு முல்லுகள், தந்திரங்கள், மோசடிகள் கிடையாது!' என்று நினைதது்க் கொண்டாள் ட்ரேஸி. அதற்காக நான் வருத்தப்பட மாட்டேன். திருமதி ஜெஃப்பாக வாழப் போகும் கண்ணியமான வாழ்க்கையில் எத்தனையோ சந்தோஷங்கள் இருக்கும்.

"மன்னியுங்கள்," என்று ஒரு குரல் கேட்டது.

ட்ரேஸி நிமிர்ந்து பார்த்தாள். நடுத்தர வயதுக் குண்டு மனிதரொருவர் நின்று கொண்டிருந்தார். "எனக்கு அந்த ஸீட், ஹனி," என்றார், ட்ரேஸிக்கு அடுத்த இருக்கையைக் காட்டி.

அவர் தன்னைத் தாண்டிச் செல்வதற்காக ஒதுங்கிக் கொண்டாள் ட்ரேஸி, ஸ்கர்ட் சற்று விலகவே அந்த மனிதர் அவள் கால்களைக் கண்ணால் விழுங்கிவிடுகிற மாதிரி பார்த்தார்.

"பிரயாணம் செய்ய அருமையான நாள்தான் இன்றைக்கு இல்லை?" என்றார் இளித்தபடி.

ட்ரேஸி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

சக பிரயாணிகளிடம் அக்கறை காட்டுவதெல்லாம் இனிமேல் கிடையாது. அவள் நிறைய யோசிக்க வேண்டி யிருந்தது. புத்தம் புதிய வாழ்க்கை ஆரம்பமாகிறது. நானும் ஜெஃப்பும் அமைதியாகக் குடித்தனம் தொடங்கப் போகிறோம். லட்சியப் பிரஜைகளாக வாழப் போகிறோம் மிஸ்டர் அண்ட் மிஸஸ் ஜெஃப்... வெகு கௌரவமான தம்பதி...

பக்கத்து ஸீட் ஆள் அவளை உரசினார். "இந்தப் பயணம் பூரா நானும் நீங்களும் அருகருகே தான் இருக்கப் போகிறோம். இல்லையா, பெண்ணே? ஏன் நாம் ஒருத்தரை யொருத்தர் அறிமுகம் செய்து கொள்ளக் கூடாது? என் பெயர் மாக்ஸ்மிலியன்," என்றார் அவர்.

ட்ரேஸி அதிர்ந்தாள். கொள்ளையடிக்க வேண்டு மென்று அவள் வெகு நாளாக முயன்று கொண்டிருந்த மனிதர்! அவள் மூளை வேலை செய்யத் தொடங்கியது.